தொகுதி 10

# தமிழாய்வு

"திட்பமும் நுட்பமும்"

பொதுப்பதிப்பாசிரியர்
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
புலவர் மு. சண்முகம் பிள்ளை
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1979

தொகுதி 10

# தமிழாய்வு

## ''திட்பமும் நுட்பமும்''

பொதுப்பதிப்பாசிரியர்
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
புலவர் மு. சண்முகம் பிள்ளை
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1979

முதற் பதிப்பு : 1979
© சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழாய்வு கிடைக்குமிடம் :

*பதிவாளர்*
*சென்னைப் பல்கலைக் கழகம்*
*சென்னை - 600 005*

நூல்களை மதிப்பீடு செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் (Exchange) அனுப்ப வேண்டிய இடம் :

*பொதுப்பதிப்பாசிரியர்*
*'தமிழாய்வு'*
*சென்னைப் பல்கலைக்கழக இணைவகம்*
*சென்னை - 600 005*

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்
சென்னை 600 013

# TAMIḺĀYVU

## (Annals of Tamil Research)

**"CLARITY AND PRECISION"**

*General Editor*
Dr. C. BALASUBRAMANIAN, M. A., M. Litt., Ph. D.
Professor and Head of the Department of Tamil
University of Madras

*Editors*
Pulavar M. SHANMUKHAM PILLAI
Dr. E. SUNDARAMOORTHY

**DEPARTMENT OF TAMII**
UNIVERSITY OF MADRAS
**1979**

# பதிப்புரை

1979 ஆம் ஆண்டிற்குரிய இரண்டாம் பருவத் தமிழாய்வு இதழ் 10-ஆம் தொகுதியாக மலர்கிறது. முன்னைய ஒன்பது தொகுதிகளும் பல்வேறு துறைகளில் அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கின. சிறப்பாக அச்சில் வாரா அருந்தமிழ்ப் பகுதி ஆய்வுலகுக்குப் புதிய விருந்தாக அமைந்தது.

இத் தொகுதியுள் ஆய்வுக் கட்டுரைப் பகுதியில் நான்கு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. முதல் கட்டுரை ஆங்கில மகாகவி *மில்டனின்* Paradise Lost என்னும் காவியத்தின் தமிழாக்கமான **பூங்காவனப் பிரளயம்** என்னும் நூலின் திறனாய்வாகும். இரண்டாம் கட்டுரை கலித்தொகையில் அமைந்துள்ள திணைவைப்பு முறையை எடுத்துரைக்கின்றது. தொல் காப்பியத்தில் அமைந்துள்ள புணரியல் இலக்கணத்தையும் இக்கால மொழியியலாரின் உருபொலியனியல் கோட்பாட்டையும் இணைத்து மூன்றும் கட்டுரை ஆராய்கின்றது. இறுதிக் கட்டுரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் 19—9—79 ஆம் நாளன்று நிகழ்ந்த பேராசிரியர் கே. என். சிவராஜ பிள்ளையவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவில் அவர்தம் திருமகளார் தவத்திரு. சரசுவதி அம்மையார் அவர்கள் பேராசிரியர் பிள்ளையவர்களைக் குறித்து எடுத் துரைத்த எழுத்துரையாகும்.

இரண்டாம் பகுதியில் தவத்திரு. சுந்தரசுவாமிகள் திருமதி சொர்ணம்மாள் அறக்கட்டளையின் சார்பில் (1978) நிகழ்த்திய உரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழாய்வு எட்டாம் தொகுதியில் முதற்பகுதி வெளியிடப் பெற்றது. அதனைத் தொடர்ந்து இத்தொகுதியில் 'பெரிய புராணத்தில் பக்திச் சுவை', 'பெரிய புராணத்தில் சமுதாய நோக்கு' என்னும் ஏனைய இரண்டு உரைகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

மூன்றும் பெரும் பகுதியில் கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ள தமிழ்ஓலைச் சுவடிகளின் விவரப்பட்டியல் குறிப்புகளுடன் தொகுத் துத் தரப்பட்டுள்ளன. இவை தமிழாராய்ச்சிக்குப் பெரிதும் பயன் தரும். இன்னும் அச்சாகாத பல சுவடிகளையும் பதிப்பித்து வெளியிடுவதற்கு இத் தொகுப்பு துணைபுரியும். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொகுத்த இச்சுவடிகள் பற்றிய விவரங்கள் முதன் முதலாகத் தமிழாய்வில் வெளிவருவது குறிப்பிடத் தகுந்ததாகும்.

இறுதியில் மதிப்புரை மாலை, தமிழ்த் துறைச் செய்திகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தமிழாய்வினை உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுச் சீரிய முறையில் தொகுத்துப் பதிப்பித்துதவிய புலவர் மணி மு. சண்முகம் பிள்ளை அவர்கட்கும், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்கட்கும் துறையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம் } ***சி. பாலசுப்பிரமணியன்***

# பொருளடக்கம்

I. ஆய்வுக் கட்டுரைப் பகுதி 1-72

1. சாமுவேல் வேதநாயகம் தாமஸ் பாடிய பூங்காவனப் பிரளயம்-ஒரு மதிப்பீடு 1
—மு. சண்முகம் பிள்ளை

2. கலித்தொகையின் முறைவைப்பு 27
—நா. ஆறுமுகம்

3. தொல்காப்பியமும் உருபொலியனியலும் 36
—டாக்டர் பொன். கோதண்டராமன்

4. எந்தையாரைக் குறித்த சில நினைவுகள் நான் கண்டதும் கேட்டதும் 43
—தவத்திரு சரசுவதி அம்மையார்

II. அறக்கட்டளைச் சொற்பொழிவு 1-48

1. பெரிய புராணத்தில் பக்திச்சுவை 1

2. பெரிய புராணத்தில் சமுதாய நோக்கு 27
—தவத்திரு சுந்தரசுவாமிகள்

III. கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச்சுவடிகள் i-xvi-1-64
—புலவர் மு. சண்முகம் பிள்ளை
—டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

IV. மதிப்புரை மாலை 1-12

V. தமிழ்த்துறைச் செய்திகள் 1-4

# ஆய்வுக் கட்டுரைப் பகுதி

# பொருளடக்கம்


1. சாமுவேல் வேதநாயகம் தாமஸ் பாடிய பூங்காவனப் பிரளயம் - ஒரு மதிப்பீடு —மு. சண்முகம் பிள்ளை 1

2. கலித்தொகையின் முறைவைப்பு —நா. ஆறுமுகம் 27

3. தொல்காப்பியமும் உருபொலியனியலும் —டாக்டர் பொன். கோதண்டராமன் 36

4. எந்தையாரைக் குறித்த சில நினைவுகள் —நான் கண்டதும் கேட்டதும் —தவத்திரு சரசுவதி அம்மையார் 43

# சாமுவேல் வேதநாயகம் தாமஸ்

*பாடிய*

***பூங்காவனப் பிரளயம்****

(ஒரு மதிப்பீடு)


*மு. சண்முகம் பிள்ளை,*

தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,
சென்னைப் பல்கலைக்கழகம்.


## பொருள் அடைவு

கதைக் கருவும் காவியப் பெயரும்—மூலநூலும் மொழி பெயர்ப்பும்—தாமஸ் காவியம் முழுமையும் பாடினரா? —மூல நூலாசிரியர்—சாமுவேல் வேதநாயகம் தாமஸின் தகைமை—தமிழிலக்கிய உலகில் அம்மானைப் பாடல்—பூங்காவனப் பிரள யத்தின் அம்மானை நடை—அழுத்தத்திற்கான சில உத்திகள்—ஒரு பொருள் பற்றிய அடுக்குரை—அந்தாதிபோன்ற தொடரடுக்கு—உணர்ச்சி வெளிப்பாட்டு நடை—உலக வசனங்கள்—பழம் பாடல்களைத் தழுவுதல்—மக்களின் வாய்மொழி வழக்கு—வட்டாரப் பேச்சு வழக்கு—தமிழ்ப் பேரகராதியுடன் ஒப்புக் காணல்—அகராதியில் மேற்கோள் தரப்படாச் சொற்கள்—புத்தாக்கமும் புது வடிவங்களும்—உவமை நயம்—உளம் கவர் பகுதிகள்—பிற மொழிபெயர்ப்புகள்—பல்வேறு மொழிபெயர்ப்பும் வரவேற்கத்தக்கதே—புதுமைக்காப்பியம் போற்றத்தகும்—பாராட்டுக்குரிய பதிப்பாசிரியர்கள்—பதிப்பின் செம்மைக்காக—மிலிற்றனர் காவியம் போற்றுக—அம்மானை நூல்களும் அழகிய இலக்கியங்களே.

---

*. தெய்வப்புலவர் ஜான் மிலிற்றனர் அருளிச் செய்த **பூங்காவனப் பிரளயம்**. முதலிரு காண்டங்களின் தமிழாக்கம். ஆசிரியர்: சாமுவேல் வேதநாயகம் தாமஸ். பதிப்பாசிரியர்கள்: கு. அருணசலக் கவுண்டர், தி. பாக்கியமுத்து. வெளியீடு: C L.S. கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை—1977. பக். i-xiii 1-122; விலை ரூ. 5.

*18—2—1978* ஆம் நாள் நூலக இயக்குநர் திரு. வே. தில்லை நாயகம் அவர்கள் தலைமையில் அமைந்தகரைக் கிளை நூலகத்தில் நிகழ்ந்த நூல்கள் அறிமுக விழாவில் பேசிய பேச்சை யொட்டி எழுதப் பெற்றது.

## கதைக் கருவும் காவியப் பெயரும்

எல்லாம் வல்ல இறைவன் மனிதகுலத்துக்காகப் பூவுலகைப் படைத்தார். அதில் பூலோக சுவர்க்கம் என்னும்படி ஏதேன் பூங்காவை அமைத்தார். அங்கே மனுகுலத்தின் ஆதித்தந்தை தாயராகிய ஆதாமையும் ஏவாளேயும் வாழ்ந்துவரச் செய்தார். அப் பூங்காவிலுள்ள பாவப்பழம் தாங்கிய மரத்தின் கனியை மட்டும் உண்ணுதல்கூடாது என்று அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். தேவனின் ஆணைப்படியே அவ்விருவரும் அன்புடையராய் இணை பிரியாது ஒன்றியிருந்தனர். இருவரும் கூடித்தொழில் புரிந்து உண்டும் தின்றும் ஆடியும் பாடியும் இன்பமாக வாழ்ந்து வரலாயினர்.

முன்னமே இறைவனுக்கு எதிராக வானுலகில் கலகஞ் செய்த சாத்தானும் அவனைச் சேர்ந்த கூட்டாளிகளும் இறைவனின் கோபத்திற்கு ஆளாகி, நரகலோகத்தில் தள்ளப்பட்டுத் துன்பம் அனுபவித்து வந்தனர். சாத்தான் எவ்வாருயினும் இறைவனுடைய நோக்கத்தைக் கெடுக்கவேண்டும் என்று தன் துணைவர்களுடன் கலந்து ஆலோசித்தான். 'வானுலகில் இறைவனை எதிர்த்து மீண்டும் போர் செய்து வெற்றிபெற இயலாது, இன்னும் எதிர்த்தால் தாங்கள் முழுமையாய் அழிக்கப்பட்டுவிடலாம்' என அஞ்சினர். ஆயினும் இறைவன் படைத்த பூவுலக மாந்தரைக் கெடுத்து, அவர்களுடைய இன்ப வாழ்வைப் பாழாக்கி, அதன்மூலம் இறைவனுக்கு எதிராகத் தங்கள் ஆற்றலைக் காட்டலாம் எனத் துணிந்தனர்.

பேய்களின் தலைவனுன சாத்தானே பாம்பு உருவில் ஏதேன் தோட்டத்திற்கு வந்து, ஏவாளின் மனத்தைக் கலைத்துப் பாவக் கனியை அவள் உண்ணச் செய்துவிட்டான். அடுத்து அவளுடைய தூண்டுதலால் ஆதாமும் அக் கனியை உண்டுவிட்டான். இறைவனின் கட்டளையை மீறிப் பாவம் செய்து, சாபத்துக்கு உள்ளாகியதால் அவர்கள் வாழ்வில் பெருங் குழப்பம் நேர்ந்தது; சுவர்க்க இன்ப வாழ்வை அவர்கள் இழந்தனர்.

இவ்வாருக ஏதேன் பூங்காவில் வாழ்ந்த ஆதாமும் ஏவாளும் தங்கள் இன்ப வாழ்வை இழந்து பட்ட மனக்குழப்பத்தையும் உலகிற்கு நேர்ந்த பெருந்துன்பத்தையும் விளக்குவதால் இதற்குப் 'பூங்காவனப் பிரளயம் எனப் பெயர்புனைந்தனர், ஏற்கெனவே இந்தக் காவியத்தைத் தமிழில் நாடகமாக்கித்தந்த வேதக்கண் நாடார் இதற்கு 'ஆதி நந்தாவனப் பிரளயம்' எனப் பெயர் சூட்டியிருந்தார்.[1] இதுவும் இவ் வாசிரியருக்கு இவ்வாறு பெயர் புனையத் தூண்டுதலாய் அமைந்தது என்னலாம்.

---

1. ஜான்மிலிற்றனுடைய ஜீவிய சரித்திரம்: பூங்காவனப் பிரளயம், பக். 7.

## மூலநூலும் மொழிபெயர்ப்பும்

ஆங்கில மகாகவி ஜான் மிலிற்றனுர் பாடிய பெரும்புகழ் வாய்ந்த 'பாரடைஸ் லாஸ்ட்' (Pradise Lost) என்னும் காவியத்தின் தமிழாக்கமே பூங்காவனப் பிரளயம். மிலிற்றனுர் காவியம் போலவே இந் நூலாசிரியர் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் என்பாரும் எதுகை நீக்கிய இயற்றமிழ்ச் செந்தொடையாய்த் தம் காவியத்தை அமைத்துள்ளார்.[1] இதனைத் தமிழில் வழங்கும் கதைப்பாடலாகிய அம்மானைப் பாடல் நடை என்றே கொள்ளலாம்.

ஜான் மிலிற்றனுரின் காவியம் 12 காண்டங்கள் கொண்டது. அவற்றுள் பாதாள காண்டம், யாத்திரை காண்டம் என்னும் முதலிரு காண்டங்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதனை ஆசிரியர் 1887-ல் முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

இக் காவியத்தின் கதை வரலாறும் நூற்போக்கும் விளங்கும் பாயிரப் பகுதியில் பன்னிரண்டு காண்டங்களின் பொருளடக்கத்தையும் அழகிய உரைநடையில் ஆசிரியர் எழுதித்தந்துள்ளார். எளிய இனிய தமிழில் அமைந்துள்ள[2] இப்பகுதி பத்தொன்பதாம் நூற்றுண்டிலேயே உரைநடையில் எளிமை புகுந்துள்ளமையை நன்கு காட்டும். இக் காவியக் கதையைத் 'தெய்வமாக்கதை' என்று ஆசிரியர் சுட்டுகிருர்.

'பொய்யில் காட்சிப் புலமையி னேர்புகல்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே'

என்னும் கம்பன் வாக்கைத்தந்து முடிக்கின்ற இவ்வாசிரியர் கம்பன் இராமகாதைக்குச் சூட்டிய 'தெய்வமாக்கதை' என்பதையே தலைப்பாகத் தருகிருர். பன்னிரண்டு காண்டங்களுக்கும் இவர் தந்துள்ள பெயர்களை நோக்கினுலும் இவருக்குக் கம்பனிலும் பிற தமிழ் நூல்களிலும் உள்ள ஈடுபாடு புலப்படும்.[3]

## தாமஸ் காவியம் முழுமையும் பாடினரா ?

பன்னிரண்டு காண்டக் காவியப் பொருளையும் கவினுற உரைநடையில் தந்த் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் ஏனைய காண்டங்

---

1. பூங்காவனப் பிரளயம், பக். 37. சந்தம்' என்னும் பகுதி பார்க்க.

2. பூங்காவனப் பிரளயம் பக். 15-30.

3. 1. பாதாள காண்டம், 2, யாத்திரை காண்டம், 3. பரலோக காண்டம், 4. பூங்காவன காண்டம், 5. கலக காண்டம், 6. யுத்த காண்டம், 7. அண்டோற்பத்தி காண்டம் 8. சுந்தர காண்டம், 9. கலிதொடர் காண்டம், 10. சாப காண்டம், 11. தரிசன கண்டம், 12. உத்தர காண்டம்.

களையும் பாடியிருப்பார் என்று கருதவும் இடமுண்டு. இதுபற்றி அவர் வெளிப்படையாய் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனல், 'தெய்வமாக்கதை' பற்றிய உரைநடைப் பகுதியின் இறுதியில் இவர் தரும்,

'இருகண்ணின் நீர்பெருக இயல்முறையால் அழுதிரங்கி
தெரியுமொரு துணையின்றித் தெய்வமே துணையாகி
ஒருவரில்லாக் காட்டிலேயும் உளனெருவன் உலகுமுள
அருள்புரிவான் அவனெனவே அகன்றுனும் வனம்நீங்கி'

என்னும் 4 வரிகளும் இவர் பாடிய பன்னிரண்டாம் காண்டத்தின் இறுதிப் பகுதியில் உள்ளனவேயாம்.

மேலும், 'விதியேயோ விதியேயோ' என்னும் பகுதியில் ஜான் மிலிற்றனுர் அருள்தேடிப் பரஞ்சோதியைப் பிரார்த்திப்பதாக மூன்ரும் காண்டத்தில் வரும் பகுதிக்கு உரிய பாடலின் மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார்.

'போதாத காலம்' என மிலிற்றனுர் பல்வேறு ஆபத்தான சூழலில் மறைந்து வாழநேர்ந்த வரலாற்றைச் சுட்டும் பகுதியில், அவருடைய வரலாற்றை வெளிப்படுத்துகிற ஏழாவது காண்டத்தின் தொடக்கப் பகுதிக்குரிய மொழிபெயர்ப்பைத் தருகிருர்.

இவற்ருல் பன்னிரு காண்டங்களையுமே இவர்பாடி முடித் திருந்தனரோ என்று கருத இடமாகிறது. ஆனல், தாம் எழுதும் பொருட்பகுதிக்கு ஏற்ற மேற்கோள் குறிப்பதற்காக 12, 3, 7-ஆம் காண்டங்களில் உரிய பகுதியை மட்டுமே ஆசிரியர் மொழி பெயர்த்துத் தந்திருக்கலாமே என்று ஓர் எதிர் வினு எழுப்பவும் இடமுண்டு. இவ்வகை ஐயங்களையெல்லாம் சாமுவேல் வேத நாயகம் தாமஸ் 'பூங்காவனப் பிரளயம்' முதல் பதிப்பில் தந்துள்ள ஆங்கிலப் பாயிரப் பகுதி அகற்றிவிடுகிறது.[1] அது வருமாறு:

"I now bring out the translation of the first two books of PARADISE LOST, the result of the few hours I was

1. முதற்பதிப்பில் உள்ள ஆங்கில முன்னுரைப் பகுதியினைக் கண்டு மேலே சுட்டிய தாமஸின் ஆங்கில உரையை எனக்கு எழுதியனுப்பி உண்மையை விளக்கியுதவியவர், சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தில் (G.L.S.) வெளியீட்டுத்துறைச் செயலராக விளங்கும் திரு. தி. பாக்கியமுத்து அவர்களாவர்கள். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகிறது. இரண்டாம் பதிப்பாக இப்பொழுது வெளிவந்துள்ள இந்தப் புதிய பதிப்பில் (1977) சேர்க்காது விடுத்த ஆங்கில முன்னுரையை இனிவரும் பதிப்பில் சேர்ப்பது மிகவும் இன்றியமையாததாகும். அந்த முன்னுரை இந்தப் புதிய பதிப்பில் இடம்பெற்றிருந்தால், தாமஸ் நூல் முழுமையும் பாடினரா?' என்னும் ஐயவினு எழுந்தேயிராது.

able from time, to time, to steal from my other duties during the last twelve months. I publish them now to see whether it is worth my while to proceed in the work of translation. But whether I am unable to proceed or not; I have at least this personal satisfaction for the translation has contributed to a more thorough study of Milton and a fuller appreciation of his genius on my part, and the gratification that I may have introduced something of this 'mighty-mouth inventor of harmonies's to my fellow countrymen in their own tongue, and that I have added one more to the languages in which PARADISE LOST can be read."

முதற்பதிப்பு வெளிவந்தபின் (1887) மூன்று ஆண்டுகளே ஆசிரியர் தாமஸ் உயிர்வாழ்ந்திருந்தார்.[1] எனவே மூன்றும் காண்டம் முதல் ஏனையவற்றையும் தொடர்ந்து நூலை முழுமையாய்ப்பாடி நிறைவேற்ற அவரால் இயலாது போயிற்று என்பது தெளிவாகும். அச்சில் வெளிவந்துள்ள முதலிரு காண்டங்களையும் படிக்கின்ற நமக்கு நூல்முழுமையும் இவ்வாறு கற்று மகிழ இயலவில்லையே என்னும் உணர்வே மேலெழுகிறது.

## மூல நூலாசிரியர்

மூல நூலாசிரியர் ஜான் மிலிற்றனர் என்பது முன்பு கண்டோம். இவருடைய ஜீவிய சரித்திரத்தையும் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் தந்துள்ளார். மிலிற்றனர் இந்தக் காவியத்தைத் தொடர்ந்து கடவுளின் திருக்குமாரர் மனிதாவதாரம் எடுத்துச் சாத்தானின் சோதனைகளையெல்லாம் வென்று மக்களுக்கு மீட்பு அருளிச் செய்த வரலாற்றைப் பொருளாகக் கொண்டு பூங்காவன மீள்மயம்— அதாவது சுவர்க்க மீட்பு (Paradise Regained) என்னும் காவியத்தையும்[2] செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

இவற்றை மிலிற்றனர் பாடிய காலத்து கண்ணிரண்டும் தெரியாத குருடராயும் முதியராயும் இருந்தார்.[3] தம்முடைய புதல்வியரையும்

---

1. 1890ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாளில் இவர் மறைந்தார்.

2. ஆதிநந்தாவனப் பிரளயம் என்னும் நாடகம் ஆக்கிய வேதக்கண் நாடாரே 'ஆதிநந்தாவன மீட்சி' என்னும் நாடகத்தையும் ஆக்கி 1868-ல் வெளியிட்டுள்ளார். பார்க்க: தமிழ்நூல் விவர அட்டவணை, தொகுதி I, பகுதி II. பக்கம் 474.

3. இவருடைய வரலாற்றோடு தமிழ்நாட்டில் 17ஆம் நூற்றாண்டில் விளங்கிய அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் வரலாறு ஒப்புக் காணத்தகும். இவ் புலவருக்கு முன்பு வாழ்ந்த இரட்டையர் வரலாறும் இணைத்து நோக்கத்தக்கதேயாம்.

நண்பர்களையும் கொண்டு முந்தை நூல்களை வாசிக்கச் செய்து கேட்டுத் தம்மனத்திலேயே கவிதையை உருவாக்கி விடிந்தபின் அவற்றைச் சொல்லி எழுதுவிப்பது வழக்கம்.

'ஞானகண் ஒன்று இருந்திடும் போதினிலே
ஊனக்கண் ஏதுக்கடி—குதம்பாய் !
ஊனக்கண் ஏதுக்கடி!'

என்னும் குதம்பைச் சித்தர்பாடலை நினைவூட்டும் வகையிலே மிலிட்டனுர் பக்தியோட்டம் மேலெழத் தம் கல்வியின் மேன்மை புலப்பட மிக அற்புதமாகக் கவிதை புனைந்துள்ளார். இவர் தம் பெருங்காப்பியம் உலகமொழிகள் பலவற்றுள்ளும் மொழிபெயர்த்துப் போற்றப்படுகிறது. தமிழிலும் சென்ற நூற்ருண்டிலேயே இவருடைய காவியங்களை மொழிபெயர்க்கும் பணி தொடங்கியுள்ளது. ஆயினும் காவியம் முழுமையாய் யாரும் இன்னும் தாராமை ஒரு குறையே.

## வேதநாயகம் தாமஸின் தகைமை

மிலிற்றனுர் காவியத்தைப் பெண்களும் பேதையரும் விரும்பிப் படித்து அனுபவிக்கத்தக்கதான அம்மானை நடையில் பூங்காவனப் பிரளயம் பாடித்தந்த சாமுவேல் வேதநாயகம் தாமஸ் (1855-1890) என்பாரின் வாழ்க்கை வரலாற்றைப் பதிப்பாசிரியர்கள் முதலில் தந்துள்ளமை மிகப்பொருத்தமாம். ஆங்கிலத்திலன்றித் தமிழ், சம்ஸ்கிருத மொழிகளிலும் வல்லவராய் விளங்கியவர் இவர் என்பது தெரியவருகிறது. கல்வி நிலையங்கள் பலவற்றிலும் தொடர்ந்து பணியாற்றிய இவர் 35 ஆண்டுகளில் மரணமடைந்தது பேரிழப்பு. இரண்டுக் காண்டங்களைத் தொடர்ந்து நூல் முழுமைக்குரிய அவருடைய கவிதை வெளிவராமற் போனதற்கும் இது ஒரு முக்கிய காரணமாகும்.

திருநெல்வேலி மெய்ஞ்ஞானபுரத்தில் பிறந்த இக் கவிஞரின் வாக்கில் செந்தமிழும் தென்பாண்டி நாட்டுப் பேச்சு வழக்கும் மரபு வழியான பழமொழி முதலியனவும் இயல்பாக வந்து பொருந்து கின்றன.

## தமிழ் உலகில் அம்மானைப் பாடல்

தமிழ் உலகில் இன்னும் பரந்த நோக்கு எங்கும் எல்லாரிடத் திலும் நிலவுவதாகச் சொல்ல இயலவில்லை. ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய நூல்களுள் எத்தனையோ நூல்கள் இறந்துபோக இறவாமல் தொடர்ந்து வருகின்ற நூல்களுள்ளும் அருமையான நூல்கள் பலப்பல. தமிழ் பயில்வார் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் மணிமேகலை, பக்திநெறிப் பாடல்கள், காவியங்கள், பிரபந்தங்கள்

என்று பெரும்பாலும் பழங்காலத்தைப் பகுத்தாய்வதிலேயே பொழுது போக்குகின்றனர்.[1]

இலக்கியச் செல்வங்களை—பழங்காலக் காவியம் முதலியவற்றை ஆசிரியம், விருத்தம் போன்ற பா நடையில் பாடிவந்த மரபு மாறி அம்மானைப் பாடல், சிந்துப் பாடல், கும்மிப் பாடல், நாடகம் என்னும் வகையில் எளிமையாக்கிக் கவிதைக்கு இனிமையூட்டிப் பல காவியங்களையும், காவியப் பகுதிகளையும், தனிக்கதைகளையும் எடுத்துக் காலந்தோறும் புதுமை படைத்துள்ளனர். அம்மானை நடையிலும் கீர்த்தனைப் பாங்கிலும் உரைநடையிலும் ஆக்கி மக்களிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டி வந்துள்ளனர். இத்தகு மரபுகளுள் ஒன்றே அம்மானைப் பா நடை.

அம்மானை என்றால் தாய்மாரை முன்னிலைப்படுத்திப் பாடும் பாடல், அல்லது தாய்மாரின் பொழுதுபோக்கிற்காக அமைத்துத் தரப்படும் சந்தநடைப் பாடல் என்று கொள்ளலாம். அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், வைகுந்த அம்மானை என்று இவ்வாறு அம்மானைப் பாடல் நூல்கள் பல உள, 'ராமப்பய்யன் அம்மானை'' 'இரவிக்குட்டிப் பிள்ளை போர்,' 'தேசிங்கு ராசன் கதை போன்றவை வரலாறு தழுவிய அம்மானைப் பாடல்களாம்.

## பூங்காவனப் பிரளயத்தின் அம்மானை நடை

இனி, பூங்காவனப் பிரளயத்தின் அம்மானை நடையமைதியைக் காண்போம். அம்மானை நடைப்பாடல் ஆசிரிய நடைபோல் தோற்றமளித்தாலும் ஆசிரியப் பாவிற்போல இதில் இயற்சீர் மிகுந்துவருதல் இல்லை; பெரும்பான்மையும் மூவகைச் சீர் நான்கு கொண்ட அடியமைப்பைப் பெற்று வருகிறது. அதோடு அங்கங்கே பொருள் செல்நெறிக்கு ஏற்பத் தொடையமைப்பும் மாறுகிறது. பொதுவாக அடியெதுகை அமைப்புக் குறைவு. ஆயின், மோனைமுறை அடிதோறும் பல்வேறுவகையில் அமையும். முற்றுமோனையாகக்கூட வருதலும் உண்டு.[2]

---

1. தமிழ் பயில விரும்பும் மாணுக்கர் ஒவ்வொரும் கற்கத்தகுந்த நூல்கள் இவையிவை யென்று திருமணம் செல்வக்கேசவராய முதலியார் பல ஆண்டுகளுக்கு முன்பே தாம் எழுதிய 'தமிழ்' என்னும் உரைநடை நூலில் வெளியிட்டுள்ளார். இப் பட்டியலை மர்டாக்கின் நூலட்டவணையின் (மறுபதிப்பு 1968) பிற்சேர்க்கையிலும் இப்பொழுது காணலாம் (பக்கம்334-378). இந்த வகையில் ஒரு பட்டியல் இக் காலத்திற்கு ஏற்ற வண்ணம் அமைப்பதற்கு இது ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது.

2. ஆறுதலும் அமருதலும் அற்றதம்மா அந்நாடு' பூங். 41: 80. 'செக்கச் சிவேரென்று சிவந்தோடும் செந்நிறத்தை' பூங். 58: 581.

ஆசிரியர் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் தம்முடைய காவிய நடைச்சந்தம் குறித்து ஒரு விளக்கம் தந்துள்ளார். 'இக்காவியம் நடக்கும் சந்தம் இங்கிலீஷில் மிலிற்றனுரும், சமஸ்கிருதத்தில் வால் மீகரும் நடக்கின்ற சந்தங்களைப்போல் எதுகை நீக்கிய இயற்றமிழ்ச் செந்தொடையாம்' என்று தொடங்கி எழுதும் விளக்கக் குறிப்புக் காணத்தக்கது.[1]

அம்மானை என்பது மகளிரைநோக்கிய விளியாம். இடையிடையே சிற்சில இடங்களில் இச் சொல்லைக் கவிஞர் எடுத்தாள்வதும் ஒரு மரபாகும். வீரமாமுனிவரின் 'கித்தேரியம்மாள் அம்மானை' முதலியவற்றில் இத்தகு அமைப்புள்ளமை காணலாகும். பூங்காவனப் பிரளயப் பாடற்போக்கிலும் அங்கங்கே 'அம்மானை' என்னும் விளிச்சொல்லை இக் கவிஞரும் ஆள்கின்றார். சில எடுத்துக் காட்டுகளை இங்கே காண்போம்:

'தூராதொலைத் தீவிலெங்கும் தொக்கலைந்தார், அம்மானை!'
(62 : 639)

'ஆவலங் கொட்டி நின்று ஆர்ப்பரித்தார், அம்மானை !' (69 : 857)

'குடல்வெளியே சரியவெட்டிக் கொள்ளை கொண்டார்,
அம்மானை !' (73 : 980)

'எந்நேரமும் தலைவணங்கும் இடம்திரிந்தார், அம்மானை !'
(103 : 920)

ஒருவகையில் பார்த்தால் இவ்விடங்களில் வரும் 'அம்மானை' என்னும் சொல் சந்தம் நிரப்புவதற்கு மரபுவழி வரும் ஓர் இசை நிறை சொல்போலவும் தோன்றுகிறது.

## அழுத்தத்திற்கான சில உத்திகள்

வில்லிசைப் பாட்டில் சொற்களை மீண்டும் மீண்டும் அழுத்தம் நோக்கி இசைப்பதுபோல, இந்த அம்மானைப் பாடல்களிலும் இசைப்பது ஒருமரபாகக் கொள்ளப்படுகிறது.

'ஆசனமாம் ஆசனமாம் அரசமோடி ஆசனமாம்' (76 : 1)

'பேயோடு பேயுமல்லோ பேசியொத்து உறவாடி
ஒற்றுமையைக் கடைப்பிடித்து உறுதியாக நிற்கின்றது !'
(98 : 702-703)

வினைச்சொல்லோடு 'ஆம்', 'காண்' என்பன போன்ற அசைச் சொற்கள் சேர்ந்துவர நிகழ்ச்சிகளை உரைப்பது மற்றொருவகை முறையாம்.

---

1. பூங்காவனப் பிரளயம், பக். 37

'பட்டகதை உற்றகதை பாடுசூடு பலசொல்லி
விதியாரை வைதுகொண்டு வீண்பொழுது போக்கினராம்'
(100 : 788-789)

'திடீரென்று எழுந்ததுபோல் திடுக்கிட்டு எழுந்தாராம்' (53 : 400)

'திக்கடித்து மெய்ம்மறந்தும் தீய்ந்தொழியாது உழன்றுனும்'
(41 : 71)

'கன்னமும் வாடிப்போய்க் கவலைவீற் றிருந்ததாம்' (66 : 756)

'நித்தியமாய் யாதனையில் நீடுழி சாவதிலும்
ஒரேயடியாய்த் தொலைவதுவே உயர்ந்தபெரும் பாக்கியமாம்.'
(81 : 152-153)

'இத்தனையும் நடந்தபின்பு என்னநம் கதியெனிலோ
அதோகதியே நம்கதியாம் அகம்அழிந்து சோர்தலுமாம்',
(83 : 215-216)

'கொழுந்தோடி மத்தியில் குழியோடப் புரண்டது காண்' (48:272)

'மடமடஎன் றிடிக்குரலாய் மாக்கூச்சல் போட்டது காண்!'
(115;1318)

'வச்சிர வடவிலங்கில் வாதிக்கும் சிறைத்தீயில்
அல்லும் பாகலும் அலைந்தலைந்து அழுந்தவேதான்' (40 : 64-65)

## ஒரு பொருள்பற்றிய அடுக்குரை

ஒரு நிகழ்ச்சியையே வெவ்வேறு வகையான அடைமொழி சேர்த்து அடுக்கியுரைத்தல் இன்னொருவகை சாத்தான் நரகத்தில் அழுந்தி, அப்புறமும் இப்புறமும் தன் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தவகையைப் பின்வருமாறு வருணிக்கின்றார் :

'அகோரமாய் வருந்திடவே அப்புறமும் இப்புறமும்
பரிதவிப்பாய்ப் பார்த்தானும் பாழ்அடைந்த கண்ணுருட்டி,
கடுந்திகிலும் நெடுந்துன்பும் காட்டுகின்ற கண்ணுருட்டி,
திடன்கொண்ட மேட்டிமையும் திமிருகின்ற கண்ணுருட்டி,
உரங்கொண்ட பழிபகையும் உருளுகின்ற கண்ணுருட்டி,
பார்த்தான் ஒருசுற்றில் பார்த்தோர்கண் எட்டுந்தொலை.'
(41 : 76-80)

'செக்கச் சிவேரென்று சிவந்தோடும் செந்நிறத்தை' (58 : 541)

'நெஞ்சுடைந்து நெஞ்சிடைந்து நெஞ்சுளைந்து செஞ்சழிந்து''
(76 : 11)

என்றாற்போல ஒரு பொருளின் விளக்கமாக அடுக்கிக் கூறும் பகுதியும் காணலாகும்.

## அந்தாதி போன்ற தொடரடுக்கு

மீண்டும் மீண்டும் சொற்களை அடுக்கிக் கூறுதலோடு அந்தாதி போல முன்னடிப் பொருளையோ, முன்னடித் தொடர்களையோ

அடுத்த அடியிலும் தொடர்ந்துவரப் பாடுகை கதைசொல் முறையில் ஓர் உத்தியாகவே கொள்ளப்படுகிறது. பின்வரும் பகுதியில் இவ் வகை அமைப்பினைக் காணலாம்.

'ஆங்காரங் கொண்டு அக்கிரம ஆணவப்போர்
விண்ணுலகில் தொடுத்தான் வீணுக வீணுக
தொடுத்தவனைத் தேவர்பிரான் தொடுக்குமுன்னே தூக்கிவீசி'
(40 : 57-59)

'தீக்கடலில் திடுக்கிட்டுத் திக்கடித்து மெய்ம்மறந்து
திக்கடித்து மெய்ம்மறந்தும் தீய்ந்தொழியாது உழன்றுனும்!'
(41 : 70-71)

'அகந்தைகொண்டு பேசினுலும் அகமனமோ வெந்தழன்று
அகமனமோ வெந்தழன்று அடிநெஞ்சோ டுடைந்துநின்றுன்.'
(44 : 162-163)

'ஊமையாய்த் தாம்நடந்து உருக்காட்டி முன்னின்றுர்
உருக்காட்டி முன்னின்றுர் ஒரே நீளம் காதவழி' (64 : 698-699)

'தந்திரங்கள் வேண்டுவோர்கள் தந்துபண்ணிப் பார்க்கட்டும்
தந்துபண்ணிப் பார்க்கட்டும் தந்திரங்கள் வேண்டும்போது'.
(79 : 84-85)

'அவனுரைக்கு அஞ்சினுேராய் அனைவோரும் எழுந்திருந்தார்
எழுந்திருந்த அப்பொழுது எழுந்தவொரு பேரிரைச்சல்'
(97 : 669-670)

'சிருஷ்டிகளாய் உள்ளவற்றைச் சிறிதேனும் அஞ்சமாட்டான்
சிறிதேனும் அஞ்சமாட்டான் சிறிதேனும் மதிக்கமாட்டான்'
(106 :1010-1011)

'இல்லையெனில் ஒரேயடிக்கு இந்தச் சூலம் இருக்கிறது
இந்தச் சூலம் இருக்கிறது இருக்கிருய் பயலே நீயும்! (107 : 1041)

## உணர்ச்சி வெளிபாட்டு நடை

பேசுவோரின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையிலும், கவிஞன் தன்னுணர்ச்சியைப் புலப்படுத்தும் வகையிலும், அம்மா, அப்பா ஐயா, அந்தோ, ஐயோ, ஐயையோ முதலான வியப்புச் சொற்களை ஆளுதல் பல இடங்களிலும் காணலாகும். இவையெல் லாம் கேட்போர் உணர்ச்சிகளையும் ஒருமுகப்படுத்திக் கவிஞன் தன் பக்கமாக இழுத்துக் கொள்ளுவதற்குறிய ஓர் உத்தியாகும். இக் காவியத்துள் வரும் ஒருசில உணர்ச்சி வெளிப்பாட்டு நடைகளைக் காண்போம்.

'சிருஷ்டிகளின் வரைதவறிச் சீர்கேட்டுக்கு உள்ளாகி
விமலனின் சித்தமதை விரோதிக்க நேர்ந்ததம்மா !
எவன்தான் பாவி இதற்கு ஏவி விட்டானுே ?
எவன்தான் இக்கலகுக்கு எழுப்பிக் கொடுத்தானுே?

'பாதாளச் சர்ப்பமாம் பசாசே அகந்தையினுல்
வேதாளக் குழாங்களுடன் வீழ்ந்துண்ட காலமதில்
வன்கண்ணுல் பழிக்குணத்தால் வம்புசெய்ய வாஞ்சை
[கொண்டு
வஞ்சனையால் மாதாவை வஞ்சித்தான் மாபாவி !' (40 : 45-52)

'ஐயோ அவன்விதியோ அத்தோடும் தொலையாமல்
இன்னம்மா சினத்துக்கே இலக்காக்கிற்று அவனை அப்பா !
(41 : 72-73)

'அந்தோ ! அந்தோ ! அவர் அழுந்தும் இடர் இடம் !
எந்தோ ! அவர் முன்னிடம் எப்பேதம் உள்ளதம்மா !'
(42 : 100-101)

'ஐயையோ விழுந்தாய் ! ஐயையோ உருவழிந்தாய் !' (42 : 111)

'நீ விழுந்த உச்சியெங்கே? நீ கிடக்கும் பள்ளமெங்கே ?'
(43 : 121)

'தீகக்கி அடிகருக்கித் திசைநாறும் திட்டை போலும்
அவ்விதம் ஆறும்இடம் அடைந்த தம்மா பாவியடி !'
(48 : 283-284 )

'பகைமுடிக்கும் வகைதேடி பதிவிருந்து பார்த்ததம்மா!' (66 : 759)

'கூட்டோடே தரைநின்று குபுகுபென்று எழுந்ததம்மா !'
(71 : 927)

'என்தீர்ப்பைக் கேளுமையா ! எதிரில் போர் இயற்றல் நன்று'
(79 : 81)

'வாதனையும் உண்டோ அப்பா வருந்தும் இந்தத் துயரைவிட!'
(80 : 135)

'மந்திரச் சூழ்ச்சி தோன்றி மகத்தாய்வீற் றிருந்ததம்மா!'
(90 : 441)

'எழுந்திருந்த அப்பொழுதே எழுந்தவொரு பேரிரைச்சல்
கோடையிடி எங்கேயோ குமுறினுப் போல் கேட்டதம்மா !'
(97 : 670-671)

'மானிடர்கள் மாத்திரமே மதிபடைத்த சிருஷ்டிகளில்
சச்சரவு பலப்பட்டுச் சண்டையிடு வோர்களம்மா !'
(98 : 704-705)

'மனுஷருக்குப் பகைஞர்கள் மற்றில்லை என்றுற்போல்
மனுஷன் மனுஷனையே மடியவைத்தல் என்ன பாவம் !'
(98 : 914-915)

'ஈசனுக்கும் மனுஷனுக்கும் எதிரியெனத் தலையெடுத்தோன்
பாரதூர வினைமுடிக்கப் பாவ ஆசைத் தீ மூண்டு
தீ நரகின் வாசல்நோக்கித் தீ விரித்துச் செட்டைதட்டி,
தன்னந் தனியாகத் தாவிவந்தான் பாவியம்மா !'
(104 : 921-924)

## உலக வசனங்கள்

மேலும், உயிருடன் உலாவிவரும் உலகவழக்குச் சொற்களையும் தொடர்களையும் இக்கவிஞர் அங்கங்கே எடுத்தாண்டு மக்கள் மனத்தைக் கவரும் வகையிலும் கதை நடத்திச் செல்கின்றார். உலகில் ஒன்றிற்கு உடன்படாதவர் தம் உடன்படாமைக் குறிப்பை, 'தோலோ தோல்' என்னும் சொற்களால் குறிப்பிடுவது வழக்கம் இதனை,

'கொண்டமட்டும் சினந்திருகக் கொற்றவனைச் சினமூட்டி
கொன்று நம்மைத் தொலைத்துக் குணமடைய வேண்டுமாம்.
இதுதானப்பா நம்சுகமாம் இறந்துமுற்றும் ஒழிதலாம்
துக்கசுகம் இது அப்பா ! 'தோலோ தோல்' நான் உடன்
படேன் (83 : 217-220)

உலகவசனமாய் வழங்கும் பழமொழிகள் சிலவற்றையும் இக் காவியத்தில் ஏற்ற இடங்களில் இயைபுறப் பிணைத்துள்ளார் கவிஞர்.

'வலியப் போர்க்கு போகமாட்டோம் வந்த போரை
விடமாட்டோம்' (68 : 822)

'கைக்கெட்டக் கிட்டியும் வாய்க்கெட்ட வொட்டாமல்
ஓடவும் மாட்டேன் பிடியும் கொடெனென்று
ஓடின வண்ணமே ஓடிடுமாம் தான்தானே.' (103 : 885-887)

'தலையிங்கே தப்பினது தம்பிரான் செயலென்று
உனக்கிட்ட ஆக்கினைக்கு ஒருஎட்டில் போய்ச்சேர
எடு ஓட்டம் ஓடு விண்ணில். (107 : 1041-1043)

என்னும் பகுதிகளில் முதுரை மொழிகள் பொதிந்துள்ளமை காணலாம்.

'கண்ணுர நான் கண்டேன் காதார நான் கேட்டேன்
(120 : 1491)

என்பது,

'கண்ணுரக் கண்டதும் பொய் காதாரக் கேட்டதும் பொய்
கசடற ஆராய்ந்தது மெய்'

என்னும் பழமொழியை நினைவூட்டுகிறது.

அடங்காது தன் போக்கில் அட்டாதுட்டியாய்த் திரிகின்ற தீம்பனைத் ஊர் வழக்கில், 'எதற்கும் துணிஞ்ச கட்டை' என்பார்கள். இந்த நாட்டு வழக்கை,

'சாத்தானே துணிந்த கம்பம் சற்றேனும் அஞ்சிடாமல்
இது என்ன கோலமென்று எண்ணியே தன்நெஞ்சில்
ஆச்சரியப் பட்டதுண்டு அஞ்சினதோ அணுவுமில்லை'
(106 : 1005-1007)

என்னும் பகுதியில் கவிஞர் பொதிந்து வைத்துள்ளார்.

## பழம் பாடல்களைத் தழுவுதல்

பழம் பாடற் பகுதிகளையும் மேற்கொண்டு கூறும் இடங்களும் ஒரு சில உள.

'சேணில் பறக்கும் செந்தமிழ் மொழிவழியாய்' (38 : 19) என்பது, 'சேணிற் பறக்கும் செந்தமிழ்க் குதிரைமுன் திட்டேது தட்டேது காண்' என்னும் பழம் பாடற் பகுதியைத் தழுவியது என்பது விளக்கப் பகுதியால்[1] தெரிய வருகிறது.

'இனத்தியல்பால் நம்மியல்பு எரியியல்பாய் மாறிடவே'
(89 : 403)

என்னும் அடியைப் பார்த்தவுடனேயே,

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்
இனத்தியல்ப தாகும் அறிவு. (குறள். 452)

என்னும் வள்ளுவர் திருக்குறள் நம் சிந்தையில் தோன்றும்.

## மக்களின் வாய்மொழி வழக்கு

மக்கள் நாள்தோறும் வழங்கிவரும் எளிய சொற்களும் தொடர்களும் சிறப்புத் தொடர்களும் இவருடைய கவிதையில் ஆங்காங்கே தென்படுகின்றன. அவற்றுள் பலவும் தென்பாண்டி நாட்டு வழக்கே. சான்றாகச் சிற்சில தொடர்களை இங்கே காண்போம்.

'அவன் தொடுத்த இருள்வினை அவன் தலையைச் சுற்றிடவும்
பாவத்தோடு பாவந்தனை பாவிப்பயல் தான் தொடுத்து
மற்றவரைக் கெடுக்க மாயமாய்த் திரிகையில்' (47 : 258-260)

'தூரா தொலையிலே தொலைதலே மிக நன்றாம்' (49 : 296)

'தத்தர தருணத்தில் தளர்ந்து திகில் பிடித்தவேளை' (50 : 330)

'இப்படிக் காய்க்கூவினன் எல்லோரும் அக்குரலைக் கேட்டார்'
(52 : 396)

'கூவி அழைப்பிக்கக் கும்புகும்பாய்க் கீழ்காற்றில்
கோணிப் பறந்து சாடிக் கொடிய பார்வோன் சீமையெங்கும்'
(53 : 407-408)

---

1. அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ள விளக்கப்பகுதி அமைத்தவர் நூலாசிரியரா, பதிப்பாசிரியர்களா என்பது குறித்து இப்பதிப்பில் குறிப்பு எதுவும் இல்லை. ஒன்றும் சுட்டப்படாத நிலையில் பாடல்களின் அடிக்குறிப்பாக வரும் பகுதி நூலாசிரியரான சாமுவேல் வேதநாயகம் தாமஸ் எழுதியது என்று கருதத் தோன்றுகிறது. ஆயினும் அவருடைய உரைநடை என்று குறிப்பிடப் பட்டுள்ள பகுதிகளைப் போன்ற தெளிவும் விளக்கமும் இல்லாமையும் காண்கிறது. இதனைப் பதிப்பாசிரியர் தமது முன்னுரையில் இனி அடுத்துவரும் பதிப்பில் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

'இது பற்றி வானுலகில் எத்திசையும் பிரபலமாய்
நாடோடிப் பேச் சொன்று நடந்ததைக் கேட்டீரோ ?'
(68 : 829-830)

'குபுகுபெனத் தீயையும் கொட்புறு புகைதனையும்
குமட்டிக் கொண்டு வெளித்தள்ளிக் கொட்டினதாம் மிகுதியாக
மீதிப்பக்கம் கோறையின்றி மினுமினென்று தோற்றுவிக்க'
(69 : 858-860)

'எண்ணித் தொலையாமல் எள்விழவும் இடமிலாமல்
எள்விழவும் இடமிலாமல் இடுக்கமாய் வீற்றிருந்தார்'
(74: 1020-1021)

'ஆதாயம் யாதேனும் அகப்படாத காரியத்தில்
போட்டியாரும் போட மாட்டார் பொருமைக்கட்சி படவு
[மாட்டார்
நரகத்தில் எவரேனும் நாட்டாண்மை வேண்டுமென்று
பாத்தியதை கொண்டாடிப் பாராட்டார் இதுநிசமே.'
(77 : 52-55)

'கட்டுக்கும் காவலுக்கும் கடுஞ்சிறைக்கும் நிந்தனைக்கும்
ஜெயித்தவன் தண்டனையாய் ஜெயித்த பேரை இம்சை செய்து
உட்படுத்தல் இயற்கையென்று உண்மையாய் அறிந்திருந்தும்
சீரழிந்து மெய்விதிர்த்தால் சிரிப்பதன்றி என்செய்வேன் ?
இந்த விதத் தண்டனையே இன்றுநமக் கிட்டவிதி.' (86:310-314)

'குழப்படி குசமசக்குக் குருட்டடியாய் வழக்கறுக்க
அம்பலத்துக் கிருக்குமோ அன்றைக் கன்றி ஆவதில்லை'
(87 : 347-348)

'இதுவேபர மானந்தமாம் என்ன கஷ்டம் கஷ்டமப்பா !'
ஊழியூழி உள்ளளவும் ஓயாத மணியமாகப்
பகைவனையே துதிப்பது பாடுபாடு ! பெரும்பாடு !'
(87 : 366-368)

'மலைமுழைகள் உள்ளூறங்கும் மகாஊழி வெங்காற்று
சண்டைப் பிரசண்டமாகச் சாடிமோதி இராமுழுதும்
கொந்தளிக்கும் கடல் திரையைக் கோலாகலப் படக்கலக்க'
(89 : 415-417)

'மட்டுமிஞ்சிச் சிரிக்காமல் மட்டுக்கட்டும் தடைக்கட்டும்
இவை தவிர வேறு நாம் எதற்கிசைந்து ஒப்பஏலும் ?'
(91 : 485-486)

'அந்தச் சுத்தப் படுக்காளி ஆசித்தது என்னவெனில்'
(93 : 539)

'தலைதெறிக்கச் சிலபேர்கள் சமவெளியில் ஓடுவாரும்
செட்டைதட்டிச் சிலபேர்கள் திசைமறுகச் சாடுவாரும்
ஆங்காங்குப் பன்முறையாய் ஆட்டமாடிப் போட்டிபோட்டு

ஒலிம்பஸொடு பைதாவில் ஓடும் விளையாட்டுக் கொப்ப
பந்தயங்கள் அடித்தோடிப் பாய்ச்சல் போரூர் சிலபேரெல்லாம்
(99 : 746-750)

'அடரடி படரடியால் ஆகாயம் தீப்பிடித்து
செக்கர்நிற வானத்தின் திக்கிரண்டும் வெந்ததுபோல்
தோன்றுகின்ற பாவனையாய்த் தோணநின்ருர் சில பேரெல்லாம்
(99 : 766-768)

'அடரடிமேல் படரடியும் அதரடிமேல் பதரடியும்
கலக்கடியைக் கலங்கடிக்க குழப்படிமேல் குசமசக்காய்
தடதடவென் றிரைச்சல் மடமட த்துப் பூசலெழ
அப்பெரிய சேனையை அடித்துப்பின் தொடர்ந்துவந்த
வெற்றிவீரர் படையான விண்ணவரும் வான் அரணின்
கோட்டை வாசல் வழியாகக் கோடி கோடி சாடினுர்கள் !'
(120 : 1494-1499)

'ஏனப்பா என்னப்பா என்ன கேடு நினைத்தப்பா
உன் மகனைக் கொல்லுதற்கு உயர்த்தினுய் கையை அப்பா ?
ஏனப்பா என் மகனே ! என்ன பித்துப் பிடித்தப்பா
சாக்கொள்ளி இதைத் தூக்கித் தகப்பனுட தலைமேலே
அடிக்கவுந்தான் வந்தாயே ஆர்பொருட் டென்றறிவாயப்பா !
(109 : 1086-1090)

'ஏண்டி ஆயா ! இந்தப்படி ஏகக்கூச்சல் போட்டுவந்தாய்
கூச்சலைப் பார்த்தாலும் கோரமெத்த விகாரமெத்த
கூறின உன்மொழியோ கோரத்திலும் மிக விகாரம்'
(109 : 1103-1105)

'இரண்டாம்பேர் அறியாமல் இரகசியமாய்ப் பறந்தலைந்து
அளவுமித மில்லாமல் அகப்பட்ட பேரையெல்லாம்
குடல்குளிர உண்டு கொண்டு கொண்டாட்டம்
[ஆடிக்கொண்டு
சருவமும் இரையாகச் சம்பரமம் கொள்வீ ரென்ருன்.'
(113-114 :1261-1264)

'எல்லையில்லை கரையில்லை எடுத்துரைக்க அளவுமில்லை
நீளமில்லை அகலமில்லை நினக்குமோர் உயரமில்லை
ஏமமில்லை சாமமில்லை இரவுமில்லை பகலுமில்லை
(116 : 1333-1335)

'கடலிலாமல் திடலிலாமல் காற்றிலாமல் தீயிலாமல்
ஐந்துபெரும் பூதியங்கள் அடிதலை தடுமாற்றுய்
சினைப்பருவ அவஸ்தையில் சிக்குப்பிக்காய்த் தலை மயங்கி
எக்கச்சக்க மாயுருளும் இதிலிருந்து எப்போதேனும்
அதிவலிய ஆண்டவனுர் அண்டங்களைச் செய்வதற்கு
கரும்பிண்ட அணுத்துகளைக் கருவியாகத் தாமெடுத்து
சிருஷ்டிக்கும் காலமட்டும் சீத்துப்பூத் தெனச்சிணுங்கும்.'
(117 : 1372-1378)

## வட்டாரப் பேச்சு வழக்கு

பேச்சுவழக்கான வட்டாரச் சொற்றெடர்களும் சொற்களுமே மிகுதியாக இக்காவியத்தில் இடம் பெற்றுள்ளன. மக்களெல்லாரும் —குறிப்பாகப் பெண்டு பிள்ளைகள் முதலியோரெல்லாம்—இக்காவியத்தைத் 'தாலாட்டுச்' சந்தம் போன்ற இயல்பான எழுச்சிதரும் சந்தத்தில் பாடி மகிழவேண்டும் என்னும் பெருநோக்கால் தாம் வாழ்ந்து பழகியவட்டார மக்களின் மொழிகளையே இக்கவிஞர் மிகுதியும் பயன்படுத்துகின்ருர். பேச்சுவழக்கிற்காணும் கொச்சை வடிவங்களையும் அப்படியே அமைக்கிருர் இந்த மக்கள் காவியத்தில்.

தவிரவும் சிற்சில சொற்களைப் புத்தாக்கமாகவும் இவர் படைத்துள்ளார். இவை பற்றிய சில குறிப்புகளை இக்காவியப் பூங்காவில் இனிக்காண்போம். மேலும் சென்னைப் பல்கலைச் கழகத் தமிழ்ப் பேரகராதியில் இடம் பெருத புதிய சொல்வடிவங்களும் இவருடைய காவியத்தில் காணப்படுகின்றன. 19-ஆம் நூற்ருண்டில் இவர் தரும் புதுச் சொற்களையும் புதுச்சொல் வடிவங்களையும் அகராதியாளர் எடுத்துக் கொள்ள வேண்டுவதேமுறை. நமது மொழியில் பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பயின்ற சொற்கள் எதனையும் நாம் புறக்கணித்தல் கூடாது. நமது மொழியில் கருத்து வளம் சிறக்கச் சொல்வளம் பெருகுதல் வேண்டுமன்றே?

## தமிழ்ப் பேரகராதியுடன் ஒப்புக் காணல்

பிடிவாதம் என்னும் பொருளில் 'அடம்' என்னும் சொல் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதியில் உண்டு. ஆனுல், இச்சொல்லோடு பிடித்தல் என்னும் வினை சேர்த்து வினையாக வரும் வழக்குத் தரப்படவில்லை. 'வன்மத்தொடு வன் பகையும் வணங்காத அடம்பிடிப்பும்' (91 : 484) என 'அடம்பிடித்தல்' என்னும் பேச்சு வழக்கு இலக்கியத் தரம் பெறுகிறது. 'ஆக்கரித்து' (61 : 612) என்பது அகராதியில் இல்லை. இது ஆர்ப்பரித்து என்பதன் மாற்று வடிவம் போலும். 'ஆடை' (104 : 93) என்பது சித்திரை நட்சத்திரம் என்னும் பொருளில் தரப்பட்டுள்ளது. ஆனுல் இக் காவியமோ சித்திரைமாதம் என்னும் பொருளில், 'ஆடைவரும் கோடைக்காற்றில்' (104 : 936) என்று பேசுகிறது. எனவே, சித்திரைத் திங்கள் என்னும் பொருளும் சேர்க்கப்படவேண்டும். தோற் கடித்தல் (44 : 183) என்பது போல, 'அதிரடித்தல்' என்னும் வழக்கு உள்ளது. (அதிரடிக்க 106 : 1003). உபாதை (85 : 280) என்னும் வடிவம் இல்லை. ஆனுல், உபாதி, உபாதித்தல் என்பன உள.

'எட்டேகால் லட்சணங்கள் ஏணங்கிகள் கோணங்கிகள், (103 : 913) என்பதில் மூன்று சொற்கள் உள. இவற்றுள் முதலிரண்டும் அகராதியில் இடம் பெறவில்லை. 'எட்டேகால் லட்சணம்' என்பது கழுதையை 'ஒன்றேமுக்கால் தையன்ஞ' என்று சொல்வது போன்ற குறிப்பு மொழி. அவலட்சணம் என்பது பொருள். காளமேகப்

புலவரின் 'எட்டேகால் லட்சணமே' என இப்பொருளில் தொடங்கும் பாடல் ஒப்புக் காணத்தக்கது.

'கங்குகரையில்லாமை' என்பது அகராதியில் காணப்படுகிறதே யன்றி, 'கங்குகரை' என்னும் முற்பகுதி தனிச் சொல்லாய் இடம் பெறவில்லை. 'கங்குகரை காணவொண்ணு இந்த இருள் பாழ்க் கயத்தில் (94 : 571-572) என்ற இடத்துக் கங்குகரை தனி நிலைச் சொல்லாகப் பயின்று வருதல் காணலாம்.

பயத்தை உண்டுபண்ணும் மிக்க ஆழம் என்னும் பொருளில் 'கிடுகிடுபாதாளம்' என்பது உண்டு. அனால், 'கிடுகிடு பாதலம்' (40 : 62) என்பது இல்லை. 'சல்லியம்' என்பது பிணக்கு, பூசல் என்னும் பொருளது (98 : 709). இப்பொருளில் பேரகராதி இச் சொல்லைத் தரவில்லை. 'சண்டைசல்லியம்' என்னும் வழக்கும் இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

'நெருக்கடியான நேரம்' என்னும் பொருளில் 'தத்தர தருணம் (50 : 330) என்னும் வழக்குப் பேச்சில் உண்டு. அகராதியில் இவ் வழக்கு விடுபட்டுள்ளது. தாயமாட்டு என்னும் சொல் மட்டும் அக ராதியில் காண்கிறது. இதன் தன்வினை வடிவமாகிய 'தாயமாடுதல்' என்பது கவிஞர் ஆட்சியில் உள்ளது (79 : 92). இச்சொல் இந்நாளி லும் பேச்சுவழக்கில் இருந்து வருகிறது. 'தூராதொலை' (49 : 296) என்பதும் இவ்வாறு உள்ளதே. இச்சொல் அகராதியில் இடம் பெற வில்லை. ஆனால், இதே கருத்தில் வரும் 'தூராதி தூரம்,' 'தூராதூரம் என்பன உள.

'அச்சுக்கட்டு' என்று ஒரு சொல் அகராதியில் உண்டு, ஆனால்' 'அச்சுக்கெட்டு' என்பதோ, 'அச்சுக்கெட்டுத் தச்சு மாறி' (117:1393) என்பதோ இல்லை. 'தட்டுமாறுதல்' என்னும் வடிவு அகராதியில் காணப்படும். இதில் இவ்வாசிரியர் வழங்கும் 'தட்டுமாற்று' (119:1155) என்பது காணப்படவில்லை.

'ஊழியுழி வேதனையும் உபாதனையும் போதாமல்' (114 : 1288) என்னுமிடத்து 'உபாதனை' என்பதனைப்பொழிப்புமோனை பொருந்தக் கவிஞர் அமைத்துள்ளார். ஆனால், 'உபாதனை' என்னும் வடிவம் பேரகராதியில் இல்லை. துன்பம் என்னும் பொருளில் வாதனை, வேதனை என்றும் சொற்கள் காணப்படுகின்றன. இவற்றிடையே காணும் இயைபுடைமை காணத்தக்கது.

## அகராதியில் மேற்கோள் தரப்படாச் சொற்கள்

இக் காவியத்துள் வரும் சில சொற்கள் பேரகராதியில் இடம் பெற்றுள்ளன. ஆனால், அவற்றிற்கான ஆட்சியிடம் கொண்ட இலக்கிய மேற்கோள் தரப்படவில்லை. அவற்றுள் பின்வரும் சொற் கோவை கவனித்தக்கது. அமஞ்சி வேலை (87 : 362); அர்க்கன் 74 : 1005); அரைகுறை (93 : 535), அறைகுறையாய் (118 : 141);

அல்லத் தட்டல் (96 : 642), ஆகடியம் (85 : 290) இடுக்கம் (74 : 1021); இப்படிக்கு (52 : 396), இறக்கை (73 : 941) உச்சாணி (73 : 968) உறுமம் (90 : 443); எக்கச்சக்கம் (117 : 1375); ஏருங்கடை (121 : 1343; 122 : 1555) ஒட்டுக்கு (74 : 944; 103 : 906); கணுரிட்டு (115 : 1314, 1315); கிஞ்சித்து (91 : 489); கும்பு (153 : 47); குறளி வித்தை (60 575); கெடுகுறி (82 : 86); கொஞ்சநஞ்சம் (120 - 1503); கோறை (69 : 861) ; சமன் (73 : 87); சன்னபின்னல் (80 : 123) ; (80 : 123) ; சவங்கி (12 : 1341); சீண்டரங்கள் (103 : 912); சீண்டிரம் (109 : 218); சுளுவு (99 : 663); சூட்சி (90 : 460 ; 91 : 483) செட்டை (99 : 747, 104 : 924); தட்டுக்கெடுதல் (53 : 399); தற்சமயம் (79 : 86); தட்டோட்டம் (79:94); தாலாட்டு (89 : 42); தரிகொண்டு நிற்காமல்' (121 : 1518) தோற்கடித்தல் (44 : 1837); தெப்பல் (118 : 1364); படுக்காளி (99 539), பால் வீதி மண்டலம் (52 : 381); பூதியம் (38 : 13); முகாந்திரம் (39 : 41).

## புத்தாக்கமும் புதுவடிவங்களும்

சிற்சில புத்தம்புதுச் சொற்களேயும் இவர் படைக்கின்ருர். இமய மலேயை 'இந்துமலே' (75 : 1022) என்கிருர். இவ்வழக்குப் பிற இடங்களில் காணப்பெருதது. 'இலக்கு' என்பதனை 'லக்கு, (77 : 46) 'லெக்கு' (82 : 193, 92 : 504) என்று பேசும் தோரணையிலே பயன் படுத்தியுள்ளார். ஏமாற்றி என்பதை 'ஏமாத்தி' (94 : 581) என்று கொள்கிருர்.

உலகு, உலகம் என்னும் இருவடிவங்களும் இலக்கியவழக்குப் பெற்றுள்ளன. ஆனல், கலகம் என்பதனைக் 'கலகு' என வழக்கு நோக்கி இவர் எடுத்துக்காட்டுகின்ருர் (40 : 48). 'தலே கீழாய்' என்பது பெருவழக்கே. ஆயின், இப்பொருளில் இக்காவிய ஆசிரியர், 'கீழ்தலேயாய்' (40 : 62) என்று தருகின்ருர். சினேகிதன் பங்காளி இவரைக் குறிக்கக் கூட்டாளன், கூட்டாளி என்னும், சொற்கள் அகராதியில் இடம்பெறுகின்றன, இவ்வாசிரியரோ இப் பொருளில், 'கூட்டன்' (46 : 233) எனப் புது வடிவம் காண்கிருர். கேடு என்பதன் வேருகக் 'கேடுபாடு' என்னும் புதுச் சொல்லாட்சியும் (82:186) தோன்றக் காண்கிரேம். 'சண்டப்பிரசண்டம்' என்பதற்கு ஈடாகக் 'சண்டைப்பிரசண்டம்' (89:416) என்னும் வடிவும் இக் காவியத்தில் தரப்படுகிறது. சிறிதாயினும் என்னும் பொருளில் 'சற்றென்கிலும்' (78:79) என்னும் வழக்குச் சொல் வடிவம் உள்ளது.

கூட்டாளி என்னும் பொருளில் 'கூட்டன்' என இவர் கொண்டது போலவே சிற்பி என்பதற்குச் 'சிற்பன்' என்னும் புதுவடிவம் காண்கிருர் (72 : 948, 949, 960). இவ்வழக்கு 18 ஆம் நூற்ருண்டினரான திருத்தணிகைக் கந்தப்பய்யரின் நூல்களிலும் காணப்படுகின்றன. அரிய இச்சொல்லாக்கத்தை இவ்வாசிரியரும் தந்துள்ளமை கவனிக்கத் தகுந்தது. 'சுயநலம்' என்பதற்கு ஒப்பச் 'சுயநயம்' என்னும் சொல்லாட்சி தருகிருர் (68 : 809). சூருவளி சூறை எனச் சுழல்காற்றைச் குறிப்பிடுவர். இவர் 'சூர்வளி' (42 : 103) என்கிருர்.

‘செல்வத்திலும் சம்பத்திலும் சிறிதும் ஏற்றத்தாழ்ச்சியின்றி’ (71 : 930) என்னுமிடத்துச் செல்வம், சம்பத்து இரண்டனையும் வேறு வேறு கருத்தில் ஆழ்கின்றார்போலும். இரண்டிற்குமுரிய பொருள் வேற்றுமை சிந்திக்கத்தக்கது ஆண்டாள் திருப்பாவையில்’ ‘ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி’ என வருவது போன்ற சொற் கூட்டாகும் இது. மற்றோரிடத்தில், ‘ஊழியுழி வேதனையும் உபாதனை யும் போதாமல்’ (114 : 1288) என்னுமிடத்து வேதனை, உபாதனை என்னும் இரண்டன் பொருள் வேறுபாடும் நுண்ணிதின் அறியத் தக்கது. ஒருகால் இவை ஒருசொல்விழுக்காடாய்ப் பேச்சு வழக்கில் வருவது என்றும் கொள்ளலாம்.

மக்கள் பேசும் அரைகுறையான கொச்சை வடிவங்களையும் காவிய ஆசிரியர் தழுவியுள்ளார். மக்களின் வாய்மொழி இலக்கிய மாகப் படைக்கத் தொடங்கிய ஆசிரியரின் நோக்கத்திற்கு இது ஒத்ததே. ‘தோன்றுகின்ற பாவனையாய்த் தோண நின்றார் சிலபே ரெல்லாம்’ (99 : 768) எனவரும் இவ்விடத்தில் ‘தோணநின்றார்’ என்பது ‘தோன்ற நின்றார்’ என்பதன் உரைச் சிதைவே. இது போன் றனவே ‘போறேன் நான்’ (95 ; 601), ‘சிரிக்காமல்’ (91 : 486) என்பன வும், நிலாவெறித்து என வரத்தக்கது ‘நிலவெரித்து’ (75 : 1013) என வும், உருமம் என வரவேண்டுவது ‘உறுமம்’ (90 : 447) எனவும் வருவன கொச்சை வடிவமாகவே கொள்ளத்தகும். ‘குப்பங் குப்பமாகக் குஞ்சுகளைப் பொறித்துத்தள்ளி’ (74 : 1007) என்னு மிடத்துப் ‘பொரித்தல்’ என்பதுவே இவ்வாறு மாற்றம் பெறுகிறது.

‘படகு’ என்பது ‘படவு’ எனவே மக்கள் பேச்சில் வழங்குகிறது (89 : 419). மாணிக்கவாசகரின் திருவாசகத்திலேயே ‘படவ தேறி, என அமைந்துள்ளது என்பதும் சிந்திக்கத்தக்கது.

பயல் (107 : 1047 ; 122 : 1579); பிலுக்குதல் (63 : 652); பூச் சாண்டி (75 : 1036); பொறுதி (87 : 334); போக்கடித்து (84 : 409); மிண்டன் (78 : 72); மூலியம், சுளுவு (97 : 663); யாதனை (80 : 145); வாதனை (84 : 265) வாதை (80 : 136); வேக்காடு (79 : 92), சண்டப் பிரசண்டம் (117 : 1389); கொந்து (101 : 820); கஸ்தி (118 : 1431) போன்றவை வட்டார வழக்குகளேயாகும்.

முடிவு என்பது ‘முடி’ என்ற அளவில், ‘நன்றாகத் தீர்ப்புஞ் செய்து நல்முடி கட்டினீர்’ (93 : 552) எனக் கடைக் குறையாகிறது. இது போலவே ‘முடிதல்’ என்பது ‘முடில்’ என, ‘நான் முடிந்த நாளிலேயே தான்முடில் திண்ணம்’ (112 : 1205) என்ற இடத்து இடைக்குறையாய் இடம் பெறுகிறது. ‘அச்சுக் கெட்டுத் தச்சு மாற’ (117 : 1393) என்னும் வழக்குத் தொடர் தருகிறார். கடைசி முடிவு என்பதனை உணர்த்த ஏருங்கடை, ஏருங் கடைசி, ஏறு கடை என்னும் சொற்கள் அகராதியில் இடம் பெற்றுள்ளன. இதே பொருளில் நாட்டில் வழங்கும் ‘ஏருங்கோடி’ (122 : 1559) என்னும் வழக்கையும் ஏற்று இவர் தம் காவியத்தில் அமைத்துக் கொள்கிறார்.

'அமைவின்றி அலைகை என்னும் பொருளில் துருதுருவெனல், துறு துறுவெனல் என்னும் சொல் வழக்குகளைத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. 'இவரோ, 'துடுதுடு என்னும் வட்டார வழக்கை ஒட்டி, 'துணிந்த பெருந் தொழில் மேலே துடுதுடுத்து நாட்டமாகி (101 : 818) என்னும் வடிவை வழங்குகிறார்.

உயர்ச்சி, உயரம் என்னும் பொருளில் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரே 'உயர்' (சீவக, 473) என்னும் வடிவத்தைத் தந்துள்ளார். இவ்வாசிரியரும்,

'இவ் உயருக் கெட்டிடவே இவ்வுயர்க்கு மேற்போக' (76 : 13) என்னும் அடியில் இரு முறை ஆண்டுள்ளார். இவ்வகையில் மலை, மலையுச்சி என்னும் பொருளில் வழங்கும் சிகரம், சிகரி என்னும் சொல் வடிவங்களிலும் வேறாக, 'சிகர்' (38 : 15; 100 : 780) என்னும் புது வடிவம் கொள்வது இலக்கிய மரபுகளை ஒட்டிப் புதுச் சொல் லாக்கும் இக்காவிய ஆசிரியர் திறனுக்குத் தக்க எடுத்துக் காட்டாகும்.

## உவமை நயம்

அணிகளுள் தலையாய உவமைகள் அங்கங்கே காணப்படு கின்றன. இவை மூல நூலிற் போன்று அமைந்தனவே.

'இத்துரிய சோலையிலே இற்றுலர்ந்து சிதறுண்டு
ஓடைக்கால் கரைகுவியும் கோடைநாள் செத்தை போலும் !'
(51 : 360-361)

'உலகபாரச் சுமைக்கு இயைந்த ஒரு அனந்தன் தோள்களே [போல்
திண்டோள் கொண்டு யூகிப்பில் சிந்தை மூழ்கி அவன் நிற்க
அனைவோர்கள் கருத்தையெல்லாம் அவன் முகமே கவர்ந்துவிட
அரவமில்லா இரவு போலும் அருங் கோடை உறுமம் போலும்
அமர்ந்தெல்லோரும் உற்று நோக்க அறையலுற்றான் வரும் [வசனம்' (90 : 444-448)

என வரும் உவமைப் பகுதிகளில் 'போல' என்னும் எல்லோருக்கும் புரியும் உவமைச் சொல்லே கொள்ளப்பட்டுள்ளது.

'காவல் நிற்கும் துறையில் கண்ணயரும் காவலாளர்
தம் எசமான் கண்டு விட்டால் தட்டுக்கெட்டு உறக்கத்தோடு
திடீரென் றெழுந்தது போல் திடுக்கிட் டெழுந்தாராம்'
(53 : 398-400)

என்ற இடத்து நகைச்சுவையும் இழையோடுகிறது.

இன்னும் சில இடங்களில்,

'எம் முறையாய் என்றுரைப்பின் எடுத்துரைப்போம் ஓர் உவமை'
(97 : 686)

'எதுபோல என்றுரைப்பின் இதற்குவமை இரண்டாகும்'
(121 : 1526)

என்முற் போன்று பீடிகை தந்து உவமை விளக்கம் தரும் பகுதிகளும் உள.

## உளம் கவர் பகுதிகள்

பக்தி நிலத்தில் காலூன்றிப் பரிமளிக்கும் இக்காவியத்தில் உளங் கவரும் பாடற் பகுதிகள் அங்கங்கே காணலாகும். எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு காண்போம்.

'பார்த்தறியும் நேத்திரனின் பரமனின் திருவுளத்தை
சற்பனையால் வஞ்சிக்கச் சமர்த்துள்ளார் ஆருமுண்டோ !
அம்பரத்தில் நின்று அவர் அனைத்தையும் உற்று நோக்கி
இங்கிருந்து நாம் நடத்தும் இந்த யுத்தி மந்திரங்கள்
அத்தனையும் வீணென்று ஆகடியம் பண்ணுகின்றார்
நம் வலியை வெல்லுதற்கு நாதற்குள்ள சக்தியிலும்
நம்சதியைக் கெடுப்பதற்கு ஞானம் மெத்த அவர்க்குண்டு'
(85 : 286-292)

'உண்மையிது அப்பரமன் ஒருவனே அகண்டமாகி
அனைத்துலகும் காத்தழிக்கும் அகிலாண்ட நாயகனாய்
அம்பரத்தில் எப்படியோ ஆழ்நிலத்தில் அப்படியே
அங்குமிங்கும் எங்கு மென்றும் ஆதி அந்தம் தானாகி
தனிமுதலாய் அரசியற்றி தன்னரச சக்கரத்துள்
கலகம் நாம் எழுப்பினாலும் கடைகோடி கோணத்தையும்
தானிழந்த பாடிலாமல் தன்னரசை நரகில் ஓச்சி
பொற் செங்கோல் வழுவாமல் பொன்னுலகை ஆளும் வண்ணம்
இருப்புக் கொடுங்கோலால் இங்கு நம்மை இம்சை கொள்வார்
பின்னை நாம் இங்கிருந்து பேசுவானேன் சாமதண்டம் ?'
(91 : 464-473)

'மனத்தின் நிலையேதான் மனமிருக்கும் இடமேயாம்
நரகமதில் சுவர்க்கமாம் நகரமாம் சுவர்க்கமுமே
மாறாது நானிருப்பின் மற்றெங்கே யிருந்தாலென் ?'
(50 : 304-306)

'ஊழியப் பெரும் பவுசை உயர்வானில் தேடாமல்
நம்மிடத்தில் இருந்தே நாம் நன்மையை வரத்தேடி
நமக்கென்று நாமிருந்து நரகத்தீக் குழியிலேனும்
சுயேச்சையாய் வாழ்ந்திருந்து சுயாதீன மாய்த்திரிந்து
ஊழியச் சிறப்பு ஈயும் ஒய்யார நுகத்தைவிட
கடினமான சுயேச்சையே கண்ணியம் என மதித்து
ஒருவனுக்கும் நாமினிமேல் உத்தர வாதம் இன்றி
தாக்கற்றுத் திரிய வேண்டும் தன் மூப்பாய் எங்கெங்கும்
அப்போதான் நம்மகிமை அதிசிறப்பாய்த் தோற்றுவிக்கும்
சிறுமைநின்று மேன்மையும் சேதம் நின்று பெருநயமும்

தாழ்வினின்று தனிவாழ்வும் தழைத் தோங்கச் செய்வித்து
எத்தலத்தில் இருந்தாலும் எத்தீங்கைப் பட்டாலும்
படுமெல்லாப் பாட்டிலேயும் பண்ணும் எல்லா முயற்சியிலும்
துன்பினின்று எப்போது இன்பத்தை விளைத்தோமோ
அப்போதான் நஞ்சிறப்பு அருஞ்சிறப்பாய்த் துலங்கிடுமாம்'.
(88-371-385)

கற்பார் கருத்தைக் கவர்வதாயும் சிந்தனைக்கு விருந்தாயும் நம் வாழ்வுக்குத் தூண்டுகோலாயும் உளத்திற்கு மகிழ்ச்சி தருவதாயும் உள்ள இத்தகைய பகுதிகள் நூலுள் பலப்பல. படிக்கப் படிக்கத் தெவிட்டாது தித்திக்கும் நல்விருந்து இந்தப் 'பூங்காவனப் பிரளயம்' என்னும் பெருங்காவியம்.

## பிறமொழி பெயர்ப்புகள்

இததகைய அருமை பெருமை வாய்ந்த மிலிற்றனர் காவியத்தின் முதலிரண்டு பகுதிகளைப் பார்க்கும் போது, இப் பூங்காவனப் பிரளயத்தின் ஏனைய பத்துப் பகுதிகளுக்கும் இந்த ஆசிரியரின் படைப்புத் தமிழுலகுக்குக் கிட்டாது போயிற்றே என்னும் ஏக்கம் தோன்றவே செய்யும். இவருக்குப் பின் வந்த கவிதை மொழி பெயர்ப்பாளர்களும் முற்றும் முடித்திலர்.

பெரும்புலவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் இக் காவியத்தின் முதற் காண்டத்தை மட்டும் 1895-லேயே விருத்த காவியமாகப் பாடித் தந்திருக்கிறார். அதன் பின் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தும் இக்காவியத்தின் ஏனைய காண்டங்களையும் இவர் பாடிற்றிலர்.

என்னுடைய உழுவலன்பர் எந்நேரமும் நூற்கடலிலேயே திளைத்து வாழ்ந்துவரும் வில்வாரணிப் பச்சையப்பனார், சுவர்க்க நீக்கம், சுவர்க்கமீட்சி என்னும் மிலிற்றனரின் இருபெருங்காவியங்களையும் ஆசிரியப் பாவில் மொழி பெயர்த்துள்ளார். மாதிரியாகச் சுவர்க்க நீக் கத்தின் ஒன்பதாவது காண்டத்தை மட்டும் வெளியிட்டுள்ளார். இவர் பாடியுள்ள ஏனைய பகுதிகளும் முற்றும் வெளியிடப்படின் மிலிற்றனர் பெருங்காவியம் பண்டைய ஆசிரிய நடைக் காவியங்களைப் போன்று சிறப்பிடம் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

## பல்வேறு மொழிபெயர்ப்பும் வரவேற்கத் தக்கதே

பெருமை படைத்த இந்தப் பெருங்காவியத்திற்குப் பல மொழி பெயர்ப்புகள் பலராலும் செய்யப்பட்டாலும் வரவேற்கத் தக்கதே யாம். அவை ஒவ்வொன்றும் வாசிப்போருக்குப் புதிய புதிய சுவை களைத் தந்து இன்பம் பெருகச்செய்யும்.

சாமுவேல் வேதநாயகம் தாமஸின் 'பூங்காவனப் பிரளயம்' என்னும் அம்மானை நடையில் மொழி பெயர்க்கப்பட்டு முதலிரு காண்டங்கள் அடங்கிய இந்த நூலை, முதற் காண்டத்தை விருத்த

காவியமாகப் பாடி 1895ல் வெளியிட்ட வெ. ப. சுப்பிரமணிய முதலியார் பார்வையிட்டிருக்கிருர் என்பது அவருடைய முகவுரை யால் (பக்.III) தெரிய வருகிறது. எனவே, இவ்விருவருடைய முதற் காண்டப்பகுதியை ஒரு சேர வாசித்தால் இந்த இருவர்தம் மொழி பெயர்ப்பு நயம் காணலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல ஓர் எடுத்துக்காட்டு.

'விதவித ஆலயங்கள் விரும்பாமல் வீண்கிடக்க
சுத்தநேர் இதயமிசைத் தூயராய் வீற்றிருக்க
பிரிதிகொளும் ஆவியே பிரதான மாகவும் நீர்
அடியேனைப் போதிப்பீர் அறிவீர் அனைத்தும் ஐயா!
(39 : 25-28)

எனவரும் பூங்காவனப் பிரளயத்தின் பாயிரப் பகுதி வெ. ப. சுப்பிரமணிய முதலியார் வாக்கில் எவ்வாறு விருத்த கவியாய் உரு வெடுத்துள்ளது என்பதைக் காண்போம்.

'மக்கள் கைத்த லத்தியற்றி
வைத்த கோவில் யாவினும்
மிக்க தென்று வாய்மை தூய்மை
மேய நெஞ்ச ஆலயம்
புக்க தேவ ஆவியே!
புரிந்து யான்சொ லப்புகும்
தக்க காதை முற்றுமே
தகத்தெ ரிந்து ளாயரோ.
(சுவர்க்க நீக்கம், முதற்காண்டம், 7)

இருவரும் மிலிற்றனுர் வாக்கைப் பொன்னே போல் போற்றித் தாம் பாட எடுத்துக் கொண்ட பாவகைக்கு இயையப் பாடுகின்றனர். இரண்டு வகை முறையிலும் சந்தமும் பொருட்போக்கும் நல் விருந் தாகவே அமைதல் காணலாம்.

## புதுமைக் காப்பியம் போற்றத் தகும்

தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் புதுத்தமிழ்க் காப் பியங்கள் குறித்துத் தாம் பாடிய 'பாஞ்சாலி சபதம்' முன்னுரையில் பின்வருமாறு தெரிவிக்கிருர் :

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்தருவோ னுகின்ருன். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவது டன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்.''

இவர் உரைத்த புதுமைக் காவிய இலக்கணம் முழுமையாய்ப் 'பூங்காவனப் பிரளயம்' என்னும் இக்காவியத்துள் விளங்கக் காணலாம். இதனைச் சென்ற நூற்றாண்டின் இறுதியிலே இருபதாம் நூற்றாண்டில் விடிவெள்ளியாய்த் தோன்றிய புதுமைக் காப்பியம் எனலாம்.

## பாராட்டுக்குரிய பதிப்பாசிரியர்கள்

இவ்வாறாகப் பல்வேறு காவிய நலங்களையும் கொண்டுள்ள பூங்காவனப் பிரளயம் என்னும் இந்தக் குலதனத்தை 90 ஆண்டுகளுக்குப் பின் தமிழுலகுக்குப் பதிப்பித்து வழங்கிய பதிப்பாதிரியர்களும் பதிப்பகத்தாரும் தமிழ் கூறும் நல்லுலகத்தின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவராவார்கள். பண்டை நாளில் ஏட்டுச் சுவடிகளாயிருந்த எண்ணற்ற நூல்கள் பல்வேறு காரணங்களால் அழிவுற்றன. அச்சுநூல்களான பின்பும் இதுபோன்ற எத்தனையோ அருமையான நூல்கள் மறுபதிப்புவாராமையால் வெளியுலகத்திற்குத் தெரியாமல் இருந்து வருகின்றன. அவையெல்லாம் மீண்டும் பதிப்பிக்கப்படுதலும் நமது மொழிக்கும் செய்யும் பெருந்தொண்டாகும். இத்தகு பெருந்தொண்டாற்றியுள்ள பதிப்பாதிரியர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## பதிப்பின் செம்மைக்காக

பழைய பதிப்பைப் புதிய பதிப்பாக்கும் போது, காலத்திற்கு ஏற்பப் புதிய விளக்கப் பகுதிகள் சேர்க்கப்படலாம். 'இடை வெட்டாய்த் தொடங்கும் கதையின் முன் நிகழ்ச்சி' இப்பதிப்பில் ஒரு புதிய சேர்க்கையே, ஆனால், இப்பகுதி காலத்திற்கு ஏற்ற எளிய நடையில் அமையவில்லை. கூர்ந்து கவனித்தால் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் சுவர்க்க நீக்க முகவுரையின் தொடக்கப் பகுதியின் மாற்றுப் படிவமாய்க் காணப்படுகிறது. சென்ற நூற்றாண்டிற்கு ஏற்ப எழுதப்பட்ட உரை நடைப்பகுதியைச் சிறிது மாற்றிவிட்டதால் மட்டுமே பொலிவு பெற்று வரும் இக்காலத்திற்கு ஏற்புடைத்தாமோ ?

தென்பாண்டி வட்டார வழக்குகள் மிகுதியும் கொண்ட இந்நூலின் சில பகுதிகள் ஏனைய இடங்களில் வாழ்வார்க்கு விளங்குவது அரிதாகலாம். இதனைப் போக்கச் சொற்பொருட் கோவை ஒன்று அகராதியாக ஈற்றில் இணைக்கப் பெற்றிருந்தால் நன்றாயிருக்கும்.

'வலுபடையை விழுந்தாட்டி' (44 : 175)
'இது பெரிய கேடப்பா இது கொடிய மோசமப்பா
ஆகையாலே சண்டைப் பேச்சு ஆகாதம்மா பரிச்சேதம்'
(85 : 281-282)

'இத்தனையும் ஜெனித்து ஏறுமாறாய்க் கிடந்தலைந்து
என்னேரம் தலைமயங்கும் இடந்திரிந்தார் அம்மானை'
(103 : 919-920)

இவை போன்றவை திருத்தம் பெறத் தக்கவை. இனி வரும் பதிப்பில் இவ்வாறுன மரபுப் பிழைகள் முதலியன முற்றுமாய்த் தவிர்க்கப் படுதல் வேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலேயே இவை இங்கு எடுத்துக்காட்டப்பெற்றன.

## மிலிற்றனுர் காவியம் போற்றுக

ஆங்கில மகாகவி மிலிற்றனுரின் காவியத் தமிழாக்கமாக விளங்கும் ஆதிநந்தாவனப்பிரளயம், பூங்காவனப்பிரளயம், சுவர்க்க நீக்கம் முதலிய நூல்களை மதநோக்கமின்றி இலக்கிய நோக்கில் கண்டு மகிழ்தல் தக்கது என்பர் பெரியோர். சுவர்க்க நீக்கம் முதற் காண்ட முகவுரையிலும் நூலுள்ளும் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தரும் உரையும் பாட்டும் தமிழ்நலம் பேணிக் கற்கும் அனைவருக்கும் உரிய அறிவுரையாகும். இப்பெரியார் தரும் அறிவுரை பின்வருமாறு :

"காந்தம் இராமாயணம் பாரத முதலிய நூல்கள் ஹிந்துக்கள் பொழுது போக்குக்குபகாரமாயிருத்தல் போல, இந்நூல், தென்னிந்தியா யாழ்ப்பாண முதலான தமிழ் வழங்கும் தேசங் களிலுள்ள அனேக ஆயிரவரான கிறிஸ்தவர்கள் காலக்ஷேபத் திற்கு உதவுமென்பதிற் சந்தேகமில்லை. சிந்தாமணி முதலிய சமண நூல்களை அவற்றிலுள்ள மதவிரோதங் கருதாது நூல் வனப்பை நோக்கும்படி, மற்றச் சமயத்தவர்கள் விருப்புடன் படித்து மகிழ்தல் போல, இதனை யேசு சமயிகளல்லாதவர்களும் வாசித்தானந்தம் அடைவார்களென்று நம்புகின்றேன்."

(சுவர்க்க நீக்கம்-முகவுரை பக்கம் VIII)

'அமண் மதத்தசிந் தாமணி ஆதிநூல் ஏனைச்
சமய வாணரும் பேணுவர்; அன்னதே தகையக்
கமைய யேசுவின் அடியவர் களையன்றி யிதனை
மமர் இலாப்பிற மதத்தரும் போற்றுதல் வழக்கால்.'

(சுவர்க்க நீக்கம்-மொழிபெயர்ப்புப்பாயிரம்—17)

## அம்மானை நூல்களும் அழகிய இலக்கியங்களே

தமிழில் அம்மானை நடையில் இயன்ற நூல்கள் பலவாக உள்ளன. சென்ற நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டின் முதற் பகுதி யிலும் அவைகள் தக்கவர்களால் அச்சில் பதிப்பிக்கப்படாமை யினுல் பிழை மிகுந்தபடியே வந்துகொண்டிருந்தன. என்றுலும், அவற்றை இந்நாள்களில் நாவல் சிறுகதை போன்றவற்றை விரும்புவது போலப் பெண்களும் முதியோர் முதலியோரும் பொழுது போக்காக விரும்பிப் படித்துவந்தனர். இவற்றுள் சில நூல்களைச் செம்மை செய்து, 'மாதர் மஞ்சரி' என்னும் பொதுத்தலைப்பில் தமிழ்ப் பெரியார் சரவண பவானந்தம் பிள்ளையவர்கள் மாக்மில்லன்

கம்பெனியின் வழி முன்பு வெளியிட்டனர். அவருடைய முயற்சியை தொடர்ந்து ஏனைய நூல்கள் பதிப்பிக்கப்படவில்லை. அவர் பதிப்பித்த நூல்களும் இன்று கிடைப்பது அருமையே. அம்மானை நூல்கள் எளிய நடையில் அமைந்திருப்பது மட்டுமல்ல; மக்களின் பேச்சு வழக்குத் தமிழ் அவற்றில் பெரிதும் இடம் பெறுகின்றன. தமிழ் வளர்ச்சி என்று கருதும் போது அம்மானை நூல்களும் தனியிடம் பெறத் தக்கவையே. அவற்றையும் இனிவருங் காலத்தில் தமிழுலகம் நன்கு போற்றிப் பெருமையடைவதாக.

"மனுகுலத்தோர் முன்பிழைத்த வன்பிழையைப் பொருளாயும்,
நம்முலகில் சாக்காடும் நம்துயரக் கேடு யாவும்
கொண்டுவந்து சேர்த்த அந்தக் கொடுமரணச் சுவைகனிந்த
விலக்கு வினைமரத்தின் வினைக்கனியைப் பொருளாயும்,
ஆதிபரன் நரனுகி ஆனந்தநிலை அகத்தை
மீளவும் நரம்அடைய மீட்டுத் தரும் அளவும்
பறிபோன ஏதேனைப் பாட்டுப் பொருளாயும்,
தெய்வக் கவித் தேவி! செப்புவாய் இக்கவியாய்!

வாசகன்முன் வரையாத வாசகங்கள் வரைந்திடவும்
புலவன் முன் புகலாத புதுமைகளைப் புகன்றிடவும்
துணிந்த என் புன்கவிக்குத் தொழுகின்றேன் உன் அருட்காய்!

ஆதிமுதல் நீர் இருந்தீர் அதோகதி கயமதின்மேல்
அசைவாடிப் புருஎனவே அற்புதச் சிறைவிரித்து
அடைகாத்து உயிர்ப்பித்தீர் அண்டகோளம் அடங்கலையும்.
என்னில் உந்தன் அருள்வீசி இருள்மருளை அறப்போக்கும்!
தவறுமல் எனைத்தாங்கித் தாழ்வில் எனைத் தூக்கிவிடும்!

**—பூங்காவனப் பிரளயம், பாயிரம்.**

# 2. கலித்தொகையின் முறை வைப்பு

நா. ஆறுமுகம், எம். ஏ.,
ஆய்வாளர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

கலித்தொகையில் அமைந்துள்ள திணை வைப்புமுறையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

"இயற்கை வழியாக உணரவந்த ஒழுக்க நெறியே பொருளிலக்கணம் என்பது அதன் பாகுபாட்டால் இனிது விளங்கும். நம் பொறி புலன்களின் காட்சிக்கு அகப்பட்டு நிற்கும் இயற்கை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகையாகப் பிரித்துக் காட்டப் பெறுகின்றது. முல்லை முதலாகப் பிரிந்து நிற்கும் இவ்வொழுக்கம் தமிழிலக்கணங்களுள் திணை எனப் பெயர் கூறப் பெறுகிறது...இவ்வொழுக்க நிகழ்ச்சிக்கு இடமும் காலமும் பொருளும் இம்முல்லை முதலிய நிலப் பகுதிகளுட் காணப்படுவனவே என்பது தெளிவாகும்".[1]

உலகத்தே முதலில் மரஞ்செறிந்த மலையிடத்துத் தோன்றிய மக்கள், எதிர்ப்பட்ட விலங்குகளை வேட்டையாடிக் கொன்றுண்டு வாழ்க்கை நடாத்தினர்கள்; பின் காலப்போக்கில் காட்டு நிலத்தே வந்து தங்கி வரகு முதலியன விதைத்துப் பயிர் செய்து பயன் கொண்டு, மேம்பட்ட உழு தொழில் செய்து வந்தார்கள்; பின் பல வகைத் தொழிலும் பெருக்கிக் கடற்கரை நிலத்தே பட்டினம் அமைத்துக் கடல் கடந்து கப்பல் மூலம் சென்று வாணிகம் புரிந்தார்கள் என்பது வரலாற்றுண்மையன்றோ?

ஆகவே "ஐவகை நிலப் பிரிவுகள் மனிதன் தோற்றத்தையும் மனித இனத்தின்' பண்பாட்டு வளர்ச்சியினையும் அறிய உதவுகின்றன"[2] என்று தனிநாயக அடிகளும், "இவ்வைந்திணைக்குத் தொல்காப்பியர் கூறும் ஒழுக்கமும் கூறும் முறையும்கூட இக்கருத்துக்குச் சான்றாகும்"[3] என்று அ. சீநிவாசன் அவர்களும் கருதுகின்றனர்.

---

1. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, 'முல்லை', குறுந்தொகைச் சொற்பொழிவுகள் (கழகம், 1940), பக். 47.
2. ஆராய்ச்சி, பக். 340.
3. அ. சீநிவாசன், வையை, மலர்-1 (மதுரைப் பல்கலைக் கழகம்), பக். 263.

## நானிலமும் ஐந்திணையும்

நிலம் நான்கு வகையாகப் பகுக்கப்பட்டு நானிலம் என்று வழங்கும் மரபு உண்டு; முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் ஆகிய இந்நிலங்களில் வாழ்வோரின் வாழ்வு பற்றி அமையும் பாட்டுகள் இந்நிலங்களின் பெயராலும் வழங்கும் (சான்று, முல்லைக்கலி) என்றும், அகப்பொருள் காதலரின் மனநிலையையும் வாழ்வையும் ஒட்டி ஐவகையாகப் பகுக்கப்பட்டு அகனைந்திணை எனப்பட்டது; கூடல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் நிலைகள் பற்றி முறையே குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என ஐவகையாக அமைந்தது (சான்று குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, பாலைக்கலி, நெய்தற்கலி) என்றும் கூறுவர் டாக்டர் மு. வ.[4]

## நிலப் பாகுபாடு காட்டும் முறை வைப்பு

"மாயோன் மேய காடுறை உலகமுஞ்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[5]

என்று தொல்காப்பியம் நிலப் பாகுபாட்டைப் பற்றியும் முறை பற்றியும் கூறுகின்றது.

இதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாவது, "இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின் கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது....புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற்பொருட்டாகிய குறிஞ்சியை அதன் பின் வைத்தார். புணர்ச்சிக்குப் பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார் பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின்கண் வைத்தார்".[6]

ஆனால் இளம்பூரணர் "உம்மை எதிர்மறையாகலான் இம்முறையன்றிப் பிறவாய்ப்பட்டாற் சொல்லவும் படும் என்றவாறு. காடு நாடு, மலை கடல் என்பதே பெருவழக்கு"[7] என்பர்.

---

4. இலக்கிய மரபு (சென்னை, 1968), பக். 15-16.
5. தொல். அகத். 5.
6. தொல். அகத். 5, நச். உரை (கழகம், 1955), பக். 14.
7. தொல். அகத். 5, இளம். உரை (கழகம், 1956), பக். 9.
9.

தொல்காப்பியர் காலத்தில் ஆண்டு ஆவணியிற்றொடங்கிய தென்ப என்றும் கார்காலம் ஆவணியில் தொடங்குவதால் முல்லை யையும் அதற்குரிய கார்காலத்தையும் முதலில் கூறினர் என்றும்,[8]

''சொல்லியமுறையாற் சொல்லவும் படுமே'' என்று அவர் குறிப் பதில் ''சேயோன் மேய மைவரை யுலகம்'' என்றே தொடங்க வேண்டும்; ஆனால் காடுறை உலகில் நின்று நன்றிமறவாக் கொள் கையைக் கடைபிடிக்க இவ்வாறு தொடங்கப்பட்டது என்றும்,[9]

முல்லைத்திணையினர் எவ்வகை வினைக்கும் தெய்வம் பரவுவர்; எல்லாம் தெய்வச் செயலெனக் கருதுவர்; அதனாற்போலும் தெய்வ வரிசையில் முல்லைக்கு முதலிடம் தந்தனர் என்றும்[10] பலவாறு காரணங்கள் கூறப்படுகின்றன.

## உரிப்பொருள் காட்டும் முறைவைப்பு

நிலப்பாகுபாட்டில் முல்லையை முதலிலே கூறிய தொல்காப்பியர், உரிப்பொருள் பற்றிக் கூறும்போது குறிஞ்சியை முதலில் கூறு கின்றார்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே"[11]

இதன்முறை பற்றி நச்சினார்க்கினியர் தரும் விளக்கம்:

" அகப்பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃது இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலானும் புணர்ச்சியை முற்கூறிப், புணர்ந்துழியல்லது பிரிவின்மையானும் அது தலைவன் கண்ணதாகிய சிறப்பானுந் தலைவி பிரிவிற்குப் புலனெறி வழக்கின்மையானும் பிரிவினை அதன் பிற் கூறிப், பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பிற்கூறி, அங்ஙனம் ஆற்றியிராது தலைவனேவலிற் சிறிது வேறுபட்டிருந்து இரங்கல் பெரும்பான்மை தலைமகளதே யாகலின் அவ்விரங்கற்பொருளை அதன்பிற்கூறி. இந்நான்கு பொருள் கட்கும் பொதுவாதவானுங் காமத்திற்குச் சிறத்தலானும் ஊடலை அதன்பிற்கூறி இங்ஙனம் முறைப்படுத்தினார்''.[12]

---

8. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு (முதற்பாகம்), பக். 66 & அ.கி. பரந்தாமனார், 'பாலை', ஐங்குறுநூற்றுச் சொற்பொழி வுகள், பக். 142.
9. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, தொல்காப்பிய நெறி, பக். 169.
10. டாக்டர் வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், பக். 178.
11. தொல். அகத். 14.
12. தொல். அகத். 14, நச். உரை.

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற வைப்பு முறை *கலையியல்* முறை என்றும்

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற வைப்பு முறை *அறிவியல்* முறை என்றும் கூறப்படுகின்றது [12(a)]

## ஐங்குறுநூறு

இது மருதம் நெய்தல் குறிஞ்சி பாலை முல்லை என்னும் வரிசை முறையில் திணைக்கு நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த முறை வைப்புப் பற்றி, ''ஐந்து நிலங்களும் தத்தமில் உயர்வுடையன என அறிவித்தற்கே பண்டைய ஆசிரியர்கள் நிலங்களை ஒருமுறைப்படாது பிறழவைத்தனர் என்பதற்கு இஃதோர் சான்றாகும்''[13] என்றும்,

''இதனைத் தொகுத்தவரும் (புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்) தொகுப்பித்தவரும் (கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை) மலைநாட்டுப் புலவரும் மலைநாட்டு அரசரும் ஆதலால், ''ஆதனவினி'' என்ற சேர அரசனை வாழ்த்தும் பொருளமைந்த மருதத்திணையை முதலில் வைத்துச் சேரவரசனுடைய துறைமுகமாகிய தொண்டியைக் கூறும் தொண்டிப்பத்தை உள்ளடக்கிய நெய்தல் திணையை அதன்பின் வைத்துப் பின்னர் இயற்கை முறைப்படி குறிஞ்சி பாலை முல்லை என முறையே வைத்திருக்கின்றனர்''[14] என்றும் காரணங்கள் கூறப்படுகின்றன.

•

## அகநானூறு

அகநானூற்றில் திணைவைப்பு முறையைப் பற்றிச் சில பழைய செய்யுட்கள் கூறுகின்றன.[15] அதன்படி 1, 3, 5, 7, 9 என்னும் எண்

---

12 (a) ஐ. அண்ணாமலை, சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை (பிஎச்.டி. ஆய்வேடு, 1977), சென்னைப் பல்கலைக் கழகம், பக். 11

13. வித்துவான் வீ. குமாரசாமி ஐயர், ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 186.

14. பண்டிதவித்துவான் தி. சங்குப்புலவர், 'மருதம்', ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 8.

15. (அ) வியமெல்லாம் வெண்டே ரியக்கம் கயமலர்ந்த
தாமரை யாருகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி வெறிமாண்ட
எட்டு மிரண்டுங் குறிஞ்சியாகக் குட்டத்
திவர்திரை பத்தா இயற்பட யாத்தான்
தொகையில் நெடியதனைத்-தோலாச் செவியான்
வகையி னெடியதனை வைப்பு''

பெற்றன பாலையாகவும், 2, 8 என்னும் எண் பெற்றன குறிஞ்சி யாகவும், 4 எனும் எண் பெற்றது முல்லையாகவும், 6 எனும் எண் பெற்றது மருதமாகவும் 10 எனும் எண் பெற்றது நெய்தலாகவும் அமைந்துள்ளன.[16]

## நற்றிணை, குறுந்தொகை :

நற்றிணையிலும் குறுந்தொகையிலும் திணைகள் ஒருவகையாக அமையாது பலவாறு அமைந்துள்ளனவாக இப்பொழுது கிடைக்கும் பதிப்புக்களால் அறிகின்றோம். டாக்டர் உ. வே. சா. அவர்கள் உரையெழுதி வெளியிட்டுள்ள குறுந்தொகையில் திணை குறிக்கப்பட வில்லை. திணைகளைக் குறித்து நற்றிணையையும் குறுந்தொகையையும் வெளியிட்டவர்கள் முறையே பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி அய்யர் அவர்களும், திருக்கண்ணபுரத்துத் திரு. மாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் என்பவருமேயாவர்[17]

தொல்காப்பிய உரிப்பொருள் நூற்பாவினைந் தழுவிக் கள வொழுக்கம் நிகழும் குறிஞ்சியை முதலிலும், ஊடல் நிகழும் மரு தத்தை ஈற்றிலும் அமைத்து நற்றிணை தொகுக்கப்பட்டுள்ளது.[18] 20, 30, 40, 50, 60 எண் பெற்றன மருத்திணைப் பாடல்களாகக் காணப் படுகின்றன.

கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள 'ஐங்குறுநூற்றி னும் பிறவற்றினும் கோத்துள்ள முறை' என்னும் அட்டவணையின் படி[19] குறிஞ்சியை முதலில் கொண்டு எட்டு நூல்களும், முல்லையை முதலில் கொண்டு மூன்று நூல்களும், மருதத்தை முதலில் கொண்டு மூன்று நூல்களும், நெய்தலை முதலில் கொண்டு ஒரு நூலும் திகழ்

---

(ஆ) "ஒன்றுமுன் றைந்தோழான் பான்பாலை யோதாது
நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை—அன்றியே
ஆரு மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு
கூரு தவைகுறிஞ்சிக் கூற்று"

(இ) "பாலை வியமெல்லாம் பத்தாம் பனிநெய்தல்
நாறு நளிமுல்லை நாடுக்கான்—மேலையோர்
தேறு மிரண்டெட் டிவைகுறிஞ்சி செந்தமிழின்
ஆறு மருத மகம்"

16. இரா. சாம்பசிவ சர்மா, 'நெய்தல்', குறுந்தொகைச் சொற் பொழிவுகள் (கழகம், 1940), பக். 5-6.

17. ——————————, பக். 7.

18. வி. அ. அரங்கசாமி, 'குறிஞ்சி', நற்றிணைச் சொற்பொழி வுகள் (கழகம், 1950), பக். 166.

19. அனந்தராமையர் (பதிப்பாசிரியர்) 'கலித்தொகை' (பாலைக் கலி), (சென்னை, 1927), பக். 12.

கின்றன. இவற்றுள் ஒன்றிலேனும் பாலை முதலில் இடம் பெற வில்லை என்பது நோக்கத்தக்கது. ஆகவே இவைகளிலிருந்து ஐந்திணை முறைமைக்கு நியதி கிடையாது என்பதை அறிகின்றோம்.

## தலைசிறந்த முறை

''உலகில் வாழப் பிறந்த ஒருவனும் ஒருத்தியும் கூடுதலும் பிரிதலும் கூடியும் பிரிந்தும் இருத்தலும் உவகையால் கூடுதலும் தனித்திருந்து இரங்குதலும் ஆகிய செயல்வகையால் காதலன்பு சிறக்கின்றனர்''.[20]

ஆகவே ''குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் எனக்கோப்பதுவே தலைசிறந்த முறை என்றும், குறிஞ்சி முல்லை மருதம் பாலை நெய்தல் எனக் கோப்பது நடுவாகிய முறை என்றும், பாலையை முன் பின் நடு ஆகிய எவ்விடத்தேனும் நிறுத்திக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனக் கோப்பது கடையாய முறை என்றும், இம்முறைக்கு மாருகக் கோத்திருந்தால் அது ஏதேனும் ஒரு காரணம் பற்றித்தான் அமைந்திருக்கவேண்டும் என்றும் அம்முறை வைப்பை அவ்வந் நூலாசிரியர் கூறினலன்றி நமக்கு விளங்காது'' என்றும் கூறுவார் பண்டித வித்துவான் தி. சங்குப்புலவர்.[21]

## கலித்தொகை முறைவைப்பு

''சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'' (தொல். அகத். 5) என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென்றலின் இத் தொகையைப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் என இம் முறையே கோத்தார் நல்லந்துவனர்''[22]

''ஒன்றிலேனும் முதலிடம் பெருத பாலைத்திணையை இவர்முதலில் நிறுவியதற்குக் காரணம் யாவரும் இத்திணையை முதலில் வைக்காமையால் இது முதலில் வருமோ வாராதோ என்று ஐயுற்று மயங்கி வாராதென்று திரியவுணர்வார்க்கு அத்திரிபுணர்ச்சியை நீக்கல் கருதிப் போலும்; அன்றி, பாலை நானிலப் பொதுவாதலின் பொதுவை முற்கூறிச் சிறப்பைப் பிற்கூறுவதும் மரபென்பது பற்றி எனினுமாம்''.[23]

---

20. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, (பதிப்பு), ஐங்குறுநூறு பக். 9.

21. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 8.

22. கலித்தொகை, 150 நச். உரை.

23. அனந்தராமையர், (பதிப்பு), கலித்தொகை முதற் சம்புடம். முகவுரை.

## பாலையின் சிறப்பு

"அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் தரும்போது "அப் பாலை ஏனையபோல ஒருபாற்படாது நால்வகை நிலத்திற்கும் உரிய வாகப் புறனெறி வழக்கஞ்செய்துவருதல்பற்றிப் பாலைக்கு நடுவண தென்னும் பெயர் ஆட்சியும் குண னுங் காரணமாகப் பெற்றபெயர்"[24] என்று பாலையின் சிறப்பைப் போற்றுகின்றார் நச்சினார்க்கினியர்.

சங்க நூல்களில் பாலைத்திணையே மிகுதி. ஐந்து திணைகளுக்கும் பொதுவாகிய அகநானூற்றில்கூடப் பாலைத்திணைக்கு மட்டும் இரு நூறு செய்யுட்களும், ஏனைய நான்கு திணைகளுக்கும் இருநூறு செய் யுட்களும் இருப்பது பாலை ஏனைய திணைகளைவிடச் சிறப்புப் பெற்றது என்பதைக் காட்டுகிறது.[25]

தலைவியை விடுத்துப் பிரிந்துபோய் ஆற்றுஞ்செயல்களெல்லாம் தலைவன் செய்தற்குரிய அறங்களாக மட்டும் அமைவதோடு நின்று விடாமல் இல்லறத்தில் நிகழவேண்டிய விருந்தோம்பல் முதலிய சிறப்புமிக்க அறங்கள் நிகழ்வதற்கும் இன்றியமையாததாகின்றது... பாலைத்திணை இல்லையென்றால் வாழ்வாங்கு வாழும் முறையும் இல்லாத தாகிவிடும்.[26]

"பாலை ஒழுக்கம் ஏனைய ஒழுக்கங்களை இயக்கும் ஆற்றலுடையத் தாய், ஏனைய ஒழுக்கங்கள் தன்னிடத்து விரவப்பெறாது தூயதாய் ஒழுக்கங்களுள் நடுவு வைத்து எண்ணத்தக்க தலைமணியாய் விளங்குகின்றது".[27]

"தொல்காப்பியனார் அகத்திணை இயலில் பாலையைப் பற்றிய செய்திகளையே மிகுதியாகக் கூறுகின்றார். இப்பாலைத்திணை ஓர் யாண்டில் பாதிக்காலத்தைத் தனக்கு உரியதாகப் பெற்றிருக்கிறது. பின்பனிக்காலத் தொடக்கமாகிய மாசித் திங்களிலிருந்து முதுவேனிற் காலத்தின் இறுதியாகிய ஆடித் திங்கள் இறுதியான ஆறுதிங்களும் பாலைக்குரியன. தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆறு திங்களில் காடிடை யிட்டும் நாடிடையிட்டும் பிரிந்து வினைசெய்து பொருளீட்டிக் கார்

---

24. தொல். அகத். 2. நச். உரை.
25. மை. அ. கிருட்டிணன், 'பாலைக்கலியில் பிரிவு', எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, பக். 95.
26. —பக். 94.
27. ம. இராசமாணிக்கம் பிள்ளை, 'பாலை', குறுந்தொகைச் சொற் பொழிவுகள், பக். 87

காலத் தொடக்கத்தே தங்கள் வீட்டிற்கு வந்து தங்கி முன்பனிக் காலத்திறுதியாகிய தைத்திங்கள் வரை (ஆறுதிங்கள்) தங்கள் தலைவியுடன் கூடிவாழ்வர்''[28]

போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணிமருதம்—நோக்கொன்றி
இல்லிருந்தல் முல்லை இரங்கியபோக் கேர்நெய்தல்
புல்லுங் கலிமுறைக் கோப்பு

என்னும் வெண்பாவும் கலித்தொகையின் முறைவைப்புக்குச் சான்று என்பர். ஆனல் சிறிது ஆய்ந்து பார்த்தால் 'இவ்வெண்பாவில் வரும் முல்லைக்கும் முல்லைக் கலிக்கும் ஏதேனும் தொடர்புண்டா? கலி முறைக் கோப்பில் இல்லிருத்தல் முல்லையா? கலித்தொகையைக் கற்றறிந்தவர் இப்படிப் பாடுவாரா?' என்னும் ஐயங்கள் தோன்றும். ஆகவே இவ்வெண்பாவும் ''பெருங்கடுங்கோன் பாலை...'' என்னும் வெண்பாவைப் போல மிகவும் பிற்பட்டதென்று தோன்றுகின்றது.

## முடிவுரை

''பாலை என்பது முழுவதுந் துன்பமன்று. பிரிவானே என்று அஞ்சுவது பெரும்பாலும். அஞ்சும்பொழுது அன்பின் நொய்மை நன்கு புலப்படும்...எந்தப் புலவனும் துன்பத்தைப் பற்றிச் சொல்லும்போதுதான், தான் மனித தத்துவத்தையறிந்துள்ள முறையை நன்குணர்த்த முடியும்''[29] என்னும் கூற்றுக்கிணங்க பாலைக்கலிப் பாடல்கள் மற்றக் கலிப்பாடல்களை விடச் சுவையும் பயனும் நிரம்பியவை. வாழ்வியல் உண்மைகளையும் நீதிநெறி விளக்கங்களையும் கொண்டவை. அதனலும் அவை முதலில் இடம் பெற்றிருக்கலாம்.

கைக்கிளை பெருந்திணை ஆகிய ஒழுக்கங்களைக் கூறி உள்ளடக்கத்தில் புரட்சி செய்த கலித்தொகை, உருவத்திலும்—அகநானூற்றைத் தவிர எந்த நூலும் முதலிற் கொள்ளாத பாலையை முதலிற்கொண்ட திணை வைப்பு முறையிலும்—புரட்சிக் கோலத்தைக் கொண்டிலங்குகின்றது எனலாம்.

---

28. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், 'தொல்காப்பியமும் சமுதாய நோக்கு இயலும், தமிழாய்வு, எட்டாம் தொகுதி (சென்னைப் பல்கலைக் கழகம், 1978)

29. திருவாட்டி ஞானம்பாள் அம்மையார், கலித்தொகைச் சொற்பொழிவுகள், பக். 74.

## பின்னிணைப்பு

### அட்டவணை; ஐங்குறுநூற்றினும் பிறவற்றினும் கோத்துள்ள முறை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஐங்குறுநூறு... | மரு | நெய் | குறி | பாலை | முல்லை |
| 2. | ஐந்திணையைம்பது... | முல் | குறி | மரு | பாலை | நெய் |
| 3. | ஐந்திணை எழுபது... | குறி | முல் | பாலை | மரு | நெய் |
| 4. | திணைமாலை நூற்றைம்பது... | குறி | நெய் | பாலை | முல் | மரு |
| 5. | திணைமொழியைம்பது | குறி | பாலை | முல் | மரு | நெய் |
| 6. | கைந்நிலை... | குறி | பாலை | முல் | மரு | நெய் |
| 7. | மதுரைக்காஞ்சி... | மரு | முல் | குறி | பாலை | நெய் |
| 8. | பதிற்றுப்பத்து (30) | நெய் | பாலை | மரு | குறி | முல் |
| 9. | பெருங்கதை... | மரு | முல் | குறி | பாலை | ——— |
| 10. | தொல்காப்பியம் (5) | முல் | குறி | மரு | நெய் | ——— |
| 11. | இறையனரகப்பொருள் | குறி | நெய் | பாலை | முல் | மரு |
| 12. | நாற்கவிராய நம்பியகப் பொருள் | குறி | பாலை | முல் | மரு | நெய் |
| 13. | வீரசோழியம்... | முல் | குறி | மரு | பாலை | நெய் |
| 13. | மாறனகப்பொருள் | குறி | பாலை | முல் | மரு | நெய் |
| 15. | இலக்கண விளக்கம் | குறி | பாலை | முல் | மரு | நெய் |

கம்பர் முதலியோர் குறிஞ்சியை முதலாகக் கொள்வர்.

# 3. தொல்காப்பியமும் உருபொலியனியலும்

டாக்டர் பொன். கோதண்டராமன்
இளநிலைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

*1.* தமிழ்மொழியில் உள்ள மரபிலக்கணங்கள் புணரியல் என்று குறிக்கும் பகுதியை இக்கால மொழியியலார் உருபொலியனியல் என்று குறிப்பர். பெயர், வினை, இடை, உரி ஆகிய சொற்கள் முறை யாகச் சேர்ந்து பொருளுடைய தொடர்களை உருவாக்கும்போது அச் சொற்கள் சில மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. இந்த மாற்றங் களைப் பற்றி விளக்கந்தரும் பகுதி பொதுவாகப் புணரியல், புணர்ச்சி இலக்கணம், சந்தி இலக்கணம் என்றெல்லாம் பெயர் பெறும். தொல்காப்பியப் பெருந்தகை புணர்ச்சி இலக்கணத்தை மிக விரிவாக ஆறு இயல்களில் விளக்கிச் செல்கிறார். தொல்காப்பியரின் புணர்ச்சி இலக்கணக் கோட்பாட்டையும் இக்கால மொழியியலாரின் உரு பொலியனியல் கோட்பாட்டையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட் டுரையின் நோக்கம்.

**1.1.** மரபிலக்கணங்களில் காணும் புணரியல் விதிமுறைகள் நமக்குப் பழகிப் போனவையாக இருப்பதால் உருபொலியனியல் கோட்பாட்டை முதலில் விளங்கிக் கொள்வது தெளிவுக்கு வழி செய்வதாக அமையும். எனவே முதலில் உருபொலியனியல் கோட் பாட்டைப் பார்ப்போம்.

## 2. மொழியியலார் கூறும் உருபொலியனியல்

உருபன்கள் சேர்ந்து பொருளுடைத் தொடர்கள் அமையும் போது ஒரு உருபனில் மாற்றத்துக்கு உள்ளாகும் ஒலியன் எதுவோ அதனை மொழியியலார் உருபொலியன் என்பர். இத்தகைய மாற்றங் களை விளக்கும் பகுதியை உருபொலியனியல் (Morphophonemics) என்பர். கீழ்க்காணும் சொற்களை ஆராய்ந்து பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| கல் | சொல் | பல் |
| கற்கள் | சொற்கள் | பற்கள் |

தனிக்குறிலணைந்த லகர ஈற்றுப் பெயர்கள் கள் விகுதியை ஏற்கும் போது அவற்றிலுள்ள லகரங்கள் றகர ஒற்றாக மாறியுள்ளன. இதையே வேறொரு முறையில் சொன்னால் தனிக்குறிலணைந்த லகர

ஈற்றுப் பெயர்களுக்கு லகர ஈற்றையும் றகர ஈற்றையும் கொண்ட மாற்றுருபுகள் உண்டு என்றும் றகர ஈற்று மாற்றுருபுகள் கள் விகுதியோடு வரும் என்றும் கூறலாம். மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் காண்பது இங்கே பயன் தருவதாக அமையும்.

| | |
|---|---|
| நான் | நீ |
| நானும் | நீயும் |
| என்னை | உன்னை |

மேற்காணும் சொற்களில் வேற்றுமை உருபு சேரும்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் உம் விகுதி சேரும்போது உள்ள நிலையையும் உற்று நோக்குக. நான் என்னும் உருபன் வேற்றுமை உருபை ஏற்கும்போது என் என்று மாறுகிறது; நீ என்பது உன் என்று மாறுகிறது. இதையே வேறொரு முறையில் சொன்னால் நான் என்ற உருபனுக்கு நான், என் என இரண்டு மாற்றுருபுகள் உண்டு என்றும் அவற்றுள் என் என்பது வேற்றுமை ஏற்கும் இடத்திலும் நான் என்பது ஏனைய இடங்களிலும் வரும் என்றும் கூறலாம். இவ்வாறே நீ, உன் என்பவற்றுக்கும் பொருத்திக் காண்க.

இங்கே நாம் குறிப்பிட்ட மாற்றுருபுகளை மொழியியலார் உருபனியலில் விளக்குவர். உருபொலியனின் மாற்றங்களை உருபொலியனியலில் விளக்குவர். என், உன் என்பவற்றை மாற்றுருபுகளாகக் கொண்டு இலக்கணம் அமைத்தால் நான், நீ என்பன முறையே என், உன் என மாறும் என்று விதி கூறத் தேவையில்லை. என், உன் என்பவற்றை விதிகளின் மூலம் வருவித்தால் அவற்றை, மாற்றுருபுகளாக உருபனியலில் குறிப்பிடத் தேவையில்லை.[1] இங்கே நாம் குறிப்பிட்ட இரண்டு முறைகளையும் மொழியியலார் முறையே சேர்க்கை முறை (Item and Arrangement) ஆய்வு, விதிமுறை (Item and Process) ஆய்வு என்பர். இவற்றுள் விதிமுறை ஆய்வை முதலில் விளங்கிக் கொள்வது நல்லது.

## 2.1. விதிமுறை ஆய்வு

முன்பே குறிப்பிட்டது போல விதிகளின் உதவியால் மாற்றுருபுகள் வருவிக்கப்பட்டால் அதை விதிமுறை ஆய்வு என்பர். இந்த ஆய்வின்படி நின் என்பது நீ என்ற பெயரிலிருந்து விதிகளின் துணைகொண்டு வருவிக்கப்படும்.[2] மாற்று வடிவங்களை இப்படி விதிகளின் மூலம் வருவித்துக் கொண்டால் உருபனியலில் மாற்றுருபுகளைக் குறிப்பிடவோ அவற்றின் வருகை முறையினை எடுத்துரைக்கவோ தேவையில்லை.[3] ஆகவே விதிமுறை ஆய்வு உருபனியலில் வரும் மாற்றுருபுகளின் எண்ணிக்கையைப் பேரளவுக்குக் குறைத்து

1. காண்க : "Sandhi" in *Studies in Tamil Linguistics*, pp. 56-73.
2. காண்க : தொல். எழுத்து. 180.
3. காண்க : "Sandhi" in *Studies in Tamil Linguistics*.

ஆய்வின் தரத்தை உயர்த்தும். ஒரே உருபனுக்கு இரண்டு மூன்று மாற்று வடிவங்கள் இருந்தால் அவற்றுள் ஒன்றை அடிப்படை வடிவாகக் கொண்டு மற்ற வடிவங்களை விதிகளின் மூலம் வருவித்துக் கொள்ள வேண்டும்.

### 2.1.1. அடிப்படை வடிவம்

இங்கே அடிப்படை வடிவம் என்று நாம் குறிப்பிடும் ஒன்று வரலாற்று நோக்கில் கால முதன்மை பெற்றதாக இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. மற்ற வடிவங்களை விதிகளின் மூலம் எளிதாக வருவித்துக் கொள்ள எந்த வடிவம் இடந்தருகிறதோ அதை அடிப்படை வடிவமாகக் கொள்ளலாம். எளிமைக்கும் விளக்கத்துக்கும் துணைபுரியும் வகையில் அவ்வம்மொழியின் இயல்புக்கேற்ப ஆய்வாளன் பொருத்தமான அடிப்படை வடிவத்தைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.[4] அடிப்படை வடிவத்தை தேர்ந்து கொண்டு விதிகளின் மூலம் ஏனைய மாற்று வடிவங்களை வருவிப்ப தென்பது பகுதிக் கிளவிகளுக்கு மட்டுமல்ல; விகுதி முதலிய ஏனைய கிளவிகளுக்கும் பொருந்தும்.[5]

## 2.2. சேர்க்கை முறை ஆய்வு

பொருளுடைய தொடர்களை இந்த ஆய்வு பல்வேறு நுண்கிளவிகளாகப் பிரித்து அந்த நுண்கிளவிகளின் மாற்று வடிவங்களைக் கண்டு கூறி அவற்றின் வருகை முறையினையும் விளக்கும். இந்த ஆய்வின்படி இலக்கணம் அமைக்கும்போது மாற்றுருபுகளின் எண்ணிக்கை மிகுதியாகும். அதன் விளைவாகப் புணர்ச்சி விதிகளின் எண்ணிக்கை குறையக் கூடும். இந்த ஆய்வின்படி நீ, நின் என்பன மாற்றுருபுகளாகக் கொள்ளப்பட்டு அவை எந்தெந்தச் சூழ்நிலைகளில் வரும் என்று அவற்றின் வருகை முறை விளக்கப்படும். நின் என்பதை நீ என்பதிலிருந்து விதிகளின் மூலம் வருவிக்க இந்த ஆய்வு இடந்தராது.

## 2.3. எந்த ஆய்வு முறை சிறப்பானது ?

மேலே கண்ட இரண்டு ஆய்வு முறைகளில் எது சிறப்பானது என்று நம்முள் ஒரு வினா எழுவது இயல்பு.[6] பொதுவாக, விதிமுறை ஆய்வு இலக்கணத்தைச் சுருக்கமானதாகவும் வலிமை மிக்கதாகவும்

---

4. சில நேரங்களில் அடிப்படை வடிவம் செயற்கையாகக் கூட ஆக்கப்படுவது உண்டு.

5. காண்க : தொல். எழுத்து 121. இன்னின் இகரம் ஆவின் முன் கெடுவதும் உண்டு என்கிறார் தொல்காப்பியர். இங்கே அவர் இன் என்ற சாரியையை அடிப்படை வடிவமாகக் கொண்டமை காண்க.

6. காண்க : "Sandhi" in *Studies in Tamil Linguistics.*

அமைக்க உதவியாகும். சேர்க்கை முறை ஆய்வு ஒரு மொழியைப் புதிதாகக் கற்பவர்க்கு எளிதில் விளக்கந் தருவதாக அமையும். மொழியில் பயிற்சியும் புலமையும் வளர வளர விதிமுறை ஆய்வே சிறப்பானதென்று போற்றப்படும்.

## 3. தொல்காப்பியர் மேற்கொண்ட முறை

மேலே கூறிய இரண்டு முறைகளில் விதிமுறை ஆய்வையே தொல்காப்பியர் பின்பற்றியுள்ளார் என்று தெரிகிறது. மேலும் தமிழ் மொழியின் இயல்புக்கேற்ப அவர் புணர்ச்சி இலக்கணத்தில் சில சிறப்பான நெறிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார். எழுத்ததிகாரத்தில் காணும் ஒன்பது இயல்களில், ஆறு இயல்களை அவர் புணர்ச்சி இலக்கணத்துக்கே ஒதுக்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புணர்ச்சி இலக்கணம் பற்றிப் பேசும் முதலாவது பகுதிக்கே புணரியல் என்று பெயரிட்டுள்ளார் தொல்காப்பியர். இந்த இயலில் பொதுவாகப் புணர்ச்சி இலக்கணத்துக்குத் தேவையான கருவிகள் விளக்கப்படுகின்றன. புணர்ச்சி இலக்கணத்தில் ஆளப்படும் குறியீடுகள் அல்லது பெயர்கள், புணர்ச்சியின் வகைப்பாடுகள், கிளவிகள் சேரும்போது அங்குத் தோன்றும் சாரியைகள், எழுத்து வடிவில் வேறுப்படுத்திக் காட்ட இயலாத இசைத் திரிபு ஆகியன இந்த இயலில் விளக்கப்படுகின்றன[7].

வகைப்படுத்துதலும் பெயரிடுதலும் எந்த ஒரு அறிவியல் துறைக்கும் இன்றியமையாத தொடக்கப் பணிகள். இவற்றை முறையாகத் தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்தின் முதல் இயலிலேயே விளக்கியிருப்பது கருதிப் போற்றத்தக்கது. சாரியைகளைப் பற்றியும் அவற்றின் மாற்று வடிவங்களை வருவிப்பது பற்றியும் தொல்காப்பியர் புணரியலிலேயே பேசுகிறார். அவற்றைப் பற்றிப் பேச வேறு இசைவான இடம் இல்லாமையால் புணர்ச்சி இலக்கணம் பற்றிய முதல் இயலிலேயே அவற்றை விளக்கியிருப்பது மிகவும் பொருத்தம்.[8]

புணர்ச்சி இலக்கண விதிகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் சில விதிகள் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் பொதுவாக அமைவதையும் வேறுசில விதிகள் உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுவாக அமைவதையும் காணலாம். இத்தகைய பொதுவிதிகளையும் சாரி

---

7. செம்பொன்பதின்றொடி குன்றேறுமா முதலாய தொடர்களில் காணும் பொருள் மயக்கம் இசைத்திரிபால் மட்டுமே தீர்கிறது என்கிறார் தொல்காப்பியர். காண்க: தொல். எழுத்து, *142*.

8. சாரியைகளின் தோன்றிடங்களைப் பற்றி உருபியலிலும் தொகை மரபிலும் பேசப்பட்டுள்ளது. காண்க: தொல். எழுத்து. *168, 169, 185, 186*.

யைகள் தோன்றும் சூழலைப் பற்றிய விதிகளையும் புணர்ச்சி இலக்கணத்தில் ஒழிபு போலக் கொள்ளத்தக்க வேறு சில விதிகளையும் தொகுத்துத் தருகிறது தொகைமரபு.

பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எய்தும் மாற்றங்களைப் பற்றியும் அவை அப்போது பெறும் சாரியைகளைப பற்றியும் விளக்குகிறது உருபியல். அடுத்து வரும் மூன்று இயல்களும் உயிரீற்றுக் கிளவிகளும், மெய்யீற்றுக் கிளவிகளும் குற்றுகர ஈற்றுக் கிளவிகளும் புணர்ச்சியில் எய்தும் மாற்றங்களை முறையாக விளக்குகின்றன. இந்த இயல்களில் அகர ஈறு, ஆகார ஈறு என முறையே உயிரீறுகளைப் பற்றிப் பேசிவிட்டு மெல்லொற்றீறுகள், வல்லொற்றீறுகள் என மெய்யீறுகளைப் பற்றியும். பேசிவிட்டு இறுதியாகக் குற்றியலுகர ஈற்றைப் பற்றிப் பேசுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியர் இங்கே திட்டவட்டமான முறைவைப்பினைப் பின்பற்றி இருப்பதால், மிகுதியான இடங்களில் நாம் மாட்டேற்று நூற்பாக்களைக் காண்கிறோம்.[9]

குற்றியலுகரமும் உயிரீறே எனக் கொண்டாலும் அது புணர்ச்சி இலக்கணத்தில் ஏனைய உகர ஈறுபோல நடவாமல் தனி இயல்பில் நடப்பதால் அதற்கென ஒரு தனி இயலை அமைத்திருக்கிறார் தொல்காப்பியர்.

## 4. தொல்காப்பியரின் புணர்ச்சி இலக்கணமும் மொழியியலாரின் உருபொலியனியலும்

புணர்ச்சி இலக்கணம் பற்றிய சில அடிப்படையான கோட்பாடுகளை மிகச் சுருக்கமாகவும் மேலோட்டமாகவும் நமக்குத் தேவையான அளவுக்குப் பார்த்தோம். இனித் தொல்காப்பியர் மொழியியலாருடன் ஒத்துச் செல்லும் பகுதிகளையும் அவருடைய அணுகு முறையில் காணும் சிறப்புகளையும் பார்ப்போம்.

**4.1.** மொழியியலார் கூறும் இருவகை ஆய்வுகளில் தொல்காப்பியர் விதிமுறை ஆய்வினையே மேற்கொண்டிருக்கிறார். நின், என், தன், நம், தம் முதலாய கிளவிகளைத் தொல்காப்பியப் பெருந்தகை முறையே நீ, யான், தான், நாம், தாம் முதலாய அடிப்படை வடிவங்களிலிருந்து விதிகளின் மூலம் வருவித்திருப்பது நம் கருத்தை நன்கு உறுதிப்படுத்துகிறது.[10]

தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய சொற்களுக்கு அவர் விதி கூறியிருப்பதை நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது தொல்காப்பியர் விதிமுறை ஆய்வையே மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மேற்கொண்டிருக்கிறார் என்பது ஐயத்திற்கிடமில்லாமல் தெளிவாகப்

9. காண்க : தொல். எழுத்து. *242, 243, 288, 378.*
10. காண்க : தொல். எழுத்து. *180, 189, 193.*

புலப்படுகிறது.[11] எனது, எனக்கு, தனது, தனக்கு முதலாய சொற்களுக்கு அவர் அமைத்துள்ள விதிகளும் தொல்காப்பியருக்கு இருந்த தெளிவான விதிமுறைக் கோட்பாட்டு உணர்வை நமக்கு நன்கு புலப்படுத்துகின்றன.

4.2. பொதுவாக எல்லா அறிவியல் துறைகளிலும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளைப் பகுப்பாய்வு செய்து, பிரிக்கப்பட்ட கூறுகளை வகைப்படுத்துவதும் அந்த வகைகளுக்குப் பெயரிடுவதும் மிக இன்றியமையாத தொடக்கப் பணிகள் என்பதை முன்பே குறிப்பிட்டோம். தொல்காப்பிய இலக்கணம் முழுவதிலும் இந்த நெறிமுறையைக் காண முடியும் என்பதோடு புணர்ச்சி இலக்கணத் திலும் இந்த நெறிமுறையைத் தெளிவாகக் காண்கிறோம் என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

4.3. புணர்ச்சி இலக்கணம் ஒரு மொழியின் அகவரலாற்றை உணர மிகவும் துணைபுரியும் ஒரு கருவி என்பது மிகவும் பொருத்தம். எந்த மொழியிலும் புணர்ச்சி இலக்கணம் பொதுவாகச் சிக்கல் நிறைந்த தாகவே இருக்கும்.[12] இரண்டாயிரத்தைந்நூருண்டுகட்கு மேற்பட்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழ் மொழியில் புணர்ச்சி இலக்கணம் இன்று சிக்கல் நிறைந்ததாக இருப்பதில் வியப்பில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே புணர்ச்சி இலக்கணம் பல்வகை நுட்ப அமைப்பின் பின்னலாகவே இருந்திருக்கிறது. மரபிலக்கண அறிஞர்களின் நுண்ணிய ஆய்வுத்திறனுக்கு ஒரு பெருஞ்சான்ருக விளங்குவது சாரியைக் கோட்பாடு. சொற்கள் சேரும்போது அங்குத் தோன்றிச் சொற்களைச் சார்ந்து இயைந்து நின்று தமக்கெனப் பொருள் ஏதும் இல்லாமல் மொழியில் வாழும் கிளவிகளைப் பிரித்து வகைப்படுத்தி அவற்றிற்குரிய தோன்றிடங்களையும் வரையறைப் படுத்தி அவற்றுக்குப் புணர்ச்சி இலக்கணத்தில் சிறப்பான இடம் அளித்திருக்கும் மாண்பு மொழியாராய்ச்சியாளர் எல்லோரும் வியந்து போற்றத்தக்க ஒரு தமிழிலக்கண மரபு என்ருல் அது மிகையாகாது.

4.4. முழுமையான புணர்ச்சி இலக்கணத்தை அமைக்கும்போது அங்கே ஒலியனியல் செய்திகளும் இலக்கணக் கூறு பற்றிய செய்தி களும் சொற்பொருளறிவும் இடம்பெற்றே தீரும் என்பதனை மொழியியல் உலகம் மிக அண்மையில்தான் உணர்ந்துகொண்டது. உயிர், மெய், குறில், நெடில், வலி, மெலி, இடை முதலாய குறி யீடுகளையும் பெயர், வினை முதலாய குறியீடுகளையும் வேற்றுமை, அல்வழி முதலாய குறியீடுகளையும் புளிமரக் கிளவி, ஏனைப் புளிப் பெயர் முதலாய சொற்பொருள் புகல் தொடர்களையும் தொல் காப்பியர் நன்கு பயன்படுத்திக்கொண்டு புணர்ச்சி இலக்கணம்

---

11. காண்க : தொல். எழுத்து, 445, 463.
12. காண்க : *A Course in Modern Linguistics*, p. 135.

அமைத்திருப்பதை ஊன்றிக் கவனித்தால் நாம் மேலே குறிப்பிட்ட உண்மையை அவர் முன்பே உணர்ந்திருக்கிறுர் என்பது தெளிவாக விளங்கும். நாம் இப்படிச் சுட்டிக் காட்டுவது தொல்காப்பியப் பெருந்தகையின் பேரறிவுப் பெருந்திறனை உணர்த்தவேயன்றி இனி அவருக்கு மேல் மொழியுலகில் ஆய்வு செய்ய ஒன்றுமில்லை என்று முடிவு செய்வதற்காக அல்ல.

5. புணர்ச்சி இலக்கணத்தில் தவறில்லாமல் எழுத விரும்பும் ஒருவர் தமக்கேற்படும் ஐயங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்ளத் துணைபுரியும் வகையில் எளிமையும் தெளிவும் கொண்ட ஒரு முழுமையான சந்தி இலக்கணம் அல்லது புணர்ச்சி இலக்கணம் இன்று நமக்கு மிகவும் தேவை. அத்தகைய ஒரு முழுமையான இலக்கணம் இனித்தான் தோன்ற வேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அத்தகைய முழுமையான சந்தி இலக்கணத்தை உருவாக்க நமக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக நிற்பது தொல்காப்பியப் பெருந்தகையின் புணர்ச்சி இலக்கணக் கோட்பாடே எனலாம்.

## துணை நூல்கள்

Hockett, C. F.: *A. Course in Modern Linguistics*, New York, 1963.

Kothandaraman, P. *Studies in Tamil Linguistics*, Madras, 1972.

கழகம், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம், சென்னை, 1972.

# 4. எந்தையாரைக் குறித்த சில நினைவுகள்

## நான் கண்டதும் கேட்டதும்*

தவத்திரு சரசுவதி அம்மையார்

தலைவர் அவர்களே! புலவர் பெருமக்களே! பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கம்.

இந்த நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ளும் பேறு கிடைத்த எனக்கு இங்குப் பேசும் வாய்ப்பை இறைவன் அருளவில்லை. அதுவும் நன்மைக்கே. ஆம். கல்வி அறிவு மிக்க மேதையான பேராசிரியர் பிள்ளை அவர்களைப் பற்றிப் படிக்காத பேதையான நான் என்ன சொல்ல முடியும்? அவர்கள் ஆங்கிலம், தமிழ் இரு மொழிப் புலமையில் மிக்கவர்கள். அவர்கள் எழுதியிருக்கும் நூல்களைப் புரட்டிப் பார்க்கவும் தகுதியற்ற என்னால் வேறு என்ன செய்ய இயலும்? ஆனால் என் உள்ளக்கடலில் அலை அலையாகக் கொந்தளித்தெழும் பிள்ளை அவர்களைப் பற்றிய நினைவுகள் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். அந்த எண்ண மலர்களே நான் என் தந்தைக்குச் சூட்டும் புஷ்பாஞ்சலியாக இருக்கட்டும்.

### நூலறி திறம்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிள்ளையவர்கள் தமிழ் ரீடராக இருந்த சமயம் எனக்கு 24 வயது இருக்கும். நீதிநூல் ஒன்று கிடைத்தது. கையடக்கமான பதிப்பு. அதை இரு கரங்களுக்குள் மறைத்துக் கொண்டு இரகசியமாகப் படித்துக் கொண்டிருந்தேன். தொலைவில் இருந்தே அதைக் கண்டு விட்ட பிள்ளையவர்கள் ஏளனப் புன்னகை தவழும் முகத்துடன், "நீதிமொழியா படிக்கிறாய்? ஒரு குறளுக்கு ஈடாகுமா இந்த நூல். போ, போ. போய்த் திருக்குறளை

---

* சென்னைப் பல்கலைக்கழகத்தில் 19—9—1979 ஆம் நாள் புதன்கிழமை மாலையில் நிகழ்ந்த பேராசிரியர் கெ. என். சிவராஜ பிள்ளையவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவில் அவர்தம் திருமகளார் தவத்திரு சரசுவதி அம்மையார் வழங்கிய எழுத்துரை. அம்மையாரின் மௌனவிரதம் காரணமாக அவர்களுடைய உரை புலவர்மணி திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களால் அம்மையார் சார்பாக வாசிக்கப் பெற்றது.

எடுத்துப்படி'' என்று கட்டளை இட்டுச் சென்ருர்கள். நான் அதிசயத்தால் வாயடைத்துப் போனேன். நூற்றுக் கணக்கான புத்தகங்களோடு சதாகாலமும் உறவாடிக் கொண்டிருக்கும் பிள்ளை அவர்களுக்கு ஒரு புத்தகத்தைத் தொலைவில் பார்த்தாலே போதும். அது இன்ன நூல் என்று திட்டவட்டமாகக் கூறும் திறமை இருந்தது.

## எனது முதல் குரு தந்தை

பிள்ளையவர்கள் சுட்டிக்காட்டியபடியே திருக்குறளை எடுத்தேன். பக்கம் பக்கமாகப் புரட்டினேன். பொருள் விளங்கவில்லை. மீண்டும் பிள்ளையவர்கள் முன்னின்று என் குறையை வெளியிட்டேன். அவர்கள் அதைக் கேட்டுக் கலகலவென்று நகைத்த வண்ணம், ''சொல்லிக் கொடுக்கும் சொல்லும் கட்டிக் கொடுக்கும் சாதமும் நிலையானதல்ல. நீயே படித்துத் தெரிந்துகொள். பரிமேலழகர் உரையிருக்கிறது போதும்'' என்று கூறிவிட்டார்கள். அன்று முதலே திருக்குறளில் அறத்துப்பாலை மனப்பாடம் ஆக்கினதின் விளைவுதான் இன்று என்னைத் துறவுக்கோலத்தில் உங்கள் முன் நிற்க வைத்திருக்கிறது. இளம்பருவத்தில் என் அறிவில் அவர்கள் ஏற்றிய சுடர்தான் எனது 45வது வயதில் ஆத்மஜோதியாய் பிரகாசிக்கத் தொடங்கி 72வது வயதில் மௌனத்தைக் கடைப்பிடிக்க வைத்து விட்டது. பிள்ளையவர்கள் ஆத்மா என்னை ஆசீர்வதிக்கட்டும். அவர்களே எனது முதல் குரு. பிறகுதான் ஞான குருவும் தீக்ஷா குருவும்.

## பெற்ருேரிட்ட பெயர்

பேராசிரியர் திரு. கே என். சிவராஜ பிள்ளை அவர்களுக்குப் பெற்ருேர் சூட்டிய நாமகரணம் 'வள்ளி நாயகம்' என்பதாகும். இது தாயைப் பெற்ற பாட்டனுர் பெயர். தந்தையைப் பெற்ற பாட்டனுர் பெயர் அண்ணு திரு. குமரேச பிள்ளைக்கு இடப்பெற்றது. தன் தகப்பனுர் பெயர் இடப்பெற்றவர் என்றதாலும் கடைக்குட்டி மகன் என்பதாலும் எங்கள் பாட்டிக்குத் தந்தையார் மீது அன்பும் பாசமும் அதிகம். அதுபோலவே ஏனைய மக்களைவிடப் பிள்ளை யிடமே மிகமிகக் கண்டிப்பாகவும் நடந்து கொள்வார்.

## பாட்டியின் பரிவு

பாட்டிக்குப் படிப்பில்லை. ஆனுல், அறிவு இருந்தது. சமையல் தெரியாது. ஆனுல் பண்ணை வேலை அத்தனையும் நன்கு தெரியும். சொந்தப் பயிரிட்டுக் குடும்பத்தைப் பாதுகாத்தவர். வரவும் செலவும் அவரிடம்தான், நடுத்தரமான குடும்பம்; பிள்ளையை மேல் படிப்புப் படிக்க வைக்கப் பாட்டியார் சிரமப் படாமல் இல்லை. தாத்தா சாது. எதிலும் தலையிட மாட்டார். அவருண்டு அவரது கான்டிராக்ட் வேலையுண்டு என்று இருந்துவிடுவார். பாட்டிதான் பிள்ளையை இப்படி ஓர் அறிவாளியாகப் பிற்காலத்தில் விளங்க அவரை இளமை

யிலே உருவாக்கியவர். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதுபோல் நல்ல பழக்க வழக்கங்கள் உள்ளவராய்ப் பிள்ளை விளங்கினுர். பாட்டி காலை, மாலை இரு சந்திகளிலும் சூரிய நமஸ் காரம் செய்வார். இளமை முதல் மரண பரியந்தம் ஆதித்தனை ஆராதித்துவந்த இந்த அன்னைக்குக் கடைசியாக இப்படியொரு புத்தி தீட்சண்யமுள்ள பிள்ளை பிறந்ததில் வியப்பில்லை. பிற்காலப் பிள்ளை யைப் பற்றி அறிந்து கொள்ளுமுன் அவரது பிள்ளைப் பருவ காலத்தைப் பற்றி ஒரு சிறிது நாம் அறிந்து கொண்டால் பிள்ளையின் செயலை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்பதால் சில வற்றை இங்குக் குறிப்பிடுகிறேன்.

## இளமைக் கல்வி

நாகர்கோவிலில் பள்ளிக்கூடம். தினமும் வீமனசேரியிலிருந்து நாலு மைல் நடந்து போய் நடந்து வரவேண்டும் வீட்டுக்கு. காலை எட்டு மணிக்கே கட்டுச்சாத மூட்டையும் புத்தகங்களும் சுமந்து கொண்டு அண்ணன் திரு. குமரேச பிள்ளையுடன் பள்ளி செல்வார் பிள்ளை. விடுமுறை நாட்களிலன்றிப் பள்ளிக்குக் கள்ளம் காட்டி வீட்டில் ஒருநாள் கூடத் தங்கியவர் இல்லை. நல்ல ஆரோக்கியமான உடல். அதனல் அவர் நோய்வாய்ப்பட்டதுமில்லை. பள்ளிக் கூடத்துக்கு ரஜா கேட்டு மனு எழுதியதுமில்லை. ஒரு வகுப்பிலும் நின்று விடாமல் பி. ஏ. வரையில் மளமளவென்று முன்னேறினுர்.

## காலைக்கடமை

படிக்கும் பிள்ளைமை நாள்களில் அதிகாலை ஐந்து மணிக் கெல்லாம் எழுந்து காலைக்கடன் முடித்து நீராடிவரக் குளத்துக்குப் போவார். தம் ஆடைகளைத் தாமே சுத்தஞ்செய்து நீராடி, நெற்றி யில் திரிபுண்டரம் தரித்துப் பிள்ளையாருக்கு மூன்று குட்டும் தோப்புக் கரணமும் போட்டுவிட்டுச் சூரிய உதயத்துக்கு வீடு சேர்வார். பிறகு வீட்டுப் பாடங்களைப் படிப்பார். காலை ஆகாரத்திற்கு அன்னையின் அழைப்புக் கேட்ட பின்பே புத்தகத்தை மூடுவார்.

## உணவு நியமம்

பாட்டி தயிரும் பழைய சாதமும் சுவையாகப் பிசைந்து, ஊறுகாய், வற்றல், சுண்டின வத்தல்குழம்பு இத்தியாதி சாமக் கிரியைகளுடன் சாதத்தை உருட்டி இரு மக்களுக்கும் ஊட்டி விடுவார். காப்பியோ பலகாரமோ கிடையாது. அமாவாசை, பௌர்ணமி வந்தால் இட்டலி, தோசை, காப்பி அகப்படும். மற்ற நாள்களில் வெறும் சோறுதான். பிள்ளைகள் விரும்பி எதையாவது வாங்கித் தின்பதற்கு அக்காலம் ஓட்டல்கள் கிடையாது. மேலும், கையில் பிள்ளைகளுக்குக் காசு கொடுக்கும் பழக்கமும் பாட்டியிடம் இல்லை. எனவே, வீட்டில் உள்ளதைத்தவிரவேறு எதுவும் சாப்பிட்டறி யாதவர் பிள்ளை. பண்டிகை நாள்களில் போதுமான பலகாரங்களைச்

செய்து மக்கள் மனம் சலிக்கத் தின்னும்படி வைத்து விடுவாள் பாட்டி. இப்படி ஓர் ஒழுங்கான சாப்பாட்டு முறையில் வளர்க்கப் பட்டவர் பிள்ளை. இறுதிவரை அதைக் கடைப்பிடித்தார்.

### மாலைப் படிப்பு

பள்ளியிலிருந்து மாலை வீடு வந்து சேரும்போது விளக்கு வைக்கும் நேரமாய் விடும். வந்ததும் பிள்ளை மீண்டும் நீராடி விட்டு வந்து சாப்பிடப் பசியோடு இலை முன் உட்காருவார். சுடச்சுட ஆவி பறக்கும்படி அறுசுவை உணவை மக்களுக்குப் பரிமாறுவாள் அன்னை. ஆவலோடு அவசரமாக உணவு அருந்துவார் பிள்ளை. சற்று ஓய்வெடுத்துக் கொண்டு இரவு பத்து மணி வரையிலும் விளக்கெண்ணெயால் எரிய விட்டிருக்கும் குத்துவிளக்கின் முன் பாடங்களைப் படித்த பிறகு தூங்கச் செல்வது வழக்கம்.

### விடுமுறை நாள்களில் விளையாட்டு

பள்ளிக்கூட விடுமுறை நாள்களில் தம்பிமாரையும் சேர்த்துக் கொண்டு ஊரைச் சுற்றியிருக்கும் தோப்புத் துரவுகளில் விளையாடப் போவார். அங்கு தாமே தலைமை தாங்கி முன்னின்று விளையாட்டை நடத்துவார். அவர் இட்டதே சட்டம்; சொன்னதே ஆணை. யாராவது அதை மீறிவிட்டால், தவறு செய்துவிட்டால் கெட்ட கோபம் வரும் பிள்ளைக்கு. உடனே அடித்துத் தண்டித்து விடுவார். மற்றப் பிள்ளைகளுக்கு நம் பிள்ளையிடம் ஏற்கெனவே பயம். அத்துடன் அடியும்பட்டால் என்ன செய்வார்கள்? அழுது கொண்டே பாட்டியிடம் வந்து முறையிடுவார்கள். பாட்டி மகனைக் கூப்பிட்டு, 'தம்பியை அடித்தாயா?' என்று கேட்பார். "ஆம் அவன் நான் சொன்னபடி கேளாமல் மனம்போல் ஆடினான். தப்பாக விளையாடலாமா? அதனால் அடித்தேன்" என்பார். பாட்டி தன் பாசமிக்க பிள்ளை கையில் உடனே இரண்டு பிரப்பம்பழங்களைக் கொடுத்துப் போடா போ. போய்க் கூடத்திலே கொஞ்ச நேரமாவது சும்மாயிரு என்று கட்டளையிடுவார்.

பிள்ளைக்குச் சும்மா இருப்பது என்பது நரக வேதனை. சதா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் சரீரம் அது. சோம்பல் என்பது என்ன என்றே அறியாதது. எனவே புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்து விடுவார்.

பாட்டி வழக்குரைத்த பிள்ளைகளிடம், "ஏண்டா சின்ன அண்ணாச்சி முரடன்: கை நீளும். எடுத்ததுக்கெல்லாம் தீட்டி விடுவான் என்றுதான் உங்களுக்குத் தெரியுமே. அவன் கூட விளையாடப் போகாதீர்கள். எத்தனையோ தடவை நானும் சொல்லி விட்டேன். நீங்கள் கேட்டால் தானே. ஏன் போனீர்கள்? போனால் படுங்கள். என்னிடம் சொல்ல வராதீர்கள்" என்று எல்லாரையும் விரட்டுவார். சில நாள்களுக்குத் தோப்பும் துரவும் அமைதியாக இருக்கும். பிள்ளைகளுக்கு வீட்டில் நேரம் போகாது.

அதற்குள் பட்ட அடியும் மறந்துவிடும். பிறகென்ன? 'பழைய குருடி கதவைத் திற' என்ற கதைதான். பிள்ளையை விளையாடக் கூட்டிக் கொண்டு போக வருவார்கள் தம்பிமார்கள். பிள்ளையும் காத்திருந்தவர் போல் எழுந்து விளையாடப் போய் விடுவார். 'தம்பி பிள்ளைகளை அடிக்காத காலமுமில்லை, எங்க அம்மா அவனுல் சலித்துக் கொள்ளாத நாள்களுமில்லை' என்ருர் இக்கதையைக் கூறிய பெரியப்பா.

## தம்பிக்குத் துணைபோகும் தமையன்

"இதுமட்டுமா? எங்கே தம்பி போனுலும் சரி, எங்கம்மா என்னைக் கூப்பிட்டு, 'தம்பிகூடப் போ. அவனைத் தனியே எங்கும் விடாதே. வம்புச்சண்டைக்குப் போய் யாரையாவது அடித்துவிட்டு வந்து விடுவான், போ, போ' என்று துரத்துவார்கள். அன்றுமுதல் இன்றுவரை உன் அப்பா கூடவேதான் இருக்கிறேன். அம்மா ஆணை அப்படி" என்றும் கூறினர்.

## முன்கோபத்தின் விளைவு

முன்கோபம் அதிகமுள்ளவர் பிள்ளை. இரஜோ குணமே அவரிடம் தலை தூக்கி நிற்கும். அதனுல்தான் இவ்வளவு நூல்களையும் இடையருது வாசிக்கவும் ஆராயவும் அவரால் முடிந்தது. தமோகுணப் பிரகிருதியாயிருந்தால் தூக்கத்தில் கும்பகர்ணன் ஆகியிருப்பார். சத்துவ குணமுடையவராயிருந்தால் சாதுபோல் வனத்தை நாடியிருப்பார். ஆனுல் பேராசிரியராகப் பின்னுளில் பணியாற்றி வந்த பிள்ளை தமக்குரிய இயல்போடு இளமை முதல் வளர்ந்து வந்தார்.

பத்திரிகாசிரியராகத் திருவனந்தபுரத்தில் இருக்கும்பொழுது, அச்சு யந்திர சாலையில் வேலை பார்த்தவர்கள் பெரும்பாலோர் பிள்ளையவர்களின் கை ருசி கண்டவர்களே. வாயால் வசைபாட வராத பிள்ளை தவறு செய்யும் வேலையாட்களைக் கைநீட்டி விடுவார். பிறகு பச்சாதாபப்படுவார். அடிபட்டவனுக்கு வயிறு நிரம்ப நல்ல சாப்பாடும் கைச்செலவுக்குப் போதுமான பணமும் அன்றே கிடைக்கும். அதனுல் அடிபட்டாலும் பிள்ளையை விட்டுப் போக மாட்டார்கள். மேலும் வேலை செய்வோர் குடும்ப நலனிலும் நாட்டம் உடையவர் பிள்ளை. அந்தக் குடும்பங்களுக்கு அவசியம் ஏற்படும்பொழுது வேண்டிய பொருள் உதவி செய்து பராமரிப்பார். பிள்ளையிடம் வேலை பார்த்துவந்தவர் அனைவருக்கும் தெரியும், அடித்த கையே அணைக்கும் என்பது.

## மூட நம்பிக்கைகளை முறியடித்தவர்

இளமையிலேயே மூடநம்பிக்கைகளையும் வகுப்புவாதத் தொல்லைகளையும் அறவே வெறுத்து வந்தவர் பிள்ளை. தம் அனுபவத்துக்கு வராத எதையும், தம் மனச்சாட்சிக்கு ஒத்துக்

கொள்ளாதவைகளையும் தம்புலனுக்கு எட்டாதவைகளையும் நம்பவே மாட்டார். பகுத்தறிவு மிக்கவர். ஒருசமயம் பிள்ளைக்குப் பத்துப் பன்னிரண்டு வயதிருக்கலாம் அப்பொழுது வீமன சேரியின் கிழக்கே கோயில் கொண்ட செக்கடியம்மனுக்கு வருஷம்தோறும் ஊரார் கொடுக்கும் கொடை வந்தது. அம்மனிடம் பயந்த மக்கள் அவளுக்கு அமோகமாகக் கொண்டாடி வந்தார்கள். அங்கு சாமி வந்து ஆடிக் குறி சொல்பவர் பிள்ளையவர்களின் உறவினர் ஆவர். பிள்ளைக்கு இவர் மேல் சந்தேகம். சாமி உண்மையாக வருகிறதா? இல்லை. இவர் வேண்டுமென்றே குதிக்கிருரா ? இதைச் சோதிக்க வேண்டும் என்று நினைத்தார். தமக்குள் ஒரு திட்டம் தீட்டிக் கொண்டார். அந்தரங்கத் தோழர் சிலரைச் சேர்த்துக் கொண்டார். கொடை நடக்கும் இடத்துக்குப் போனுர். அங்கு ஒரு மூலையில் சாமிக்குப் போடும் அரளிப்பூ ஆரம் தலைவாழையிலையில் வைக்கப் பட்டிருந்தது. அதன் அருகில் கூட்டமில்லை. பிள்ளை தம் சகாக் களுடன் அங்கு சென்றமர்ந்து கூட்டத்தினரைக் கவனித்தார். கூட்டமோ சாமியாடிமீதே கண்களைப் பதித்துப் பார்த்துக் கொண் டிருந்தது. செண்டை முதலிய தாள வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. உடுக்கடிப்பவர் தேவியை வரும்படி வர்ணித்துச் செவிடுபடக் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார். இத்தருணம் பார்த்துத் தம் திட்டத்தை நிறைவேற்றிவிட்டுப் பிள்ளை ஒன்றும் அறியாதவர் போல் கூட்டத்தை வளைய வந்து கொண்டிருந்தார். சாமியும் வந்து விட்டது. சாமியாடி மஞ்சள் நீராடி, ஆட ஆரம் பித்தார். பூசாரி அரளி மாலையை எடுத்துச் சாமியாடி கழுத்தில் போட்டார். மாலையும் அவரோடு குலுங்கி ஆட ஆரம்பித்ததுதான் தாமதம். சாமியாடி சாமி டுவதை விட்டுக் குய்யோ முறையோ என்று கத்தியபடி மாலையைக் கழற்றியெறிந்தார். உடம்பையெல்லாம் பிய்த்துக் கொண்டார். தலைவிரி கோலமாய்த் தம் வீட்டை நோக்கி ஒரே ஓட்டம் பிடித்தார். கூட்டம் திகைத்தது. என்ன என்று யாருக்கும் புரியவில்லை. பிள்ளை மட்டும் சிரித்தபடி வீடு திரும்பினுர். கூட்டம் கலைந்தது. காலி நெருப்புப் பெட்டிகளில் கட்டெறும்புகளைப் பிடித்தடைத்துக் கொண்டுபோய்ப் பூமாலையில் விட்டுவிட்டார் பிள்ளை. எறும்புகள் பூக்களுக்குள் புகுந்து அதில் உள்ள தேனைச் சுவைத்தபடி மறைந்திருந்தன. மாலை ஆட ஆரம்பித்ததும் எறும்புப் படை வெளிப்பட்டுச் சாமியாடியைத் தாக்கிவிட்டன. இதுதான் பிள்ளையின் திட்டம். அது வெற்றிக் கொடியும் நாட்டிவிட்டது. அன்று முதல் சாமியாடி, ''இனி நான் சாமியாடமாட்டேன். காலம் கெட்டு விட்டது. நம்பிக்கை போய்விட்டது. இளைய வாரிசுகள் தலையெடுத்து விட்டார்கள். அவர்களிடம் நம் பாச்சா பலிக்காது'' என்று எல்லாரிடமும் கூறிவிட்டு, ''வேறு யார் இந்த வேலை செய்ய முடியும் ? எல்லாம் நம் வள்ளிநாயகமாகத் தானிருக்க வேண்டும்'' என்ற தம் கருத்தையும் வெளிப்படுத்தி விட்டு ஒதுங்கிக் கொண்டார் அது முதல் ஊரார் கொடை கொடுப்பதும் நின்றது. பாவம் செக்கடியம்மன் இன்று ஆரவாரமின்றி அடக்கமாக ஒதுங்கி இருக்கிருள்.

## திருமணமும் பட்டப்படிப்பும்

பிள்ளையவர்கள் காலேஜில் காலடி வைத்த முதலாண்டு விடுமுறையில் ஊருக்கு வந்தபோது என் அன்னையார் சிவகாமி என்னும் செல்லம்மாளை மணம்புரிந்து கொண்டார். "பட்டணம் எப்படி இருக்குமோ, என் பிள்ளையை மணம் முடித்துத்தான் அனுப்புவேன்" என்று பாட்டியார் முனைந்து நின்றதன் விளைவு இது. ஆனால் பிள்ளை பட்டப்படிப்பு முடித்துத் திரும்பி வரும்வரை மூன்றாண்டுக் காலம் என் அன்னையார் பிறந்தகத்திலேயே இருந்தார்.

## பட்டதாரிக்கு அந்நாள் வரவேற்பு

எங்கள் வகுப்பில் படித்துப் பட்டம் பெற்றவர், நாஞ்சில் நாட்டிலேயே என் தந்தையார்தான் முதன்மையானவர். நாஞ்சில் நாட்டு வேளாளக் குடிமக்கள் அனைவரும் தம்மை எப்படி வரவேற்றனர் என்பதைப் பிள்ளையவர்களே சுவைபடச் சொல்லக் கேட்டேன். அதைச் சொல்கிறேன். பட்டம் பெற்றுச் சென்னையி லிருந்து திரும்பிவரும் பிள்ளையவர்களை நாஞ்சில் மக்கள் அனைவரும் திரண்டு வந்து மேள வாத்தியங்களுடனும், மாலை மரியாதையுடனும் புஷ்பாலங்காரம் செய்த பல்லக்குடனும், ஆரல்வாய்மொழியில் சந்தித்து வரவேற்றனர். மாலைகளைப் போட்டுப் பன்னீர் தெளித்துச் சந்தனம் பூசி, பால் பழம் கொடுத்துப் பல்லக்கில் அமர வைத்து, மணமகனை அழைத்துச் செல்வதுபோல் வீமனசேரிவரை சுமந்து வந்தனர். வரும் வழியில் உள்ள ஊர்கள்தோறும் தெருப்பந்தல் போட்டு வாழை கமுகு நாட்டி, மாவிலைத் தோரணம் கட்டி அலங்கரித்து இருந்தார்கள் அந்தந்த ஊரார். பல்லக்கு பந்தர்கள் தோறும் நின்று பிள்ளை மாலை மரியாதை பெற்று, பால் பழம் அருந்திய பின்பே நகர்ந்தது. ஊரார் ஆரவாரத்தைக் கண்டு பிள்ளை நாணினர். இந்தப் பட்டம் வாங்கினதற்கா இத்தனை கொண்டாட்டம். இது அவர்களது ஆர்வமா ? இல்லை அறியாமையா ? எத்தனையோ பேர் பட்டம் வாங்கியதில் நானும் ஒருவன். இதில் அதிசயமென்ன ? என்றே நினைத்தார் பிள்ளை.

## போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலை

பிள்ளை ஆஜானுபாகுவானவர். அகன்ற நெற்றி; எடுப்பான நாசி; இரட்டை நாடி. அழகிய மீசை. கூரிய பேசும் விழிகள். பரந்த மார்பு; திரண்ட புயங்கள். கம்பீரமான தோற்றம். எனவே இத்தகைய ஒருவர் நாஞ்சில் நாட்டில் இருப்பதைக் கேள்விப் பட்ட திருவிதாங்கூர் போலீஸ் கமிஷனர் துரை, பிள்ளையவர்களை அழைத்து, ஆறுமாத காலம் பயிற்சியும் அளித்து, தம்மிடம் வளர்ந்த குதிரை ஒன்றையும் கொடுத்துப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலையும் அளித்தார். அந்தக் காலம் அந்த வேலைக்கு இராஜ மரியாதை உண்டு. எஜமான் என்றுதான் மக்கள் குறிப்பிடுவார்கள்.

## புகையிலைத் திருட்டை ஒழித்த வகை

இந்தச் சமயத்தில் மலையாளத்திலிருந்து பிரிட்டிஷ் எல்லைக்குப் புகையிலைக் கள்ளக் கடத்தல் திருடர் கூட்டமொன்றால் நடைபெற்று வந்தது. பதினாறு ஆண்டுகளாக முயன்றும் அதை ஒழிக்க அரசாங்கத்தால் இயலவில்லை. பிள்ளை வேலையில் சேர்ந்ததும் இந்தப் புகையிலைத் திருட்டை ஒழிக்க வேண்டிய பணி பிள்ளையிடம் ஒப்புவிக்கப்பட்டது. சுசீந்திரத்தில் வந்து வேலை ஒப்புக் கொண்டதுமே பிள்ளை இப்பணியில் முனைந்து இறங்கினார். திருடர் வரும் வழிகளைக் கண்டுபிடித்துக் காவலும் போட்டுவிட்டார். இது தெரியாமல் திருடர்கள் புகையிலைச் சுமைகளோடு வந்தனர். எங்கு பார்த்தாலும் சிவப்புத் தொப்பி நிற்பதைக் கண்டு அங்கு ஓடும் ஆற்றில் புகையிலைச் சுருட்டுகளைப் போட்டுவிட்டு ஆற்றில் குதித்து முக்குளிபோட்டு நீந்தித் தப்ப முயன்றனர்.

அதில் ஒருவன் ஆற்றில் நீந்தி வந்து அக்கரையில் ஏறி, ஒரு வீட்டுமதில்சுவரைத் தாண்டிக்குதித்து, ஒருமூலையில் போய்ப் பதுங்கிக் கொண்டான். அவன் ஒளிந்த இடம் குதிரை லாயம். குதிரையோ போலீஸ் குதிரை. அன்னியன் உள்ளே நுழைந்ததும் கனைத்து ஆரவாரம் செய்து குளம்புகளால் பேரொலி கிளப்பிற்று. பிள்ளை ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்தார். குதிரை செய்யும் அட்டகாசத்தைக் கண்டு தாமே எழுந்து லாயத்தை நோக்கி விரைந்தார். குதிரைக்காரனும் வீட்டிலிருக்கும் போலீஸ் சேவகனும் கையில் விளக்குடன் எஜமானரைப் பின்தொடர்ந்தனர். ஆம். திருடன் ஒளிக்க இடம் அகப்படாமல் தலையாரி வீட்டில் வந்து ஒளித்த கதைதான் இது. பிள்ளை லாயத்தை ஒரு நோட்டம் விட்டார். புல்மெத்தைக்கடியில் வெள்ளை வேஷ்டி தெரிந்தது. அவ்வளவுதான். பாய்ந்து சென்று திருடனின் கத்தி பிடித்திருக்கும் கையைப் பலமாகப் பற்றிக் கொண்டார். சன்னல் வழியாக இக் காட்சியைக் கண்டதும் என் அன்னையார் நடுங்கினார். பிள்ளையோ இளம் பருவம். திருடனோ கடோற்கஜன். திறந்த மார்புடன் அரை வேஷ்டியோடு மட்டும் நிற்கும் கணவரையும் கத்திபிடித்த கையையும் கண்ட அன்னையார் இன்றோடு என் வாழ்வு முடிந்துவிடும் என்று மதி மயங்கினார். ஆனால் அடுத்த சில நிமிடங்களில் நிலைமை மாறி விட்டது. ''கொண்டுவா விலங்கை'' என்று கட்டளையிட்டார் பிள்ளை. போலீஸ்காரன் பறந்தான். ''கத்தியைக் கீழே போடு'' என்று கர்ஜித்துப் பிடியை இறுக்கினார் பிள்ளை. அந்த வலி தாளாமல் திருடன் கத்தியைச் சோரவிட்டான். விலங்கும் வந்தது. அதை மாட்டியபின் பிடியை விட்டார் பிள்ளை. அவரிடம் அகப்பட்டுக் கொண்டவன் திருடர் கூட்டத் தலைவன். பிறகென்ன? பிள்ளை அந்தக் கூட்டத்தையே அடியோடு ஒழித்துக் கட்டி விட்டார்.

## இரக்கமுள்ளவருக்கு ஏற்காத வேலை

இயல்பாகவே இரக்க சித்தம் உள்ளவர் பிள்ளை. பிறர் துன்புறு வதைக் காணச் சகிக்காதவர். இவருக்கு, இவரது பண்பிற்குச் சற்றும்

பொருந்தாதது போலீஸ் வேலை; கைதிகளிடம் நல்ல தனமாகக் கேட்டுப் பார்ப்பார். அவர்கள் உண்மையை ஒப்புக் கொள்ள மறுத்தால் போலீஸ்காரர்களிடம் வாக்குமூலம் வாங்கி வைக்கும்படி கூறிவிட்டு, போலீஸ் டாணவை விட்டு வெளியேறி விடுவார். அந்நாளில் கொலைக் கைதிகளைத் தாமரைக்குளத்தருகில் தூக்குப் போடுவார்கள். அங்கு அச்சமயம் பிள்ளை இருந்து ஆக வேண்டும். ஆனால் பிள்ளையோ தூக்குப்போடும் சமயம்வரை குதிரை மீது ஆரோகணித்த வண்ணம் கூட்டத்தைச் சுற்றி வருவார். சமயம் நெருங்கியதும் குதிரை விட்டிறங்கிக் கூட்டத்தில் புகுந்து தலை மறைவாகி விடுவார். குதிரை மட்டும் குதிரைக்காரன் பிடிக்கு அடங்காமல் திமிறிய வண்ணம் சதுராடிக் கொண்டிருக்கும். தண்டனை முடிந்தபின் பிள்ளை குதிரை மீது திரும்பி விடுவார்.

## போலீஸ் வேலையை விடுத்த சூழல்

வெற்றி மேல் வெற்றியாகப் பிள்ளை வீரநடைபோட்ட சமயத்தில் அவருக்குத் தோல்விபோல் ஒன்று நிகழ்ந்து விட்டது. அந்நிகழ்ச்சி பிள்ளையவர்களின் வாழ்க்கையையே திசைமாற்றிவிட்டது. பதினெட்டு வயது பையன் ஒருவன் பதினறு வயது பெண்ணைக் கொலை செய்துவிட்டுத் தலைமறைந்தான். பிள்ளை அவனைப் பிடித்து விட்டார். சேரியில் உள்ள பணக்காரன் வீட்டு ஏக புதல்வன் அவன்; ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. பையன் தந்தை பவுன் பதின்மூன்று ரூபாய்க்கு விற்ற அந்நாளில் இரண்டாயிரம் ரூபாயோடு பிள்ளையைச் சரிக்கட்டி மகனைத் தப்ப வைக்க முயன்றான். அவன் தன்னைக் காணவே பிள்ளை அனுமதிக்கவில்லை. பார்த்தான் அவன். நேரே கமிஷனரிடம் போனன். காசை நீட்டினன். காரியத்தைச் சாதித்துக்கொண்டான். துரை கொலை வழக்கைத் தள்ளும்படி செய்தார். பிள்ளை தம் போலீஸ் வேலையைத் தள்ளும்படி செய்தார். வேலைக்கு ராஜிநாமாக் கடிதத்தை நீட்டி விட்டு வீடு திரும்பிய பிள்ளை, இனி அரசாங்க வேலைக்குப் போக மாட்டேன். நேர்மைக்கு அங்கிடமில்லை. ஒருவர்கீழ் வேலை பார்க்கவும் மாட்டேன் என்றார். இறுதிவரை தம் வாக்கை நிலை நாட்டினர்.

## பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் அழைப்பு

இந்நிகழ்ச்சிக்குப் பின் பேராசிரியர் திரு. எம். ஏ. சுந்தரம் பிள்ளை அவர்கள் அழைப்பை ஏற்று அவரிடம் உதவிப் பத்திரிகாசிரியரா யிருந்து அவர் மறைந்தபின் அவர் நடத்தி வந்த 'பீப்பிள்ஸ் ஒப்பினியன்' என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்குத் தாமே ஆசிரியர் ஆனர்; அதுவும் குரு ஆணைக்கு இணங்கி ஏற்றுக் கொண்டார்.

## தந்தைக்கு இறுதிக் கடன்

அச்சமயம் கனவு கண்டறியாத பிள்ளைக்குக் கனவும் நனவும் இல்லாத இடைப்பட்ட நிலையில் ஓர் நாள் தம் தந்தை நோயால்

பீடிக்கப்பட்டுப் புத்தேரி ஆஸ்பத்திரியில் போட்டிருப்பதுபோல் ஒரு தோற்றம் ஏற்பட்டது. நள்ளிரவு நேரம். பிள்ளை விழித்துக் கொண்டார். விடியும்வரை கண் மூடவில்லை. அதிகாலை முதல் தபால் வண்டியில் மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு போய்விட்டார். நாகர்கோவில் மணி மேடையில் இறங்கும் பொழுதே தம் தந்தை புத்தேரி ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்ற செய்தி அவருக்கெட்டி விட்டது. நேரே ஆஸ்பத்திரி சென்றார். தந்தையை உயிருடன் கண்குளிரக் கண்டார். அருகிருந்து மகன் கடமைகளைச் செய்தார். தந்தை கண்களை மூடியதும் கதறினார். இறுதிக் கடமைகளையும் நிறைவேற்றிவிட்டுத் திருவனந்தபுரம் திரும்பினார்.

## சரஸ்வதி அம்மை பிறந்தது

அடுத்த பத்தாம் மாதம் அவதரித்த அவதாரம் நான். எனக்கும் பூனைக்கண். என் தாத்தாவுக்கும் பூனைக்கண். வேறு யாருக்கும் இல்லை. "எங்கப்பா கண்" என்று தம் தந்தையை நினைவு கூர்வார் பிள்ளை.

## வையாபுரிப்பிள்ளை திருமணம்

திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை என் தந்தையாருக்கு அத்தை மகள் பிள்ளை. இவர் வக்கீல் வேலைக்குப் படிக்கத் திருவனந்தபுரம் வந்த நாள் முதல் அவ்வூரை விட்டுப் போகும் வரையில் தினமும் எங்கள் வீட்டில் இருப்பார். பிள்ளையவர்கள் திரு. வையாபுரிப் பிள்ளைக்குத் தமிழ் இலக்கியங்களில் ஆர்வத்தை எழுப்பினார். தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தினர் ஆக்கினார். இலக்கியங்களை ஆராயவும் எழுதவும் தூண்டினார். இலக்கிய விவாதங்களிலும் ஈடுபடுத்தினார். அது மட்டுமா? அவருக்குத் தாமே பெண் பார்த்து நிச்சயித்து திரு. வையாபுரிப் பிள்ளையின் பெற்றோர் சம்மதம் பெற்றுத் தாமே முன்னின்று அத்திருமணத்தைப் பாலராமபுரத்தில் நடத்தினார்.

## வேலைக்காரன் செயல் வெட்டவெளிச்சமானது

இரவு சாப்பாட்டுப் பந்தி ஆரம்பமாயிற்று. பிள்ளை திடீரென்று எழுந்தார். "செல்லம் ! புறப்படு போவோம் வீட்டுக்கு" என்றார். மணமகன் சொல்லியும் கேளாமல், யார் தடுத்தும் நில்லாமல் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். இரவு பதினொரு மணியிருக்கும். வீட்டுக் கதவு உள் தாளிடப்பட்டிருந்தது. வெளியே பவர் லைட் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. காவல் காரனைக் காணவில்லை. உடனே விஷயம் விளங்கிவிட்டது பிள்ளைக்கு. கதவை வேகமாக மடமடவென்று தட்டினார். வேலையாள் தலைவிரி கோலமாய் அஞ்சி நடுங்கிய வண்ணம் வந்து கதவைத் திறந்ததுதான் தாமதம். பளீர் என்றொரு அடி விழுந்தது அவன் கன்னத்தில். பொறி கலங்கி நிலத்தில் சாய்ந்தான் அவன். பிள்ளை நேரே தம் படுக்கை அறைக்கு விரைந்தார். "இந்தா

செல்லம்! இங்கே பார். என் கட்டிலில் மெத்தை மீது திண்டு தலையணைகளோடு மகாராஜா பள்ளிகொண்டிருக்கிறார். உம். ஏதோ வீட்டுக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. வந்தேன். பயல் அகப்பட்டுக்கொண்டான். எல்லாவற்றையும் வெளியே தூக்கி எறி என்றார்.

மறுநாள் எல்லாம் புதியனவாகக் கடையிலிருந்து வீட்டுக்கு விஜயம் செய்தன. வேலைக்காரன் தப்பினேம் என்றோடி விட்டான். பிள்ளையின் உள்ளுணர்வு பல சமயங்களில் அவருக்கு முன்னறிவிப்புசெய்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

## ஆளின் குறிப்பறியும் சக்தி

ஒரே காம்பவுண்ட்; இரண்டு வீடுகள் புத்தன் சந்தையில். ஒன்றில் நாங்கள். மற்றொன்றில் வீட்டுக்காரர் ஓவர்சியர் சுப்பிரமணிய பிள்ளை. அவர் வீட்டில் வெள்ளிப் பாத்திரம் திருடுபோய் விட்டது. அவர் போலீஸில் புகார் செய்துவிட்டார். போலீஸ் இன்ஸ்பெக்டர் தந்தையாரை நன்கறிவர். ஆதலால் நேரே வீட்டுக்கு வந்து பிள்ளையைக் கண்டு திருடு போனதைத் தெரிவித்துவிட்டு, "உங்கள் வீட்டு வேலைக்காரிமீது சந்தேகப்படுகிறார் வீட்டுக்காரர்" என்றார். பிள்ளை கலகலவென்று நகைத்தார். "இதை இவ்வளவு பிரமாதப் படுத்துவானேன்? நல்ல மனுஷன். என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் திருடின ஆளைப் பிடித்துக் கொடுத்திருப்பேனே. திருடனை உள்ளே வைத்துக்கொண்டு ஊரெல்லாம் வலைபோட்டுப் பிடிக்கிறாரோ. அவர் வீட்டுச் சமையல்காரிதான் எடுத்திருப்பாள். வேறு யாருமில்லை. போய் அவளைப் பிடித்துக் கொள்ளும். சாமான் அகப்படும். என்னிடம் திருடர்கள் வேலை பார்க்கமுடியுமா? என்றார். பிள்ளை சொன்னதுபோல் அவர்கள் வீட்டுச் சமையல் காரியே போலீஸில் திருட்டை ஒப்புக்கொண்டுவிட்டாள். சதா மாடியில் இருக்கும் தந்தையாருக்கு அக்கம் பக்கத்தில் யார்யார் இருக்கிறார்கள் என்பது தெரியாது. ஒருவேளை எப்பொழுதாவது அந்தச் சமையல்காரியை வாசலில் பார்த்திருக்கலாம். அவள் முகத்தி லிருந்த திருட்டுக்களை பிள்ளை கண்களில் பட்டிருக்கலாம். ஆளைப் பார்த்துச் சீர்தூக்கி எடைபோடும் பழக்க முள்ளவர் அல்லவா பிள்ளை. அன்று அவர் கணித்துவைத்தது இன்று பயன்பட்டது.

## காலை உலா நிகழ்ச்சி

தினமும் நாலு மணிக்கு உலாவப் புறப்படுவார் பிள்ளை. மியூஸியம் வரையில் சென்று அங்கு காற்று வாங்கி விட்டு வீட்டுக்கு வந்து சேரும் சமயம் மணி எட்டடிக்கும். ஒருநாள் வழக்கம்போல் உலாவப் புறப்பட்டு வீதியில் இறங்கியவர் வேகமாகத் திரும்பி உள்ளே வந்தார். என்னப்பா? என்றேன். தெருவில் தண்ணீர் தெளிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டே மாடிப்படி ஏறிவிட்டார். அங்கு வந்த அன்னையாரிடம், "தெருவில் தண்ணீர் தெளித்தால் என்னம்மா. அப்பா திரும்பி ஏன் வர வேண்டும்" என்று கேட்டேன்.

''மகாராஜா புறப்பாடு போலிருக்கிறது. அதுதான் தண்ணீர் தெளிக்கிருர்கள். மகாராஜாவைப் பார்த்தால் எல்லாரும் கும்பிட வேண்டும். ''உங்கப்பாதான் வணங்காமுடியாச்சே. அதனுல் திரும்பி இருப்பார்கள்'' என்ருர் அன்னையார்.

## உதவிப் பெற்ற ஒருவர்

பிள்ளை ஒல்லும் வகையால் பலருக்கும் உபகாரங்களைச் செல்லும் வாயெல்லாம் செய்தவர். பிறர் அறியாமல் இரகசியமாகச் செய்வார். தம்பட்டம் அடித்துப் பறை சாற்ற மாட்டார். அவரிடம் உதவி பெற்றவர் பலர். அவர்களில் ஒருவரைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். ஒருநாள் ஓர் அழகிய வாலிபர் பிள்ளையிடம் வந்தார். ''எனக்கு நாகர்கோவில். என் பெயர் குமாரசுவாமி. மோட்டார் ஓட்டப் பயிற்சி பெற்றிருக்கிறேன். குடும்பத்தில் மூத்த பிள்ளை நான். என் கையை எதிர்பார்க்கிறது குடும்பம். மோட்டார் ஓட்ட லைசென்ஸ் வாங்கித் தந்தீர்களானுல் என் மாமனிடம் வேலைக்குப் போய் விடுவேன்'' என்ருர். பிள்ளை அந்த இளைஞரை ஊடுருவிப் பார்த்தார். துணிவும் அறிவும் ஆற்றலும் உள்ள பிள்ளை என்று தமக்குள் மெச்சிக் கொண்டு அன்றே லைசென்ஸ் எடுத்துக் கொடுத்துவிட்டார். அப்பொழுதுதான் முதல்முதல் சங்கர் சர்வீஸில் இரண்டு மாடி பஸ்சுகள் திருவனந்தபுரத்துக்கும் நாகர்கோயிலுக்கும் போய் வந்து கொண்டிருந்தன. அதில் ஒன்றில் டிரைவராகப் பணி ஏற்று வண்டியில் ஏறியவர்தான். பிற்காலம் பைனியர் முதலாளி ஆனுர். நாகர்கோவிலுக்கே முடிசூடா மன்னராக விளங்கினுர். அவர் வண்டிகளும் லாரிகளும் போகாத இடமில்லை. சினிமா தியேட்டர், பெட்ரோல் பங்குகள், மில், காலேஜ், எஸ்டேட், தங்கும் வசதியுள்ள ஹோட்டல் ஆகியவற்றிற்கு அதிபர் ஆனுர். தந்தையாரிடம் அவர் இறுதிவரை நன்றி கலந்த மரியாதை காட்டினுர்.

## பயனியர் குமாரசாமியின் மரியாதை

பிள்ளை காலமான அன்று மாலை ஆறு மணி சுமாருக்குச் செய்தி மணிமேடைக்கு எட்டியது. உடனே நாலா திசைக்கும் போகிற பயனியர் வண்டிகள் பிள்ளையின் மரணச் செய்தியைச் சுமந்து சென்று ஆங்காங்கே ஒலிபரப்பின. இரவு கடைசி வண்டிக்குப் புறப்பட்டுத் திருவனந்தபுரத்திலிருந்து பி. எஸ். நடராஜ பிள்ளை உட்பட இரவோடு இரவாக வந்து சேர்ந்து விட்டார்கள். பட்டம் பெற்று வந்த பிள்ளையவர்களை நாஞ்சில் நாடு அன்று வரவேற்றது. இன்று வழியனுப்புகிறது. வீதி கொள்ளா இக்கூட்டத்தை வரும்படி செய்தவர் திரு. குமாரசுவாமி முதலாளியே ஆவர். நன்றி மறவாது செயலாற்றிய பெருமை அவரையே சேரும்.

## வீட்டில் இலக்கிய விமரிசனம்

அடிக்கடி பிள்ளையவர்களின் நண்பர்கள் பிள்ளை வீட்டில் கூடி இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபடுவர். அதில் முக்கியமானவர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பண்டித முத்துசாமிப் பிள்ளை, அரசாங்க பொக்கிஷதாரரும் சங்கீத மேதையுமான டி. லக்ஷ்மணம் பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியவர்கள் ஆவர். கூட்டத்தில் பிள்ளையவர்களே நடுநாயகமாக விளங்குவார். அவர் வாதமே முடிவாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும். கவிமணி உடன் பிறவாச் சகோதரர் போல் பிள்ளையிடம் நடந்து கொண்டார். பிள்ளையிடம் காண்பித்து ஒப்புதல் பெற்றே தம் கவிகளை வெளியிடுவார். பிள்ளையவர்கள் முப்பத்தைந்தாண்டு பத்திரிகைத் தொழிலைத் திறம்பட நிர்வகித்து வந்தார். தம் குருநாதரின் பிள்ளை திரு. பி. எஸ். நடராஜ பிள்ளை படிப்பை முடித்ததும் தம்மிடமே உதவிப்பத்திரிகாசிரியராக வைத்துக் கொண்டார்.

## பெருவாழ்வில் வந்த ஒரு சிறுதாழ்வு

இராஜாங்கமாகப் பிள்ளை நடத்திவந்த வாழ்வில் சனிதிசை ஆரம்பமாயிற்று. அது அண்ணு திரு குமரேச பிள்ளையின் மனதில் புகவே அவர் தம்பியிடம் வந்து, "நானும் அண்ணுவும் வேலை இல்லாமல் இருக்கிறேம். திவான் கிருஷ்ண நாயர் உன் நண்பராயிற்றே. எங்களுக்கொரு கூப் கான்டிராக்ட் எடுத்துக் கொடு" என்ருர். எதையும் ஆராய்ந்து செயலாற்றும் பிள்ளை முந்துறும் விதியின் விளைவால் முன்பின் ஆராய்ந்து பாராமல் ஒரு லட்ச ரூபாய் கான்டிராக்ட் தம் பெயரால் எடுத்துத் தமையன்மாரிடம் ஒப்புவித்தார். இரண்டே வருடங்களில் வேலை படுத்துவிட்டது. லட்ச ரூபாய் நஷ்டம் வந்துவிடுமே என்று அஞ்சிய பிள்ளையவர்கள் பத்திரிகையை உதவியாளரிடம் ஒப்புவித்து விட்டுச் செங்கோட்டைக்கு விரைந்தார். மூன்றே மாதங்களில் செயலற்றவராய் மலைக்காய்ச்சலோடு வீடு திரும்பினர். அதற்குள் பத்திரிகாலயமும் இழுத்துப் பூட்டப்பட்டு விட்டது. அங்கும் நஷ்டம். இங்கும் நஷ்டம்.

பிள்ளை சொத்தெல்லாம் கவர்ண்மென்ட் எடுத்துக்கொண்டது. செய்வதறியாது திகைத்து மௌனமாய் அமர்ந்து விட்டார் பிள்ளை. ஊழையும் உப்பக்கம் காணலாம் என்ற துணிவுடைய பிள்ளையிடமே ஊழின் பெருவலி யாவுள ? மற்றென்று சூழினும் தான்முந்துறும் என்று விதி சிரித்தது.

## வீமனசேரியில் ஏழாண்டு— தமிழ்ப்பணி தலைதூக்கியது

குடும்பம் வீமனசேரிக்குக் குடிபெயர்ந்தது. ஏழாண்டுகள் பிள்ளை வீட்டில் இருந்த காலமே அவரது கவிதைகள் எல்லாம் எழுதப்பட்டன.

சனி பகவான் புறப்பட்டுவிட்டான். பிள்ளை வாழ்வு மலர ஆரம்பித்தது. இலங்கை ஸர். பொன்னம்பலம் ராமநாதன் அவர்களது அமெரிக்க மாதான மனைவியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்த கம்பராமாயணத்தை வெளியிடும் பதிப்பாசிரியராக வேலை ஏற்றுக் கப்பல் ஏறினர். மீண்டு வந்து சென்னைப் பல்கலைக் கழக ரீடராகப் பணியேற்ருர்.

## ஏதையும் எதிர்பாராது கடமை புரிதல்

அக்காலத்தில் ஒரு நூலாசிரியர் தம் நூலுக்குப் பிள்ளையவர்களி டம்முகவுரை பெற்றுவரும்படி ஒருவரை அனுப்பியிருந்தார். வந்தவர் பிள்ளையிடம் ''இந்நூலாசிரியர் சைவ வேளாளர்'' என்று குறிப்பிடும் படி உங்களை நூலாசிரியர் கேட்டுக் கொண்டார். அதற்கு வேண்டி எவ்வளவு வேண்டுமோ தரச் சித்தமாயிருக்கிருர்'' என்ருர். பிள்ளை யவர்களுக்குக் கோபம் தலையெடுத்தது. ''என்ன எழுத வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. கடமையைச் செய்வேன்'' என்று போய்ச் சொல்லும் என்று எழுந்துவிட்டார். அவர் போனபின், கறுப்பை வெள்ளையாக்க முடியுமா? அவரவர் பிறப்பே அவரவருக்கு உயர்வு என்று தெரியாத மனுஷன். இவர் ஆசைக்கு என் பேனவை நாடுகிருர். ஊரை ஏமாற்றும் வேலை'' என்ருர். பிள்ளை கூறிய உண்மை எனக்குப் புலப்பட்டது.

## பெரியாரும் சிவராஜ பிள்ளையும்

எந்தக் கட்சியிலும் சேராத பிள்ளை சென்னையில் அப்பொழுது மேலோங்கியிருந்த மிதவாதக் கட்சிக் கூட்டங்களுக்குப் போய் வரு வார். சூழ்நிலை பிள்ளையை அங்குபோகும்படி தூண்டியது. அக்கட்சி யில் பெரியார் ஈ. வே. ரா. வும் அப்பொழுது இருந்தார். இருவரும் பேசிக் கொள்வார்கள்; சந்தித்துக் கொள்வார்கள். வெளியில் தெரி யாது. வகுப்பு வாதத்தையும் மூடப் பழக்கவழக்கங்களையும் வெறுத்து வந்த பிள்ளை பெரியாருடன் தொடர்பு கொண்டதில் வியப்பில்லை. இருவருக்கும் கொள்கை ஒன்று; அணுகிய விதம்தான் வேறு. பேனவீரர் பிள்ளை தம் கருத்துகளை ஏட்டில் பொறித்து மூடி வைத்தார். பேச்சுவீரர் பெரியார் இடிபோல் முழங்கிப் பிரசங்கமாரி பொழிந்து தமிழ்நாட்டைக் கலக்கினர். இருவருக்கும் அடுத்தடுத்து நூற்ருண்டு விழாக் கொண்டாடப்பட்டதும் மிகப் பொருத்தமானதே யாகும்.

## மகளுக்குச் சொன்ன மாற்றம்

நான் 1932-ல் ஆசிரியையாகப் பணி ஏற்று முதல் மாதச் சம்பளம் முப்பத்தைந்து ரூபாயையும் வாங்கிக் கொண்டு இமயச் சிகரத்தை எட்டிவிட்ட பெருமையோடு வீட்டுக்கு வந்து தந்தையாரிடம் கொடுத்தேன். பிள்ளை நான் வேலைக்குப் போவதை அறவே வெறுத் தவர். ஆயினும், பணத்தை வாங்கி மேஜைமேல் வைத்துவிட்டு,

"நானும் மரம் சுட்டுக் கரியாக்கலாமென்று பார்த்தேன். சாம்பல் கூட மிஞ்சவில்லை நீ முடிசுட்டுக் கரியாக்கப் பார்க்கிருயாக்கும். சரி, சரி. இதைப் பாங்கில் போட்டுச் சேமித்துக் கொள். நான் இருக்கும்வரை நீ எதையும் சாதித்துக் கொள்ளலாம். பிறகு உன்னுல் எதுவுமே செய்ய முடியாது" என்ருர். எனக்கு என் தந்தை கூறிய தீர்க்க தரிசனங்களில் இதுவும் ஒன்று. பிள்ளை இருக்கும்வரை அந்த வீட்டு நிர்வாகமும் வரவுசெலவும் என் கையில்தான். அவர் ஆத்மா பிரிந்ததுமே நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அடுத்த நாளே பிள்ளை என்னிடம் ஒப்புவித்திருந்த இரும்புப் பெட்டிச் சாவி முதல் அவரது கையேட்டுப் பிரதிகள் வரை என்னிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன. அதிகாரம் உள்ளவர் வீட்டையே கைப்பற்றினுர். என்னை இவள் பெண், அதிகாரமில்லை என்று வெளியே பிடித்துத் தள்ளியது சட்டம். தந்தை மறைந்த மறுநாளே வெளியே வந்து விட்ட நான் யாதொன்றும் செய்ய இயலாமல் செயலற்றுச் சென்னை திரும்பினேன். தந்தை வாக்குப் பலித்து விட்டது அல்லவா?

## இலக்கிய சர்ச்சை

பிள்ளையவர்கள் ஓய்வுபெற்றுச் சிதம்பர நகரில் இருக்கும் பொழுது தினமும் இரவு அண்ணன் தம்பிக்குள் இலக்கிய சர்ச்சை நடைபெறும். இருவருக்கும் நேரம் போவது தெரியாது. இருந்தும், நின்றும், நடந்தும், குதித்தும், கூப்பாடு போட்டும் பேசுவார்கள். தெருவில் போவோர் சண்டை நடக்கிறது என்று மதிலெட்டிப் பார்ப்பார்கள். விவாதத்தில் இருவருக்குமே சூடுபிடித்துக் கோபம் தலை தூக்கும். முடிவில் ஒருவரை ஒருவர் வசைகூறவும் ஆரம்பித்து விடுவார்கள். "போடா, உன்கூட எந்த முட்டாள் பேசுவான்? தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று சாதிப்பவனுச்சே நீ. இல்லாவிட்டால் போலீஸ் வேலையை விட்டு வந்து இப்படிப் பேனுவும் கையுமாகத் திண்டாடுவாயா?" என்பார் அண்ணன். "ஆம் எனக்குப் பொருந்தாத வேலை, நான் விட்டுவிட்டேன். எனக்குப் பிடித்தமானதைச் செய்வேன். உம்மைப்போல் வக்கீல் வேலைக்குப் படித்து விட்டு கோர்ட் வாசற்படி கூட ஏருமல் ஊர் வம்பைத் தேடிப் போய்ச் சட்ட நுணுக்கம் பேசவில்லை நான்" என்பார் தம்பி. "உன் கீழே சேவகனுய் இருந்த கோவிந்தப்பிள்ளை ஹைகோர்ட் (திருவிதாங்கூர்) நீதிபதியாய் இருக்க நீ போய் அவர்முன் நின்ருயே போதாதா" என்று மேலும் ஒரு போடு போட்டு விட்டு, "உன் முகத்திலே விழிக்கவே கூடாது" என்றும் சொல்லிவிட்டுப் போய் விடுவார் திரு. குமரேசப் பிள்ளை.

"போம். போம். வரவே வேண்டாம். நான் கம்பனைப் பற்றி எழுதி வைத்திருக்கிறேன். அதையே பிரசங்கித்துக் கொண்டிருப்பவர் நீர். நீர் வரவில்லையானுல் எனக்கு நஷ்டமில்லை. உமக்குத் தான் நாளைப் பிரசங்கத்திற்குப் புதுக் கருத்துகள் புலப்படாமல் போகும்" என்று கூறுவார் தம்பி. மறுநாள் அதிகாலையில் வழக்கம் போல் "தம்பீ" என்றழைத்தபடியே வந்து வீட்டு வாசலில் நிற்பார்

அண்ணு. 'வாருங்கள் அண்ணுச்சி' என்று அன்போடு வரவேற்பார் தம்பி. இவர்கள் கோபம் என்ன ஆயிற்று? இப்படி ஒருநாள் மட்டு மில்லை. பல நாள்கள்.

## உருவப்படமும் தமையனுருக்குப் பாராட்டும்

பிள்ளையவர்களின் உருவப்படமொன்று சென்னையிலிருந்து கொண்டு போய் வைத்தேன்; அன்று எல்லாருக்கும் என் செலவில் விருந்தும் நடைபெற்றது. பெரியப்பாவும் அதில் கலந்து கொண்டார். அன்று மாலை பிள்ளை வெளியே போய் வந்தார். அடுத்து வந்த ஞாயிறு மாலை ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்டி அதற்குத் தாமே தலைமை தாங்கி, திரு. குமரேச பிள்ளையைப் பலர் பாராட்டும் படி செய்து, ஒரு பாராட்டுக் கூட்டமே நடத்தி விட்டார். அண்ணனுக்குத் தம் கையாலேயே மாலை போட்டு மரியாதையும் செய்தார். வீடு திரும்பிய பிள்ளை என்னிடம், "என் படத்தை வைத்து விருந்தும் நடத்தினுயே? அண்ணு மனம் என்ன நினைக்கும்? அவர் சந்தோஷப் படும்படி பாராட்டுக் கூட்டமொன்றை நடத்தி விட்டேன்" என்ருர். தம்மோடு தம் தமையனுர் படத்தையும் நான் வைக்காமல் போய் விட்டேன் என்ற குறை பிள்ளைக்கு. இணைபிரியாத அவ்விருவருக்கும் சமீபத்தில் ஒன்ருகவே படம் எடுத்து நாகர்கோயில் சிவராஜ பிள்ளை நினைவு மன்றத்தில் வைத்துவிட்டேன். அன்று விட்ட குறையை இன்று முயன்று முடித்தேன்.

## பிள்ளை மறைந்த நாளில் பாராட்டு

பிள்ளையவர்கள் மறைந்த பத்தாம் நாள் என் கனவில் தோன்றி, "நான் இங்கிருக்க மாட்டேன். உன்கூட வருகிறேன்" என்ருர். "இந் நிலையில் எப்படியப்பா வருவீர்கள்?" என்று கேட்டேன் நான். "என்னை உன் இடுப்பில் வைத்துத் தூக்கிக் கொண்டு போ" என்று கூறி மறைந்தார். கண்ட கனவை மறந்தும் விட்டேன். ஆனுல், மறுநாள் பிள்ளை அவர்களின் உருவப்படத்தை என் இடுப்பில் வைத்துச் சுமந்து கொண்டு வந்து வண்டியேறியபின்தான் நினைவு வந்தது. ஆம் அந்த ஆத்மா என்னருகில் இருப்பது போலவே இன்றும் உணருகிறேன்.

திரு. பெத்தாச்சிப் பிள்ளை என்பவர் அந்நாளில் நாகர்கோவிலில் காங்கிரஸ் லீடர். அவர் பிள்ளை மறைந்து காரியங்கள் நிறைவேறின பத்தாம் நாள் மாலை இப்படத்தையே மாலைகளால் அலங்கரித்துக் காரில் வைத்து மணிமேடையைச் சுற்றி மௌன ஊர்வலமாக வந்து பள்ளிக்கூட மைதானத்தில் இரங்கல் கூட்டமொன்றைப் பிரமாதமாக நடத்தி முடித்தார். ஊரார் கடன் அத்துடன் முடிந்துவிட்டது. ஆனுல் தமிழ் மக்கள் கடன் அவர் நூல்களை வாசித்துப் பயன்பெறுவதேயாகும். கவிஞர் நினைவுச் சின்னமே கற்ருேர் நெஞ்சில் புகுவதுதானே.

## நோய்ப்படுக்கையில் வாழ்க்கை விளக்கம்

பிள்ளையவர்கள் படுக்கையில் இருக்கும்பொழுது சதா ஊதுவத்தி புகைந்து கொண்டே இருக்கும். அந்த மணம் அவருக்கு மிகவும் பிடித்தமானதொன்று. ஒரு நாள் அதைக் கூர்ந்து பார்த்து, பெருமூச்செறிந்தார். அங்கு நின்ற நான் ''என்னப்பா'' என்றேன். ''இந்த வத்தியைப் பார். நெருப்பும் நறுமணமும் இருக்கிறது. நெருப்பிருக்கும் வரை இந்த அறை முழுதும் வாசனைப் பரப்புகிறது. சிறிது நேரத்தில் சுடர் அணைகிறது. வாசனையும் மறைந்து விடுகிறது. திரியிருந்த இடத்தில் சாம்பல்தான் மிச்சம். தன்னைக் குறைத்துக் கொண்டே பிறருக்கு வாசனை தந்து அழியும் இதைப் போலவே நாமும் படிக்கிறோம். அறிவுச்சுடர் பிரகாசிக்க ஆரம்பித்ததும் புகழ் பட வாழ்ந்து, பிறருக்கு நன்மை செய்து கொண்டே நாம் வாழ்நாளைக் குறைத்தவண்ணம் நாள்களைத் தள்ளுகிறோம். தினகரனைப் படியாகக் கொண்டு கூற்றுவன் நம் ஆயுளை அளந்த உண்டு விடுகிறான். இறுதியில் இந்தத் திரி போல் நாமும் சாம்பல்'' என்று கூறி நகைத்தார்.

## பள்ளிநாள் நிலைமை கூறல்

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் தேசிக விநாயகர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. பள்ளிக்கூடம் செல்லும் பெரிய பிள்ளைகள் பேசும் பேச்சையும் செய்யும் அட்டகாசத்தையும் சன்னல் வழியாகப் பார்த்துவிட்டு, ''இவர்கள் படிக்கிற பிள்ளைகளா? ஊர்வம்பளக்கிறதிலே இருக்கிற அக்கறை பாடத்தில் இருக்காது. நாங்கள் படிக்கிற நாள்களிலே இப்படியெல்லாம் இருக்க மாட்டோம். படிப்பைத் தவிர எதிலும் ஈடுபட மாட்டோம். பள்ளிக்கூடம், வீடு, படிப்பு இதுதான் எங்கள் உலகம். பாடப்புத்தகங்கள் அந்நாளில் பகுதி பகுதியாக வைப்பதில்லை. முழுவதும் மனப்பாடமாகப் படிப்போம். இந்தக் காலக் கோனார் உரை மாதிரி அந்தக்காலமில்லை. உபாத்தியாயர் கற்பிப்பார். நாங்கள் படிப்போம். சுய அறிவை வளர்த்துக் கொண்டோம். வேறு எதிலும் நாட்டமில்லாததால் எங்களுக்கு ஞாபக சக்தியும் விருத்தியாயிற்று. அப்படிப் படித்ததனுல்தான் எனக்கு இருமொழிப் புலமை ஏற்பட்டது. எனக்கு மட்டுமில்லை, என்னோடு படித்தவர்கள் எல்லாருமே அப்படித்தான். பம்மல் சம்பந்த முதலியார் என் சக மாணவர். சிறந்த நாடகாசிரியர்'' என்றார். மேலும், தாங்கள் ஆசிரியர்களிடம் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நடந்து கொண்டதையும் கூறினார்.

## விருந்தோம்புகை

பிள்ளை பத்திரிகாசிரியராய் இருந்த காலத்தில் வீட்டில் தினமும் விருந்துச் சாப்பாடுதான். விருந்தில்லாச் சோறு மருந்து அவருக்கு. திடீரென்று இரவுவேளை வந்து நிற்பார்கள் விருந்தினர்கள். மறுபடியும் சமையலுக்கு அடுப்பை மூட்டும் எங்கள் சமையல் பாட்டி, ''வருகிறவர்கள் நேரமே வரப்படாதா? இப்படி வந்து என் பிராணனை

வாங்குகிறுர்களே'' என்று பிள்ளை காது கேட்க முணுமுணுப்பாள். ''இந்தக் குடும்பத்துக்கு ஆலமரம் நான். என்னிழல் தேடி வரத் தான் செய்வார்கள். ஊருக்கு உதவாத ஊருணி இருந்து பயன் என்ன?'' என்று சொல்லிக் கொண்டே போய்விடுவார். இந்த நினைவு அந்திய காலத்தில் பலமாகப் பற்றிக் கொண்டது பிள்ளையை. தினமும் நண்பகல் பன்னிரண்டு மணி அடித்ததும், ''இன்று என்ன சமையல்?'' என்பார், எனக்கு அவரது எண்ணம் தெரியும். எனவே பொரியல் முதல் பச்சடி வரை சமையல் பட்டியலை விரிப்பேன். தந்தையிடம் பொய் சொல்லி ஏமாற்ற வேண்டியதாய் விட்டதே என்று என் மனம் சஞ்சலப்படும் சமயம் ''பொய்ம்மையும் வாய்மை யிடத்த'' என்ற குறள் என்னைத் தேற்றும். சமையல் பட்டியலைக் கேட்டுவிட்டு, ''சரி. அப்படியானுல் நேரமாய்விட்டது; எல்லாரும் போய்ச்சாப்பிடுங்கள்'' என்பார், அன்ன ஆகாரமின்றி பலவருடங் களாக இருக்கும் பிள்ளை. உண்மையில் ரசம் சாதமோ அல்லது குழம்பு சாதமோ ஏதோ ஒன்று எங்களுக்காகக் காத்திருக்கும். மரணப்படுக்கையில் குடும்பத் தலைவர். அவர் கண் மூடும் வரை வருவாய் வரும். போய்விட்டால் குடும்பம் அந்தரத்தில் தொங்க வேண்டிய நிலை. சாப்பாடு எப்படிச் சாப்பிட முடியும். ஏதோ உயிர் வாழச் சில கவளங்கள் அவ்வளவுதான்.

## தமிழால் தழைத்த உயிர்

பிள்ளையவர்கள் மூளையில் தமிழ் அகராதியிலுள்ள சொற்கள் அளவில்லாமல் பதிவாகி இருந்தது என்றே நினைக்கிறேன். அவர் நினைவற்றிருந்த ஏழு நாள்களும் இரவு பகல் ஓய்வில்லாமல் அவர் வாயிலிருந்து தமிழ்ச் சொற்கள் முத்துப்போல் சொரிந்து கொண்டிருந் தன. டேப் ரிக்கார்ட் ஒலிபரப்புவது போலவே அவரது மூளையும் தன்னிடம் பதிவாயிருந்த சொற்களை மளமளவென்று விடாமல் ஒலி பரப்பிற்று. எட்டாம் நாள் ஒலிபரப்பு நின்றது. பிள்ளையவர்களுக் குத் தன் நினைவும் திரும்பியது. அதன்பின் அவர் இருந்த மூன்று மாத காலமும் தெளிவாக இருந்தார். நல்ல நினைவோடு இருந்தார். நன்ருகப் பேசினுர். பிள்ளையைப் பார்த்துவந்த டாக்டரே கைவிட்ட பின்னும் பிள்ளை உயிருடன் இருப்பது கண்டு வியந்தார்.

## அந்தியகாலம் குரு வாழ்ந்த இடம் கண்டு திரும்புதல்

பிள்ளை மரணம் அடையப் பத்து நாள்கள் இருக்கும்பொழுது ''எனக்குத் திருவனந்தபுரம் போக வேண்டும். நடராஜனிடம் சொல்லி கவர்ன்மெண்ட் பெரிய டாக்டரைப் பார்த்துவிட்டால் போதும்'' என்ருர். ஆஸ்பத்திரி வண்டியில் பேரூர்க் கடைக்கு எடுத்துச் சென்றேன். அங்கு திரு. நடராஜபிள்ளை வீட்டு வராந்தா வில் படுத்து கொண்டு ஹார்விபுரக் குன்றையே ஒருநாள் முழுவதும் வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். தம் குருநாதர் வாழ்ந்த இடம்; மறைந்த பூமி அது. தம் முடிவு நெருங்கிவிட்டது என்று கண்டு கொண்ட பிள்ளை இறுதியாகக் குரு பீடத்தைக் காண விழைந் தார். அவர் நினைவில் மூழ்கி மௌனமாய்ப் படுத்திருந்தார். மன

தாரக் குருவுக்கு அஞ்சலி செலுத்தியபின், டாக்டரைச் சந்தித்து விட்டு உடனே நாகர்கோவிலுக்கும் புறப்பட்டு விட்டார். அதுவரை அவர் மனத்தை அழுத்திக் கொண்டிருந்த எதுவோ ஒரு பாரம் இறங்கிவிட்டதுபோல் தோன்றியது. அன்றிலிருந்து மரணம்வரை மிக அமைதியாகக் காணப்பட்டார். பிள்ளையின் குரு பக்தியானது, சீர் கெட்டிருந்த அவர் உடல் நிலையிலும்கூட பிள்ளையவர்களைப் பேரூர்க்கடைக்குத் தூக்கிப்போய் தூக்கி வந்தது.

## அன்னையார் வாழ்வு

பெற்றோருக்குக் கண்மணி போன்ற பிள்ளை, சகோதரர்களுக்கு இணைபிரியாத உடன்பிறப்பு, சுற்றத்தாருக்கு ஆல், ஊருக்கு ஊருணி, மக்களுக்கு அன்பு மிக்க தந்தை-என்றெல்லாம் சொல்லக் கூடிய பிள்ளையவர்கள் தம் மனைவியாருக்குக் கண்ணிறைந்த கணவராய் இருந்தார். ஆனால், மனம் நிறைந்த கணவராய் வாழ்ந்தார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அதற்குக் காரணமும் இருக்கிறது. பிள்ளை காலேஜில் படிக்கும்பொழுதே ஒரு பெண்மீது காதல் கொண்டுவிட்டார். அவள் பூரணமாகப் பிள்ளையை தன்வயப் படுத்தித் தன் கைப்பாவையாக ஆட்டி வைத்தாள். கட்டின மனைவியின் விருப்பம் அறிந்து எங்கும் அழைத்துப் போகவோ நெருங்கி உறவாடிப் பேசி மகிழவோ சமயம் இல்லாமல் போயிற்று. அவள் யார் தெரியுமா? தமிழ்த்தாய் பெற்ற கவிதாமணிதான் அவள். என் அன்னையாருக்கும் குறையொன்றும் வைக்கவில்லை பிள்ளை. கௌரவமாகவே வாழ்ந்து மறைந்தார் என் அன்னையார்.

## கடவுளை வழிபட்ட நிலை

இளமை வழக்கம் முதுமை மட்டும் பிள்ளையிடம் காணப்பட்டது. தினமும் ஸ்நானம் செய்ததும் நெற்றியில் திரிபுண்டரம் தரித்து, சந்தனப் பொட்டு வைத்தபின் இருகரம் கூப்பிக் கண்மூடி இறைவனை நிமிஷ நேரம் தியானிப்பார். அவ்வளவுதான். அவர் சாமி கும்பிட்டு நாங்கள் பார்த்தது இல்லை. ஆலய தரிசனம் போனதில்லை. வீட்டில் நடக்கும் விநாயகர் பூஜை, சரஸ்வதி பூஜை முதலியவைகளிலும் கலந்துகொண்டதில்லை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்தான். கடவுள் இல்லை என்று சொன்னதில்லை. கும்பிடுகிறவர்களைத் தடுப்பதுமில்லை; இகழ்ந்து பேசுவதுமில்லை. விசேஷ பூஜைகளுக்கு வேண்டிய பணம் தருவார். பூஜைகளுக்கு வேண்டிய பூ ஆரங்களை விதவிதமாய்க் கட்டித்தருவார். அழகாக இலை தைத்துக் கொடுப்பார். இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டால், “மடத்துச் சாமியிடம் கற்ற வித்தை” என்று பதில் சொல்வார். வீமனசேரியில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடமொன்றுண்டு. அதிலொரு சாமியார் இருப்பார். பூசை சமயத்தில் பழம், கல்கண்டுக்காக ஓடுவது பிள்ளைகள் வழக்கம். அப்படிப் போகும்போது அங்கும் ஒரு வித்தையைக் கற்றுக் கொண்டார் பிள்ளை. ஒரு ஆயுத பூஜையன்று பிள்ளை என்னிடம், “அம்மா! விநாயகர் பூஜையையும், சரஸ்வதி பூஜையையும் நீ விட்டு விடாமல் செய்துவா” என்று கட்

டளையிட்டார். இன்று நான் என் லலிதா ஆஸ்ரமத்தில் விநாயகரையும் தேவியையும் வைத்துத் தினமும் பூசை செய்து உபாசித்து வருகிறேன். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது என்வரையில் உண்மையாகும்.

## சோதிடம் பலித்தது

பிள்ளையவர்களும் திரு. குமரேச பிள்ளையவர்களும் ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதைக் கேட்ட சோதிடர் ஒருவர் என் தாத்தாவிடம், 'இவர்கள் யார்? நக்ஷத்திரமென்ன' என்று கேட்டார். 'இருவரும் என் மக்கள். இருவருமே அஸ்தம்' என்றார் தாத்தா. நன்றாகப் படிப்பார்கள். ஆனால் குடத்துள் வைத்த விளக்குப் போலிருப்பர். ஆண் சந்ததி இல்லை என்று கூறிப் போய் விட்டாரவர். திரு. குமரேசபிள்ளைக்கு ஒரே பெண். பிள்ளையவர்களுக்கு இரண்டு ஆண்; இரண்டு பெண். சோதிடத்தை நம்பாத பிள்ளை இதைச் சொல்லிச் சிரிப்பதுண்டு. ஆனால் சோதிடம் பொய்க்கவில்லை. பிள்ளையவர்கள்தான் ஏமாந்தார்கள். அவர் மரணம் அடைவதற்கு ஓராண்டுக்கு முன் இளையமகன் இருபத்து மூன்று வயதில் இறந்தான் அவன் போன அடுத்த பத்தாம் மாதம் மூத்த மகன் போர் முனைச் சேவகத்தில் சேர்ந்து இராக்-இரான் போய் விட்டான். இறுதிக் கடன் பெண்ணாகிய நானே செய்யும்படியாயிற்று. கொள்ளி வைக்கப் பிள்ளை இல்லாமல் போயிற்று. பிள்ளை இருந்தும் பயன் என்ன? அடுத்தபடி அவர் சொன்னதுபோல் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களும் அவர் பெயரும் குடத்துக்குள் வைத்த விளக்குப்போல் இன்றுவரை இருக்கிறது. இனிமேல் எப்படியோ?

## அடையா நெடுங்கதவு

பிள்ளையவர்களுக்கு வீட்டுக் கதவைச் சாத்துவது பிடிக்காது. அது எப்பொழுதும் திறந்தே கிடக்கும். ஒருநாள் பெரியப்பா வந்து, "அக்கம் பக்கம் திருட்டுப் போகிறது. எங்கும் கள்ளர் பயமாயிருக்கும்போது கதவைத் திறந்து போடாதே" என்று சொல்லிவிட்டுப் போனார். கண்மூடி எழ முடியாமல் படுத்திருக்கும் பிள்ளையைப் பார்த்துத் தூங்குகிறார் என்று நினைத்துக் கதவை மெள்ளச் சாத்தினேன். "அம்மா! அவர் சொல்லிவிட்டுப் போனாரே என்று அடைக்கிறாயா? அடையாதே. திறந்தே கிடக்கட்டும். நான் இருக்கும் போது எந்தத் திருட்டுப்பயல் வருகிறான் என்று பார்ப்போம்" என்றார், ஒரு துரும்பை எடுக்கவும் சக்தியில்லாத பிள்ளை. அவர் மனோதைரியமே கேடயம் போல் எங்கள் வீட்டைக் காத்தது. அவர் இறுதி யாத்திரை புறப்பட்டு மூலை திரும்பிய பிறகே அடையா நெடுங்கதவும் அடைக்கப்பட்டது.

## பிள்ளையவர்கள் கற்ற நூல்கள்

பிள்ளை எல்லா தமிழ் நூல்களையும் வாசித்தவர்தான். ஆனால் பசு நூலும் பாச நூலும்தான் அவரைப் பெரிதும் கவர்ந்து கொண்

டவை. பதி நூல்களை ஆசிரியர் கற்பனை எனக் கருதினரோ, கட்டுக்கதை என்றெண்ணினரோ தெரியவில்லை. அவற்றைப் பற்றி அவர் எதுவும் கூறவில்லை. ஆனால் வள்ளலார் இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் பிள்ளை, பன்னிரு திருமுறையையும் ஆராய்ந்து அதில் இடைச் செரு கல் எவை என்பதைக் கண்டுபிடித்துத் தம் கைப்படவே அந்நூலில் ஆங்காங்கே குறிப்பும் எழுதி வைத்திருந்தார். வள்ளலாரின் ஆற்றொழுக்குப் போன்ற இலக்கிய நடை பிள்ளையவர்களைக் கவர்ந் திருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது.

## *பாட்டியார் நினைவு*

பிள்ளையவர்களைப் பற்றி நினைவுகூரும்போது அவரைப் பதி னைந்து வயது முதல் தன் ஆயுள் உள்ளவரை ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் உடன் இருந்து சமைத்துப் போட்டுப் பாதுகாத்த அவ ரது பாட்டியார் ஆதிலட்சுமி அம்மாளையும் நான் நினைத்துக் கொள் ளாமல் முடியாது. பாட்டி தன்னலம் பேணாதவர். பிள்ளையவர் களின் நலமே தமதாகக் கருதியவர். அன்பு மிக்கவர். குடும்பத்தில் ஒருவராகவே இருந்து மறைந்தவர். பாட்டி ஐந்து பேருக்கும் சமைப்பார்; ஐம்பது பேருக்கும் சமைப்பார். அவர் கைப்பாகம் மிக மிகச் சுவையாயிருக்கும். எண்பது வயதுக்கு மேல் இருந்தார். உழைப்பால் இறுகிய சரீரம். ஆரோக்கியமானது. நோயே கண் டறியாதது. ஒருநாள் தலைவலி என்று படுத்து மறுநாள் போய்விட் டது. கடைசியாக என்னிடம் "உன் அப்பாவுக்கு நானில்லாவிட் டால் ருசியாக யார் சமைத்துப் போடுவார்கள்? இன்று சாப்பிட் டானோ இல்லையோ?" என்று புலம்பியதுடன் அவர் ஆவி அமைதி யாகப் பிரிந்தது.

## *ஏகாதசி மரணம் துவாதசி தகனம்*

வெளிப்படத் தம் கடவுள் பக்தியைக் காட்டிக் கொள்ளாத பிள்ளையவர்களுக்கு ஏகாதசி மரணம் துவாதசி தகனம் என்றால், அவர் காலமெல்லாம் கம்பராமாயணம் வாசித்து ராமநாமம் உச்சரித் ததின் பலனேயல்லாது வேறென்ன?.

## *பண்ணையாள்களின் நன்றியுணர்வு*

பிள்ளையவர்கள் காலமானது கேட்டு வீமனசேரியிலிருந்து பண்ணையாட்கள்கூட வந்து தங்கள் இறுதி மரியாதையைப் பிள்ளைக்குச் செலுத்தினார்கள். பண்ணை கைவிட்டுப் போய்ப் பல வருடங்கள் ஆனபோதிலும் பிள்ளை, அவர்கள் உள்ளத்தில் இருந்தார் என்பது அவர்கள் விட்ட கண்ணீரே காட்டியது.

## *உள்ளத்தில் உள்ளது எழுத்துருவாய் வெளிப்பட்டது*

தந்தையாரைப் பற்றிய சில நினைவுகளை என் மனத்துக்குள் இந் நாள் வரையில் வைத்திருந்தேன். இப்பொழுது எல்லாம் வெளிப்

பட்டு விட்டது. இடம் காலி. நிம்மதியாகத் தியானம் பண்ண இது பேருதவியாக இருக்கும். இன்னும் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சில முக்கிய நிகழ்ச்சிகளை உங்கள் முன் வைத்து என் அஞ்சலியைச் செலுத்தி நிறைவு செய்யக் கருதுகிறேன்.

## தீமையை கண்டிக்கும் திறம்

திருவனந்தபுரத்தில் பிள்ளையவர்கள் பத்திரிகை ஆசிரியராக இருந்த காலம். ஸ்ரீமூலந்திருநாள் மகாராஜா ஆட்சி. அப்போது அரசாங்கத்தில் ஊழல் புகுந்தது. இதை வன்மையாகக் கண்டித்து பத்திரிகையில் தலையங்கத்தில் தொடர்ந்து பிள்ளையவர்கள் எழுத ஆரம்பித்ததும் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. இதைத் தடை செய்ய விரும்பிய மன்னர் இரகசியமாகத் தூது அனுப்பி, பிள்ளையவர்களைத் தம்மைச் சந்திக்கும்படி அறிவித்தார். ஆனால், பிள்ளை அவர்கள் மன்னர் அழைப்பை ஏற்க அடியோடு மறுத்து விட்டார். கல்விச் செருக்கும், மேதா விலாசமும், கலங்கா நெஞ்சமும், எடுத்த காரியத்தில் வெற்றிகாணும் வீரமும், பதவிக்கோ பட்டத்துக்கோ பணத்துக்கோ எதற்கும் அசைந்து கொடாத உறுதியும், நீதியில் நாட்டமும், உண்மையில் நம்பிக்கையும் உடைய பிள்ளையவர்களின் தன்மையை உணர்ந்த மன்னர் தம் அழைப்பை ஏற்க மறுத்த பிள்ளையவர்களை நேரில் சந்தித்து உடன்பாடு காணத் தம் திவானையே பிள்ளை அவர்கள் இல்லத்துக்கு அனுப்பி வைத்தார். அந்த நாளைய நிலைமையில் இது அரியதோர் நிகழ்ச்சியேயாகும். திவானிடம், "இனிமேல் இம்மாதிரி நடக்க அனுமதிக்க மாட்டோம்" என்ற உறுதிமொழி வாங்கிய பின்னரே பிள்ளையவர்கள் அரசைத் தாக்கி எழுதுவதை நிறுத்தினார்கள்.

## மகாத்மா காந்திக்கு வரவேற்பு

மன்னரைச் சந்திக்க மறுத்த பிள்ளையவர்களே மகாத்மா காந்தி முதன்முதல் திருவனந்தபுரம் வந்திருந்தபொழுது அவரை முன்னின்று வரவேற்று, வரவேற்புப் பத்திரமொன்று வாசித்தளித்தது மட்டுமல்ல,

> பூதலஞ்செய்மா தவத்தின்
> சேய் மகாத்மா காந்தியே!
> புண்ணியா உனை நண்ணினுருமே
> புனிதராய்ப் பொருந்துவர்நற் சாந்தியே!

என்று தொடங்கும் பாடலையும் இயற்றிச் சங்கீத மேதை தி. லக்ஷ்மண பிள்ளையவர்கள் மூலம் அப்பாடலைச் சபையில் பாடவும் வைத்தார்கள் என்றால் அவர்கள் உளப்பாங்கை என் என்பது?

## படிக்கும் பழக்கம்

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிக்க பிள்ளையவர்கள் எவ்விதமான கெட்ட பழக்க வழக்கங்களுக்கும் இலக்காகாதவர்

தாம்பூலம் போட்டுக் கொள்ளத் தெரியாமல் வாழ்ந்து மறைந்து விட்ட பிள்ளையவர்கள் ஐந்து வயதில் ஏடும் எழுத்தாணியும் ஏந்தித் தமையனார் திரு. குமரேச பிள்ளையவர்கள் கரத்தைப் பற்றித் திண்ணைப் பள்ளிக்கூடம் போகத் துவங்கியது முதல் எழுத்திற்கும் படிப்பிற்கும் ஓய்வே இல்லை. அவர்கள் மரணப் படுக்கையில் இருந்த 90 நாள்கள் மட்டுமே பேனா எடுக்கவில்லை; எழுதவில்லை. நூல்களைப் புரட்டவில்லை. ஆத்மா பிரியும் வரை அண்ணனைப் பிரியவும் இல்லை.

## திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழைப் புகச் செய்தமை

பிள்ளையவர்கள் குடல் வியாதியால் பீடிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் அன்ன ஆகாரமின்றி நலிந்து மெலிந்து போயிருந்தாலும் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து எழுதியும் வாசித்தும் வந்த அந்திய காலத்தில் திருவிதாங்கூர் அரசாங்கம் சர்வகலாசாலை அமைக்கத் திட்டமிட்டு, அதற்கு ஆலோசனைக் குழு ஒன்று அமைத்தது. அதில் பிள்ளையவர்களையும் அழைத்து ஆலோசனை கூறி உதவுமாறு கேட்டுக் கொண்டதைத் தள்ளாத அந்நிலையிலும் தள்ளிடாமல் ஏற்றுப் பலபேர் ஒத்துழைப்புடன் மாதம் ஒருமுறை கூட்டத்திற்குப் போய் வந்தாகள். முடிவில் தமிழர்களுக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தில் இடம் ஒதுக்க வேண்டும் என்று பலமான எதிர்ப்புக்களிடையே வாதாடி தனிமையில் நின்று அதில் வெற்றியும் கண்டார்கள். வீடு திரும்பிய பிள்ளையவர்கள் படுக்கையில் அமர்ந்ததும் புன்னகையுடன் "அம்மா! நான் தமிழ்நாட்டுக்கும் தமிழர்களுக்கும் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டேன். இனி இங்கு அமைக்கப்படும் பல்கலைக்கழகத்தில் தமிழர்களும் புகுந்து தம் திறமையைக் காட்டலாம். தமிழர்களுக்காக அங்கே மூடப்பட்ட கதவைத் திறந்து விட்டேன். என் கடன் முடிந்து விட்டது" என்று என்னிடம் கூறிவிட்டுப் படுத்தவர்கள்தான். பிறகு எழுந்திருக்கவும் இல்லை. கூட்டத்தில் கலந்து கொள்ளவும் இல்லை. அப்பெருந்தகை அன்று அப்பணியைச் செய்திராவிட்டால் இன்று தமிழுக்கு அங்கு இடம் இருக்குமா என்பது சந்தேகமே.

## பயன்படுத்திய சுவடிகள்

பிள்ளையவர்கள் இருந்த அறையில் கட்டிலைச் சுற்றி ஓலைச்சுவடிகளும் புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை யாரும் தொடவோ, அங்கிருந்து மாற்றவோ பிள்ளையவர்கள் அனுமதிக்கவில்லை. அடிக்கடி நாற்புறமும் தம் கண்களைப் படுத்தபடியே சுழலவிட்டுப் பின் கண்களை மூடிக் கொண்டு பெருமூச்செறிவார்கள். ஒருநாள் தம் நூல்நிலையத்தை உற்றுப் பார்த்துக் கண்ணீர் விட்டார்கள். அவர்கள் கண் கலங்கியே பார்த்தறியாத நான் பதறி ஏன் வருந்துகிறீர்கள்? என்று கேட்கவும், "எனக்குப் பின் இதைப் பயன்படுத்த ஒரு வாரிசு எனக்கில்லையே" என்று கூறி ஏங்கினர்கள். மனைவி, மக்களை விட்டுப் போகிறோமே என்று சிறிதுமே கலங்காத

அந்த உள்ளத்தில் தம் நூல் நிலையத்தை ஒப்படைக்க வாரிசில்லாமல் அநாதையாக விட்டுச் செல்கிறோமே என்று எண்ணிக் கண்ணீர் விட்டார்கள் என்றால் நூல்கள்மீது அவர்கள் வைத்திருந்த பற்றை அளவிட முடியுமா?

பிள்ளையவர்களுக்குத் தம் செல்வமே நூல்நிலையம்தான். பந்தம், பாசம், உறவு, நினைவு, எல்லாமே புத்தகங்கள்தான். ஒரு நாளைக்கு 5 மணி நேரம்தான் தூக்கம். ஏனைய நேரம் எல்லாம் படிப்பது, எழுதுவதுதான் வேலை.

சாப்பாட்டு நேரமே பிள்ளையவர்களின் ஓய்வுநேரம். அப்பொழுதுதான் அம்மாவும் நாங்களும் குடும்பத்தார்களும் நிதானமாக அவர்களிடம் பேச முடியும். அவர்களும் அப்பொழுதுதான் எங்களிடம் பேசுவார்கள். தாம் பெற்ற செல்வங்களையே தூக்கியெடுத்து அணைத்துக் கொஞ்சி விளையாடியே அறியாத தந்தை. கண்களால் கண்டு மகிழ்வதோடு சரி. அவர்கள் எடுக்கவோ, தூக்கவோ மார்போடணைக்கவோ ஏராளமான நூல்கள் காத்துக் கிடக்கும்போது நாங்கள் எதுக்கு வீணாக அவர்கள் நேரத்தைப் போக்கடிக்க வேண்டும்?

## பார்வையால் பேசும் பேச்சு

அதிகம் பேச மாட்டார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார்கள். கண்களே பேசும். பிள்ளையவர்கள் தீர்க்க திருஷ்டியுள்ளவர்கள். தம் பார்வையாலேயே தம் எண்ணங்களை எங்களுக்குப் புலப்படுத்தி விடுவார்கள். அவர்களிடம் பத்திரிகாலயத்தில் வேலை பார்ப்பவர்கள் எல்லாருமே அந்தக் கண்களின் பார்வையால் அடக்கியாளப்பட்டுப் பம்பரம்போல் சுழன்று வேலை செய்வதை என் கண்களால் கண்டிருக்கிறேன்.

## நாள்வழி நிகழ்ச்சிகள்

ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் கடற்கரைக்கு நடந்து சென்று திரும்பி வரும் பழக்கமுண்டு. தினமும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை வெளியில் உலாவிவிட்டு வரும் வழக்கம் எப்போதுமுண்டு. அதைத் தவிர ஓட்டலோ, நாடகசாலையோ, சினிமா தியேட்டரோ பார்த்ததில்லை. அப்படியொரு தனிப்பட்ட வாழ்வு அமைத்துக் கொண்ட பிள்ளையவர்களை ஒருமுறை ஆங்கில சினிமாப் படம் ஒன்றுக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்று முதல் வகுப்பில் உட்கார்த்திவிட்டு, நாங்கள் படம் பார்த்தோம். இடைவேளை விளக்குப் போட்டார்கள். பிள்ளையவர்கள் இருந்த இடம் காலியாயிருந்தது படம் ஆரம்பித்ததுமே அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப் பிடிக்காமல் வீடு திரும்பி வழக்கம்போல் வாசித்துக் கொண்டிருந்தார்கள். "ஏன் வந்துவிட்டீர்கள்?" என்று கேட்டதற்கு கலகலவென நகைத்தவாறு, உங்களுக்குத்தான் இந்த ஊமைப்படம் தேவை. எனக்கு இதைவிட மேலான காட்சிகளைக் காட்டும் இலக்கியங்கள் இருக்கின்றன" என்றார்கள். உண்மைதானே அந்த இலக்கிய

மேதையினுடைய மூளை அரங்கில் மனத்திரையில் அறிவொளியில் இலக்கிய ஏடுகள் பிறழ ஆரம்பித்தால் கற்பனைக் காட்சிகள் உயி ரோவியங்களாக நடமாட ஆரம்பித்து விடும் என்ற உண்மையை உணர்ந்தேன்.

## அன்னைபிதாவிடம் கொண்ட பக்தி

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ" மாகப் போற்றிப் புகழ்ந்து பணிந்து வாழ்ந்தவர்கள் பிள்ளையவர்கள். யாருக்கும் வணங்காத அவர்கள் சிரம் அன்னையின் முன் தாழ்ந்து நிற்பதைப் பலமுறை கண்டிருக்கிறேன்.

தம்மைக் காணவரும் நண்பர்களை முதலில் தம் அன்னையான அந்த எழுத்து வாசனையே அறியாத மூதாட்டிக்கு அறிமுகம் செய்து வைக்கும் தோரணையே அலாதியானது. நண்பர்கள் மரியாதையுடன் கரம் கூப்பி வணக்கம் தெரிவிக்காமல் அந்த இடத்தை விட்டு நகர மாட்டார்கள். அன்னையின் முன்னிற்கும் பிள்ளையவர்களின் தோற்றமே இதற்குக் காரணம். "வேளாண்மைத் தொழில் செய்ய வேண்டிய குடும்பத்தில் பிறந்த என்னை இந்நிலைக்கு ஆளாக்கியது என் அன்னை. ஏர் பிடிக்க வேண்டிய கையை எழுத்தாணி பிடிக்க வைத்தது என் அன்னை. என் கையில் மாடு மேய்க்கும் கோலைக் கொடுத்துப் போ வயலுக்கு என்று என் அன்னை என்னைத் துரத்தி இருந்தால், இன்று இந்நிலைக்கு வந்திருப்பேனா? அவர்களே என் கண் கண்ட தெய்வம்" என்று பிள்ளையவர்கள் கூறக் கேட்டிருக் கிறேன். அன்னையின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசியறியாத பிள்ளையவர்கள் தாயின் அந்திய காலத்தில் அருகில் அமர்ந்து அன்னைக்குச் செய்ய வேண்டிய பணிகள் அத்தனையும் தம் கையாலே செய்தார்கள். தமக்கு ஏவல் செய்யப் பணியாட்கள் இருக்கும் போது தம் தாய்க்குத் தாமே பணிவிடை செய்யக் காரணம் தம் அன்னையின் பணிவிடைகளைச் செய்யும்பொழுது பிறர் முகம் சுளித்து விடக் கூடும். சலிப்படையக் கூடும் என்று கருதியதேயாகும். நெஞ்சுரமும், வீரமும், ஆண்மையும் மிக்க பிள்ளையவர்கள் அன்னையின்முன் குழந்தையாக மாறி விடுவார்கள் என்றால் அந்தப் பாசம் எத்தகையது என்று நினைத்திருக்கிறேன். நஞ்செய் நிலத்தில் நெல்லை விதைக்க வேண்டிய பிள்ளையவர்களை, காகித வயலில் சொல்லை விதைக்கும் கவிஞர் ஆக்கியதே அந்த அன்னைதானே.

## பத்துவயதில் தந்தையார் சொன்ன குறிப்பு

நான் பத்து வயதுக் குழந்தையாக இருந்த காலத்தில் என்னுடைய போக்கை நன்கு புரிந்து கொண்ட பிள்ளையவர்கள், "பைத்தியக்காரப் பிள்ளை. இந்த உலகுக்குக் கொஞ்சங்கூட லாயக்கு இல்லாதவள் நீ" என்று தீர்க்க தரிசனமாகக் கூறினார்கள்.

ஆம். இன்று உலகம் பைத்தியமாகவே கருதுகிறது. உலக இயல்பும் எனக்கு இன்று வரை ஒத்து வரவில்லை. என்ன சொல்வது?*

## பொய் பேச வைத்த இடம்

வாழ்நாள்களில் பொய்யே பேசி அறியாத பிள்ளையவர்கள் என்னையும் என் அன்னையையும் பொய் சொல்லும்படி கட்டளை இட்ட நாள்களும் உண்டு. பரீட்சைத் தாள்களைத் திருத்தும்பொழுது பேப்பர் திருத்தி முடியும் வரைத் தம் வீட்டு வாசல் கதவைத் தாளிட்டு விடுவார்கள். யார் வந்தாலும் சரி. மாடியில் மறைந் திருக்கும் பிள்ளையவர்களை அவர்கள் இல்லை என்று சொல்லி வருகிற வர்களை அனுப்பி விடுவோம். தம் மக்கள் பரீட்சையில் தேறிப் பட்டம் வாங்கி விட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் பெற்றோர்கள் பணமூட்டையுடன் வந்து தங்கள் எண்ணம் ஈடேருமல் திரும்புவதும் கண்டிருக்கிறேன். திருடர்களுக்கும் கொலைகாரர்களுக்கும் சிறிதும் அஞ்சாத பிள்ளையவர்கள் லஞ்சம் கொடுப்பவர்களைக் கண்டால் தலை மறைந்து விடுவார்கள்.* தகுதி யிருந்தால் ஜெயிக்கட்டுமே. இதற்காகச் சிபார்சு செய்ய மாட்டேன். மனச்சாட்சிக்கு மாருகப் பரீட்சைப் பேப்பரில் மார்க் போட்டு பாஸாக்க மாட்டேன்'' என்று திட்டவட்டமாகத் தாட்சண்யமின்றிக் கூறி விடுவார்கள்.

## கருதியது கூறும் திண்ணிய உள்ளம்

தமிழ் நூல்கள் வெளியிடுவோர் பிள்ளையவர்களின் முகவுரைக்காக நூல்களை அனுப்பிஞல் உண்மையாக அந்நூலைப் பற்றிய தம் கருத்தைத் தயங்காமல் எழுதியனுப்பி விடுவார்கள்.

---

* ''பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர்
பேயனே எவர்க்கும்; இது பேசி என்!
ஆயனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்;
பேயனுய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே.

(பெருமாள் திருமொழி 3 : 3 : 8)

* புற்றில் வாள் அரவும் அஞ்சேன்;
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்;
கற்றை வார்சடை எம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி,
மற்றும்ஓர் தெய்வம் - தன்னை
உண்டுஎன நினைந்து, எம்பெருமாற்கு
அற்றிலாதவரைக் கண்டால்
அம்ம ! நாம் அஞ்சுமாறே !'

என்பது தொடக்கமாக வரும் மணிவாசகரின் திருவாசகத்துள் வரும் 'அச்சப்பத்து'ப் பிள்ளையவர்களின் நிலையை நினைவூட்டுகிறது.

அவர்கள் பிள்ளையவர்களைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்ள முடியாது. பணம் அவர்கள் முன் பேசாது. தமிழ், கலை, இலக்கியம்தான் பேசும்.

## காலம் தவறுமை

அவர்கள் ஆயுளில் விட்டுப் பிரியாமல் உறவு கொண்டாடிய பொருள்களான நூல்கள், எழுதுகோல், இவற்றுடன் கடிகாரமும் ஒன்றாகும். ஆம். மணிக்கணக்கில் குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட வேலையை யந்திரகதியில் செய்து முடித்து விடுவார்கள். துயில் எழுதல், காலைக்கடன், உணவருந்தல், உலாவப் போதல், ஓய்வெடுத்தல் எல்லாமே கடிகார முள் சுட்டிக்காட்டும் நேரத்தில் செய்து பழக்கம். எனவே கடிகாரமும் நூல் நிலையத்தைப் போல அந்த ஆத்மா சாந்தியடையும் வரையில் பிள்ளையவர்களை விட்டுப் பிரியவேயில்லை. பிள்ளையவர்கள் மரணப் படுக்கையில் இருக்கும் பொழுது பேச முடியாத சமயங்களில் கண்களால் மணியைக் காட்டுவார்கள். நாம் அதைக் கவனித்தால் அவர்களுக்கு அந்த நேரத்தில் செய்ய வேண்டிய வேலைகள் நினைவு வரும். மூச்சு அடங்கும்வரை மணிப் பிரகாரம் எல்லாம் செய்து கொண்டார்கள்.

## பிறந்த மண்ணே சாந்தி தரும்

பிள்ளையவர்கள் படுக்கையில் இருக்கும்பொழுது இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து திருமதி ராமநாதன், அவர் மகள், மருமகன் மூவரும் வந்து பார்த்தார்கள். அம்மையார் பிள்ளையவர்கள் முன்கரம் கூப்பி நின்று, ''இப்படி ஆகி விட்டீர்களே! இலங்கைக்கு எங்களுடன் வாருங்கள். உங்களுக்கு சிகிச்சையளித்து நோயைக் குணப்படுத்துகிறோம்'' என்றார்கள். நெற்றியில் விபூதியும் கழுத்தில் உருத்திராட்ச மாலையும் காவிப் புடவையுமாய் நின்ற அந்த அமெரிக்க மாதுடன் பிள்ளையவர்கள் கை குலுக்கி விட்டு, ''நன்றி, பிறந்த மண்ணில் இறக்கவே விரும்புகிறேன்'' என்று கூறினார்கள். தாய்நாட்டின் மீதும் தாய்மொழி மீதும் அத்துணை ஈடுபாடு அவர்களுக்கு. இல்லாவிட்டால் சென்னையை விட்டு இறுதிக் காலத்தில் நாகர்கோயில் வந்திருப்பார்களா? பிள்ளையவர்கள் சென்னையை விட்டுப் புறப்படும்போது பல நண்பர்கள், ''நீங்கள் இங்கேயே இருந்து விடுங்கள். போதிய வருவாய் வீடு தேடி வந்து விடும்'' என்றார்கள். அதற்குப் பிள்ளையவர்கள் எனக்கு வருவாய் பெரிதல்ல. நான் பிறந்து வளர்ந்த மண், கல்விகற்ற மண், என் கற்பனை ஊற்றைச் சுரக்கச் செய்த மண். கவிமலர்களைக் கலைமகள் பாதங்களில் அர்ச்சிக்க வைத்த மண், இயற்கை அன்னை எழில் கொலு வீற்றிருக்கும் அந்த இடமே எனக்குச் சாந்தி தரும்'' என்று கூறியவர்களல்லவா? இப்பொழுதும் தம் கருத்தை அம்மையாரிடம் வெளியிட்டதும் அவர்கள் கண் பனித்தது. தாம் ஆங்கிலத்தில் எழுதிப் பதிப்பித்த கம்ப ராமாயணத்தின் பதிப்பாசிரியர் அல்லவா?

## கலைமகளும் திருமகளும்

என் அன்னையார் ஒரு சமயம், பிள்ளையவர்களிடம் "காலமெல்லாம் உழைத்துப் பயன் என்ன? தம் குடும்பத்துக்கென்று சொத்து சுகம் தேடவில்லையே" என்றூர்கள். அதைக் கேட்டு நகைத்த பிள்ளையவர்கள், "இருவேறு உலகத்தியற்கை" என்ற குறளை எடுத்தோதி, "இதில் இரண்டாவது ரகம் நான்" என்றூர்கள். அம்மையார் அதன் பொருள் புரியாமல் விழித்தார்கள்.

பிள்ளையவர்கள் வாழ்க்கையிலும் பெரும்புயல் வீசி லட்சக் கணக்கான பொருள் சேதத்தை உண்டு பண்ணியது மட்டுமல்ல. அவர்கள் குரு பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களே பரிசளித்த அச்சு யந்திர சாலையும் முடப்பட்டுத் தொழில் நின்றது. ஏழாண்டுக் காலம் பிள்ளையவர்கள் 'வீமனசேரி' என்னும் தமது சொந்தக் கிராமத்தில் தம் வீட்டில் தாமே ஒரு சிறை வாழ்வை அமைத்துக் கொண்டார்கள். அந்நாள்களில் பிறந்த கவிதை நூல்கள்தாம் 'வாழ்க்கை நூல், கம்பராமாயணக் கௌஸ்துபம், நாஞ்சில்வெண்பா, சில தேசியப் பாடல்கள்' முதலான இலக்கிய படைப்புகளாகும். ஆம். திருமகள் கைவிட்ட காலத்தில் கலைமகள் அணைத்துக் கொண்டாள்; கவலைகளை மறைக்க வைத்தாள்; கவிகளை எழுத வைத்தாள். இது நான் கண்ட உண்மை.

## கம்பரும் வள்ளுவரும் கருத்தைக் கவர்ந்தனர்

பிள்ளையவர்கள் பிறந்தது முதல் தம் தமையனுர் திரு. கம்ப ராமாயண விரிவுரையாளர் குமரேசபிள்ளை அவர்களை இறக்கும் வரையில் இணை பிரியாதிருந்த பெருந்தகை. அண்ணன் தம்பி இருவருமாக இலக்கிய சர்ச்சையில் இரவு 8 மணிக்கு மேல் ஈடுபட்டால் பொழுது போவதே அவர்களுக்குத் தெரியாது. இவ்வாறு ஏறக்குறைய சுமார் 50 ஆண்டுக் காலம் கம்ப ராமாயணத்தைப் பற்றி இவர்கள் தொடர்ந்து சர்ச்சை செய்து வந்தவர்கள். பிள்ளையவர்கள் இளம் பருவத்திலிருந்தே திருக்குறள், கம்பராமாயணம் இவ்விரு நூல்களையும் தம் இரு கண்ணே போல் போற்றிப் புகழ்ந்து வந்ததன் விளைவுதான் 'வாழ்க்கை நூல்'' 'கம்ப ராமாயணக் கௌஸ்துபம்' என்னும் இரு நூல்கள், திருவள்ளுவருக்கும் கம்பருக்கும் தம் இதய பூர்வமாகச் செலுத்தும் காணிக்கையாக அவற்றைத் தமிழ்நாட்டுக்குத் தந்து மறைந்தார்கள். அந்நூல்கள் வெளிப்பட்டு உலாவந்து நம் உள்ளங்களை மலர்விக்கும் நன்னுள் நெருங்கி விட்டது. அதை வரவேற்போம்.*

## தந்தையின் பொன் மொழிகள்

இறுதி நாள்களில் என் தந்தை என்னிடம் சில பொன்மொழி களைக் கூறிச் சென்றூர்கள். அவற்றில் சிலவற்றை நினைவு கூர்கிறேன்.

---

* சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாகக் கம்பராமாயணக் கௌஸ்துபம் இன்று வெளியிடப்படுகிறது.

1. நான் விளையாட்டுக்குக் கூடப்பொய் சொன்னதில்லை.
2. தவறு செய்தால், அதைத் தைரியமாக ஒப்புக் கொண்டு அதற்கு உரிய தண்டனையும் பெற்றுக் கொள்வதில் இளமை முதலே ஆர்வம் உடையவன்.
3. கனவு என்பது என்ன என்றே தெரியாது; கண்டதில்லை.
4. தமிழ்க் கலையைக் கற்கவே பிறந்தேன். வாழ்ந்தேன். என் சம்பாத்தியமே கல்விதான்.

இவ்வாறு தம் லட்சியங்களை வாழ்க்கையில் அமைத்துக் கொண்டவர்கள்.

இறுதி நாள்களில் தமக்குச் சிகிச்சை அளித்து வரும் டாக்டரிடம் "என்ன டாக்டர் நீங்கள்? என் நோயைக் குணப்படுத்த முடியவில்லையே. இந்த ஒரு முறை எழுந்து விட்டேனானால் இந்த ஓலைச்சுவடிகளை எல்லாம் ஆராய்ந்து சேர அரச பரம்பரைக்கே ஒரு சரித்திரம் எழுதி விடுவேன். அப்புறம் எப்படியானாலும் சரி" என்றார்கள். டாக்டர் நகைத்தார். மௌனமாய் ஊசி போட்டு விட்டுச் சென்றார். மறு நாள் மாலை, "அம்மா! நான் போகிறேன்" என்று மும்முறை என்னிடம் சொல்லிவிட்டு கண்களை மூடி விட்டார்கள்.

என் துறவுக்குச் சுடர் ஏற்றிய தந்தையார், அச்சுடர் என் இதயத்தில் பிரகாசிக்கும்போது அருபமாக ஆசீர்வதிப்பதை உணர்கிறேன். அவர்கள் எனக்கிட்ட பணி நிறைவேறுகிறது. தமிழ் மக்கள் மறைந்து விட்ட அந்த மேதைக்கு இன்று நூற்றாண்டு, விழாக் கொண்டாடுவதைக் கண்டு மகிழ்கிறேன். நன்றி கூறுகிறேன். பிள்ளையவர்கள் ஆத்மா சாந்தி அடையுமாறு திருவருளை வேண்டுகிறேன்.

## நூற்றாண்டு விழா—நூல் வெளியீட்டைப் போற்றுதல்

பேராற்றல் படைத்த இப்பேராசிரியர் ஓர் பெரும்பிழையும் செய்து விட்டார்கள். அதை இங்குக் குறிப்பிட்டே ஆக வேண்டும். தம் ஆராய்ச்சித் துறையில் தம் பணியில் ஒரு மாணவரையும் சேர்த்து அவருக்குத் தம் வழியைப் பயிற்றுவிக்காமல் மறைந்து விட்டார்கள். அப்பிழை செய்யாமல் தமக்கோர் வாரிசு ஏற்படுத்தி இருந்தால், பிள்ளையவர்கள் மறைந்ததும் அவரது நூல் நிலையம் இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்காது. தம் வாழ்நாள்களில் 50 வருடக் குறிப்புகளை அன்றாடம் எழுதி வைத்திருந்த டயரிகள் பழைய பேப்பர்காரனிடம் பறந்திருக்காது. அவர்கள் இயற்றிய நூல்கள், திருவனந்தபுரம், புத்தேரி, பழனி, சென்னை, மீண்டும் நாகர்கோயில் என்று சுற்றுலா வந்திருக்காது. ஆம் பல ஆண்டுகளாகச் சிறைப்பட்டுக் கிடந்த பிள்ளையவர்களின் நூல்களை அவர்கள் விருப்பப்படி சென்னைப் பல்கலைக் கழகமே வெளியிட்டு விட்டது. நவக்கிரகங்களில் வியாழன் போலவும், நவரத்னங்களில் வைரம்

போலவும், நவரசங்களில் இன்சுவை போலவும், நவசக்திகளில் கலைமகள் வடிவு போலவும், நவதானியங்களில் நெல்மணி போலவும், நவராத்திரிகளில் விஜயதசமி போலவும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை பிள்ளையவர்கள் நினைவு மலராக தமிழாய்வின் ஒன்பதாவது வெளியீட்டு மலரைச் சமர்ப்பித்துள்ளது போற்றத் தக்கது. வரவேற்கத் தக்கது.

புலவர் மணி மு. சண்முகம்பிள்ளையவர்கள் வித்வான் பரீட்சையில் தேறியதும், மரணப் படுக்கையில் இருக்கும் பிள்ளையவர்களிடம் ஆசி பெற வந்தார்கள். இளமையும், துடிப்பும், ஆர்வமும் உள்ள அவரைப் பிள்ளையவர்கள் மனமார வாழ்த்தி அனுப்பிய காட்சி இன்று என் கண்முன் வருகிறது. அதன் பயன் இன்று அவர்கள் பேராசிரியர் பணிபுரிந்த பல்கலைக்கழகத்திலேயே அவரது நூலை வெளியிட்டு நூற்றாண்டு விழாவும் கொண்டாடுவதை இறையருள் என்றே கரங்கூப்பி வணங்குகிறேன்.

தமிழ் அன்பர்கள் உள்ளத்தில் பதியும் பிள்ளையவர்கள் இலக்கியப் படைப்பே அவர்களுக்கு நினைவுச் சின்னமாகத் தமிழ்நாடு உள்ள வரையிலும் தமிழ் மக்கள் வாழும் வரையிலும் நிலைத்திருப்பதாக. வணக்கம்.

# பெரிய புராணத்தில் பக்திச்சுவை

# பெரிய புராணத்தில் சமுதாய நோக்கு

தவத்திரு சுந்தர சுவாமிகள்
ஆதீன கர்த்தர்
சிரவணபுரம் கௌமார மடாலயம்
கோயம்புத்தூர்

**திருமதி சொர்ணம்மாள்**

அறக் கட்டளைச்

சொற்பொழிவுகளின் (*1978*)

இரண்டாம், மூன்றும்

பகுதிகள்

# பெரியபுராணத்தில் பக்திச்சுவை

## பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்

சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் ''பக்திச் சுவை'' நிறைந்தது என்பது எல்லாரும் அறிந்த ஒன்று. பெரிய புராணத்தில் ஏனைய சுவைகளைவிடப் பக்திச்சுவையே மிகுந்திருக்கிறது. *'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ'* என மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தாமியற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ளார்.

சேக்கிழார் பெருமான் அடியார்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதில் அவர்கள் அன்பே வடிவம் ஆனவர்கள் என அருளியுள் ளார்.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினல் எத் திசையும் விளக்கினர்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினர்

எனத் திருக்கூட்டச் சிறப்பிலே அருளியுள்ளார். இறைவனுடைய அக்கமணி மாசிலாத மணி; ஏனைய மணிகள் எல்லாம் மாசுடையவை. அந்த மணி திகழுகின்ற மேனிமேல் திருவெண்ணீற்றைப் பூசியிருக் கின்றார்கள். அந்த வெண்ணீறு போல் அவர்களுடைய உள்ளமும் வெண்மையானது; தூய்மையானது; புனிதமானது. அத்தகைய புனிதர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்

என்று குறிப்பிடுவார். வீடும் வேண்டா விறலுடைய அவர்கள், அன்போடு வணங்குகின்றவர்கள். மற்றவர்கள் ஏதோ ஒரு காரணத்தைக் குறித்து இறைவனை அன்போடு வழிபடுவார்கள். ஆனால் பெரியபுராணத்திலே வருகின்ற நாயன்மார்கள் ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கவே நோக்குகின்ற பக்குவம் உடையவர்கள். அவர்களுக்குக் கேடும் இல்லை; ஆக்கமும் இல்லை. அவர்கள் வைத் திருக்கின்ற ஒரே பற்று—அன்பு இறைவன் திருவடிகளில் வைத்திருக்

கின்ற பக்தி மட்டுமே! திருப்புகலூரிலே எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசர் அங்கே கண்ட செம்பொன்னையும் ஓட்டையும் ஒன்றாகவே எடுத்துப் புல்லோடும் கல்லோடும் சேர்த்து அங்கிருக்கின்ற பொய்கையிலே எறிந்தார் என்பது வரலாறு. அத்தகைய அன்பர்கள்தாம் நாயன்மார்களாகிய அடியார்கள். அவர்களுடைய

ஆரம் கண்டிகை! ஆடையும் கந்தையே!
பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலார்!
ஈர அன்பினர்! யாதும் குறைவிலார்!
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

என்பார் சேக்கிழார். அவர்களுடைய அன்பினைச் சேக்கிழார் வீரம் என்கிறார். வீரம் என்றதும் ஏதோ போர்க்களத்தில் காட்டுகின்ற வீரம் அன்று. வீரம் என்றால் நாம் எண்ணுகின்ற போர்வீரமும் வருகின்றது பெரியபுராணத்தில். ஆனால் சேக்கிழார் அதனை வீரம் எனக் குறிப்பிடவில்லை. பரஞ்சோதியாராக இருந்தபொழுது வடபுலத்திலே சென்று அமர்க்களத்திலே காட்டிய வீரம் வீரம் அன்று; சிறுத்தொண்டநாயனாராக இருந்து செய்த செயலைத்தான் வீரம் எனச் சேக்கிழார் பாராட்டுவர். பரஞ்சோதியாராக இருந்தபோது பிற மக்களை அல்லது சேனைகளைக் கொன்று குவித்ததை வீரமாகவே மகிழ்ச்சியாகவே கொள்ளாமல் ஒரு செய்யுளிலே முடித்துவிட்டு, தம்முடைய மகனை அரிகின்ற போது செய்த செயல்தான் வீரம் என்று பலபாடல்களில் அருளிச்செய்கின்றார்.

கண்ணப்பநாயனார் காட்டிலே வாழ்கின்ற கொடிய பன்றியை இறைவனுடைய ஊனமுதுக்காகக் கொன்றது வீரம் அன்று. தன்னுடைய கண்களைத் தோண்டினாரே அதுதான் வீரம். இத்தகைய ஈர அன்போடு இணையற்ற பக்தியோடு செய்கின்ற வீரத்தைத்தான் சேக்கிழார் "**வீரம் என்னால் விளம்பும் தகையதோ**" என்று குறிப்பிடுவார்.

## இறைவனுக்கே ஆட்பட்ட ஒருமித்த உள்ளம்

சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவருடைய வரலாறுகளின் தொடக்கத்திலும் அவர்களுடைய உள்ளங்களை நாம் காணுகின்றோம். திருஞானசம்பந்தர் மூவாண்டில் ஞானப்பாலுண்டு. சீகாழிக்குளக்கரையிலே நின்று தோணியப்பரை நோக்கிப் பாடுகின்ற முதற்பாடலிலேயே "**உள்ளம் கவர் கள்வன்**" என்று அருளுகின்றார். திருநாவுக்கரசர் அருளிச் செய்த முதற்பதிகத்திலே, "**நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன்**" என்கிறார். சுந்தரர், "**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**" என்றருளினார். எனவே அவர்கள் தங்கள் உள்ளம் முழுவதையும் இறைவன் ஒருவனுக்கே ஆட்படுத்தி அந்த ஒருமித்த உள்ளத்துடனேயே விளங்கினார்கள்.

## நாதர் கழல் தம் முடிமேல் கொண்ட ஞானக் குழந்தை

திருஞானசம்பந்தர் சிவஞானப் பாலுண்டபோதே அவருடைய உள்ளத்தைச் சிவபெருமான் கவர்ந்து விட்டான். முதல் திருத் தலப்பயணமாகத் திருக்கோலக்காவுக்கு எழுந்தருளுகின்றூர். திரு நனிபள்ளிக்கு எழுந்தருளவேண்டும் எனத் திருநனிபள்ளியில் உள்ளவர்கள் வேண்ட, அதற்கு இசைந்து திருத்தோணியப்பரைத் தொழுது விடைபெற்றுப் புறப்படுகின்றூர். அங்கே சிவபாத இருதயராகிய தந்தையாரும் ஏராளமான அடியார்களும் அந்த ணாளர்களும் நிற்கின்றூர்கள். மூன்றரை வயதுக் குழந்தையாக இருக் கின்ற திருஞானசம்பந்தர் நடந்து செல்வதற்கு நெடுந்தூரம். அவரைத் தோளின்மீது ஏற்றிச்செல்ல எத்துணேபேர் வேண்டு மாஞலும் காத்திருக்கிறூர்கள். சிவபாத இருதயராகிய தந்தையார் யார் எடுத்துச் சென்ருலும் அவர்களுக்கு அந்த அருமை தெரியாது என்று எண்ணி அவரே சென்று எடுத்துத் தோளில் வைத்துக் கொள்கின்றூர். அவர் ஞானக்குழந்தையினுடைய பாதம் செந் தாமரையினுடைய அகவிதழைப் போல இருக்கின்றது என எண்ணு கின்றூர். தாமரையின் புறவிதழ் வண்ணமும், மென்மையும் குறை வாகவே இருக்கும், அகவிதழோ நல்லவண்ணத்தோடுமென்மையும் கூடியதாக இருக்கும். அத்தகைய திருவடிகள் தரையின்மீது பட்டு வருந்தக் கூடாது என எண்ணுகின்றூர் சிவபாத இருதயர். செம் மையும் மென்மையும் பொருந்திய அந்தச்சிறிய திருவடிகளேப் பிறர் ஒருவர் பொறுப்பதையும் காணப் பொறுக்காத அன்பு நிறைந்த சிந்தையோடு, இத்தகைய திருமகவைப் பெறப் பெருந்தவம் செய்த தந்தையார் ஆகிய சிவபாத இருதயர், வந்து எடுத்துத் தோளின் மேல் வைத்துக் கொண்டார். அவருடைய தோளின்மேல் எழுந் தருளிச் செல்கின்றூர் திருஞானசம்பந்தர். மற்றக் குழந்தைகளாக இருந்தால் மற்றவர்கள் எல்லாம் நடந்துவருகின்றூர்கள்; நாம் மட்டும் தந்தையினுடைய தோளின்மேல் செல்கின்றேம் என்னும் பெருமித எண்ணத்தோடு செல்லும். தோளின்மீது செல்வதனல் வழியிலே இருக்கின்ற பொருள்களே நன்ருகக் காணலாம் என்று தம் சிந்தனேயைப் பல திசைகளிலே செலுத்தியிருக்கும் மற்றக் குழந்தைகள். ஆனல் இந்தத் திருஞானசம்பந்தக் குழந்தைக்குத் தந்தையின் தோள்மீது செல்கின்றேம் என்றே, அவர் தம்மைச் சுமந்து செல்கின்றூர் என்றே எண்ணுமல், தான் தனது முடிமேல் இறைவன் திருவடிகளேச் சுமந்து செல்கின்றேம் எனக் கருதி யிருந்தாராம்.

தாதவிழ் செந்தாமரையின் அகவிதழ்போல்
சீறடிகள் தரையின் மீது
போதுவதும் பிறர் ஒருவர் பொறுப்பதுவும்
பொரு அன்பு புரிந்த சிந்தை
மாதவம் செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர் கழல் தம்முடிமேல் கொண்டகருத்
துடன் போந்தார் ஞானம் உண்டார்

என்றருளுகிறூர் சேக்கிழார் பெருமான்.

## கண்ணுதல் பெருமான் கருணை வெள்ளம்

திருஞானசம்பந்தர் தம் பதினாறுவது வயதில் சென்னையில், மயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்புகின்றார்.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்டபண்பில் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் !

என்று பூம்பாவைப் பதிகம் அருளிச்செய்து சாம்பராக இருந்த பூம்பாவையை எழுப்புகின்றார். பூம்பாவை அழகே வடிவமாக உயிர்பெற்று எழுந்து நிற்கின்றாள். அந்த அழகை ஞானசம்பந்தர் பார்த்தார் எனச் சொல்ல வருகின்ற சேக்கிழார் பெருமான், மிக்க நயமாகச் சொல்லுகின்றார். பூம்பாவையினுடைய அழகைப் பார்க்கவில்லை திருஞானசம்பந்தர் ; பின் எதைப் பார்க்கின்றார் ? தம் உள்ளம் கவர் கள்வனாகிய சிவபெருமானுடைய கருணை வெள்ளம் பூம்பாவை உருக் கொண்டு நிற்பதனைக் காணுகின்றார். அந்தப் பூம்பாவை இப்போது பன்னிரண்டு வயதுப் பருவம் உடையவளாக இருக்கின்றாள். ஆனால் சம்பந்தருடைய அகக்கண் அவளை எவ்வாறு காண்கின்றது என்பதனைச் சேக்கிழார் பெருமான் ஓர் உவமையோடு சொல்கின்றார்.

நான்முகனாகிய பிரமன், அழகாக ஒரு வடிவத்தைச் சமைக்க வேண்டும் என்று எண்ணி, அழகு என்ற பொருளில் எல்லாம் எள்ளளவு எள்ளளவாக எடுத்துத் திலோத்தமை என்று ஒரு பெண்ணைப் படைத்தான். திலம் என்றால் எள். அத் திலோத்தமையைப் பார்த்த உடனேயே அவள் தான் படைத்த பெண் என்பதையும் மறந்து விட்டு, அவளுடைய அழகை ஆசை கொண்டு நான்கு முகங்களாலும் பருகுகின்றான். அவனுக்கு வயது என்ற கணக்கே கிடையாது ; அவனுடைய மகள் ; அழகின் பெருக்காக நிற்கின்ற அவளை நான்முகத்தாலும் காணுகின்றான். ஆனால் ஞானசம்பந்தருக்கு வயது புண்ணியப் பதினாறுண்டு.சிவநேசர் இவருக்கு என்றே வளர்த்த மகள்; அவளுக்கு வயது பன்னிரண்டு. தனக்குரிமையானவற்றை யெல்லாம் சிவநேசர் திருஞான சம்பந்தருக்கென்றே வைத்திருந்தார். அந்தப் பெண்ணைத் திருஞான சம்பந்தர் பார்த்தார் என்று சொல்லவந்த சேக்கிழார், பிரமன் நான்கு முகத்தாலே பார்த்தார் ; ஆனால் சம்பந்தரோ ஆயிரம் முகத்தால் கண்டார் என்கிறார். ஆயிரம் முகம் என்றால் ஆயிரத்தெட்டு இதழ் களோடு கூடிய அகத்தாமரையிலே கண்டார் என்று கூறுகிறார். பிரமன் புறக்கண்களால் கண்டான். இவர் அகக்கண்களால் காணுகின்றார். எதைக் காண்கின்றார். கண்ணுதற் பெருமானின் கருணை வெள்ளத்தைக் காண்கின்றார். அதன்பின்னர் சிவநேசர் பூம்பாவையைத் திருமணம் செய்து கொள்ளும்படி திருஞான சம்பந்தரை வேண்ட, அவர், "உம்முடைய மகள் அரவு தீண்டி இறந்து

விட்டாள்; கற்றைவார் சடையவர் கருணை காண்வர உற்பவிப்பித் தலால் இவள் எம்முடைய மகள்!" என்று கூறி மறுத்துவிடுகிறார். பெருமானுடைய அருள்வெள்ளத்தை அனுபவித்துணர முடியுமே தவிரக் கண்ணால் காணமுடியாது. ஆனால் இங்கே அக்கருணை வெள்ளம் கண்ணால் காணும்படியாகப் பூம்பாவை உருக்கொண்டு நின்றது என்பதைக் 'கருணை காண்வர' எனத் திருஞான சம்பந்தர் வாக்காக அருளுகின்றார் சேக்கிழார் பெருமான்.

## *ஈசன் எந்தை இணையடி நீழல்*

திருநாவுக்கரசரை நீற்றறையிலே இடவேண்டும் எனச் சமணர்கள் சொன்னார்கள். நீற்றறை துன்புறுத்தும் எனத் திருநாவுக்கரசர் எண்ணவில்லை. காரணம் அவர் நெஞ்சம் எப்பொழுதும் இறைவனுக்கே இடமாக உள்ளது. நீற்றறையிலே இருக்கின்றோம் எனத் திருநாவுக்கரசர் எண்ணியிருப்பாரானால் அந் நீற்றறை அவரைச் சுட்டிருக்கும், யோகத்துக்குச் சுந்தரரை நாம் கூறுவதுண்டு. சுந்தரர் குடும்ப வாழ்க்கையிலே இருக்கிறார். அவருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் சிவபெருமானே அளிக்கிறார். ஆனால் அவருடைய உள்ளத்தில் எப்பொழுதும் சிவபெருமானே இருக்கின்றார். *'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை'* என்பது அவர் வாக்கு. தாமரைக்கொடி தண்ணீரில்தான் இருக்கும். எனவே தாமரையிலையும் தண்ணீரில்தான் இருக்கும். ஆனால் தாமரையிலையில் தண்ணீர் இருக்காது. அதுபோல யோகிகள் உலகத்தில் தான் இருப்பார்கள்; ஆனால் உலகம் அவர்களுக்குள்ளே இருக்காது.

அதுபோலத் திருநாவுக்கரசர் நீற்றறைக்குள்ளே இருந்தார். ஆனால் அவருடைய உள்ளத்தில் நாம் சுண்ணாம்பு நீற்றறையிலே இருக்கின்றோம் என்ற எண்ணம் இல்லை; அப்படி எண்ணியிருந்தால் அது அவரைச் சுட்டிருக்கும். தம்முடைய ஆற்றலினாலே அவர் இருந்திருந்தால்கூடத் துன்பம் இல்லாமல் இருந்திருக்கலாமே தவிர, இன்பமாக இருந்திருக்கமுடியாது.

சுண்ணாம்பு நீற்றறையிலே திருநாவுக்கரசர் இருந்தார். அந்த வெய்ய நீற்றறை அவருக்கு எப்படி இருந்தது? சுண்ணாம்புக் கற்கள் வெடிப்பது காதுக்கு இனிமையான வீணை வாசிப்பதுபோல இருக்கிறது. பொதுவாகச் சுண்ணாம்புக்கல் வெடித்தால் காது கேட்காது. ஆனால் இங்கே அது இனிமையாக வீணை ஒலிபோல இருக்கிறது. கண்களிலே சுண்ணாம்புக்கல் பட்டால் கண் தெரியாது. ஆனால் அங்கே வெந்து கொண்டிருக்கின்ற சுண்ணாம்புக் கற்கள் திருநாவுக்கரசருக்கு, மாலை மதியமாக இருக்கிறது. வேகின்ற சுண்ணாம்புக் காற்றைச் சுவாசித்துவிட்டால் மேற்கொண்டு மூச்சு விடமுடியாது. ஆனால் நாவுக்கரசருக்கு அது வீசுகின்ற தென்றல் காற்றுப் போல இருக்கிறது. சாதாரணமாக வெப்பம் மிகுந்த சுண்ணாம்புக்கல் பட்டால் உடம்பு ரணமாகிவிடும்; ஆனால் இவ

ருக்கோ அது இளவேனில்போலக் குளிர்ச்சியாக இருக்கிறது. அதே சுண்ணும்புக்கல் நாவுக்கரசருடைய நாவிலே படும்போது பொய்கை நீராக இனிக்கிறது. அதுவும் சாதாரணப் பொய்கை யன்று; வண்டுகள் மொய்க்கின்ற சுவைமிகுந்த பொய்கையாக இருக்கின்றது என்று அவர் நினைக்கிருர்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே !

என அவர் அப்பொழுது தாம் அருளிய பதிகத்தில் குறிப்பிடு கின்ருர். காதுக்கு மாசில் வீணையாக, கண்ணுக்கு மாலை மதியமாக, மூக்கிற்கு வீசு தென்றலாக, உடம்பிற்கு வீங்கு இளவேனிலாக, வாய்க்கு மூசுவண்டறை பொய்கை நீராக இருந்தது என்பதனை,

வெய்ய நீற்றறை அதுதான்
வீங்கிள வேனிற் பருவம்
தைவருதண் தென்றல் அணை
தண் கழுநீர்த் தடம் போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து
முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடி நீழல்
அருளாகிக் குளிர்ந்ததே !

எனக் குறிப்பிடுவார் சேக்கிழார் பெருமான்.

## ஐயன் திருநடம் எதிர் குடும்பிடும் ஆர்வம்

திருநாவுக்கரசரின் பக்தி சிதம்பரத்திலே ஆடல் அரசனைக் காணச் செல்கின்ற பொழுதில் எல்லாம் பெருக்கெடுப்பதைச் சேக் கிழார் மிக்க அற்புதமாக எடுத்துக்காட்டுவார். இந்த ஊனும் உடம்பும் ஒன்ருக இருப்பதன் பயன் தில்லையம்பலத்தில் எப்போதும் நிகழ்ந்துகொண்டிருக்கும் திருநடத்தைக் காணும் பொருட்டே எனக் கருதுகின்ருர் நாவுக்கரசர்.

ஆனாத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனாறும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார்.

மிக விரைந்து சென்று தில்லையின் எல்லையிலே விழுந்து வணங்கு கின்ருர். பின்னர், திருவீதி வலம் வந்து தில்லையம்பலத்துட் சென்று அம்பலவாணரைக் காணுகின்ருர். கண்டார்; கைகள் கூப்பி வணங்கினுர் எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடவில்லை. கைகள் தாமாகச் சிரத்தின் மீது குவிந்தன. கண்கள் ஓய்வின்றி நீரை

மழையெனப் பொழிந்தன. உடம்பெல்லாம் உரோமபுளகம் பொலிந்தது. தரையின்மீது உடம்பு எத்துணை தடவை விழுந்து வணங்கியது என்பதற்குக் கணக்குக் கிடையாது; அப்படிக் கணக்குப்பார்த்திருந்தால் அது சாதாரணப் பக்தியாகிவிடும். இத்துணைச்செயல்களுக்கும் காரணம் மின்பொலியும் சடாமகுடத் தோடு நின்றுடும் ஐயன் திருநடத்தைக் கண்ணெதிரே கண்டு கும்பிடுகின்றேம் என்ற ஆர்வம் திருநாவுக்கரசருக்கு அளவின்றிப் பெருகுகின்ற காரணத்தால்,

கையும் தலைமிசை புனை அஞ்சலியன ;
கண்ணும் பொழி மழை ஒழியாதே
பெய்யுந் தகையன ; கரணங்களும் உடன்
உருகும் பரிவின ; பேறெய்தும்,
மெய்யும் தரைமிசை விழும் முன்பு எழுதரும்
மின்தாள் சடையொடு நின்றுடும்,
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

என அக்காட்சியை நமக்குக் காட்டுகின்றார் சேக்கிழார்.

திருநாவுக்கரசர், களனிற் பொலிவிடம் உடையார் நடம் நவில் கனகப் பொதுவில் ஆடும் கழல்புரி அமுதத் திருநடம் ஆராவகை தொழுது காண்கின்றார் :

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மா நிலத்தே !

எனப் பாடிப் பரவுகின்றார். அந்தக் காட்சியிலே திளைத்து நிற்கின்றார். அந்தத் திருமேனியைக் கண்டுகண்டு அனுபவிக்கின்றார். அப்பொழுது அம்பலவாணருடைய முகக்குறிப்பு அவருக்கு, "என்று வந்தாய் ?" என வினவுவதுபோலத் தோன்றுகிறது. அவர் அனுபவித்த அந்தத் திருநடத்தினை நமக்கும் காட்டுகின்றார். "நீங்களும் ஒன்றியிருந்து நினைமின்கள் ! விரைவாக மன ஒருமைப்பாடு இல்லாமல் பார்த்தால் தெரியாது. ஒருமித்த கருத்தோடு ஊன்றிப் பார்த்தால்தான் தெரியும்."

ஒன்றியிருந்து நினைமின்கள் ! உந்தமக்கு ஊனமில்லை !
கன்றிய காலனைக் காலாற் கடிந்தனன், அடியவர்க்கா !
சென்று தொழுமின்கள் ! தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
" என்று வந்தாய் ?" என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே !

எனப் பாடியருளுகின்றார் நாவுக்கரசர். நின்று, கண்டு, அனுபவித்துக் கொண்டிருக்கிறார். பதிக அமைப்பும் சேக்கிழார் பெருமான் அதனை எடுத்தாண்டிருப்பதும் நமக்கு இன்னொரு குறிப்பைக் கூடக் காட்டுகின்றது. "சமண சமயத்தில் இருந்தாயே! இப்பொழுது பேரின்பத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறாயே? இந்த நிலைக்கு என்று வந்தாய்?" என்று இகழ்ச்சி தோன்றக் கேட்பது போல் இருக்கிறது. திருநாவுக்கரசர் அதற்கு மறுமொழி கூறுவார் போல,

> பத்தனாய்ப் பாட மாட்டேன் ;
> பரமனே ! பரம யோகி !
> எத்தினாற் பத்தி செய்கேன் ;
> என்னை நீ இகழ வேண்டாம் ;
> முத்தனே ! முதல்வா ! தில்லை
> அம்பலத் தாடு கின்ற
> அத்தா ! உன் ஆடல் காண்பான்
> அடியனேன் வந்த வாறே !

"உன் ஆடல் காணவந்தேனே தவிர, எனக்கு ஒன்றும் நீ நினைக்கின்ற அளவுக்குப் பக்தியில்லை! இவ்வளவு பெரிய பக்தனாக என்று மாறினாய் என என்னை நீ இகழ வேண்டாம்!" என அடுத்த பதிகத்தினை அருளினார் என்பது போலச் சேக்கிழார் காட்டுகின்றார். அதன் பின்னர், திருநாவுக்கரசர் அம்பலவாணரை தினைத்துணைப் போதும் மறவாமல் இருந்து அவரைப் "**பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே !**" எனவும் அருளிச் செய்கின்றார். இவையெல்லாம் நாவுக்கரசரின் இறை பக்தியைக் காட்டும்.

## *அவர் வணங்கா முன் வணங்கும் அரசு*

திருநாவுக்கரசருடைய அடியார் பக்தி எவ்வாறு இருக்கின்றது என்பதனைக் காண்போம். அப்பூதியடிகள் திருநாவுக்கரசருடைய பாதகமலங்களிலே விழுந்து வணங்குகின்றார். அப்பூதியடிகள் நம்மைத்தானே குருவாகக் கொண்டிருக்கிறார் ! அவர் நம்மை வணங்க வேண்டியவர்தானே எனத் திருநாவுக்கரசர் நிற்கவில்லை. "***அவர் வணங்கா முன் வணங்கும் அரசு***" என, அப்பூதியடிகள் வணங்குதற்கு முன்னே வணங்கினாரா ? அல்லது வணங்கிய பின் வணங்கினாரா ? என்பது தோன்றாதபடி சேக்கிழார் பாடியருளுகின்றார்.

## *அந்தம் இலாத் திருவேடம்*

தில்லையிலே அம்பலவாணருடைய திருநடத்தைக் கண்டு அனுபவித்த திருநாவுக்கரசர். "தினைத்துணைப் போதும் மறந்தால் உய்ய முடியாது" எனவும், இப்பெருமான் பெருமையினைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே !" எனவும், "மனித்தப் பிறவியும் வேண்டுவதாயிற்றே" எனவும் அருளிய அவர், தில்லையில்தானே தங்கியிருக்க

வேண்டும்? அப்படித்தான் எண்ணினுர்போலத் தோன்றுகிறது ஆயினும் அதைவிட ஓர் ஆர்வம் ஈர்த்தது.

திருஞான சம்பந்தப்பெருமான் திருத்தில்லேக்கு எழுந்தருளிப் பாடி, வழிபட்டுச் சீகாழிக்கு மீளுகின்ருர். தில்லேயிலே எழுந்தருளி யிருக்கின்ற திருநாவுக்கரசர் பெருமானுக்கு இச்செய்தி கிடைத்தது. மூவாண்டிலேயே ஞானப் பாலுண்டு அருளார் அமுதப் பாடல்களே அருளிச்செய்யும் அந்த ஞானக்குழந்தையைக் கண்டு வணங்க வேண்டும் என்ற பேரார்வம் உந்த, தில்லேயை விட்டுப் புறப்படு கின்ருர், திருநாவுக்கரசர். இறை பக்தியைவிட அடியாரைக் காண வேண்டும் என்ற ஆர்வம் திருநாவுக்கரசரை உந்துகின்றது. வழியில் உள்ள தலங்களேயெல்லாம் வணங்கி, தன்னுடைய அடியார்கள் புடைசூழச், சீகாழியினுடைய எல்லேக்குச் சென்றுகொண்டிருக்கிருர். திருஞான சம்பந்தர் இந்தச் செய்தியைக் கேள்வியுற்று, வயது முதிர்ந்த ஞானப்பழமாக இருக்கின்ற நாவுக்கரசர் நம்மைக் காண வருகின்ருர். நாம் அவரை எதிர்கொண்டு வரவேற்க வேண்டும் என்று கருதி, தம் அடியார்களும் அந்தணர்களும் புடை சூழ, வரு கின்ருர்.

முதலிலே திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரைக் காணுகின்ருர் திருவேடம் என்ருல் எப்படியிருக்கவேண்டும் என்ற எண்ணம் திருஞான சம்பந்தருடைய திருவுள்ளத்தில் எப்போதும் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அத்தகைய மெய்த் திருவேடத்தை எப்போது காணப்போகின்ருேம் என்ற ஆர்வம் இருந்தது.

நீண்ட தொலேவிலே திருநாவுக்கரசரைக் காணும்போது தம் முடைய உள்ளத்திலே இருக்கிற காதல் வடிவம் இப்போது நேர் தோன்றிக் காட்சி தருவதாகக் கருதுகின்ருர்.

சிந்தை இடையரு அன்பும்,
திருமேனி தன்னில் அசைவும்,
கந்தம் மிகையாம் கருத்தும்,
கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவில் பொலிதிரு நீறும்
அந்தம் இலாத்திரு வேடத்து
அரசும் எதிர் வந்தணைய

சிந்தையிலே இடையீடு இல்லாத அன்பு, பெருமானே நினேவதனுலே உடலில் ஓர் அசைவு, கட்டியிருப்பது நல்ல ஆடையாக இருந்தாலும் கந்தை மிகையாம் கருத்து, கையிலே உழவாரப்படை, பெருமானே நினேந்து நினேந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து மார்பாரப் பொழி கண்ணீர் மழை வாரும் திரு மேனி, திருமேனியிற் பொலிகின்ற திருவெண்ணீறும் கொண்டு முடிவில்லாத திருவேடத்துடன் திருநாவுக்கரசர் எதிரே வந்தார்.

அவரைக் கண்ட கவுணியக்கன்று, "**கருத்தில் பரவு மெய்க்காதல் தொண்டர் திருவேடம்**" நேரே தோன்றியது. இதுவரையில் இத் தகைய திருவேடம் கருத்தில்தான் இருந்தது. இப்போது உருக் கொண்டு நேரே தோன்றியது. ஆகையினால் இரு கரங்களையும் சிரமேற் குவித்து வணங்கினர் திருஞானசம்பந்தர். ஏனைய ஆசிரியர் களாய் இருந்தால் இக்காட்சியைத் திருநாவுக்கரசருடைய புராணத் திலே கூறுவார்கள். சேக்கிழார் அப்படியின்றி ஞானசம்பந்த ருடைய புராணத்தில், ஞானசம்பந்தர் நாவுக்கரசரை வணங்கியதைக் கூறி, நாவுக்கரசருடைய புராணத்தில் நாவுக்கரசர் ஞானசம்பந்தரை வணங்கியதைச் சொல்லுகின்றார். அதுதானே அடியார்களுக்குப் பெருமை.

திருஞானசம்பந்தர் தம்மை வணங்கியதைக் கண்ட திருநாவுக் கரசருக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. "நாமல்லவா முதலில் சென்று அந்த ஞானக்குழந்தையை வணங்க வேண்டும் என எண்ணி யிருந்தோம். நம்மையல்லவா ஞானசம்பந்தர் வணங்கி விட்டார்" என்று கருதித் திருக்கூட்டத்தையெல்லாம் விலக்கிக் கொண்டு தமது இருகரங்களையும் தலைமேற்குவித்து அஞ்சலி செய்து விரைகின்றார். விரைந்து சென்று குற்றமற்ற பேரன்புடன் ஞானசம்பந்தருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். திருஞானசம்பந்தர் காதல் திருவேடம் நேரே தோன்றிற்று எனத் தொழுதார்; திருநாவுக் கரசரோ பழுதில் பெருங்காதலுடன் அடிபணிந்தார். திருஞானசம் பந்தர் அப்படிப் பணிந்த நாவுக்கரசருடைய கரங்களைத் தம் எழுதரிய மலர்க்கரங்களால் எடுத்து வணங்கினர். விடையின் மேல் வருவார் தம்மை அழுது அழைத்துக் கொண்டவராகிய சம்பந்தர், "**அப்பரே!**" என்று எடுத்தார். மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு வேந்தர், "**அடியேன்!**" என்று கூறி எழுந்தார்.

மெய்ப்பொருள் ஞானம் பெற்ற ஞானசம்பந்தர், மெய்ம்மைத் தவத்து மேலவராம் நாவுக்கரசரை முதலில் கையினாலே வணங்கினர். அவர் முதலில் கையினாலே வணங்கிவிட்டாரே எனக் கருதிய மண் பரவும் பெருங்கீர்த்தி வாகீசர், மைம்மலர் கண்டத்து அண்டர்பிரான் மகனாரை மெய்யினாலே வணங்கினர். அது கண்ட ஆழித் தோணி புரத்தரசர், "அப்பரே!" என அழைத்து வாக்கினாலே வணங்கினர். திருநாவுக்கரசர் என்று சிவபெருமான் அளித்த பெயரைச் சொல்ல வில்லை. தம்மைப் பெற்ற தந்தையாகிய சிவபாத இருதயர் இருக் கின்றார். அதைவிட ஓர் அப்பா, அழுதால் உடனே வருகிற தோணி யப்பர். விடையின்மேல் வருவார்தம்மை அழுது அழைத்துக் கொண்டவர் "அப்பரே!" என்றார் என்பார் சேக்கிழார். நீங்கள் அப்பா வாயிற்றே? மகனுடைய காலியே விழுந்து வணங்கலாமா? "பெரியீர்" என்று சொல்லலாம்; அடிகள் எனவும் கூறலாம்; அது முறையன்று! அப்படியே "நீங்கள் எம்மை வணங்கினாலும் இது வணக்கம் அன்று; குழந்தையின் கால்களைத் தந்தை எடுத்துக் கண் களிலே ஒற்றித் தலையிலே வைத்துக்கொண்டால் அது வணக்கம் அன்று; தந்தைக்கு இருக்கின்ற மகிழ்ச்சி" என்ற கருத்தில் திருஞான

மாமுனிவர் "அப்பரே" என வாக்கால் வணங்குகின்றார். அத்தோடு வாகீசப் பெருந்தகையார் அதை விட்டிருந்தால்" நாவுக்கரசர் எனப் பெயர் கொடுத்திருந்த சிவபெருமானுக்குப் பெருமை இல்லை. "அப்பரே" எனச் சொல்லால் வணங்கிய ஞானசம்பந்தரை, அதற்கும் ஒருபடிமேலே சென்று, "அடியேன்" என்று கூறி எழுந் திருந்தார் பேதமில்லா ஓர் உணர்விற் பெரியவர். நாம் உமக்கு அப்பர் அல்லர்; அடிமை என்றார். அதற்குப் பின்னர் ஒரு போது மறந்தும் கூட ஞானசம்பந்தர் "அப்பர்" என்ற சொல்லைத்தவிர வேறு எவ்விதமாகவும் அழைக்கவில்லை. நாவுக்கரசரும் தாம் அத் தகுதியினின்றும் ஒரு பொழுதும் வழுவவில்லை. இருவரும் திருக் கோயிலுக்கு எழுந்தருளுகின்றார்கள். சேக்கிழார் பெருமான், அதனை அருள் பெருகு தனிக்கடலும் அன்பு செறி கடலும் என்று குறிக் கின்றார். அருட்கடல் ஞானசம்பந்தர். அன்புக்கடல் நாவுக்கரசர். '*அருள் என்னும் அன்பீன் குழவி*' என்ற மரபைச் சேக்கிழார் ஏற்றுக் கொள்கின்றார். இரண்டுபேரும் திருக்கோயிலிலே சென்று வணங்கு கின்றார்கள். "*உங்கள் தம்பிரானாரை நீர் பாடும்*" என ஞானசம் பந்தர் வேண்ட நாவுக்கரசர் பதிகம் பாடிப் பரவுகின்றார். இடையில் மீண்டும் ஒருமுறை சந்தித்துக் கொள்கிறார்கள். அப்போது யார் யாரை முன் வணங்கினர் என்பதனைக் காட்டவில்லை சேக்கிழார்.

## அன்புருகு மெய்த்தன்மையுணர்வுடைய மேலோர்

நீண்ட நாட்களுக்குப் பின்பு பாண்டி நாட்டிற்குச் சென்று திரும்பி வருகின்றார் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர் கயிலையாத் திரையாகச் சென்று, யாதும் சுவடுபடாமல் ஐயாற்றை அடைந்து, அங்கே கயிலைக் காட்சியைக்கண்டு, திருப்பூந்துருத்தியிலே திருமடம் அமைத்து, திரு அங்கமாலை முதலான அற்புதமான திருப்பதிகங்கள் பாடி எழுந்தருளியிருக்கிறார். திருஞானசம்பந்தர், அப்பர் திருப்பூந் துருத்தியிலே இருக்கின்றார் எனக் கேள்வியுற்று, அடியார்கள் புடை சூழ முத்துச்சிவிகையில் எழுந்தருளுகின்றார். திருநாவுக்கரசருக்கு எப்படியோ இச்செய்தி எட்டிவிடுகின்றது. அவரை எதிர் கொண் டழைக்க உடன் எந்த அடியாரையும் அழைத்துக் கொள்ளாமல் தாமாகப் புறப்பட்டுச் செல்கின்றார். சென்றவர் திருஞானசம்பந்த ருக்குத் தெரியாமலேயே நெடுந்தொலைவிலேயே விழுந்து வணங்கி விட்டு, அடியார் திருக்கூட்டத்திற் கலந்து, ஞானசம்பந்தருடைய முத்துச்சிவிகை தாங்குகின்றவர்களில் தாமும் ஒருவராகத் தாங்கிச் செல்கின்றார்.

இரண்டாவது சந்திப்பின்போது இருவரும் பல திருத்தலங் களுக்குச் செல்கின்றார்கள். திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகை யிலே செல்ல வேண்டும் எனத் திருநாவுக்கரசர் விரும்புகின்றார்; சம்பந்தர் ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் அப்பருடைய ஆணைக்கு அஞ்சி முதலிலே அப்பர் சென்று ஒரு தலத்தை அடைந்த பின்பு தாம் புறப்பட்டுச் செல்வார். அப்படிச் செல்லும் போதும் அப்பரடிகள் இருக்கின்ற ஊரின் எல்லையை அடைந்த

வுடன் இறங்கி நடந்து செல்வார். ஒருநாள் கூட ஞான சம்பந்தர் முத்துச்சிவிகையில் வரும் காட்சியை நாவுக்கரசர் கண்டதில்லை.

ஆயின், இன்று அந்த அரிய காட்சியைக் கண்டதோடு மட்டு மல்லாமல் தாமே தம் தோள்களில் தாங்கிவரவும் செய்கின்றார். பூந் துருத்தியின் எல்லை வந்தாயிற்றே, இறங்க வேண்டுமே, திருமடம் எங் கிக்கிறதோ என்று கருதிய திருஞானசம்பந்தப் பெருமான், ''***அப்பர் எங்குற்றார்?***'' என வினவுகின்றார். 'அப்பர்' என்ற ''வார்த்தையை மறந்துவிடவில்லை. அதைக் கேட்டுச் சிவிகையைத் தாங்கிவந்த திருநாவுக்கரசருக்கு உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. அன்று ''அப்பர்'' என்று சொன்னவர், இன்றும் அதனை மறவாமல் ''அப்பர்'' என்றே மொழிகிறார். இதைக் கேட்டு உருகா நின்றவர், ''வாக்கினால் அடியேன் என்றேன், இன்று ***உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்து எய்தப் பெற்று இங்குற்றேன்***'', என்றார். அன்று அடியேன் என்று சொல்ல முடிந்ததே தவிர, உண் மையில் அடிகளைத் தாங்கிவர முடியவில்லை. இன்றுதான் எனக்கு அந்தப் பேறு கிட்டியது என்பார் போலக் கூறுகின்றார்.

உடனே சிவிகையில் இருந்து இறங்கினார் என்று சேக்கிழார் சொல்லவில்லை; இழிந்தார் எனக் கூறுகின்றார். அதுவும் அப்பர் கூறிய மொழிகளைக் கேளாமுன்னர், ''பெருகு விரைவுடன் இழிந்தே'' என்று கூறுகிறார். பின் திருநாவுக்கரசருடைய திருவடிகளில் விழுந்து வணங்குகிறார் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரை வணங்குகிறார் திருநாவுக்கரசர். இதைக் கண்டு சூழ்ந்திருக்கும் அடியவர்கள் எல்லாரும் அவர்கள் இருவரையும் வணங்குகின்றார்கள். இதில் இருந்து மலையாள் திருமுலையில் கறந்த ஞானம் குழைத்து அமுது செய்த புகலிக் கவுணியராகிய சம்பந்தரும், அத்தனார் திரு வடிக்கீழ் நினைவகலா அன்புருகு மெய்த்தன்மையுணர்வுடைய விழுத்தவத்து மேலோராகிய நாவுக்கரசரும் அடியார்கள் மேல் வைத்திருந்த பக்தியின் சுவை மிக்க தெளிவாகின்றது.

## *செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளது குருபக்தி*

அடுத்து அப்பூதியடிகளுடைய குருபக்தியைக் காணுகிறோம். குருபக்தியிலே சிறந்தவர்கள் பலர் இருந்தாலும், எல்லாருக்கும் தெரிந்தவர் அப்பூதியடிகள். அவருடைய மனைத்தலைவாயிலிலே எழுந்தருளியிருக்கிறார் நாவுக்கரசர். சிவனடியார் ஒருவர் வந்திருக் கிறார் எனக் கேட்டு வந்த அப்பூதியடிகள்,

> கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
> அடிபணியா முன்பணியும் அரசின்எதிர் அந்தணனார்
> ''முடிவில் தவம் செய்தேன் கொல்! முன்பொழியுங் [கருணைபுரி
> வடிவுடையீர்! என்மனையில் வந்தருளிற்றென்?'' என்றார்.

சேக்கிழார் பெருமான் எப்பொழுதும் மிக்கநயத்துடன் சொல்லுவார். வீட்டுக்கு வந்தவரை ''இருங்கள்! உணவுண்டு செல்லலாம்!'' என்று

சொல்லவில்லை. அதைவிட எதற்காக வந்தீர்கள் என்று கேட்கிறார். ''இப்படிக் கேட்கலாமா?'' என நமக்குத் தோன்றும். வந்தவருடைய முகக்குறியிலிருந்து அவர் ஏதோ கேட்க வந்திருக்கிறார் என்று தெரிகிறது. அவரும் உணவுண்டு ஓய்வெடுத்துச் செல்லலாம் என வந்தவர் அல்லர். ''நான் முன் செய்த தவத்தால் இங்கு எழுந்தருளியிருக்கிறீர். இங்கு என் இல்லத்துக்கு எழுந்தருளக் காரணம் என்ன?'' எனக் கேட்கிறார். அடியார்களைத் தம் வீட்டிற்கு வந்து கேட்கும் அளவுக்கு அப்பூதியடிகள் வைக்கவில்லை. வந்தவர் தாகத்தோடு நீர் வேட்கையோடு வந்திருந்தால் அதைத் தணிக்க வழிக்கரையிலேயே தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்துள்ளார். உறுவேனிற்பரிவகற்ற வந்திருப்பாரானால் குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர் தூங்கும் பரப்பினதாய்ச்சோலை அமைத்திருக்கிறார். அடியவர் பசியோடு வந்திருப்பாரானால் அதனை ஆற்றப் படிநிகழ் மடங்களும் அமைத்திருக்கிறார். அதையெல்லாம் தாண்டி இவ்வளவு தூரம் வந்திருக்கிறார் என்றால் ஏதோ வேறு காரணம் இருக்க வேண்டும் என்ற கருத்துத் தோன்ற ''*என் மனையில் வந்தருளிற்றென்?*'' என்ற சொற்றொடரை அமைக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

அப்பூதியடிகள் அவ்வாறு கேட்க அதற்குத் திருநாவுக்கரசர் பெருமான், ''சிவபெருமான் அடியார்களுக்காக நீர் தண்ணீர்ப் பந்தல் வைத்திருக்கிறீர். (அடியார்களுக்கு நீர் வேட்கை ஏற்பட்டால் தண்ணீர்ப்பந்தலைத் தேடிச்செல்ல மாட்டார்கள். அந்தப் பெருமானே கங்கையை அணிந்திருக்கிறார். ஆகையினால் அவனை நினைத்துகொண்டே போய் விடுவார்கள். அவர்களுக்கு வலிந்து தண்ணீர் கொடுக்க அமைத்த தண்ணீர்ப் பந்தல்.) சிவபெருமான் ஆற்றை அணிந்துகொண்டிருக்கும்போது அவனுடைய அடியார்கள் தாகத்தோடு செல்லக் கூடாதே என்ற கருத்தில் நீர் வைத்த தண்ணீர்ப்பந்தல். ஏதோ விழாக்காலத்துக்காக வைத்திருந்தால் யாரோ ஒருவருடைய பெயரைவைத்துவிட்டு, விழாமுடிந்ததும் எடுத்துவிடலாம். ஆனால் இது என்றும் நின்று நிலையாக இருக்கும்படி அமைத்த ஈறில் பெரும் தண்ணீர்ப்பந்தல். அப்படிப்பட்ட இதனில் நும் பெயரை எழுதாமல் வேறு ஒருபெயரை எழுதியிருக்கின்றீர்! இதற்குக் காரணம் என்ன?'' எனக் கேட்கிறார்.

> ''ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
> ஈறில் பெரும் தண்ணீர்ப் பந்தரில்நும்பேர் எழுதாதே
> வேறொருபேர் முன் எழுத வேண்டிய காரணம் என்கொல்
> கூறும்'' என, எதிர்மொழிந்தார் கோதில் மொழிக்
> [கொற்றவனார்.

அப்பூதியடிகளுக்குக் கோபமே வராது. களவு, பொய், காமம், கோபம் முதலியவற்றினைக் குற்றம் என்று எண்ணிக் காய்ந்துவிட்டவர். அவருக்கே கோபம் வருவது போலத் தோன்றுகிறது. வந்தவர் சிவனடியாராக இருக்கிறார். எனவே கோபம் கொண்டு தகுதியில்லாமல் பேசக்கூடாது. ''தாங்கள் அருளிச்செய்தது நன்றாக

இல்லை. மகேந்திர வர்ம பல்லவ மன்னனுடைய துணைகொண்டு நாணில் சமண் பாதகர்கள் செய்த சூழ்ச்சியைத் தமது திருத் தொண்டின் உறைப்பாலே வென்றவர்தம் திருப்பெயரைத் தாங்கள் வேறு ஒரு பேர் என்று கூறலாமா?'' என்கிறார்.

நின்ற மறையோர் கேளா
நிலையழிந்த சிந்தையராய்
''நன்றருளிச் செய்திலீர்
நாண் இல் அமண் பதகருடன்
ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி
திருத் தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பெயரோ
வேறொருபேர்'' என வெகுள்வார்.

இறைவனுக்குத் திருத்தொண்டு செய்தால் மறுமையிலே இன்பம் கிடைக்கும் என எண்ணியிருந்தேன். ஆனால் அரனுக்கும் அவனடி யார்களுக்கும் திருத்தொண்டு செய்தால் இம்மையிலும் அது புண்ணியம் நல்கும் என்பதனை என் போன்றவர்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும்படி செம்மைபுரி திருநாவுக்கரசர் திருப்பெயர் எழுத (அதனை நீர் வேறொரு பேர் என்று கூறி) மிகக் கொடிய அம் மொழியினை என் காதிலே கேட்கும்படியாகக் கூறினீர்.

நம்மையுடை யவர்கழற்கீழ்
நயந்த திருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பது என
என்போல் வாரும் தெளியச்
செம்மைபுரி திருநாவுக்
கரசர் திருப் பெயர் எழுத
வெம்மை மொழி யான் கேட்க
விளம்பினீர் என விளம்பி.

''நாவுக்கரசருடைய காலத்தில் அவரைப் பற்றித் தெரியாத வர்கள் இருக்க முடியுமா? அதுவும் அவரைக் கல்லிலே கட்டிக் கடலிலே போட்டபோது நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன் நல்ல நாமத்தை நவிற்றி அக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை யேறிய அவர் பெருமையை இந்நிலவுலகில் அறியாதவர்கள் ஒரு வரும் இல்லை! அப்படியிருக்க மங்கலமாகிய சிவனடியார் திருவேடத் துடன் நின்று இப்படிப் பேசுகின்றீர்களே! நீர் உறையும் ஊர் எது? நீவிர் யாவிர்? கூறும்'' எனக் கேட்கின்றார் அப்பூதியடிகள்.

''பொங்கு கடற் கன்மிதப்பில்
போந்து ஏறும் அவர் பெருமை
அங்கணர்தம் புவனத்தில்
அறியாதார் யாருளரே!

மங்கலமாம் திருவேடத்
துடன் நின்று இவ்வகை மொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம் யார்?
இயம்பும்'' என இயம்பினர்.

அதற்கு நாவுக்கரசர் மறுமொழி கூறுகிறார். அவர், ''இந்நேரம் நீர் பெருமையோடு பேசினீரே அந்த நாவுக்கரசு நான்தான்'' என்று கூறுவார். அப்படிச் சொன்னால் அவர் நாவின் மன்னராக, நாயன் மாராக இருக்க முடியுமா? அதற்குத் திருநாவுக்கரசர், ''சிவபெருமான் கருணைக்கடல். எனக்குச் சிவநெறியிலே செல்லுகின்ற உணர்வு இல்லை. அந்தக் கருணைக் கடலாகிய சிவபெருமான் சமண சமயம் குறுகி நின்ற என்னை அதனில் இருந்தும் கரையேற மிகக் கொடிய சூலைநோய் கொடுத்து அருள, சைவ சமயத்திற்கு மீண்டு, உய்ந்த ஞான உணர்வில்லா சிறுமையேன் நான்தான்'' என்றார்.

திருமறையோர் அதுமொழியத்
திருநாவுக் கரசர் அவர்
பெருமையறிந் துரை செய்வார்
''பிற துறையினின்றேற
அருளுபெரும் சூலையினால்
ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும் உணர்வில்லாத
சிறுமையேன் யான்'' என்றார்.

என்று திருநாவுக்கரசர் கூற அப்பூதியடிகள் (திருநாவுக்கரசர் எப்படி அம்பலவாணனைக் கண்டதும் தன் கரங்களை உச்சி மேற் குவித் தாரோ அது போன்று)

அரசறிய உரை செய்ய
அப்பூதி அடிகளார்தம்
கரகமலம் மிசை குவியத்
கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம்
உரோமபுள கம்பொலியத்
தரையின் மிசை வீழ்ந்து அவர்தம்
சரணகமலம் பூண்டார்

என்று அப்பூதியடிகள் குருபக்தியிலே திளைத்து நின்ற காட்சியினைப் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியருளினர் சேக்கிழார் பெருமான். அப்பூதியடிகளை அப்பரடிகள் எதிர் வணங்கி வாகீசர் எடுத்தருள அற்றவர்கள் அருநிதியம் பெற்றார் போல் அப்பூதியடி களின் உள்ளம் முழுதுமாக மகிழ்ச்சி கொள்ள முன் நின்று கூத்தாடி, வீட்டிற்குள் சென்று திருநாவுக்கரசர் தங்கள் மனைக்கு எழுந்தருளிய செய்தினைக் கூறி எல்லாரையும் அழைத்துக் கொண்டுவந்து அவர் அடிபணிந்து அவர்தாள் முன் விளக்கும் புனைமலர் நீர் தங்கள்மேல் தெளித்து உள்ளம் பூரித்தார்.

பின்னர் திருநாவுக்கரசருக்கு அமுது செய்விக்க தூய நற்கறிகளான அறுவகைச் சுவையால் ஆக்கி, ஆய இன்னமுதும் ஆக்கி, அவர் அமுதுசெய்ய. *"வாழைமேய பொற் குருத்துக் கொண்டுவா"* என மூத்த திருநாவுக்கரசராகிய தன் மகனை அனுப்பினர்.

அவனும், "நம் தாய் தந்தையர்கள் மிக நல்லவர்கள். திருநாவுக்கரசர் அமுதுசெய்ய நம்மையல்லவா வாழைக்குருத்துக் கொண்டு வரும்படி பணித்திருக்கிறார்கள். நான் பெற்ற பேறுதான் என்னே" என மகிழ்ந்து, தோட்டத்தினுட்புகுந்து செழிப்புடைய ஒரு குருத்தை அரியும் பொழுது அவன் வருந்திச்சோர்வடையும்படி ஒருபாம்பு அவன் அங்கையில் தீண்டிக் கையினிற் சுற்றிக் கொண்டது. அவன் அதனை உதறி வீழ்த்திவிட்டுப் பதைப்புடனே, "இக் கொடிய நஞ்சின் வேகத்தால் நான் வீழாமுன்னர், அரிந்த இக் குருத்தைச் சென்று கொடுப்பேன். அருந்தவர் அமுது செய்யக் காலம் தாழ்க்கும்படி, பாம்பு கடித்த செய்தியை யாருக்கும் கூறமாட்டேன்" என்று திருந்திய மனத்தினோடு செழுமனையிற் சென்று புக்கான். விடம் முறையே ஏறி, ஏழாம் வேகம் தலைக்கு ஏறிற்று. எயிறும் கண்ணும் மேனியும் கருகின; உரை குழறிற்று. ஆவி விடும் நிலையிலும் அதனை விடாது கொண்டு சென்று குருத்தைத் தாயார்பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். பெற்றோர்கள் உளம் பதைத்து உற்று நோக்கினர். குருதிசோரும் வடுவும் மேனியின் குறிகளும் கண்டு, நஞ்சினால் வீழ்ந்தான் என்ற முடிவுக்கு வந்தனர். அதனால் மனம் துளங்காதவர்களாகித் தொண்டரை அமுது செய்விப்பதற்கு, பெறற்கரிய அப் புதல்வனைப் பாயினுள் பெய்து மூடி, புறமனை முன்றிலில் ஓர் இடத்தினில் மறைத்து வைத்தனர்.

பின்னர் திருநாவுக்கரசரை அமுது செய்விக்க எல்லாம் செய்தனர். ***"படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து எழுந்து அமுது செய்து எம் குடி முழுதும் உய்யக் கொள்வீர்"*** என்றதும், திருநாவுக்கரசர் எழுந்து அங்க சுத்தி செய்து ஆசனத்தில் இருந்து, இலைக்கு நீர் தெளித்துக் கொள்ளும் முன்னர், தாமும் நீறணிந்து, அப்பூதியடிகளுக்கும் அவர்தம் துணைவியாருக்கும் திருநீறு கொடுத்து, புதல்வர்களுக்குக் கொடுக்கும் நேரத்தில் மூத்த திருநாவுக்கரசினைக் காணாது அவனைக் காட்டும்படி கேட்டார். அதைக்கேட்ட அப்பூதியடிகள் நிகழ்ந்தது ஒன்றையும் கூறாது ***"இப்போது இங்கு அவன் உதவான்!"*** என்றார்.

ஆதிநான் மறைநூல் வாய்மை
    அப்பூதியாரை நோக்கிக்
"காதலர் இவர்க்கு மூத்த
    சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த" என்றலும்,
    விளைந்த தன்மை
யாதுமொன் றுரையார், "இப்போது
    இங்கவன் உதவான்" என்றார்.

மூத்த திருநாவுக்கரசினை நச்சரவம் தீண்டிய செயலை முன்பே திருநாவுக்கரசர் உணர்ந்திருந்தார் என்பது தோன்ற மூத்த சேயையும் **"கூப்பிடுக"** என்று கூருமல் **"காட்டுக"** என்ற சொல்லை அமைக்கிருர் சேக்கிழார். அதுமட்டுமா, திரு வெண்ணீற்றைக் கொடுத்தால் கூட அவன் அணிந்து கொள்ளும் நிலையில் இல்லை என்பதனை **"மேதகு பூதி சாத்த!"** என்று கூறுகிருர். பெருமை பொருந்திய திருவெண்ணீற்றை அணிந்துவிட என்பது தோன்ற *"சாத்த"* என்கிருர். ஆதிநான் மறைநூலுணர்ந்த அப்பூதியடிகள் பொய் பேச மாட்டார். எனவே அவன் இறந்துபட்டான் என்று கூருமல் "இங்கு உதவும் நிலையில் அவன் இல்லை" என உண்மையே கூறுகின்ருர்.

இதனைக் கேட்ட திருநாவுக்கரசர், "இம் மறுமொழி நமக்குச் சம்மதமில்லை; அவனுக்கு என்ன நேர்ந்தது? என்ன நிகழ்ந்திருப்பினும் அதற்கு உபாயம் ***'ஒன்று'*** உண்டு; உண்மையைக் கூறும்" என்கிருர்.

அவ்வுரை கேட்ட போதே
அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள்ளத்தோர்
தடுமாற்றம் சேர நோக்கி
"இவ்வுரை பொருது என் உள்ளம்;
என்செய்தான்; இதற்கு 'ஒன்று' உண்டால்
மெய்விரித்து உரையும்" என்ன
விளம்புவார்; விதிர்ப்புற் றஞ்சி.

பின்னர், ***"ஒன்று கொலாம்"*** என்ற திருப்பதிகம் பாடி, விடம் தீர்க்க முடியும் என்ற கருத்தில் ***"இதற்கு 'ஒன்று' உண்டால்!"*** என்ற சொற்ருெடரை அமைக்கிருர் சேக்கிழார்.

பின்னர் நிகழ்ந்தது கேட்டு நாவுக்கரசர் *"ஒன்று கொலாம்"* என்ற பாவிசைப் பதிகம் பாடி பணிவிடம் பாற்றுவிக்கிருர். பின்னர்,

மைந்தரும் மறையோர்தாமும்
மருங்கிருந்து அமுதுசெய்ய
சிந்தைமிக் கில்லமாதர்
திருவமுது எடுத்து நல்க
கொந்தவிழ் கொன்றை வேணிக்
கூத்தனர் அடியாரோடும்
அந்தமிழ் ஆளியார் அங்கு
அமுதுசெய்த ருளினுரே!

பெறற்கரிய புதல்வன் வாளரவு தீண்டி இறக்கவும் அதனைக் குறியாது தம் குருநாதரை அமுதுசெய்விக்கத் துணிந்தது அப்பூதி அடிகளுடைய மிக்கெழுந்த குருபக்தியைக் காட்டுகின்ற தன்ரே!

அப்பூதியடிகள் முன்பாகவே விடந்தீண்டியிறந்த புதல்வனைத் திருநாவுக்கரசரிடம் காட்டி வேண்டியிருந்தாராயினும் அவர் அவனை உயிர்ப்பித்திருக்கக்கூடும். ஆனால் அவர் அப்படிச் செய்வது அவருக்குப் பெருமையல்ல. புதல்வன் இறந்ததை மறந்ததும் மறைத்ததும், அன்பு கொண்டு அமுது செய்விக்க முயன்றதும் செயற்கரிய செயல்; அதுவே அவர்க்குப் பெருமை.

சிவநேசரால் வேண்டப்படாது திருஞானசம்பந்தர் தாமாகவே என்பு நிறைந்த குடத்தினைக் கொண்டு வரும்படி செய்து பதிகம்பாடி பூம்பாவையை உற்பவிப்பித்த நிகழ்ச்சியும், திருப்புக்கொளியூரில் தம்மை வந்து வணங்கிய முதலைவாய்மகவை இழந்த பெற்றோர்க்குச் சுந்தரர் தாமாகவே பதிகம்பாடி முதலைவாய்ப்புக்க மைந்தன் முதலை வயிற்றுடலிற் சென்ற ஆண்டுகளும் தரைப்பால் வளர்ந்தது என நிரம்பத்தருவித்த நிகழ்ச்சியும் ஒப்பிட்டு நோக்கற்பாலன.

## கோணமில் குடுமித்தேவர்பால் கண்ணப்பர் கொண்ட பக்தி

கண்ணப்ப நாயனாரது வரலாறும் பக்திச்சுவை மிக்கது. கண்ணப்பர் சிறு குழந்தையாக இருக்கும்போது ஒருநாள், புலியின் திறந்த அகன்ற வாயினைச் சிறு குகை என்று கருதித் தமது கையினை அதனுள் நீட்டினார். தந்தையாகிய நாகன் எப்போதுமே இனிய சொற்களைக் கேட்காதவன்; பேசாதவன். இருந்தாலும் தன் குழந்தையாகிய திண்ணனிடம் அவ்வாறு பேசுவானா? (திண்ணன் என்பது கண்ணப்பரது பிள்ளைத் திருநாமம்) புலியேகூடக் கொடுமை உடையதாக இருந்தாலும் தன் குட்டிகளிடம் அன்பாகத்தானே இருக்கும். ஒரு நாள்கூட நாகன் திண்ணனிடம் உரக்கப் பேசியதில்லை; கையை ஓங்கியது இல்லை. இப்போது குழந்தை புலியினுடைய வாயில் கையை வைத்திருக்கின்றது. இரண்டு அடி கொடுத்து இழுத்து வருவதைத் தவிர வேறு வழியில்லை. "புலியின் வாயில் கையை வைக்காதே!" என்று சொன்னால், "அப்பா வேண்டாம் என்கிறார்" என்று கையை எடுக்காமல் அதிகமாக இன்னும் உள்ளேதான் நீட்டும். அதுதானே குழந்தைகளின் இயல்பு. அந்த நேரத்தில் நாகன் என்ன செய்கிறான். ஒரு பச்சை இலையைக் கையில் எடுக்கின்றான்; குழந்தையாகிய திண்ணனிடம் கோபித்துக் கொள்ளாதவன். இருந்தாலும் திண்ணன் செய்துகொண்டிருப்பது ஆபத்தான செயல். ஆகையினாலே கையிலே எடுத்த இலையை ஓங்கினான் நாகன். ஓங்கினானே தவிர அடிக்கவில்லை. உடனே அந்தக் குழந்தையினுடைய கண்களில் இருந்து கண்ணீர் முத்து முத்தாக வருகின்றது. அக்கண்ணீர் வருகின்ற கண் எந்தக் கண்? புண்ணீர் வருகின்ற காளத்தியப்பருடைய கண்ணுக்கு மருந்தாகப் போகின்ற கண் என்பது சேக்கிழார் பெருமானுக்கு நினைவு வருகின்றது. அப்படிக் கண்ணீர் வடிகின்றதைத் திண்ணனுடைய தாயாகிய தத்தை மாற்றிவிட்டாளாம். முத்துமுத்தாக வருகின்ற கண்ணீரை இன்னொரு முத்தம் கொடுத்து மாற்றினாளாம். பொருள் கொடுத்துப்

பொருள்கொள்கின்ற பண்டமாற்றத்தைப் போல, வாய்முத்தம் கொடுத்துக் கண்ணீர் முத்தத்தை மாற்றினாளாம்.

பொருபுலிப் பார்வைப் பேழ்வாய்
முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு
பைந்தழை கைக்கொண்டு ஓச்ச
இருசுடர்க்கு உறுகண் தீர்க்கும்
எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளிமுத்தம் அத்தாய்
வாய்முத்தம் கொள்ள மாற்றி !

என்று கூறுகிருர் சேக்கிழார். கண்ணீர்விட்ட குழந்தையைத் தாய் முத்தம் கொடுத்து நிறுத்தினள். இதுதான் செய்தி. சூரியனும் சந்திரனும் சிவபெருமானுக்கு இரு கண்கள். அவற்றிற்கு வந்த துன்பத்தை நீக்கப்போகின்ற கண்கள் இந்தக் கண்கள் என்ற செய்திகளையெல்லாம் சேக்கிழார் இணைத்துப் பாடுவார். பின்னர் கண்களை இடந்து கண்ணப்பர், காளத்தியப்பருக்கு அப்புகின்ற போதுகூட அவருக்கு 'ஊனுக்கு ஊன்' என்ற முதுமொழிக்கிணங்கக் கண்ணுக்குக் கண்ணைக் கொடுத்து மாற்றப்போகின்ருர் என்பதனை மறைமுகமாக முத்தத்திற்கு முத்தம் எனச் சேக்கிழார் பக்திச் சுவை ததும்ப அருளியிருப்பது ஆழ்ந்து நோக்கற்பாலது.

திண்ணனுடைய வில்லுக்குக் காப்புக் கட்டுகின்ற போது, சிவபெருமானும் மகாமேருவாகிய வில்லை வைத்திருக்கிருர். அந்த வில்லைக் கொண்டு தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது அது சிவபெருமானுக்கு நஞ்சைத்தான் தந்தது. திண்ணனது கையிலே இருக்கின்ற இப்போது காப்புக் கட்டுகின்ற வில் சிவபெருமானுக்கு ஊனமுது தரப்போகின்ற வில் எனவே திண்ணன் கையில் இருக்கின்ற வில்லுக்கே ஏற்றம் அதிகம்.

பான்மையில் சமைத்துக் கொண்டு
படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேன் அலர் கொன்றையார்தம்
திருச்சிலைச் செம்பொன் மேரு
ஆனது கடலின் நஞ்சம்
ஆக்கிட அவர்க்கே பின்னும்
கானஊன் அமுதம் ஆக்கும்
சிலையினைக் காப்புச் சேர்த்தார்

என அருளுகின்ருர் சேக்கிழார் பெருமான்.

திண்ணஞர், நாணனும் காடனும் உடன்போதக் காட்டிற்குச் செல்கின்ருர். அங்கு அவர்கள் வேட்டை ஆடுகின்ருர்கள். அப்போது திண்ணன் எதிரே இருக்கின்ற மலையைப் பார்த்து,

"நாணனே ! தோன்றும் குன்றில்
நண்ணுவோம்" என்ன, நாணன்
"காண நீ போதின் நல்ல
காட்சியே காணும்; இந்தச்
சேணுயர் திருக்காளத்தி
மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்; கும்பிடலாம்!" என்றான்.

இதுதான் திண்ணன் முதன்முதலாக, மலையைப் பற்றியும் அங்கே எழுந்தருளியிருக்கின்ற இறைவனைப் பற்றியும் கேள்விப்படுகின்ற செய்தி. '***முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்! மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்! பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்***' என்பது போல, அவருடைய நாமம் குடுமித்தேவர், கோணமில் (குடுமித்தேவர்) என்பது அவருடைய வண்ணம். அவர் மலையிலே இருக்கிறார் என்பதனாலே அவருடைய ஊரையும் கேள்விப்படுகிறார்.

நாணன் முன்னே ஏறுகிறான். திண்ணனார் பின்னே ஏறுகிறார். நாணனுக்கு முன்னே திண்ணனாருடைய அன்பு செல்கிறது. திண்ணனார் முன்னே செல்வதற்கு அவருக்கு வழி தெரியாது. நாணன் தானே முன்னே செல்கின்றான்; என்றாலும் அவனுக்கு முன்னே திண்ணனாருடைய அன்பு செல்கின்றது.

நாணனும் அன்பும் முன்பு
நளிர் வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்,

நாணனும் அன்பும் முன்னே செல்லத் திண்ணனாரும் தத்துவங்களாகிய படிகளைக் கடந்து தாமும் மேலே செல்கின்றார். அங்கே சென்று,

மாகமார் திருக் காளத்தி
மலைஎழு கொழுந்தாய் உள்ள
ஏக நாயகரைக் கண்டார்;
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமானது மேற் செல்ல,
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்;
தழுவினார்; மோந்து நின்றார்.

ஏக நாயகரைக் கண்டார்; கண்ட பொழுதே அவருக்கு எல்லை யில்லாத பக்தி வந்து விடுகின்றது. "*பெயர்த்தும் அவருக்கே பிச்சி யானாள்*" என்பது போல, பத்தியாகிய வேகம் மேற்செல்ல மோகம் கொண்டு ஓடிச்சென்று தழுவினார்; மோந்து நின்றார். "தனியாய் இருக்கின்றீரே பெருமானே! நீர் தனியராக இருந்தால் உமக்கு ஊன முது கொடுப்பார் யாரும் இல்லையே? வேட்டுவக்குலத்துதித்த வேடுவர் போல இவர் இருக்கிறாரே! இங்குக் கொடிய விலங்கினங்கள் இருக்கின்றனவே! அவையெல்லாம் துன்புறுத்துமே?" என்றெல் லாம் எண்ணுகின்றார்.

போதுவர்; மீண்டு செல்வர்;
புல்லுவர்; மீளப் போவர்;
காதலின் நோக்கி நிற்பர்;
கன்றகல் புனிற்றுப் போல்வர்;
"நாதனே! அமுது செய்ய
நல்ல மெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்டிங்கு வருவேன்" என்பார்!

"பசியோடிருக்கிறாரே சென்று ஊனமுது கொணர்ந்து கொடுப்போம்" என எண்ணிப் போதுவார். தனியாக இருக்கிறாரே! என மீண்டும் அவரிடமே திரும்புவார். ஈன்று அணிமையிலே இருக்கின்ற பசு, பசி கொண்டு மேயச் செல்லும்; கன்று தனியாக இருக்கின்றதே என மேயாமல் திரும்பிவிடுமாம்; கன்றினைப் பார்த்த உடனே பசி தோன்றும்; மேயச்செல்லும்; மீளவும் கன்றை எண்ணித் திரும்பும்; அதுபோல இருக்கின்றதாம் திண்ணனாருடைய செய்கை. "*தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்*" என்ற நிலையிலே நாணன் இருப் பதைக்கூட மறந்துவிட்டார். "நீர் பசித்திருக்கின்றீரே! சென்று இறைச்சி கொண்டு வரலாம் என்றால் உமக்கு இங்கு யார் துணையாக இருப்பார்" என எண்ணிக் கண்ணீர் மல்கினார். ஒருவாறாகப் போய் வரத்துணிந்து வில்லைக்கையில் எடுத்துக்கொண்டு வணங்கிச் செல் கின்றார். இதனைச் சேக்கிழார்,

ஆர்தமராக நீர் இங்கு
இருப்பது என்று அகலமாட்டேன்!
நீர் பசித்து இருக்க இங்கு
நிற்கவுங் கில்லேன்" என்று
சோர்தரு கண்ணீர் வாரப்
போய்வரத் துணிந்தார் ஆகி
வார்சிலை எடுத்துக் கொண்டு
மலர்க்கையால் தொழுது போந்தார்!

என்று இயற்றியருளுகின்றார். பின்னர் அவர் ஊனமுது கொணர்ந்து அமுது செய்வித்த செய்தி அனைவரும் அறிந்த ஒன்று (நீட்டிற் பெருகும்; விரிவஞ்சி விட்டனம்.)

பின்னர் சிவகோசரியாருக்குத் திண்ணனாரின் அன்பைக் காட்டச் சிவபெருமான் அருளியவண்ணம் காளத்தியப்பரின் கண்களிலே குருதி பெருகி வருகின்றது. ஊனமுது கொண்டுவந்த திண்ணனார் அது கண்டு மயங்கி, பின்னர் எழுந்து சென்று துடைத்தும் குருதி நிற்காதது கண்டு மூலிகைகள் எல்லாம் கொண்டு வந்து ஏதேதோ செய்தும் குருதி நிற்கவில்லை. பின்னர், "*உற்றநோய் தீர்ப்பது; ஊனுக்கு ஊன்!*" எனும் உரை முன்கண்டார். குருதி பொங்குகின்ற வலக்கண்ணுக்குத் தம்முடைய வலக்கண்ணை இடந்து, முதல்வர்தம் கண்ணில் அப்ப, நின்ற செங்குருதி கண்டார்; அது கண்டு தோள் கொட்டி ஆடினார்; "*நன்று நான் செய்த இந்த மதி*" என நகையும் தோன்ற மகிழ்ச்சிகொண்டு உன் மத்தர்போல ஆனார். அந்தோ அம்மகிழ்ச்சி நெடுநேரம் நிற்கவில்லை. பெருமானின் இடக்கண்ணி லும் உலப்பில் செங்குருதி பாயக் கண்டனர். நம்போல்வாரா யிருந்தால் பெருமானுக்கு ஒரு கண் இருக்கிறது! நமக்கும் ஒரு கண்ணிருக்கிறது! போதும் என விட்டுவிடுவோம்; உலகில் வேடர் குலப் பெருந்தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலாராகிய திண்ணனார் அப்படி எண்ணியிருந்தால் "*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*" என்று கூறமுடியாது. சிவமாம் தன்மை பெற்று விட்டார். எனவேதான் பெருமான் பசித்திருப்பது தோன்றுகிறது; தன் பசி தோன்றவில்லை; அவருடைய கண்ணில் குருதி பெருகுவது தெரிகின்றது; தன் கண்ணில் குருதி கொட்டுவது தெரியவில்லை.

தன் இரண்டாவது கண்ணையும் இடந்து அப்பத் திண்ணனார் முற்பட்டபோது அவருடைய பக்தியின் பெருக்கைக் கண்டு தேவ தேவனாகிய திருக்காளத்தி அற்புதர் தரித்திலராகி, தன்னுடைய திருக் கரத்தை நீட்டி, கண்களை இடக்கச்சென்ற திண்ணனாரின் கையைத் தடுக்க "*கண்ணப்ப நிற்க*" என்றார். அத்தோடு மட்டுமா, "*மாறி லாய்! என் வலத்தில் நிற்க!*" என அருள்புரிந்தார்.

எனவேதான் முன்பே சேக்கிழார் பெருமான் திண்ணனார் காளத்தியப்பரைக் கண்ட காட்சியை

"சார்வரும் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற்கு அரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்;
நீள்இருள் நீங்க நின்றார்" என்கிறார்.

காளத்தியப்பரைச் சிலையாகப் பார்த்திருந்தால் அவர் சாதாரண ஒரு வராகப் போய்விடுவார். முனிவரும் அமரர்களும் தவம் செய்தும் காணமுடியாத அந்தப் பெருமானை ஆர்வம் முன் பெருக ஆரா அன்புடன் நேர்பெற நோக்கி நின்றார் என்று சேக்கிழார் அவருடைய லிங்க பக்தியை நமக்குச் சுவைபடச் சொல்லியருளுகின்றார்.

## வணங்கி, மகிழ்ந்து, எழும் மன்னு திருத்தொண்டனார்

இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சேக்கிழார் பெருமான் அடியார்களிடத்திலே வைத்திருந்த பக்தி அளவற்றது. அவர் எந்த அடியாரையும் "அன்" விகுதி கொடுத்துப் பேசமாட்டார்.

திருநாவுக்கரசர் திருச்சத்திமுற்றத்திலே சென்று அங்கு எழுந்தருளியுள்ள பெருமானிடம் "திருவடி சூட்டியருளவேண்டும்" என விண்ணப்பம் செய்கிறார். "***நல்லூர்க்கு நம்பால் வருக***" என அருள்செய்தார் சிவபெருமான். நல்லூரிலே சென்று விழுந்து வணங்குகிறார் திருநாவுக்கரசர். அந்தச் செய்தியைச் சொல்ல வருகிறார் சேக்கிழார். எப்போதுமே அவர் சிவபெருமானைச் "சிவ பெருமான்" என்றுதான் சுட்டுவார். ஆனால் அடியார்களை "அர்" விகுதி கொடுக்காமல சொல்லமாட்டார்.

"நன்மை பெருகு அருள்நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னு திருத்தொண்டனார்
வணங்கி, மகிழ்ந்து, எழும்பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம்" என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான்.

என்று பாடுகிறார். மற்றவர்களாய் இருந்தால் சிவனடியார்களைப் பற்றிச் சொல்லும்பொழுது தொண்டர் என்று சொல்லுவார்கள். ஆனால் சேக்கிழார் 'தொண்டனார்' என்று கூடச் சொல்லாமல் "***மன்னு திருத்தொண்டனார்***" என்று கூறுகிறார். இது சேக்கிழார் பெருமான் வரலாற்றுக்காகச் சொல்லுகின்ற வாக்கு. திருநாவுக்கரசர் வணங்கி மகிழ்ந்து எழுகின்றார். அப்போது சிவபெருமான் "***உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்***" என்கிறான். இது சிவ பெருமானுடைய வாக்காகச் சேக்கிழார் சொல்வது. சிவபெருமான் திருநாவுக்கரசரை "உன்னுடைய" என்று ஒருமையில் சொல்லலாம். அதுமட்டுமா ? சிவபெருமான் "முடிக்கின்றோம்" என்று தம்மைப் பன்மையிலே சொல்கின்றார். திருநாவுக்கரசருடைய சிரத்தில் திருவடி சூட்டுகிறான் சிவபெருமான். இங்கு சேக்கிழார் திருநாவுக்கரசரை "அவர்" என்று சொல்லி, சிவபெருமானைச் சொல்லும்போது "***சூட்டினான் சிவபெருமான்***" என்று சொல்லுகிறார்.

## நீராரும் சடை முடியார் அருளினால் நிறை தவம்

சீராளர், சிறுத்தொண்டருடைய மகன். இளம்வயதுதான். சிறு குழந்தையாக இருக்கும்போதே அவரைச் சிவபெருமான் விரும்புகிறார். அவருக்காகச் "***சரவணத்தனயரோடு***" வந்து அருள்செய்கின்றார் சிவபெருமான். சேக்கிழார் அக்குழந்தை அவதாரம் செய்ததைச் "***சீராள தேவர் என்னும் திருமைந்தர் அவதரித்தார்***" என்று

சொல்லுகின்ருர். பெரியவர்கள் இறங்கி வந்தால்தான் "அவதரித்தார்" என்று கூறுவார் சேக்கிழார். மிகத் தெளிவாக ஆய்ந்து சொல்கின்றவர்.

திருநாவுக்கரசராகிய மருணீக்கியார் **"வந்து அவதாரம் செய்தார்"** புனிதவதியார், திலகவதியார் எல்லாம் பிறந்த பின்பு அருள் பெற்றவர்கள். முன்னே முனியாக இருந்தவர்கள் அல்லர். ஆகையினுல் **"திலகவதியார் பிறந்தார்" "புனிதவதியார் பிறந்தார்"** என்றுதான் கூறுவார். அதை ஒரு பொழுதும் மறந்து வேறுவிதமாகச் சொல்லமாட்டார். முன்பாட்டிலே திலகவதியார் பிறந்தார் என்று சொன்னவர், அடுத்த திருப்பாட்டிலே **"திலவதியார் பிறந்து சிலமுறையாண்ட கன்றதன் பின்......மருணீக்கியார் வந்து அவதாரம் செய்தார்"** என்று கூறுவார். திருஞான சம்பந்தரை **" சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்"** என்று கூறியருளுவார்.

இவ்வாறு தகுதி நோக்கிக் கூறுகின்ற சேக்கிழார் சீராளனுகிய குழந்தையை மூன்று வயதுக் குழந்தையாக இருக்கின்றபொழுதே திருச்செங்காட்டங்குடியிலே, சிறுத்தொண்டருடைய மனையிலே இருக்கின்றபொழுது பாடினுர். "சீராளன் சிறுத்தொண்டன்" என்று தம்முடைய தேவாரத்திலே வைத்துத் திருஞானசம்பந்தரே பாடுகின்ற குழந்தை ஆகையினுலே,

நீராரும் சடைமுடியார்
　　அருளினுல் நிறைதவத்துப்
பேராளர் அவர் தமக்குப்
　　பெருகு திரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு
　　வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர் எனும்
　　திருமைந்தர் அவதரித்தார்.

சீராள தேவர், திருமைந்தர் அவதரித்தார் என ஒவ்வொரு சொல்லிலும் "அர்" விகுதி கொடுத்துச் சொல்லுவார் சேக்கிழார் பெருமான்.

## தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப்பாவை

மங்கையர்க்கரசியாரைத் திருஞானசம்பந்தப் பெருமானே முன்னிலைப்படுத்தி **"மானின் நேர்வழி மாதரார்"** என்று பதிகம் அருளிச் செய்தார். மதுரை மாநகருக்கு எழுந்தருளும் முன்பே **மங்கையர்க் கரசி, வளவர் கோன்பாவை"** என்று பாடியருளினுர் அல்லவா? ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசி என்று சொன்ன அந்த பெருமாட்டியை நாமும் 'மங்கையர்க்கரசி' என்று சொல்லுவதா என்று எண்ணி, மங்கையர்க்கரசியார் என்ற அளவில் மன நிறைவு கொள்ளாமல்,

மங்கையர்க்குத் தனியரசி! எங்கள் தெய்வம்!
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல், எம்மால் போற்றலாமே!

என்று கூறியிருக்கின்றார். இப்படிச் சேக்கிழார் எல்லா அடியார்களையும் 'அர்' விகுதி கொடுப்பதோடு மிக்க சிறப்பாகவும் பேசுவார். இது சேக்கிழாருக்கு அடியார்களிடத்திலே இருக்கின்ற அளவிறந்த பக்தியைக் காட்டுகின்றது.

## *ஒன்று காதலித்த மன்றுளார் அடியார்*

அடியார்களின் பக்தியைக் கண்டோம்; குருபக்தியைக் கண்டோம் ; லிங்கபக்தியைக் கண்டோம். சேக்கிழார்க்கு அடியார்களிடத்திலே இருக்கின்ற பக்தியையும் கண்டோம். அடியார்களுடைய வேடத்துக்கு இலக்கணம் சொல்லவில்லை. அவர்கள் ***வேண்டுமாறு விருப்புறு வேடத்தார்.*** ஆனால் அவர்களுக்குள்ளே இருக்கின்ற இணைப்பு ஒன்றே ஒன்று; அவர்கள் ***தாண்டவப் பெருமான் தனித்திருத்தொண்டர்கள்.*** முத்தாகவும் இருக்கலாம், பவளமாகவும் இருக்கலாம், மாணிக்கமணியாகவும் இருக்கலாம்; ஆனால் அவைகளை இணைத்துக் கோத்திருக்கின்ற சரடு ஒன்றுதான். சேக்கிழார் பெருமான் அதனால்தான் புராணத்தின் இறுதியில் "***ஒன்று காதலித்த மன்றுளார் அடியார்***" என்று குறிக்கின்றார்.

திருநாவுக்கரசருடைய பக்தியைக் காணவும் திருஞான சம்பந்தருடைய பக்தியைக் காணவும், அப்பூதியடிகளுடைய பக்தியைக் காணவும் காரணமாக இருப்பது சேக்கிழார் பெருமானுடைய அடியார்பக்தியே என்று கூறின் மிகையன்று.

## பத்தியின் பாலர்

“ பத்தியின் பாலர் ஆகிப்
பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடி ளுர்கள்
தலையினல் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தியின்பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி எல்லாம்.”

—திருநாட்டுச்சிறப்பு—22

“ மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும், மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும், செம்பொற் ருளே
சார்வான திருமனமும், உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதி பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.”

—திருநாவுக்கரசர் புராணம்—244

“என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.”

—வெள்ளானைச் சருக்கம்—53

# பெரியபுராணத்தில் சமுதாய நோக்கு

## பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியம்

பெரியபுராணம் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த நூல். மூன்றும் நூற்றுண்டு முதல் ஒன்பதாம் நூற்றுண்டு வரை, தமிழகத்தினுடைய தலைசிறந்த வரலாறு, நிலையுயர்ந்த பண்பாடு, தெருள் நிறைந்த அருளியல், பொருள் பொதிந்த அரசியல், மற்றும் தமிழ்மக்களின் அறிவாற்றல் மிக்க திறமையைக் காட்டும் தொழில்முறை ஆகிய எல்லாவற்றையும் எடுத்தியம்பும் தமிழிலக்கிய வரலாற்றுச் சமய நூல், சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த "பெரிய புராணம்." ஆறு அல்லது ஏழு நூற்றுண்டுகளுக்குத் தமிழக வரலாற்றை நமக்கு எடுத்துக் கூறுகின்ற நூல் இது ஒன்றுதான். இப்போது நம் தமிழகத்தில் நாம், பிறமாநிலங்கள் மற்றும் அயல்நாட்டு வரலாறுகளைப் படிக்கிறேம். தமிழக வரலாற்றுக்காகச் சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் படித்தாலும்கூட, அதைவிடச் சிறப்பாக, ஆறு, ஏழு நூற்றுண்டுகளுக்கு வரலாருகவும், அரசியல் நூல் போலவும், தமிழ்ச் சமுதாயத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டும் பண்பாட்டு நூலாகவும், தொன்மை மிக்க நம் சமயப் பெருமைகளை யும், எல்லாம் வல்ல இறைவனின் பெருங்கருணைத் திறத்தையும் விளக்கும் அருளியல் நூலாகவும் விளங்குகின்ற ஒரு பெருங் காப்பியமே பெரிய புராணம்.

## சமுதாய நோக்கில் இருவித நோக்கு

பெரிய புராணத்தைச் சமுதாய நோக்கத்தில் வைத்துக் காண அதனை இரண்டு விதமாகப் பாகுபாடு செய்யலாம். நம் தமிழ்ச் சமுதாயத்தின் செயல் முறைகளையும் பண்பாட்டையும் சேக்கிழார் பெருமான் எவ்வாறு கூறுகின்ருர் என்பதை முதலாவதாகவும், வணக்கத்திற்குரிய நம் அருளாளர்கள் சமுதாயத்தை எப்படிக் கண்டார்கள், எங்கெங்குச் சமுதாயக் குறைபாடுகள் உள்ளனவோ அங்கெல்லாம் சென்று அவர்கள் எப்படிச் சமுதாயத் தொண்டு செய்தார்கள் என்பதனை இரண்டாவதாகவும் காணலாம்.

## மறு ஒழித்த இளம்பிறைபோல் வளர்கின்ற மைந்தனுர்

திருநாவுக்கரசருடைய வரலாற்றில திருநாவுக்கரசர் மருணீக்கி யாராக இருந்த போது, கல்வி கற்றுக் கொண்டிருந்த பருவத்தில் அவருடைய தந்தையாராகிய புகழனுரையும் தாயாராகிய மாதினி

யாரையும் வணங்கிக் கொண்டிருந்தார் என்ற செய்தியைச் சொல்லுகிறார். ஐம்புலன்களின் ஆசையினால் மனத்தில் தோன்றியிருக்கும் சுருளை நீக்கி, அம் மனமானது, இறைவன் திருவருளை நோக்கி என்றும் மலர்ந்திருக்கும்படியான கல்வியை-கலையை மருணீக்கியார் பயிலத் தொடங்கியதைக் கூறவந்த சேக்கிழார்,

''தந்தைதாய் களிமகிழ்ச்சி
தலைசிறக்க முறைமையினால்
சிந்தைமலர்ந்து எழும் உணர்வில்
செழுங்கலையின் திறங்களெலாம்
முந்தைமுறை மையிற்பயின்று
முதிர அறிவு எதிரும் வகை
மைந்தனார் மறு ஒழித்த
இளம் பிறைபோல் வளர்கின்றார்.''

என்று மட்டுமே அருளிச்செய்தார். மருணீக்கியாரின் தந்தையாராகிய புகழனார் **மேயவினைப் பயத்தாலே இவ்வுலகை விட்டகலத் தீய அரும்பிணியுழந்து விண்ணுலகு சென்றடைந்தார்.** அந்நிலையில் அவர் துணைவியார் மாதினியார், சுற்றத்தாரையும், திலகவதியாராகிய மகளையும், மருணீக்கியாராகிய மகனையும் **துகளாகவே** மதித்து, பெற்றிமையால் உடன் என்றும் பிரியாத **உலகெய்தும் கற்புநெறி வழுவாமல் கணவனார் உடன் சென்றார்.** குணம் பேசிக் குலம் பேசி மணம் நேர்ந்த கலிப்பகையார். அவருக்கும் திலகவதியாருக்கும் மணம் நிகழும் முன்னரே போர்க்களம் சென்று உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார். இச் செய்தியைக் கேட்ட **''செம்மலர் மேல் திருவனைய''** திலகவதியார், ''என் தந்தையும் தாயும் என்னை அவருக்குக் கொடுக்க இசைந்து மண உறுதி செய்து கொண்டமையால் நான் **அவருக்கே** (கலிப்பகையாருக்கே) **உரியவள்; ஆகையினால் இந்த உயிரையாவது அவரது உயிரோடு இசைவிப்பேன்''** எனக் கூறி உயிர் விடத் துணிந்தார்.

இந்த நிலையில் திலகவதியாருடைய அடிகளின் மேல், மருணீக்கியார் விழுந்து கதறுகிறார். இச் செய்தியினைக் கூற வந்த சேக்கிழார் பெருமான்,

''அந்நிலையில் மிகப்புலம்பி
அன்னையும் அத் தனும் அகன்ற
பின்னையும்நான் உமைவணங்கப்
பெறுதலினால் உயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட்டு
ஏகுவீர் எனில்யானும்
முன்னம் உயிர் நீப்பன்'' என
மொழிந்து இடரின் அழுந்தினார்''

என்று கூறியருளுகிறார். "அன்னையும் அத்தனும் இருக்கும்போது நான் அவர்களை வணங்கிக் கொண்டிருந்தேன்!" என்பதனைச் சொல்லாமல் சொல்லுகிறார். எப்படி? "அவர்கள் இவ்வுலக வாழ்வை விட்டு அகன்றபின் நான் உங்களை (திலகவதியாரை) வணங்கப்பெறுதலினால் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்பது, "அதற்கு முன் நான் தாய் தந்தையரை வணங்கி வாழ்ந்து கொண்டிருந்தேன்" என்ற குறிப்பை உணர்த்துகிறது.

அது சரி? திருநாவுக்கரசருக்குப் பிறகு பல நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய சேக்கிழாருக்கு எப்படித் தெரியும்? சேக்கிழார் எந்தச் செய்தியையும் அகச்சான்று இல்லாமல் சொல்லமாட்டார். இதற்கும் சான்று இருக்கின்றது. திருநாவுக்கரசரைச் சமணர்கள் சூழ்ச்சி செய்து, "*கல்லினோடு பூட்டிக் கடலில் போடத்*" தம் வாக்கினால் *நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன் நல்ல நாமத்தைச்*", சொல்லிக் கரையேறிய திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூருக்கு வருகிறார். வந்து அத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள பெருமானைப் பாடும்போது, "*ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்*" என்ற தேவாரப் பாடலையும், "*துணையாய் என் நெஞ்சம் துறப்பித்தாய் நீ*" (என் உடன் பிறந்த துணையாகி என் நெஞ்சத்தைத் துறப்பித்தவனே!) என்ற சான்றையும் வைத்துக்கொண்டே, சேக்கிழார், மருணீக்கியார் முன்பு தாய் தந்தையரை வணங்கி, அவர்கள் மறைவிற்குப் பின், தம் மூத்த சகோதரியாரையும் வணங்கிக் கொண்டிருந்தார் என்ற செய்தியினைத் தெரிவிக்கிறார். பெரியோர்களை வணங்கவேண்டும் என்ற சேக்கிழார் பெருமானின். சமுதாய நோக்கம் இதன்மூலம் நமக்குத் தெளிவாகின்றது.

## குணம் பேசுதலும் பணம் பேசுதலும்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய காரைக்காலம்மையாரின் இளமைத் திருநாமம் புனிதவதி. மருணீக்கியாரின் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தி அவரைத் திருநாவுக்கரசராக்கி நமக்களித்தவர் திலகவதி. இருவருடைய திருப்பெயரும் ஐந்தெழுத்திலே அமைந்திருப்பது எண்ணத்தக்கது. புனிதவதியாருடைய திருமணம் பணம் பேசி நடந்த திருமணம். திலகவதியாருடைய திருமணம் குணம்பேசி, குலம் பேசி நடந்த திருமணம். நிதிபதி மகனாகிய பரமதத்தனுக்கும், தனதத்தன் மகளாகிய புனிதவதிக்கும், இருவருக்கும் ஒத்த பெருஞ் செல்வம் இருக்கிறது என்பதனால் நடைபெற்றது திருமணம். மணமகனுக்கும், மணமகளுக்கும் ஒத்த குணங்கள் இருக்கிறதா? என்பதைப் பார்த்து இத்திருமணம் நடைபெறவில்லை.

அளிமிடைதார்த் தனதத்தன்
    அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே
    செயல்முறைமை செய்தமைத்துத்

தளிரடிமென் னகைமயிலைத்
    தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
    கலியாணம் செய்தார்கள்.

சுற்றத்தார் போற்ற வேண்டும் என்பதற்காகச் சிறப்புடன் திருமணம் செய்தார்கள் எனச் சேக்கிழார் கூறுகிறார்.

மின்னார் செஞ்சடையண்ணல் மெய்யடிமை விருப்புடைய கலிப் பகையார், ஆன்ற தவச்செந் நெறியில் வைகுந் திலகவதியாரை மகட் கொள்ளவேண்டி எழுந்த பேரன்பினால், பூண்ட கொடைப் புகழ னார்பால் சில முதியவர்களை அனுப்புகிறார். மணம் பேசவந்தவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார்கள். பின்னர் வந்த முதிய வர்களும் புகழனாரும், கலிப்பகையாருக்கும் திலகவதியாருக்கும் குண நலன்களையும், ஒற்றுமைகளையும், குலச்சிறப்புக்களையும், பேசியபின் இருவருக்கும் திருமணம் நிச்சயம் செய்தார்கள்.

அணங்கனைய திலகவதி
    யார்தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும்
    வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக்
    கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகல்அல்குல்
    பைந்தொடியை மணம்நேர்ந்தார்

எனச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்கிறார்.

திருமணத்திலே பணம் பேசிச்செய்வதும் உண்டு; குணம்பேசிச் செய்வதும் உண்டு. திருமணத்தைச் சுருங்கிய அளவிலே முடிப்பதும் உண்டு; விரிந்த அளவிலே செய்வதும் உண்டு. பெரியபுராண நாயக ராகிய நம்பியாரூரரின் திருமணமும், திருவளர் ஞானத் தலைவராகிய திருஞான சம்பந்தரின் திருமணமும் முன்பே உறுதிசெய்யப் பெற் றவைகள், ஆகையினால், இரு திருமணங்களின் ஏற்பாடுகளும் மிக விரிவாகச் செய்யப்பெறுகின்றன. மண வினைகளும் சடங்குகளும் விளக்கமாகக் கூறப்பெறுகின்றன. அதே நேரத்தில் திருஞானசம் பந்தர், திருமருகலில், தன் அம்மான் மகனோடு போந்த வைப்பூர்க் கோன் தாமன் என்னும் வணிகன் மகளின் துயர் நீக்க, வாளரவு தீண்டி மாண்ட அவள் காதலனைக், கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர், கருணையினால் உயிர்ப்பித்து, நங்கையவள் தனை நயந்த நம்பியோடு நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம் மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து மிகச் சுருக்கமாக ஒரு திருமணத்தை முடித்துவைக்கிறார். மூன்றும் நூற்றாண்டில் இருந்து ஒன்பதாம் நூற் றாண்டு வரை திருமணங்கள் மிக விரிவாகவும் மிகச் சுருக்கமாகவும் நடைபெற்ற செய்திகளைச் சேக்கிழார் பெருமான் இக்காலச் சமுதாயத் தினர் உணரும் பொருட்டு எடுத்துக்கூறுகிறார்.

## இல்லாளும் இல்லாளனும்

மனையறத்தைப்பற்றிப் பேசவருகிறார் சேக்கிழார் பெருமான். இல்லறத்தைப் பற்றிப் பேசுகின்ற இன்றைய புலவர்கள் கூட "இல்லாள்" என்ற சொல்லுக்கு நிகராக "இல்லான்" எனச் சொன்னால் ஒன்றும் இல்லாதவன் என்றாகிவிடுமே எனத்தான் எண்ணுகிறார்கள். சேக்கிழார் தமக்கே உரிய தனிச்சிறப்புடன் இரண்டு மூன்று இடங்களில் கூறுகிறார். "இல்லாளன் அகத்திருக்க" என்று அருளிச் செய்கிறார். இல்லாளன் என்றால் இல்லை ஆளுகின்றவன் என்ற பொருள்படுமல்லவா? இல்லாளன் என்கின்ற சொல் சேக்கிழார் பெருமான் கையாண்டிருக்கும் மிகச் சிறப்புமிக்க ஒரு சொல்.

## மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டுநங்கை

சிறுத் தொண்டருடைய மனைவியைப் பற்றிக் கூறவந்த சேக்கிழார், "மனைவி என்பவள் இல்லறம் என்னும் மரத்துக்கு வேராக விளங்குகின்றவள்" என்று கூறுகிறார். ஒருமரம் நன்றாக வளர்ந்து, பலவாகக் கிளைத்து, நிறைவாகப் பூத்து, செறிவாகக் காய்த்து, இனிதாகக் கனிந்து விளங்குகின்றதென்றால் அதற்குக் காரணம் அம்மரத்தின் வேர். அந்த வேர் நன்றாக இருந்தால்தான் மரம் விழாமல் நிமிர்ந்து நிற்கும். நிலத்தில் உள்ள ஈரத்தையும் உரத்தையும் உறிஞ்சி மரத்திற்கு உணவாக அளித்து, மரம் வளர்ந்து, கிளைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன்தரக் காரணமான வேர் போல, இல்லறமாகிய மரத்துக்கு வேராகி வாழ்பவள் மனைவி. அவள் மாண்புடையவளாக இருந்தால்தான் இல்லறம் சிறப்படையும்.

ஒரு குழந்தையைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துப் பால் நினைந்து ஊட்டிப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்ற தாய், தான் பெற்றெடுத்த அந்தமழலைச் செல்வத்தைத் தன்னுடைய மகன் என்று சொல்வதையோ எழுதுவதையே விரும்பமாட்டாள்; தந்தையினுடைய பெயரைத்தான் சொல்லவேண்டும் என்று விரும்புவாள். ஒருவர் விருந்துக்கு வந்தால், அந்த விருந்தைப் பேணுகின்றவள் மனைத்தக்க மாண்புடையமனைவியேயானாலும், அந்த இல்லாளன் பெயரைத் தான் சொல்வார்கள். எந்தத் தாயும் நான்தான் செய்தேன் என்று சொல்ல விரும்பமாட்டாள். சிறுத் தொண்டருடைய மனைவியார் திருவெண்காட்டு நங்கை. அவர்கட்கு ஒருமைந்தர் அவதாரம் செய்ததைச் சேக்கிழார்

நீராரும் சடைமுடியார்
அருளினால் நிறைதவத்துப்
பேராளர் அவர்தமக்குப்
பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு
வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்எனும்
திருமைந்தர் அவதரித்தார்

என்று தெரிவிக்கிறார்.

ஒருவேர், " நானும் கொஞ்சம் வெளியே தெரிகின்றேன் " என்று வெளிவருமானல் மரம் சாய்ந்துவிடும். காணமல் இருந்து கனியச் செய்வதுதான் வேரினது இயல்பு. அந்த வேரிலே புழு இருக்கு மாஞலும் மரம் பட்டுப்போய்விடும். எனவே இல்லறத்தைக் காக்கின்ற ஒரு நல்ல மனைவி, வீட்டில் நடக்கின்ற எல்லாச் செயல்களுக்கும் உடனுக இருப்பதோடு வெளியில் தெரியாமல் உள்ளடங்கிக் குறை என்னும் புழு விழுந்து மாசு படாமல் இருக்கவேண்டும் என்ற குறிப்பை 'வேராகி விளங்கு' என்ற இரு சொற்களாலே சேக்கிழார் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுகிருர். தமிழர் சமுதாயத்தில் ஒரு மனைவியின் பண்பாடு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதன் மூலம், நமக்கெல்லாம் ஒரு படிப்பினையைத் தருகிருர் என்றே கொள்ளவேண்டும்

## சோர்விலாது கணவனர் சொற்காக்கும் பெண்

இளையான்குடிமாற நாயனருடைய புராணத்தில், அவருடைய மனைவியாரைப் பற்றிச் சில குறிப்புகள் தருகிருர். ஆவணி மாதம்; மழை பெய்து கொண்டிருக்கிறது. நள்ளிரவு நேரத்தில் சிவபெருமான், அடியார் திருக்கோலத்துடன் வருகிருர். சிவனடியார்கள் யாவ ராயினும் பக்தியோடு எதிர்வந்து கைகூப்பி வணங்கி, அவர்களுடன் இன்முகத்தோடு பேசி, அவர்களை இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து பாதம் விளக்கி, அருச்சனை செய்து, அறுசுவை உணவை நாலு விதமாக அவர்களுக்குப் படைத்து விருப்பத்தோடு விருந்து படைக்கும் பண்பாளர் இளையான்குடிமாறர்.

இப்படி அடியார்களுக்கு இடைவிடாது அளித்து வந்தும் அவரது செல்வம் நாளும் நாளும் பெருகிக் கொண்டே வந்தது. இளையான்குடிமாற நாயனரின் பெருமையை இவ்வுலகுக்கு உணர்த்த எண்ணினர் சிவபெருமான். இவர் செல்வம் இருக்கும் நாளில் மட்டு மன்றி, வறுமை வந்தடைந்த போதும் அடியார்களை உபசரிக்க வல்லவர் என்பதை உலகறிய வேண்டும் என்பதற்காக, இளையான் குடிமாற நாயனருக்கு வறுமை வந்தடையும்படி உன்னினர் தில்லை மன்னினர்.

செல்வம் சுருங்கினலும், 'எம்பிரான் இளையான் குடிமன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி, முன்னினும் அதிகமாகத் திருப் பணிகள் செய்வதில் முதிர்ந்த கொள்கை உள்ளவரானர். இந்த நிலையில்தான், ஏனமும் (பன்றியும்) அன்னமும் தேடி அடைய முடியாத அடி முடியை உடைய சிவபெருமான், காளை வாகனமும் இன்றிக் காதல் உமையவளும் இன்றிச் சிவனடியார் வேடங் கொண்டு, நல்ல மழை பெய்யும் நள்ளிரவில் இளையான் குடிமாற நாயனருடைய இல்லத்தினை வந்தடைகிருர். இப்படி வந்த சிவ பெருமான் அன்னத்துக்காகச் செல்லவில்லை என்பதைச் சேக்கிழார் குறிப்பாக உணர்த்துகிருர். "*கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினர்*" என்பதில் பன்றியும் அன்னப் பறவையும்

என்ற பொருள் வெளிப்படையாகத் தோன்றினாலும், இளையான் குடிமாற நாயனாருடைய இல்லத்தில் இருக்கும் பாத்திரத்தை (ஏனத்தை)யோ, அதிலிருக்கும் சோற்றை (அன்னத்தை)யோ சிவ பெருமான் விரும்பவில்லை. அவருடைய வறுமையில் செம்மையான அன்பைக் காணவே செல்லுகிறார்.

இளையான் குடிமாறர் வறுமையின் அரவணைப்பில் இருக்கிறார்; கடன் வாங்க வேண்டியவர்களிடத்தில் எல்லாம் வாங்கியாயிற்று. உணவுண்டு இரண்டு நாட்களுக்கும் மேலாயிற்று; வீட்டிலே எந்தப் பொருளும் இல்லை. மழைக் குளிரில் பசி மயக்கத்தில் படுத்திருக்கும் மாறரும் அவர் மனைவியாரும் வாயிற் புறத்தில் வந்திருக்கும் அடியாரைக் கண்டு அவரை வரவேற்கின்றனர்.

இளையான்குடிமாறர் வந்திருக்கும் அடியாரின் ஈர மேனியை நீக்கி இடங் கொடுத்தார். அடியாருடைய முகத்தைப் பார்த்தால், அவர் மிகுந்த பசியோடு வந்திருப்பது போல் தோன்றுகிறது. அடியாருக்கு இன்னமுது ஊட்டும் ஆசையால், மாண்புடைய தன் மனைவியாரை நோக்கி, "அடியவர் மிக்க பசியுடன் வந்திருக்கிறார்! அவருடைய பசியை நீக்க வழியென்ன ? எனக் கேட்கிறார்.

இளையான் குடிமாறர் கேட்கின்ற போதே அவர் மனைவியாருக்கு இன்னதுதான் செய்ய வேண்டும் என்ற செயல் உறுதிப்பாடு வந்து விட்டது. இன்னும் சொல்லப் போனால் அடியார் வந்து கதவைத் தட்டுகின்ற போதே கூட அந்த மனைத் தக்க மாண்புடையவருக்கு இந்த எண்ணம் தோன்றியிருக்கக்கூடும். ஆனால் அந்தச் செயல் சொல்லக் கூடாததாக இருக்கிறது. வயலிலே விதைத்திருக்கும் நெல் முளைவிட்டுப் பயிராகிக் கதிர்விட்டு நெல் அறுத்தால் பல்லாயிரம் அடியார்களுக்கு உணவாகக்கூடும். இருந்தாலும் இப்போது வந்திருக்கும் அடியாருக்குள்ள பசியைப் போக்குவது அவசிய மாகிறது.

எனவே அவர் இளையான்குடிமாறரை நோக்கி, "இதைத் தவிர வேறு வழியொன்றும் எனக்குத் தோன்றவில்லை. அக்கம்பக்கத்தி லுள்ள அனைவரிடமும் ஏற்கெனவே வாங்கியாகிவிட்டது. எனவே இப்போது போய்க் கேட்டால் யாரும் தரமாட்டார்கள். அதுவும் நள்ளிரவு நேரம். வேறு போக்கிடமும் தெரியவில்லை. தீது செய் வினையேற்கு என் செயல் ?" என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்து சொல்லுகிறார்: "நீங்கள் காலையிலே முளை கட்டி வைத்திருந்த நெல்லைக் கொண்டு போய் நாற்றங்காலிலே தூவி விட்டு வந்தீர்கள். காலையில் இருந்தே மழை பெய்து கொண்டிருக்கிறது. எனவே நாற்றங் காலிலே தண்ணீர் நிறைய இருக்கும். தண்ணீர் இல்லாமல் இருந்திருந்தால் தான் நெல் வேரூன்றி யிருக்கும். இப்போது நாற்றங் காலிலே இருக்கின்ற மழை நீரிலே நெல் மிதந்து கொண்டிருக்கும். அதைச் சென்று அரித்து நீங்கள் எடுத்து வந்தால், என்னாலே இயன்ற அளவு அதை அமுதாக்குகிறேன்" என்று கூறுகிறார்கள்.

மாற நாயனருக்குக்கூட இந்த எண்ணம் தோன்றவில்லை. இதிலிருந்து மாறநாயனருடைய மனைவியாரின் கூர்த்த மதி நமக்கு விளங்குகிறது. மனைவியின் சொற்படி இளையான் குடிமாறர் ஒரு கூடையை எடுத்துச் சென்று அதில் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிற அந்த நெல்லை வாரி எடுத்துக் கொண்டு வந்தார். வளத்தக்க வாழ்க்கைத் துணைவியாகிய அவர், தங்களது இச் செயலை வந்த சிவனடியார் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக வாயிற்படியில் காத்திருந்து வாங்கினர். பின்னர் இந்த நேரத்தில் இச் சிவனடியார் வந்து தொல்லை கொடுக்கிறரே என்று எண்ணமல் சிந்தையில் விருப்பத்தோடு, நெல்லில் இருக்கும் சேற்றையெல்லாம் கழுவினர். சமைப்பதற்கே எதுவும் இல்லாத போது விறகு எப்படியிருக்கும்? கணவரிடம் சொல்ல, அவர் விதைத்த நெல்லையே அரித்துக் கொண்டு வந்து கொடுக்கிறவர் ஆயிற்றே! வீட்டை அறுப்பதா பெரிது? எனவே வீட்டின் கூரையில் ஒரு பகுதியை அறுத்து விறகாகக் கொடுக்கிறர் நாயனர்.

சோர்விலாது கணவனர் சொற்காக்கும் பெண்ணகிய மாறனரின் மனைவியார், அடுப்பு மூட்டுகிறர்: அடுப்பில் வாணலியை வைத்து ஈரமாக இருக்கின்ற நெல்லை வறுத்தார்கள். ஒரு சிறு செயலாக இருந்தால் கூட விட்டுவிடாமல் சேக்கிழார் அவ்வளவு நுட்பமாகக் கூறுகிறர். "*வறுத்தபின் அரிசியாக்கி*" வறுத்த நெல்லை உரலிலே இட்டுக் குத்திக் கொண்டிருக்கிறர்கள். அவர்கள் இதைச் செய்து கொண்டிருக்கும் போதே உலை கொதித்துக் கொண்டிருக்கிறது. நன்ருகக் கொதிக்காத நீரில் புதிய அரிசியைப் போட்டால் சாதம் குழைந்து போய்விடும். "எனவே சேக்கிழார் *வாக்கிய உலையில் பெய்து*" என்று கூறுகிறர். சிறுசிறு செய்தியாக இருந்தால் கூடச் சேக்கிழார் எவ்வளவு அழகாகக் கூறுகிறர்.

இன்னமுது ஆக்கிவைத்து விட்டுக் "கறிக்கு இனி என் செய்வோம்?" என்று கணவனர்பால் சென்று கேட்கிறர். வீட்டுக் கொல்லையிலே குழி நிரம்பாத கீரைச் செடிகள் இருக்கின்றன.

"வழிவரும் இளைப்பினேடும்
வருத்திய பசியினலே
அழிவுறும் ஐயன் என்னும்
அன்பினில் பொலிந்து சென்று
குழி நிரம்பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்தவை கறிக்கு நல்க"

உணவு சமைக்கின்ற விதத்தைக்கூடச் சேக்கிழார் எவ்வளவு அழகாகச் சொல்கிறர். அக்கீரை மழைபெய்து கொண்டிருக்கிற நேரத்தில் நள்ளிரவில் பறித்துக் கொண்டு வந்தது ஆகையினல், மாறனரின் மனைவியார் அதை ஆய்கிறர்கள். பசி வேளை; அதுவும்

அகால நரேம். ஏதோ வந்தவருக்குச் செய்து போடுவோம் என்று எண்ணுமல், செய்கின்றதைச் செம்மையாகத் தூய்மையாகச் செய்ய வேண்டும் என்று எண்ணி, மனைவியார், "கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து, புனலிடைக் கழுவி," என்று சிறு செய்தியாக இருந்தாலும் அதனைச் சில சொற்களில் முறையாக ஒழுங்காகச் சொல்வதில் சேக்கிழாருக்கு இணை சேக்கிழார்தான். ஆய்ந்த கீரையினை நீரில் கழுவி, இரண்டு நாள் சமையல் செய்யாத வீட்டில் பாத்திரம் அழுக்காக இருக்கக்கூடும் ஆகையினுல் அதனைத் துலக்கிப் புனித பாத்திரம் ஆக்கி, புளி முதலியன சேர்த்துச் சமைத்தால் சில பாத்திரங்களில் உணவுப் பொருள்கள் கைத்துப்போகும். எனவே அதற்குத் தக்க பாத்திரமாகவும் எடுத்துவைக்கிறுர். இருக்கின்ற கீரையை ஏதோ ஒருவகையான கறியாகச் செய்து அடியாருடைய பசியை நீக்குவோம் என்று கருதாமல், மாறனுரின் மனைவியார் தன் கைப் பாங்கினுல் வேறு வேறு வகைவகையான கறிகளாகச் செய்து முடித்துக் கணவனுர்பால் சென்று சொல்கிறுர்.

சேக்கிழார் பெருமான் அந்த அம்மையாருடைய சமைக்கும் திறமையைக் கூடச் சொல்கிறுர். இன்னொன்றுகூட இதிலிருந்து தெரிந்து கொள்கிறேம். முதலிலே இன்னமுது செய்த பின்னர் கறியமுது செய்யவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறுர். இளையான்குடி மாறனுரின் மனைவி அன்னம் செய்த பின்புதான் 'கறிக்கு இனி என் செய்வோம்' என்று கேட்டுப்பின் கணவனுர் பறித்து வந்த கீரையை வேறுவேறு கறியமுதாக்குகிறுர். சேக்கிழார் பெருமான் புனிதவதியராகிய காரைக்காலம்மையார் வரலாற்றிலும் சொல்கிறுர், முதலில் "*கறியமுதங் குதவாதே திருவமுது* கைகூட"; காய்கறி செய்யவில்லை. குழம்பு, பருப்பு, ரசம் முதலியனவும் செய்யவில்லை. அமுதாகிய உணவு மட்டும் சமைத்திருக்கிறுர் என்று கூறுகிறுர்.

உணவு ஒன்று மட்டும் இருந்தால் வந்தவருக்கு மோரை விட்டு, ஊறுகாய் வைத்து உணவு படைத்துவிடலாம். அலுவலகத்திற்குச் செல்லுகின்றவர்களும், வெளியிலே பயணம் செய்கின்றவர்களும் கூட உணவு ஒன்று மட்டும் இருந்தால் எப்படியாவது உண்டு சென்றுவிடலாம். பதினறு வகைக் காய்கறிகள் சமைத்திருந்தாலும் சோறு இல்லையானுல் வந்தவரும் உண்ண முடியாது, நாமும் உண்ண முடியாது. அந்த முறையில்தான் சேக்கிழார் பெருமான் இளையான்குடிமாற நாயனுர் புராணத்திலும், காரைக்காலம்மையார் புராணத்திலும் நமக்குக் காட்டுகிறுர்.

பின்னர் இளையான்குடிமாறர்பால்சென்று அடியார், "*ஈண்ட அமுது செய்தருள்க*" என வேண்டச்சிவபெருமான் அவருடைய வறுமையில் செம்மையான ஈர அன்பிற்கு இரங்கி.

"அன்பனே! அன்பர் பூசை
அளித்த நீ அணங்கினேடும்
என்பெரும் உலகைஎய்தி
இருநிதிக் கிழவன் தானே

முன்பெரு நிதியம் ஏந்தி
மொழிவழி ஏவல்கேட்ப
இன்பமார்ந் திருக்க!" என்றே
அருள்செய்தான்! எவர்க்கும் மிக்கான்"

என்று மாறர்க்கும், மனைத்தக்க மாண்புடைய அவர் மனைவிக்கும் வீடுபேறளிக்கிறார்.

## ஈர்வாய் வலம் பெற வைக்கும் மரபு

உணவு உண்ணுகின்ற முறை பரிமாறுகின்ற முறையைக்கூடச் சேக்கிழார் சொல்லுகிறார். எல்லார்க்கும் தெரிந்தது அப்பூதியடிகள் வரலாறு. அப்பருக்கு இன்னமுது படைக்க மூத்த திருநாவுக்கரசு வாழை இலை அறுக்கச் செல்கிறான். அந்த வாழையிலை பாதி விரிந்தும் பாதி சுருண்டும் இருந்தது. கீழே இருக்கின்ற வாழையிலை முற்றி யிருக்கும் கைப்பட்டால் கிழிந்துவிடும். முழுவதும் சுருண்டிருக்கிற குருத்தாக இருந்தாலும் கைபட்டால் கிழிந்துவிடும். கீழே இருக்கின்ற இலையை அப்பூதியடிகளுடைய மகன் அறுத்திருப்பான் ஆனால் அவனை அரவு தீண்டியிருக்காது. பாதி விரிந்தும் பாதி சுருண்டும் இருக்கிற மல்லலாங்குத்து என்று சேக்கிழார் சொல்கிறார். அது மட்டு மல்ல திருநாவுக்கரசர் பெருமான் பதிகம் பாட மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுபவனைப்போல் உயிர்பெற்று எழுகிறான். அப்பூதி யடிகளின் மகன் உயிர்பெற்று எழுந்த பின்பு தீய காரியம் வீட்டில் நடந்துவிட்டதனால் அக்குற்றம் போக்க "புகழ்ந்த கோமயத்து நீரை" விடெங்கும் தெளித்து, தீபம் ஏற்றிவைத்து பின் திருநாவுக் கரசருக்கு அமுது படைக்கத் தொடங்குகிறார்கள்.

"நிகழ்ந்த அக்கதலி நீண்ட
குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய்
வலம்பெற மரபின் வைத்தார்."

நிகழ்ந்த அக்கதலி, இவ்வளவு நிகழ்ச்சிக்கும் காரணமாக இருந்தது அந்த இலை. நீண்டகதலி இலை மட்டும் நீளமாக இல்லை, வரலாற் றையும் நீட்டிவிட்டது. நீண்ட குருத்தினை விரித்து நீரால் மகிழ்ந் துடன் விளக்கி, சுருண்டிருந்த இலைதானே அதில் அழுக்கு இருக் காது என்று எண்ணக்கூடாது. அதையும் நீரால் கழுவவேண்டும். இதையெல்லாம் அப்பூதியடிகள் வீட்டிலே செய்தார்கள். இப்படி யெல்லாம் செய்தார் என்று கூறி, நாமும் அப்படிச் செய்யவேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார். இன்னொன்றும் செய் தார்கள். நமக்கெல்லாம் தெரிந்தது நுனி இடப்பாகத்திலிருக்கும்படி போடவேண்டும் என்பது. சேக்கிழார் எப்போதும் மங்கலமாகச் சொல்லுகிறவர். இடத்தைவிட வலம் பெருமை உடையது ஆகை யினாலே இடப்பாகம் நுனியமைத்துப் போட்டார்கள் என்று கூறாமல் அறுத்தபாகம் வலத்தில் வரும்படி போட்டார்கள் என்று கூறுகிறார். "*ஈர்வாய் வலம் பெற மரபின் வைத்தார்.*" அதையும் மரபுப்படி போட்டார்கள் என்கிறார்.

என்ன மரபு? நாம் வலது கையினல் உண்ணுகிறோம். உண்ணுகின்ற பகுதி அகலமாக இருந்தால் உணவைப் பிசைந்து உண்ணுகின்றபோது கீழே கொட்டிப் போகாமல் இருக்கும் நுனிப்பகுதி குறுகியும் அறுத்த வலது பகுதி அகலமாகவும் இருக்கும். நாம் இவ்வளவு நாட்களும் நுனி இடது பக்கமாக இருக்கவேண்டும் என்று போடுகிறோமே தவிர அதையேன் அப்படிப் போடவேண்டும் என்பது நமக்குத் தெரியவில்லை. விரிந்தும் விரியாமல் இருக்கின்ற குருத்தில் நாம் உணவைப் பிசைகின்ற பகுதி சிறிது உறுதியாகவும் காய்கறி வைக்கின்ற பகுதி ஓரளவு மென்மையாகவும் இருக்கும். இப்படிச் சாதாரணமான செய்திகளைக்கூட விட்டுவிடாமல் சொல்லுகிறார் சேக்கிழார் பெருமான்.

## குளநிறைத்த நீர்த்தடம்போல் குளிர் தூங்கும் பரப்பினது

தண்ணீர்ப் பந்தல் வைக்கிறார் அப்பூதியடிகள். அந்தத் தண்ணீர்ப் பந்தல் எப்படி அமைந்திருக்கிறது. தண்ணீர்ப் பந்தரை மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் வைத்தால் பயனில்லை. தண்ணீர் ஏற்கெனவே இருக்கின்ற பகுதியில் வைத்தாலும் பலன் இல்லை. குளிர் காலத்தில் வைத்தாலும் யாரும் நீர் பருக வரமாட்டார்கள். எண்ணற்ற மக்கள் நடமாடிக் கொண்டிருக்கிற பாதையின் ஓரத்தில், அந்தத் தண்ணீர் பந்தலுக்கு முன்னும் பின்னும் மரங்கள் வளர்த்து வெய்யிலிலே வேட்கையின் வேகத்தோடு வந்து குளிர்ந்த நீரைக் குடித்தால் தொண்டை கட்டிக் கொள்ளும்; விக்கித்துப் புரை ஏறிவிடும். எனவே தண்ணீர்ப் பந்தரை அடையும் முன்பே சிறிது தூரம் மர நிழலில் வந்தால் உடலில் இருக்கிற வெப்பம் தணிந்துவிடும். அதற்குப்பின் நீரைப்பருகி மீண்டும் சிறிது தூரம் நிழலிலே சென்று பின் வெயிலில் சென்றாலும் இடையூறு ஏற்படாது. இதனைச் சேக்கிழார் பெருமான் வெகு அழகாக தமக்கே உரிய தனிச்சொற்களால், இனிமையோடு ஒரே பாடலில்.

"அளவில்சனம் செலவொழியா
 வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய்
 உறுவேனிற் பரிவகற்றிக்
குள நிறைந்த நீர்த்தடம்போல்
 குளிர் தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண்
 ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்"

எனக் கூறியருளுகிறார். இப்படி அப்பூதிபடிகள் வைத்தார் என்று கூறி, தண்ணீர்ப் பந்தல் வைக்கும் முறையை நமக்குக் கூறுகிறார்.

## நானிலத்துள்ளோர் யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை

தண்ணீர்ப்பந்தல் வைப்பதும் காவளர்ப்பதும் சமுதாயத்திற்குச் செய்கின்ற திருத்தொண்டுகள். நாவுக்கரசர் பெருமான் அத்

தொண்டுகளைச் செய்தார். அதையே தான், "வடிவு தாங்காணு ராயும் மன்னு சீர் வாக்கின் வேந்தர் அடிமையும் தம்பிரானுர் அருளும் கேட்டு, "திருநாவுக்கரசருக்கு மாணவராக விளங்கிய அப்பூதியடி களும் செய்து வந்தார். நாவுக்கரசர் இம் முடிவிலா அறங்களை இளமையிலேயே செய்தவர். புகழனுராகிய தந்தையார் மறைந்த பின்பு, தாயாராகிய மாதினியாரும் கற்பு நெறி வழுவாமல் கணவனுருடன் சென்றுர். திலகவதியாருக்கு மணம் பேசிய கலிப் பகையாரும் போர்க்களத்தில் உயிரைக் கொடுத்துப் புகழ் கொண்டார். இச்செய்தியினைக் கேட்ட திலகவதியாரும் உயிர் விடத் துணிந்தார்.

இந்த நிலையில் மருணீக்கியார் தமக்கையார் திருவடியில் வீழ்ந்து, மிகப்புலம்பி உங்களுக்கு முன் உயிர்விட்டுவிடுவேன் என்று சொல்ல,

"தம்பியார் உளராக
வேண்டும்" என வைத்ததயா
உம்பருலகு அணையவரு
நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது
அனைத்துயிர்க்கும்" அருள்தாங்கி,
இம்பர் மனைத் தவம்புரிந்து
திலகவதியார் இருந்தார்.

இப்படியெல்லாம் ஏற்பட்ட துயர்களை மறக்கவும், நில்லாத உலகியல்பு கண்டு, நிலைபெறும் அறங்கள் செய்ய விரும்பினுர் மருணீக்கியாராக இருந்த திருநாவுக்கரசர். காசினிமேல் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினுல் ஆசில் அறச்சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தார்.

கா வளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றுர்.

திரு நந்தனவனங்களிலே வைக்கின்ற செடிகளும் மரங்களும் வளர்ந்து கொண்டே இருக்கவேண்டும். அதனுல் அதனைக் "**கா வளர்த்தும்**" எனக் கூறினுர். திருக்குளங்களை எப்போதும் தூர் சேர்ந்து விடாமல் தோண்டிக் கொண்டே இருக்கவேண்டும் என்ப ததனைக் "**குளம் தொட்டும்**" என அருளினுர். தன்னை நாடி வருபவர் கள் வேண்டும் எனக் கேட்கும் முன்னரே கொடுக்கவேண்டும்,

அவர்கள் மனம் நிறைவு பெறும் வகையில் முகம் கோணுது கொடுக்க வேண்டும் என்பதை "**கடப்பாடு வழுவாமல் மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும்**" 'என்றவர்' விருந்தை எதிர்பார்த்துக் கொடுக்கவேண்டும் என்பதை "**விருந்தளித்தும்**" என்று கூறியருளினர். இவ்விரண்டையும் கேட்பதற்கு முன்னரே கொடுக்க வேண்டும் என்பதனுல், இரண்டிற்கும் பொதுவாக '**அளித்தும்**' என்ற ஒரே சொல்லைக் கையாண்டார். அறிஞர்களும் கவிஞர்களும் வறுமையில் வாடினுல் அவர்கள் இந்த உலகுக்குத் தேவையான அற நெறிகளை அருளிச்செய்யமுடியாது ஆகையினுல் அவர்கள் கேட்கு முன்னரே கொடுக்கவேண்டும், அதனையும் அவர்கள் வேறு ஒருவரிடம் சென்று கைநீட்டிக் கேட்கவேண்டாத அளவுக்கு வளம் பெருகக்கொடுக்கவேண்டும் என்பதை உணர்த்த **நாவலர்க்கு வளம் பெருக நல்கியும்** என்று அருளிச்செய்தார். வறியார்க்கு ஈதலும், விருந்து கொடுத்தலும், புலவர்களைப்புரத்தலும் அவர்கள் கேட்கும் முன்னரே செய்யவேண்டும். இதில் வறியார்க்கு ஈதலும், விருந்தோம்பலும் எப்பயனையும் கருதாமல் செய்பவை ஆகையினுல் அவ்விரண்டிற்கும் அளித்தும் என்ற ஒரேசொல்லைப் பயன்படுத்திய சேக்கிழார், புலவர்களைப் புரத்தல், அவர்கள் சமுதாயத்திற்கு ஏற்ற அறநெறிகளைச் செய்ய வேண்டும் என்ற பயனை எதிர்நோக்கிச் செய்வதனுல், அவற்றினும் இவ்வறம் மாறுபட்டது என்பதை உணர்த்த இதற்கு "**நல்கியும்**" என்ற ஒரு தனிச் சொல்லைப் பயன் படுத்தினுர். இப்படி ஒவ்வொருவருக்கும் அவரவர் செல்லும் துறைக்கு ஏற்றதான தவிர்க்க முடியாத அறங்களை செய்தார் என் பதனை "**யாவருக்குந் தவிரரத ஈகை வினைத்துறை நின்ருர்**" என்று சேக்கிழார் கூறுகிருர்.

"காவளர்த்தும் குளந் தொட்டும்" என்ற சொல் இருக்கிறதே இதனைச் சேக்கிழார் பெருமான் திருஞான சம்பந்தரிடத்திலே இருந்து எடுத்தாள்கிருர். கொடி மாடச் செங்குன்றூர் எனப் பெற்ற திருச் செங்கோட்டிலே திருநீலகண்டப் பதிகத்தை ஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த போது "**காவினை இட்டும் குளம்வரத் தொட்டும்**" என்று அருளுகிருர். தமக்கே உரிய தனித்திறமையோடு சேக்கிழார், "காவளர்த்தும் குளம் தொட்டும்" என்று கூறியருளினுர். பின் திருநாவுக்கரசருடைய மாணவராகிய அப்பூதியடிகள் வரலாற்றிலும் அதே செய்தியினை அதே முறையில் சொல்கிருர்.

## கீறு கோவணம் அன்று நெய்த கோவணம்

சேக்கிழார் பெருமான் சொல்லாத தொழிலே இல்லை என்று நாம் சொல்வதுண்டு. மண்பாண்டம் செய்கின்ற தொழில் திருநீலகண்டரிடத்திலே; திருக்குறிப்புத் தொண்டரிடத்திலே துணி துவைக்கின்ற தொழில்; சிலப்பதிகாரத்திற்குப் பின் இசையைப் பற்றி மிக நுணுக்கமாகக் கூறுகின்ற நூல் பெரிய புராணம் [ஆனய நாயனுர் புராணம்]; மற்றும் அரசு, அமைச்சு, வாணிபம் இப்படி, எல்லாத் தொழில்களும் பெரிய புராணத்திலே வருகின்றன.

ஒரு முறை நாம் இப்படி எல்லாத் தொழிலும் வருகின்றன என்ற கருத்தில் சொற்பொழிவாற்றி விட்டுச் சென்று விட்டோம். அது அறிஞர்கள் நிரம்பிய அவை. அந்த அவையில் நம் சொற் பொழிவைக் கேட்ட ஒருவர்—நெய்கின்ற தொழில் செய்கின்றவர்; பின்னர் நமக்கு ஓர் அஞ்சல் எழுதியிருந்தார். "துணி நெய்கின்ற தொழிலைச் சேக்கிழார் பெருமான் சொல்லவில்லையே!" என்று எழுதி யிருந்தார்.

அமர்நீதி நாயனுருடைய தொழில் கோவணம் நெய்கின்ற தொழில். சிவபெருமான் அவரிடத்தில் கோவணத்தைக் கொடுத்து மறைத்து விட்டுத் தான் கொடுத்த கோவணம்தான் வேண்டும் என்கிருர். அதற்கு அமர்நீதி நாயனுர் சொல்லுகிருர். "**நாம் கொடுக்கும் கோவணம் கீறு கோவணம் அன்று நெய்த கோவணம்.**" ஒரு பெரிய துணியினைக் கிழித்துக் கோவணமாகச் செய்யலாம்; அது கீறு கோவணம்; அப்படிக் கிழிக்காமல் கோவண மாகவே நெய்வது நெய்த கோவணம் என்று செய்தியை அவருக்கு நினைவு படுத்தி மறுமொழி எழுதினேம்.

வேளாண் தொழிலைப் பற்றிப் பல இடங்களிலே சிறப்பாகக் கூறுகின்ருர். இன்னும், தோல் தொழில், நரம்புத் தொழில், மீன் பிடித்தல் போன்ற பல தொழில்களையும் கூறுகின்ருர் சேக்கிழார்.

### "பொன்தங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க!"

சமுதாயத்தின் துன்பங் கண்டு இரங்குகின்ற ஒன்று சமுதாய நோக்கிலே குறிப்பாகக் காணவேண்டிய ஒன்று. இதை நாயன் மார்கள் செய்தார்கள் என்பதை விட நாயன்மார்களுடைய இல்லக் கிழத்தியார்கள் செய்திருக்கிருர்கள்.

வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனுருக்குக் குண்டையூர்க் கிழார் நெல்மலை கொடுக்கிருர். வன் தொண்டப் பெருந்தகை யாருக்குக் கொடுக்க நெல் இல்லையே என்று குண்டையூர்க்கிழார் வருந்த, அவர் கவலை போக்கிச் சிவபெருமான் நெல்மலை கொடுக் கிருர். அது கண்டு மகிழ்ந்த குண்டையூர்க்கிழார் மகிழ்ந்து 'நுமக்காகச் சிவபெருமானே அளித்த நெல் இது. மனிதரால் எடுக்கும் எல்லைத் தன்று நெல் மலையின் ஆக்கம்," என்று வன் தொண்டரிடம் கூறுகிருர். அது கண்டு வியப்புற்ற வன் தொண்டர், 'இந்நெல்மலையைப் பரவையார் இல்லத்திற் கொண்டு சேர்க்கத் தண்ணிலவு அணிந்தார் தாமே ஆள் கொடுத்தால் அன்றி இயலாது' என எண்ணி, அருகிலுள்ள கோளிலியில் சிவபெருமான் கோயிலினை வந்தெய்திப் பதிகம் பாடினுர். இறைவனுர் குறட்பூதப் படையை அனுப்ப, அவை அந்நெல்மலையைத் திருவாரூர்த் தெருவு தோறும் நிறைத்து விட்டன.

வன்தொண்டர் தமக்களித்த
நெற்கண்டு மகிழ்சிறப்பார்
"இன்றுங்கள் மனை எல்லைக்
குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற்
புகப்பெய்து கொள்க" என
வென்றிமுர சறைவித்தார்
மிக்கபுகழ்ப் பரவையார்.

வன் தொண்டர் பரவையாருக்காகக் கொண்டு வந்த நெல்; நெல்லே கிடைக்காத வறுமைக் காலம் அது; அந்நிலையில் தமக்குக் கிடைத்திருக்கின்ற நெல்லையெல்லாம் வறுமையில் வாடுகின்ற சமுதாயத்திற்காகக் கொடுக்கின்றார் பரவையார். உணவிற்கு நெல் கிடைக்கவில்லையே தவிர மற்றபடி அவ்வூர் மக்களிடம் இதர செல்வங்கள் இருந்தன என்பதைப் "பொன் தங்கு மாளிகை" என்ற ஒரு சொல்லே உணர்த்தும்.

## கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே !

சுந்தரமூர்த்தி நாயனார், கொங்கு நாட்டிலே, அவிநாசி என வழங்கும் திருப்புக்கொளியூர் வழியாக வருகிறார். புக்கொளியூர் என்பது ஊரினுடைய பெயர்; அவிநாசி என்பது அங்கு திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய பெயர். ஆயின் தற்காலத்தில் ஊரின் பெயரே அவிநாசி என வழங்கப் பெற்று வருகின்றது. அவர் அவ்வூர் வழியாக வரும் பொழுது ஒரு வீட்டிலே, மங்கல இசை கேட்கின்றது. ஒரு வீட்டிலே அழுகை ஒலி கேட்கின்றது. இரண்டையும் சுந்தரர் செவிமடுக்கின்றார். மற்றவர் களாயிருந்தால்—ஒரு வீட்டிற்குச் செல்ல வேண்டும் எனக் கருதி யிருந்தால் மங்கல ஒலி கேட்கின்ற வீட்டிற்குத் தான் செல்ல விரும்பு வார்கள். அழுகை ஒலி கேட்கிற இல்லத்திற்குச் செல்ல விரும்ப மாட்டார்கள். வன் தொண்டராகிய சுந்தரர் மங்கல ஒலி கேட்கின்ற இல்லத்தை விட்டு விட்டு, அருகில் இருப்பவர்களை, "அந்த வீட்டில் ஏன் அழுகை ஒலி கேட்கின்றது?" என வினவுகின்றார். அதற்கு அங்கிருந்தோர்," இரு இல்லங்களிலும் ஒத்த வயதுடைய இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் குளத்திலே நீராடச் சென்றார்கள். அப்போது அவர்களுக்கு வயது ஐந்து. அந்த இரு சிறுவர்களிலே அழுகை ஒலி கேட்கின்ற வீட்டுச் சிறுவனை நீராடும் போது முதலை உண்டு விட்டது. மங்கல ஒலி கேட்கின்ற வீட்டுச் சிறுவனுக்கு இன்று முந்நூல் அணியுங் கலியாணம் நிகழ்கின்றது; புதல்வனை இழந்த பெற்றோர் 'நம் மகனும் இருந்தால் இன்று உபநயனம் செய்யலாமே ! என அழுகின்றார்கள்!" என்று கூறினர்.

அச்சமயத்தில், புதல்வனை இழந்த பெற்றோர், வன்தொண்டர் எழுந்தருளியிருக்கிறார் எனக் கேள்வியுற்று, தங்கள் சித்தத்தில்

இருக்கும் துக்கத்தை மறந்து, அவர் முன் வந்து அடி பணிந்தார்கள். துன்பம் அகல முகம் மலர்ந்து தொழுகின்ற அவர்களை எதிர் வணங்கி, நாம் வந்ததற்கே தம் புதல்வனை இழந்த துயரத்தையும் மறந்து மகிழ்ச்சி கொண்ட அவ் அந்தணாளர்கள் "தம் புதல்வனை அம் முதலை யின் வாயில் இருந்து அழைத்துக் கொடுத்தே அவிநாசிப் பெருமான் அடி பணிவோம்" என்று கருதி அவர்களையும் அழைத்துக் கொண்டு அப் பொய்கைக் கரைக்குச் சென்றார். குளத்தின் கரையில் வந்து அவிநாசியப்பரை நினைந்து,

உரைப்பார் உரையுகந்து
உள்கவல்லார் தங்கள் உத்தியாய் !
அரைக்காடு அரவா
ஆதியும் அந்தமும் ஆயினாய் !
புரைக்காடு சோலைப்
புக்கொளியூர் அவிநாசியே !
கரைக்கால் முதலையைப்
பிள்ளைதரச் சொல்லுகாலனையே !

எனப் பாடினார். எப்போதுமே சுந்தரர் அதிகமாகப் பணிந்து சொல்லமாட்டார். ஏனென்றால் அவர் தம்பிரான் தோழர். உரிமை யோடுதான் கூறுவார். குண்டையூர்க்கிழாரிடம் பெற்ற நெல் மலையைக்கூட "சில நெல்" என்றுதான் கூறுகிறார்.

"... குண்டையூர்ச் சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப் பணியே!"

எனத்தான் பாடுகின்றார். அதைப்போலவே இங்கும், "***கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே!***" என அருளுகின்றார். இறந்துபோன சிறுவனின் உடல் முதலையிடம் இருக்கிறது. ஆனால் உயிர் காலனிடம் இருக்கிறது. இவர் இவ்வாறு உரிமையோடு கேட்டதும், அவிநாசி எந்தை பெருமான்,

திரைப்பாய் புனலின் முதலைவயிற்று
உடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்தது என நிரம்ப
முதலைவாயில் தருவித்தான்.

அம்மறையோன் மைந்தன் இப்போது உயிரோடு இருந்தால் என்ன பிராயத்தில் இருப்பானோ அவ் வயதிற்கான வளர்ச்சியுடன் பெரு வாய் முதலை கரையின் கண்கொண்டு வந்து உமிழ்ந்தது. அதனை கண்ட அவன் தாய் ஓடிச் சென்று எடுத்துக் கொண்டு வந்து தங்கள் பிள்ளைக்கு உயிர் கொடுத்த திருவாளராகிய சுந்தரரின் திருவடிகளில் சீல மறையோனோடு வீழ்ந்தாள்.

இதனைத் திருவருட்பிரகாச வள்ளற்பெருமான் மிக்க அற்புதமாகச் சொல்லுவார். தண்ணீர் வந்தது எனச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்யவில்லை. முதலை வந்தது; அதன் வாயில் இருந்து மதலை வந்தது' என மட்டும் சொல்லுகிறார். ஆனால் வள்ளற்

பெருமான் சொல்லுவார், ''நம்பியாரூரரே, நீங்கள் ஒரு சொல் சொல்லி விட்டீர்கள்! அதற்காக இறைவன் எத்துணை செயல் செய்ய வேண்டியிருக்கிறது? முதலையைப் பிள்ளை தரச் சொல் காலனையே என்று மட்டும்தான் சொன்னீர்கள். அந்த ஒரு சொல்லுக்காகக் குளத்திலே நீர் வந்தது, முதலை வந்தது, எமனிடமிருந்து உயிர் வந்தது, முதலையிடமிருந்து மதலை வந்தது. இவ்வாறு எத்துணைச் செயல்களைச் சிவபெருமான் செய்திருக்கிறார். உன்னுடைய சொல்லுக்கும் வேதத்தினுடைய சொல்லுக்கும் எடை போட்டுப் பார்த்தால் என்ன எனத் தோன்றுகிறது. நீங்கள் அருளிய அருமைத் தேவாரத் திருமுறையின் ஒரு சொல் இத்துணைச் செயல்களைச் செய்கிறது. உங்கள் சொல் ஒரு மேருமலை என்று சொன்னால், வேதம் அணுப் போல,'' என்று சொல்லுகின்றார்.

இலைக்குள நீர் அழைத்து அதனில்
இடங்கர்உற அழைத்து அதன்வாய்
தலைக்குதலை மதலைஉயிர்
தழைப்ப அழைத்து அருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற்
கலைக்கும்உறு கணக்கு உயர் பொன்
மலைக்கும்அணு நிலைக்கும் உரு
வன்தொண்டப் பெருந்தகையே!

என அருளுகின்றார் வள்ளலார். சமுதாயத்தில் ஒரு துயர் காணும் போது வன்றொண்டராகிய சுந்தரர் எவ்வாறு அத்துயரை அகற்றி நலம்புரிகின்றார் என்பதனை இவ்வருள் நிகழ்ச்சி காட்டும்.

## கவின் மருகற் பெருமானே காவாய்!

திருஞான சம்பந்தப் பெருமான் திருமருகல் என்ற தலத்திற்கு எழுந்தருளுகின்றார். அவர் திருக்கோயிலுக்கு எழுந்தருளுகின்ற காலை நேரத்தில் ஓர் அழுகுரல் கேட்கின்றது. நாமாக இருந்தால் கோயிலுக்குச் செல்லுவதை விட்டு விட்டு அழுகை ஒலி கேட்கின்ற இடத்திற்குச் செல்வோமா? முதலிலே கோயிலுக்குச் சென்று வணங்கி விட்டுப் பின்னர் அழுகை ஒலி என்ன என்று பார்ப்போம் என எண்ணுவோம். ஆனால் திருஞான சம்பந்தப் பெருமான் முதலிலே அழுகை ஒலி என்ன எனப் பார்த்து விட்டுப் பின் திருக்கோயிலுக்குச் செல்ல நினைக்கிறார். அப்படி அழுகின்ற அப் பெண்ணும், சென்னி இளம்பிறை அணிவார் கோயிலின் வாயில் திசை நோக்கித் தொழுது அழுகின்றாள். சிவபெருமானிடம் முறையிடும் அழுகுரலாய் இருக்கின்றது. அந்த அழுகை ஒலியைச் சேக்கிழார் பெருமான் சொல்கின்றார். தான் உடன் போக்காக வந்த அந்த மணமகன் அரவு தீண்டி இறந்து விட்டான். வாளரவு அவனைத் தீண்ட தான் அவனைத் தீண்ட முடியாமல் அழுது அரற்றுகின்றாள். மீண்டு தந்தையிடமும் செல்ல முடியாது; கணவனாக எண்ணியவனும் போய் விட்டான். இந்த இக்கட்டான நேரத்தில் கடவுளைத் தவிர அவளுக்கு வேறு துணையில்லை. அவள் வேண்டி அழுகின்றாள் :

"அடியாராம் இமையவர்தம் கூட்டம் உய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்
நெடியானும் நான்முகனும் காணுக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமன் உயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழுங்
கவின் மருகற் பெருமானே! காவாய்!"

என்றும் முறையிட்டுப் புலம்புகிருள்.

என் போல அடிமை பூண்ட தேவர்கள் உய்யும்படியாக அவர்கள் வேண்டிய போது அலைகடலில் தோன்றிய ஆல கால நஞ்சுண்ட அமுதே! நீ உண்ட நஞ்சும் இன்று எல்லாரும் வணங்குகின்ற அமுதமாக இருக்கின்றது. அன்று அமரர்களுக்காக நஞ்சு உண்டாய்! இன்று எனக்குக் கணவனுகை வேண்டியவன் நஞ்சுண்டு அமரனுகி விட்டான். எனவே நீ அந்த நஞ்சை உண்டு, அவனுக்கு அருள் செய்ய வேண்டும். அரியும் அயனும் காணு தற்கு அரியவனுகிய நீ உடம்பெல்லாம் அரவத்தை ஆபரணமாக அணிந்திருக்கிருய். அதுவும் நீல விட அரவு. அதனை நீ முடியிலும் சூடியிருக்கிருய்! உடம்பிலும் அணிந்திருக்கிருய்! எனவே பாம்பு உனக்கு அடிமையானதுதானே! என்னைப் போன்ற ஒரு பெண்ணுகிய இரதி உன்னை வேண்டினுள் என்பதற்காக, வெந்து பொடியான அவளுடைய கணவனுகிய மன்மதனை உயிர்ப்பித்தாய்! ஆனுல் என் காதலனின் உயிர்மட்டும்தான் இல்லை. அவன் மன்மதனைப் போல் வெந்து பொடியாகவில்லை. என் காதலனுடைய உடல் அப்படியே இருக்கிறது. சாம்பலாக இருந்தவனையே உயிர்ப் பித்த நீ இவ்வுடலுக்கு உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும். மிகுந்த மணம் வீசுகின்ற மலர்ச் சோலைகளின் மருங்கிலே எழுந்தருளி யிருக்கும் மருகற் பெருமானே! மணத்தோடு இருக்க வேண்டிய யான், பிணத்தோடு மணமிழந்து மனமொடிந்து வேண்டுகின்றேன்! காப்பாயாக!" என வேண்டுகிருள்.

இவள் இவ்வாறு அழுது அரற்றுகின்ற ஒலி திருஞான சம்பந்தரின் திருச் செவிகளிலே கேட்கின்றது. எனவே திருக் கோயிலுக்குச் செல்வதை விட்டு விட்டு அப்பெண் இருக்கின்ற இடத்துக்குச் சென்று, "அஞ்சற்க! நீ யார்? ஏன் அழுகின்ருய்? சொல்" என்கிருர். உடனே அப்பெண் கரமலர்கள் உச்சியின் மேற் குவித்துக்கொண்டு, கண்கள் அருவி போல நீர் சிந்த' திருஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து, தாங்கள் போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்ருள். "என் ஊர் வளம் நிறைந்த வைப்பூர். என் தந்தை பெயர் தாமன். இதோ இங்கு அரவந் தீண்டி இறந்து கிடக்கின்ருனே, அவன் என் தந்தைக்கு முறை மருமகன். என் தந்தைக்கு என்னுடன் சேர்த்து ஏழு பெண்கள். அப்பெண்களில் மூத்தவளை இவனுக்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறிய என்

தந்தை, பணம் பெற்றுக் கொண்டு வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்துவிட்டார். அடுத்தவள் அடுத்தவள் என்று கூறி என்னைத் தவிர மற்ற அறுவரையும் அவ்வாறே மணம் செய்து கொடுத்துவிட்டார். இது கண்டு இவர் மிக்க கவலை கொண்டார். இனியிருந்தால் என்னையும் என் தந்தை எவனாவது ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்து விடுவார் என எண்ணி உடன்போக்காக இவருடன் வந்துவிட்டேன். வந்த இடத்தில் இவரைப் பாம்பு தீண்ட இறந்து விட்டார்! இந்த நிலையில் நான் என் தந்தையிடமும் திரும்பிச் செல்ல முடியாது நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்தவர் போலத் திசை தெரியாது நின்றேன்! என் உறவினர் போல வந்து என் துயர் நீங்க அருளிச் செய்தீர்'' என்றாள்.

இது கேட்ட திருஞான சம்பந்தர் இவளுக்கும் அருள் பாலிக்கும் பொருட்டு பணிமருகற் பெருமானைப் பாடலுற்றார். அது அகப் பொருள் துறையிலே அமைந்த பாடலாயினும் இந்தப் பெண்ணைக் குறித்துப் பாடப்பட்ட பாடலாகவே தோன்றும். இந்தப் பெண் வேறொருவரை நோக்கிப் பாடவில்லை.

> ''சடையாய் எனுமால்! சரண்நீ எனுமால்!
> விடையாய் எனுமால்! வெருவார் எனுமால்!
> மடையார் குவளை மருவும் மருகல்
> உடையாய் தகுமோ? இவள்உள் மெலிவே!''

''திருமருகலிலே இருக்கின்ற *பெருமானே! இவள் வருந்துவது சரி தானா? இவள் உன்னையல்லவா எண்ணி வருந்துகிறாள்!'' எனப் பாடினார். சிவபெருமானுடைய திருவருளினாலே, அவன் விடம் நீங்கி எழுந்திருந்தான். திருஞான சம்பந்தரே உடனாக இருந்து திரு மணத்தை முடித்து அவர்களை வழியனுப்பி வைத்தார்.

இப்படிச் சமுதாயத்திலே குறைபாடு காணும் பொழுதெல்லாம் சமுதாயத்திற்கு இடர் வந்துற்ற பொழுதெல்லாம் வந்து அருள் செய்வார்கள். ஆனால் ஒன்று அச் சமுதாயம் சமய எண்ணத்தோடு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சமுதாயத்திற்கு அடியார்கள் தெய்வம் போல் எழுந்தருளி அருள்பாலிப்பார்கள்.

### ''அடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க!''

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையிலே படிக்காசு பெற்று அமுது செய்விக்கிறார்கள். அங்கு ஏற்பட்டிருந்த பஞ்சம் நீங்கும் வரை அத் திருத் தொண்டினைச் செய்தார்கள். அடியார்களுடைய துன்பத்தை நீக்குவதற்காகச் சிவபெருமான் அவர்கள் இருவருக்கும் படிக்காசு கொடுத்தார். பரவையார் எப்படி திருவாரூர்த் தெருவுதோறும் குவிந்திருந்த நெல்மலையை ''இன்றுங் கள் மனை எல்லைக்குட்படு நெற் குன்று எல்லாம் பொன் தங்கு மாளிகையில் புகப் பெய்து கொள்க!'' என வென்றி முரசு அறை வித்தாரோ அது போல,

"அல்லார் கண்டத்து அண்டர் பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லாறு இயன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்க!" என
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் ;
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்!"

என அருளுகின்றார் சேக்கிழார் பெருமான். அந்தப் பெருமான் நீலமணிமிடற்று ஒருவன். அவனுடைய கண்டம் பிறருடைய துன்பம் கண்டு இரங்கியது. தேவர்கள் சிவபெருமானை மறந்து விட்டுத்தான் பாற்கடல் கடையச் சென்றார்கள். பாற்கடல் கடைந்த பொழுது அமுதம் வந்திருந்தால் தேவர்கள் சிவபெருமானை நினைத்திருக்க மாட்டார்கள். நஞ்சு வந்ததும்தான் அஞ்சி ஓடி வந்தார்கள். சிவபெருமான், "எம்மை நினையாமல் சென்றீர்கள். எனவே உங்களுக்கு இப்படித்தான் வேண்டும்" என்று சொல்ல வில்லை. இப்பொழுதாவது வந்தார்களே எனக் கருதி, ஆலால சுந்தரர் மூலமாக அக் கொடிய ஆல காலத்தை எடுத்து வரச் செய்து உண்ணுகின்றார். பெருமானின் கருணைக்குக் காட்டாக விளங்கும் அந்நஞ்சு, நைந்து போகாமல் எல்லாரும் வணங்கும்படியாக நீல கண்டமாக விளங்குகிறது. நாயன்மார்களிலே—தனியடியார்களிலே முதலாவதாக விளங்குகின்றவரும் கடைசியாக விளங்குகின்றவரும் திருநீலகண்டராகவே இருக்கின்றார்கள். எனவேதான் சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில்கூட திரு நீலகண்டத்துக் குயவனார், எனவும் திருநீலகண்டத்துப் பாணனார், எனவும் இவர்கட்கு மட்டும் குலப் பெயரைக் குறிப்பிடுகின்றார். சுந்தரரும் சரி, சேக்கிழார் பெருமானும் சரி, திருநீலகண்டத்துக்குச் சிறப்புத் தரும் பொருட்டே முதலிலும் கடைசியிலும் திருநீலகண்டத்தை வைத்துப் பாடியருளி யிருக்கிறார்கள். எனவேதான் திருஞான சம்பந்தரும், திருநாவுக் கரசரும் அப்படிக்கொத்த "கருணைக் கிடமான நீலகண்டத்தை உடைய பெருமான் அருளால் பெற்ற படிக்காசினைக் கொண்டு செய்கின்ற அமுதினைப் பரமன் அடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க !" எனப் பறையறைவிக்கிறார்கள். அதிலே ஒரு சிறு குறிப்பு, பாரம்பரியமாக அடியார்களாக இல்லாமல் பஞ்சத்திற்காக அடியார்கள் ஆனவர்களாக இருந்தாலும் சரி எல்லாரும் எய்தி உண்க ! என்பது தோன்றத்தான், 'பரமன் அடியார் ஆனார்கள்' என்று சேக்கிழார் அருளுகின்றார். சமுதாயம் பஞ்சம், பட்டினி இல்லாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்நிகழ்ச்சி இங்குக் கூறப்பெறுகிறது.

இப்படி எல்லாத் துறைகளிலும் எல்லாத் தொழில்களையும் கூறுவதோடு அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நான்கு பேறுகளையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு

வழிகளையும், தத்துவத்திலும் சரி வரலாற்றிலும் சரி எந்தக் கண் கொண்டு பார்த்தாலும் அதற்குகந்து விளங்குகின்ற ஒரே நூல் பெரிய புராணம்.

## பொருள் கொண்டு விடாமல் என்பால் கொடுவாரும்!

திருநாவுக்கரசர் சமணராக இருந்து சைவராக ஆன போது அரசன் அவரை அழைத்து வரும்படி அமைச்சர்களை அனுப்பு கின்றான். அதைக் கூறுகின்ற பல்லவமன்னனாகிய மகேந்திரவர்மன் சுவையாகச் சொல்லியனுப்புகின்றான். "தருமசேனன் இப்போது திருநாவுக்கரசு என்னும் பெயரோடு இருக்கின்றான். நீங்கள் சென்று அவன் கூறுகின்ற பொருளையோ அல்லது கையூட்டாகத் தருகின்ற பொருளையோ கொண்டு வராமல் அவனையே கொண்டு வாருங்கள் என்று கூறுகிறான். இதனைச்சேக்கிழார் "**பொருள் கொண்டு விடான், என்பால் கொடுவாரும் எனப்புகின்றான**" என்று அருளிச் செய்கின்றார். இதன் மூலம் கையூட்டுப் பெறுகின்றவர்கள் மகேந்திரவர்ம பல்லவன் காலத்திலும் இருந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நாம் அறிகின்றோம்.

## "இன்னல் தரும் இழிபிறவி இது தடை!"

கண்ணப்பர் மிக எளிமையாகச் சென்று சிவபெருமானை அடைந்தார்; ஆனால் நந்தனாரை மட்டும் ஏன் நெருப்பிலே குளிக்கச் செய்யும்படி நந்தனாருடைய கனவிலும், தில்லைவாழ் அந்தணருடைய கனவிலும் சென்று கூற வேண்டும் என்னும் வினா எழுகின்றது. கண்ணப்பருக்குச் சிவபெருமானைச் சென்று தொடு வதும் தொழுவதும் தவறு என்று படவில்லை. ஆனால் நந்தனாருக்கோ இன்னல் தரும் இழிபிறவி இது தடை என்ற எண்ணம் தூக்கத் திலும் கூட இருந்தது. சிவபெருமானே வந்து அழைத்தால் கூட நந்தனார் போகத் தயாராக இல்லை. எனவே தான் " *இப்பிறவிபோல் நீங்க ஏரியினிடை நீமூழ்கி முப்புரி நூல் மார்பவருடன் முன்னணைவாய்!*" என்னச் சிவபெருமான் வாக்காகவே அதனை அமைத்தருளுகின்றார் சேக்கிழார் எனவே இந்த ஓரிடத்திலே சேக்கிழார் பொதுமை நோக்கத்தை விட்டுவிட்டார் என்பது தவறு.

திருஞானசம்பந்தரை தம் மனையில் எழுந்தருளச் செய்த திருநீல நக்கரை அழைத்துத் திருஞானசம்பந்தார், "***நீலகண்டப் பெரும் பாணர்க்கு இன்று தங்க ஓர் இடம் கொடுத்தருளுவீர்***" என்ன, நீலநக்கர்,

> "நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
> சென்று மற்றவர்க்கு இடங்கொடுத்தனர் திருமறையோர்"

என்றல்லவா அருளிச் செய்கிறார் சேக்கிழார். திருமறை வேதிய ராகிய நீலநக்கர்' நீலகண்டப் பாணர்க்குத் தாம் தினமும் வேள்வி செய்கின்ற இடத்திலே இடம் கொடுக்கிறார். அவ் வேள்விச்சாலை யும் ஓரத்தில் ஒதுக்குப் புறத்தில் இல்லை. நடுமனையில் இருக்கிறது.

## மன்றுளார் அடியார் வான் புகழ்

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை அருளிச் செய்வதற்கு முன்னால், உணர்ந்து ஓதுதற்கு அரியவனும், நிலவு உலாவிய நீர்மலி வேணியனும், அலகில் சோதியனும், அம்பலத்தாடுவானுமாகிய இறைவனுடைய மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருந்தது இவ்வுலகெல்லாம்.

ஆனால் பெரிய புராணம் அருளிச் செய்யப்பட்ட பின் அடியார்களின் புகழே உலகெல்லாம் நிலவி நின்றது.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்."

என்பது சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணத்தின் இறுதிப் பாடல்.

இவ்வாறு சமுதாய நோக்கத்தில் மட்டுமல்ல, எந்த நேரத்தில் எந்தக் கண் கொண்டு எப்படிப் பார்த்தாலும் சிறந்ததாக விளங்குகின்ற ஒப்புயர்வற்ற ஒரு பெரும் அரியநூல் பெரிய புராணம். மூன்று கோணங்களில் நாம் கற்றறிந்து கொண்ட அளவு எடுத்துக் கூறினோம். அத் தூய சொல் மலர்ப் பொதி நலன் நுகர் தரு புனிதர்கள் நிறைந்த இப் பேரவை விதிமுறை உலகினில் விளங்கி வெல்க என வாழ்த்துகின்றோம்.

"வையம் நீடுக ! மாமழை மன்னுக !
மெய்விரும்பிய அன்பர் விளங்குக !
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக !
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

# கல்கத்தா தேசிய நூலகத்
# தமிழ்ச் சுவடிகள்

புலவர் மு. சண்முகம் பிள்ளை
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்
1979

முதற் பதிப்பு 1979

அவ்வை அச்சுக்கூடம்
சென்னை 600 013.

# முன்னுரை

பண்டைத் தமிழ்ச் சுவடிகளைக் கால வெள்ளத்திற்கு இரையாக்காமல் பாதுகாத்திருந்தால் தமிழ் இலக்கிய வரலாறு இன்னும் முழுமை பெற்றிருக்கக் கூடும். காலந்தோறும் நெருப்பிலும் நீரிலும் அழிந்தொழிந்த தமிழ் இலக்கிய, இலக்கண மருத்துவ, சோதிடச் சுவடிகள் மிகப் பலவாகும். அழிவினின்றும் தப்பிய தமிழ்ச் சுவடிகள் பலவும் இன்று தமிழகத்தை விட்டுத் தொலைவில் வெளிநாட்டு நூலகங்களில் உள்ளன. வெளிநாட்டு அரசு நூலகங்களில் உள்ள சுவடிகளைத் தக்கவாறு பயன்படுத்தித் தமிழ்ச் செல்வத்தை உலகுக்குணர்த்தும் பணி விரைவில் செய்ய வேண்டிய ஒன்றாகும்.

பாரிசு, லண்டன், ரோம், லிஸ்பன், ஹோப்பன் ஹாகன் முதலிய வெளிநாட்டு நகர நூலகங்களில் காணப்படும் தமிழ் ஏட்டுச் சுவடிகளின் விவரப் பட்டியல்களையும், தமிழகத்தில் உள்ள அனைத்து ஏட்டுச் சுவடிகளையும் ஒன்றாகத் திரட்டி அவற்றிற்குரிய விவரப்பட்டியல்களையும் தொகுத்து வெளியிடுவதே முதற்பணியாகக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னரும் சுவடிகள் பற்றிய தொகுப்பு விவரங்கள் சில வெளிவந்துள்ளன. ஆனால் உலக முழுவதும் கிடைக்கும் தமிழ்ச் சுவடிகளின் விவரப் பட்டியல் இன்னும் தொகுக்கப் பெறவில்லை. அத்தகைய தொகுப்பு நூல் தமிழாராய்ச் சிக்குப் புதிய கருவூலங்களைத் தரும் என்பதில் ஐயமில்லை.

அவ்வகையில் இந்நூல், கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள் பற்றிய விவரங்களைத் தொகுத்தளிக்கின்றது. இவ் ஏட்டுச் சுவடிகள் அனைத்தும் ***பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை*** அவர்கள் பல்வேறிடங்களில் முயன்று தொகுத்ததாகும். அவர் மறைவுக்குப் பின்னர் அவர்தம் குடும்பத்தினர் இச்சுவடிகளை இந்நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கினர்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இச்சுவடி பற்றிய விவரம் தமிழாராய்ச்சி உலகுக்குக் கிடைக்கின்றது. 'திவாகரம் ஆய்வு' தொடர்பாக நாங்கள் கல்கத்தா நூலகத்திற்கு 1979 சூன் திங்களில் சென்ற போது இச் சுவடிகளை ஆராயும் வாய்ப்பு ஏற்பட்டது. பேராசிரியருடைய ஏட்டுச் சுவடிகள் வகைப்படுத்தப் படாமல் இருந்தன. அவற்றை யெடுத்து இதுவரை யாரும் பயன்படுத்தி யதாகவும் தெரியவில்லை. திவாகரச் சுவடிகள் இத் தொகுப்பில் மறைந்து கிடந்தன. திவாகர ஏடுகளைத் தேடும்போது எல்லா

ஏடுகளையும் பார்வையிட்டு விவரக் குறிப்புகள் தந்து வகைப் படுத்துமாறு நூலகத்தினர் வேண்டிக் கொண்டனர். எங்களுக்குக் கிடைத்த குறைவான காலச் சூழலில் ஓரளவு அனைத்து ஏடுகளையும் ஆராய்ந்து சுருக்கமான விவரங்களையும் தந்துள்ளோம். தனித் தனியாக ஒவ்வொரு ஏட்டையும் கூர்ந்து ஆராய்ந்தால் மேன்மேலும் பல புதிய செய்திகள் கிடைக்கக் கூடும். ஆய்வுலகம் இவ் அரிய சுவடிகளைப் பயன்படுத்திக் கொள்ள இத் தொகுப்புநூல் துணைபுரியும் என நம்புகிறோம்.

தேசிய நூலக ஏட்டுச் சுவடிகளைக் குறித்து ஆராய்வதற்குப் பல பெருமக்கள் துணைநின்றனர். தமிழ்நூல் விவரப் பட்டியலைத் தொகுத்து வெளியிட்டுவரும் திரு. பி. நா. வேங்கடாச்சாரியார், தேசிய நூலகப் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு. நாகராஜன், தேசிய நூலகத்தின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பில் பணியாற்றும் திருமதி புஷ்பவேணி கோபி, துணை நூலகர்கள் திரு. பாலசுப்பிர மணியன், செல்வி சத்தியபாமா, மற்றும் நண்பர்கள் திரு. மகாலிங்கம், தமிழாசிரியர் புலவர் திரு. ஜெக. சீனிவாசன், திரு. பாலகிருஷ்ணன், திரு. நாராயணன், திரு. டி. டி சாரி, திரு. பழநியப்பன் ஆகியோர் எங்கட்குப் பெரிதும் துணைபுரிந்தனர். இவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரியது. இத்தமிழ்ப் புதையலைக் கண்டு ஆய்வுலகுக்கு வெளிப்படுத்தத் துணை நின்ற நூலகப் பொறுப்பாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

ஏட்டுச் சுவடிகள் பற்றிய செய்தியைக் கூறியதும் தமிழாய்வில் வெளியிடப் பெரிதும் ஊக்கம் தந்துதவிய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கட்கு நன்றி உரியது.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ், அறிவியல் ஆகியவற்றை நாளும் போற்றிப் புரக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பெருந்தகை பேராசிரியர் டாக்டர் ஜி ஆர். தாமோதரன் அவர்கள் இதனைத் தனி நூலாக வெளியிட வாய்ப்பளித்தார்கள். துணை வேந்தர் பெருந்தகை அவர்கட்கும், பல்கலைக்கழகத்தார்க்கும் தமிழுலகத்தின் நன்றி என்றும் உரியது.

இத் தொகுப்பு நூல் தமிழாய்வுக்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரியும் என்று நம்புகிறோம்.

**மு. சண்முகம்பிள்ளை**

**இ. சுந்தரமூர்த்தி**

# கல்கத்தா
# தேசிய நூலகம்
# தமிழ் ஓலைச் சுவடிகள்

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை,
அவர்கள்

தொகுத்த
இச் சுவடிகளை
அவர்தம் குடும்பத்தினர்
1960ஆம் ஆண்டில்
இந் நூலகத்திற்கு நன்கொடையாக
வழங்கினர்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | iii |
| ஆய்வுரை | ix |
| ஓலைச் சுவடிகள் விவரப் பட்டியல் | 1-55 |
| நூலாசிரியர் அடைவு | 57 |
| நூலடைவு | 57 |
| பொருட் குறிப்பு அடைவு | 60 |
| அருஞ் சொல், தொடர் அகரநிரல் | 63 |

# ஆய்வுரை

நம் பாரத நாட்டுத் தேசிய நூலகம் (National Library) வங்க நாட்டுத் தலைநகராகிய கல்கத்தாப் பெருநகரில் உள்ளது. இது நம் பாரத நாட்டுள்ள நூலகங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. நம் தாய்நாடு சுதந்திரம் பெற்ற அடுத்த ஆண்டிலேயே, அதாவது 1948-இல் தொடங்கப் பெற்றது இந்நூலகம். நம் நாட்டிலுள்ள தேசிய மொழிகளில் வெளிவரும் நூல்களும், ஆங்கிலம், பிரஞ்சு முதலிய உலகம் அளாவப் பரந்த மொழிகளில் உள்ள நூல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

1954ஆம் ஆண்டு ஏற்பட்ட நூலகச் சட்டத்தின்படி நம் நாட்டில் அச்சிடப் பெறும் எந்த நூலுக்கும் உரிய ஒரு பிரதி இந்த நூலகத்திற்கு அனுப்பிவைத்தாக வேண்டும். ஆதலால், பாரத நாட்டிலுள்ள எல்லா மொழி நூல்களும் நாள்தோறும் இங்கு வந்து குவிந்தவண்ணமாயுள்ளன. இவற்றை எல்லாம் முறைப் படுத்தித், தொகுத்து, 'இந்திய தேசிய நூல் விவரப் பட்டியலை'யும் (Indian National Bibliography) ரோமன் எழுத்தில் பருவம் தோறும்-ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறார்கள். எனவே, இந்த நூல் விவரப்பட்டியல் தேசிய மொழி நூல்களின் வரலாற்றுக் களஞ்சிய மாகத் திகழ்ந்து வருகின்றது.

இந்த நூலகம் தொடங்கிய காலத்தில் (1948) இங்குத் தமிழ் நூல்கள் மிகமிகக் குறைந்த அளவில் தான் இருந்தன. அப்பொழுது தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளராயிருந்த திரு. பி. நா. வேங்கடாச் சாரியார் அவர்கள் தமிழ்ப் பகுதியை விரிவாக்குவதற்கு அயராது பாடுபட்டு வந்தார். தமிழகத்தில் நூல்களைச் சேர்த்து வைத்திருந்த அன்பர்கள் பலரிடமிருந்து பழம் பதிப்புகள் முதலியவற்றை யெல்லாம் விலைகொடுத்துப் பெற்று இங்குக் கொண்டு வந்து சேர்த்தார். நன்கொடையாகவும் சிலரிடமிருந்து நூல்களை இந் நூலகத்திற்குப் பெற்றனர். இவருடைய பெருமுயற்சியால் 1956-ல் மறைந்த பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் சேர்த்து வைத்திருந்த 4500-க்கு மேற்பட்ட நூல்கள் அவருடைய கால் வழியினரிடமிருந்து 1960ஆம் ஆண்டு நன்கொடையாக நூலகத் திற்கு வந்து சேர்ந்தன. இவற்றில் தமிழ் நூல்கள் 2943; ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் மொழி நூல்கள் 1543; சமஸ்கிருதம் 113; மலையாளம் 16.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் அச்சு நூல்களின் தொகுப்பேயன்றிப் பேராசிரியர் சேர்த்து வைத்திருந்த 340-க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகளும் இந்நூலகத்திற்கு நன்கொடையாகத் தரப்பட்டன. தேசிய நூலகத்தில் உள்ள தமிழ் ஓலைச் சுவடிகள் முழுமையும் பேராசிரியரின் தொகுப்புகளேயாம். இச்சுவடிகளைப் பாதுகாப்பான முறையில் அங்கு வைத்துள்ளனர் என்ருலும், அவை யெல்லாம் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் வகைப்படுத்தி வைக்கப் பெருமல் இருந்தன. அவற்றைக் கண்காட்சி போலக் கண்டு வந்தவர் சிலர்; அவற்றைப் பயன்படுத்தியவர் மிகமிக அரியர்.

பல்கலைக்கழக நிதி உதவியுடன் 'திவாகரம்' ஆய்வுப்பதிப்பு உருவாக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டிருந்தபோது, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் தொகுப்பில் உள்ள திவாகரச் சுவடிகளை ஆராய்வதற்காக 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாங்கள் கல்கத்தா தேசிய நூலகத்திற்குச் சென்று மூன்று வாரம் பணி செய்தோம். திவாகரத்திற்கு 27 சுவடிகள் அங்கு இருந்தன. அவற்றை ஆராய்ந்ததில் ஏற்கெனவே இருந்த பல ஐயங்கள் நீங்கியதோடு நல்ல பல குறிப்புகளும் அவற்றில் காணப்பட்டன.

திவாகரப் பணிக்கு நாங்கள் சென்ற சமயம் ஏனைய ஏடுகளையும் இனம் பிரித்து விவரம் குறித்துத்தரத் தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளர் திருமதி புஷ்பவேணி கோபி அவர்களும், நூல் விவரத் தொகுப்புப் பகுதி திரு. பி. நா. வேங்கடாசாரியரும், நூலகரும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட வண்ணமே திவாகரச் சுவடிகளோடு ஏனைய சுவடிகளுக்கும் விவரம் எழுதித் தொகுத்துத் தந்தோம்.

கம்பராமாயண ஏடுகளை (77) முற்றுமாய்ப் பார்ப்பதற்கு எங்களுக்குக் காலம் போதவில்லை. 34 சுவடிகளுக்கே குறிப்புகள் தொகுக்க இயன்றது. ஏனைய ஏடுகளைப் பார்வையிட்டுக் கல்கத்தா தேசிய உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. ஜெக. சீனிவாசன் அவர்கள் பின்பு தொகுத்தார்கள். அவர் தொகுத்த 43 ஏடுகளின் விவரமும் அவருடைய முயற்சியால் எங்களுக்குக் கிட்டியது. இவை தவிரக் கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் அமைந்த ஆறு ஏடுகளின் விவரம் தெரியவரவில்லை.

தேசிய நூலகத்தில் உள்ள தமிழ்ச் சுவடி விவரங்கள் தமிழாய் வாளர்களுக்குப் பயன்படத் தக்கவை. எனவே, அவற்றைத் தமிழ்த்துறை வெளியிடும் தமிழாய்வு—10ஆம் தொகுதியில் வெளியிடலானேம். மேலும், இதனைத் தனிநூலாகவும் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

## நிகண்டு, அகராதி

தேசிய நூலகத்தில் ஏட்டுச் சுவடியாயுள்ள நூல்கள் எவையெவை என்பதை இனி நோக்குவோம்; திவாகரச் சுவடிகள்

27; பிங்கலம் முதலிய ஏனைய நிகண்டுகள் 38. இந்நிகண்டுச் சுவடிகள் 65-ல் பல்பொருட் சூளாமணி, விரிவுநிகண்டு ஆகியவை இன்னும் அச்சிடப் பெறுதவை. அச்சிட்ட ஏனைய நிகண்டுகளையும் செம்மையாகப் பதிப்பிப்பதற்கு இங்குள்ள சுவடிகள் பெரிதும் பயன் படும்.

பழமொழித் தொகுப்பு, அகராதித் தொகுப்புகளும் பல உள. பழமொழித் தொகுப்பில் 'விகடப் பிரசங்கப் பழமொழி' என்பது தனிநோக்கில் அமைந்த ஓர் அகராதி முறைச்சுவடி. இதுவும் இது வரை அச்சில் வாராத ஒன்ருகும்.

அகராதிச் சுவடிகளுள் (7) சில வீரமாமுனிவரின் சதுரகராதிச் சுவடிகளேயாம். 67, 68 ஆம் எண்ணிடப் பெற்ற சுவடிகள் அதனின் வேறுபட்ட ஒன்ருகும். இவற்றை நன்கு பரிசோதித்தால் தான் இவற்றின் பயன்பாடுபற்றி மதிப்பிட இயலும். 71 ஆம் எண்ணுள்ள சுவடியும் புதுமையாயுள்ளது.

## இலக்கணம், சங்க நூல்கள், திருக்குறள்

தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல் சுவடிகளின் விவரங்களை 73 முதல் 109 வரையில் காணலாம். சங்க இலக்கியச் சுவடிகள் சிலவே (110-114). பதினெண் கீழ்க்கணக்குச் சுவடிகளுள் (115-135) திருக்குறளுக்கே மிகுதியான ஏடுகள் உள. 115 முதல் 118 வரையில் உள்ள நான்கு ஏடுகளும் திருக்குறள் பரிமேலழகர் உரையேடுகள், 119, 121ஆம் எண் உள்ள ஏடுகள் திருக்குறள் பரிமேலழகர் உரையை ஒட்டி அமைந்த எளிய உரையேடுகளாகும். 125 ஆம் எண்ணுள்ள ஏடு 1812 ஆம் ஆண்டில் வெளிவந்த திருக்குறள் மூலப் பதிப்புப் பற்றிய பாடபேத ஆராய்ச்சி ஏடு ஆகும்.

திருக்குறள் விளக்கமாய் அமைந்த நூல்கள், 'திருவேங்கட வெண்பா' (123) 'திருக்குறள் திருவிருத்தம்' என்பனவாம். இவையும் இதுவரை அச்சானதாகத் தெரியவில்லை. நாலடியார் (128-130), பழமொழி (131) நான்மணிக்கடிகை முதலிய நூல்களுக்குப் பழைய உரையுடன் கூடிய ஏடுகள் உள்ளன (132-135).

'மாதர் நீதி' (139) நூல் 36 ஆம் எண் ஏடாகிய உரிச்சொல் நிகண்டு போல அச்சுப் புத்தகத்தைப் பார்த்து எழுதிவைத்த சுவடி யாகும். சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணிக் காவிய ஏடுகளும் (140-146, 167-169, 171-172) காணப்படுகின்றன.

## பிற நூல்கள்

தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவாசகம், திருவிசைப்பா என்னும் பக்திப் பனுவல் ஏடுகளும் பல உள (147-157). அருணகிரி நாதர் திருவகுப்பு, அருணசலக் கவிராயர் இராம நாடகம், முத்துத் தாண்டவர் கீர்த்தனை, வைகுண்ட அம்மானை, கோவலன் கதை போன்ற சில்லறை நூல்களின் ஏடுகளும் பலவாம். (158-163, 170) சேக்கிழார் பெரியபுராணம் முழுமையாயுள்ளது (113); வில்லி புத்தூரரின் பாரத ஏடு ஒன்றும் உள்ளது (174). செவ்வைச் சூடுவார்

பாகவத ஏடும் காணப்படுகிறது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடலுக்கு ஆறு ஏடுகள் உள (176-181). நைடத ஏடு ஒன்றும் (183), நளவெண்பா ஏடுகள் இரண்டும் (184-185) காணப் படுகின்றன.

சிவஞான போதம் முதலான மெய்கண்ட நூல்களின் ஏடுகள் சிலவும் உள (188-189). சிவதருமோத்தரம் (190), இருசமய விளக்கம் (192) நானுசீவ வாதக் கட்டளை (193), ஞானவாசிட்டம் (194) முதலான தத்துவ நூல் ஏடுகளும் உள.

அபிராமி அந்தாதி, திருவேங்கடத் தந்தாதி, குற்ருலக் கலித்துறை முதலான சிறு பிரபந்த ஏடுகளும் பலவாக உள்ளன. (195-245), இவற்றுள் சில பிரபந்தங்கள் அச்சிடப்பெருதன வாகலாம்.

பரதசாத்திரம், சோதிடம், கணக்கதிகாரம் போன்ற சாத்திர ஏடுகளும் இடம் பெற்றுள்ளன (246-254). பகவத் கீதை வசனம் என்னும் உரையேடும் உண்டு (255). சமண சமய நூலாகிய ஜீவஸம் போதனைக்கு இரண்டு ஏடுகள் உள்ளன (257-258).

## கம்பராமாயணம்

கம்பராமாயணத்திற்கு அமைந்துள்ள ஏடுகள் 77. இவற்றின் விவரங்கள் ஒரு சேர இறுதிப் பகுதியாய் அமைத்துத் தரப்பட்டுள்ளது. இவற்றுள் எல்லாக் காண்டங்களும் கொண்ட ஏடுகள் சிலவே; தனித்தனிக் காண்ட ஏடுகளும், இரண்டு மூன்று காண்டங்களாக இணைந்து அமைந்த ஏடுகளும் பல. இவற்றை நூலடைவில் தெளிவுறக் காணலாம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஏடுகளை ஒப்பு நோக்கிக் கம்பராமாயணப் பதிப்புக் கொண்டு வந்துள்ளார்கள். அவர்களாலும் பயன்படுத்தப் படாதவை இங்குள்ள ஏடுகள். இவற்றுள் பெரும்பாலனவும் திருநெல்வேலி, நாஞ்சில் நாட்டுப் பிரதேசங்களிலிருந்து திரட்டப் பெற்றனவாகும். ஆழ்வார் திருநகரி முதலிய திருப்பதிகளில் கற்று வல்ல வித்துவான்களால் எழுதப்பட்ட ஏடுகளும் இவற்றில் உள. கம்பராமாயண ஆய்வாளர்கள் இங்குள்ள ஏடுகளையும் பயன்படுத்தி ஆராய்வார்களானுல் செம்மையான நல்ல பல பாடங்கள் கிட்டுதல் கூடும்.

## பழமையான ஏடுகள்

இங்குள்ள ஏடுகளுள் ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏடுகளும் உள. சீவக சிந்தாமணிக் காவியத்திற்கு நச்சினுர்க்கினியர் உரையுடன் கூடிய ஏடு 1611-ல் எழுதப்பட்டதாகும். 1682ல் எழுதப் பட்ட நன்னூல் விருத்தியுரை ஏடும், 1702-ல் எழுதப்பட்ட திவாகர ஏடுகளும் பழமையான ஏடுகளுள் குறிப்பிடத்தக்கனவாம்.

## பாடபேத ஆராய்ச்சி

திருவள்ளுவர் குறள், திருவள்ளுவமாலை, நாலடியார் என்னும் பெயரில் அமைந்த ஏடு (எண் 125) ஓர் ஆராய்ச்சியுரை ஏடாகும். கி. பி. 1812ல் மேலே சுட்டிய பெயரில் நூல் அச்சாகியுள்ளது. இந்த அச்சு நூலைக் குறித்து,

> 'இது பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு ஆங்கிரீச ஞூ தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப் பிரகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. மாசமதினச் சரிதையின் அச்சுக்கூடம். ஆண்டு 1812"

என்று விவரம் குறிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சுநூலை அந்நாளில் வாழ்ந்த வித்துவான்கள் பலர் கூடி ஆராய்ந்து அதில் உள்ள பிழைகளை எடுத்துக் காட்டி, திருத்தங்களும் குறித்துள்ளார்கள். இது பற்றி ஏட்டில் காணும் விவரம் பின் வருமாறு :

> 'திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டினத்துக்கு அனுப்பிவிச்சு அவ்விடத் திலிருந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பல வாணத் தம்பிரான், சீர்காழி வடுக நாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதித்த காயிதப் பொத்தகத்தை ஆழ்வார் திருநகரியில், தேவர் பிரான் கவிராயர், ஆதிநாத பிள்ளை தலத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மான மானது".

இக் குறிப்பினால் பாடபேதம் காணும் ஆய்வில் ஈடுபட்டுச் சரியான பாடத்தை நிறுவும் முன்னையோரின் முயற்சி நன்கு புலனாகும். மேலும் இச் சுவடியில் பிழைதிருத்தங்கள் பற்றி விரிவான குறிப்புகள் எழுதியிருப்பதோடு அட்டவணைப் படுத்தியும் பிழை திருத்தம் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணை, அதிகாரம், குறள், ஆழ்வார் திருநகரி, அச்சடி பிழை என்னும் நான்கு தலைப்புகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 46ஆம் எண்ணுள்ள சூடாமணி ஏட்டிலும் இத்தகைய பாடவேறு பாடுகள் பற்றிய குறிப்பு விவரங்கள் தரப்பட்டுள்ளன.

## அருஞ் சொல்லாட்சி

நூலின் இறுதியில் ஈற்றேட்டில் தரும் சில விவரங்கள் சுவடி எழுதினோருடைய உள்ளப் பாங்கை நன்கு அறிவுறுத்துகின்றன. நெல்லை நாயகம் என்பார் தாம் எழுதிய சுவடியின் இறுதியேட்டில் தரும் விளக்கக் குறிப்பு வருமாறு :

"சங்கத் தமிழை அனுசரிக்கும் மகாவித்வ சனங்களுக்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம்" (83)

"சிவனடியார்க்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து" (43)

இக்குறிப்புகளால் எழுதியவரின் தொண்டு உள்ளம் படிப்போர்க்கு நன்கு புலப்படும். இவ்வாறே 'செக்காலை குடியிலிருக்கும் அடுத்தாரை ரட்சிக்கும் பெருமாள் பிள்ளை' (172) என இன்னொருவர் தம்மைக் குறிப்பார். 'பிழை பொறுக்கும் பெருமாள் எழுதியது' (க66) என்னும் குறிப்பும் எண்ணத்தக்கது. ஆசிரியப் பெருமானிடத்து அளவற்ற பக்தி கொண்டவர்கள் என்பதை, 'திருமேனி கவிராயரவர் பிரசாத குமாரர் ரத்தின கவிராயர் பாத தாமரையே தஞ்சம்' (44) என்னும் குறிப்பு இனிதுணர்த்தும். 'நன்னூல் பொஸ்தகம் நீடுழி காலம் வாழ்ந்திருக்க' (90) என நூலை வாழ்த்தும் மரபும் உண்டு. இங்ஙனம் பல அரிய சொல்லாட்சித் தொடர்கள் சுவடிகளின் இறுதியேட்டில் எழுதியிருப்பது படிக்கப் படிக்கத் தெவிட்டாத விருந்தாக அமைகிறது.

## முடிவுரை

அரிய ஏடுகளைத் தன்னகத்தே பெற்றுத்துலங்கும் இந்நூலகச் சுவடிகள் ஆய்வாளருக்குப் பெரும் பயன் நல்கும் பான்மையன. இவற்றுள் அச்சாகாத சுவடிகளையெல்லாம் தொகுத்து விரைவில் அச்சில் வரச் செய்வது மிகமிக இன்றியமையாதபணியாகும். காலப் பழமையான ஏட்டுச் சுவடிகள் நலிந்தும், மெலிந்தும் அழிந்தும் கொண்டிருக்கின்ற சூழலில் விரைவில் பணியைத் தொடங்கி அச்சில் வெளிக் கொணர்வது அறிஞர் தம் கடமையாகும்.

இச் சுவடிகள் ஒவ்வொன்றையும் நன்கு பார்வையிட்டு ஆராய்ந்தால் இன்னும் பல புதிய செய்திகள் தமிழாராய்ச்சி உலகுக்குக் கிடைக்கும் என்பது திண்ணம்.

# காலப் பழமையான ஏடுகள்







1. சீவக சிந்தாமணி — நச்சினர்க்கினியர் உரையுடன் கொல்லம் 786, கி. பி. 1611
2. நன்னூல் — விருத்தியுரை — கொல்லம் 857, கி. பி. 1682
3. திவாகரம் — கொல்லம் 877, கி. பி. 1702.

# தேசிய நூலகம்

## கல்கத்தா

## தமிழ் - ஓலைச்சுவடிகள் விவரப் பட்டியல்

| வ. எண். | ACC. No-. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1. | 3248 | திவாகரர் திவாகரம் (பூர்த்தி)<br><br>95 ஏடுகள்<br>94, 95 சிதிலம்<br>(கி.பி. 1702) | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறையில் பாகுபடுத்தப்பட்டுள்ளது. 877 ௵ விஷு தைமீ 14௳ திங்கட்கிழமையும் அனுஷமும் செய்யும் சுபதினத்தில் சடகோபன் கவிராயருக்குத் திவாகரம் எழுதி முகிந்தது. திருவழுதி வளநாட்டுத் திருநகரி அழகிய நம்பியா பிள்ளை |
| 2. | 3255 | திவாகரர்<br>திவாகரம் பூர்த்தி | 11ஆம் தொகுதியில் ஆதியிற் பொருள் உள்ளது. அந்தத்துப் பொருள் தரப்படவில்லை. அதன்பின் பழைய முறையில் 11ஆம் தொகுதி எழுதப்பட்டுள்ளது. 904 ௵ சித்திரை மீ 8௳ துதிகை விசாக நட்சத்திரமும் சுக்கிரவாரத்தின் நாள் எழுதியது. |
| 3. | 3249 | திவாகரர்<br>திவாகரம்<br>பூர்த்தி | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறை |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | 88 ஏடுகள் நல்லநிலை | யில் பாகுபடுத்தப்பட்டுள் ளது. 955 ஹூ அற்பசி மீ 29உ எழுதி முகித்தேன். சிவபுரத்தரசு எழுத்து. சீவைகுண்டம் இராமா யண தாதர் அவர்கள் பாடப்படி எழுதினது. |
| | 3249A | இந்த ஏட்டில் பதினொன்ரும் தொகுதிக்கு (திவாகரம்) மற்றொரு பிரதியும் உள்ளது. ஏடு 105-126 | |
| 4. | 3261 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 170 நல்லநிலை | 958 ஹூ புரட்டாதி மீ 17உ புலியூர்ப் பண்டாரம் அவர் கள் திவாகர ஏடு எழுதி முகிந்தது. |
| 5. | 3247 | திவாகரர் திவாகரம் பூர்த்தி 98 ஏடுகள் 89ஆம் ஏடு முதல் சிதிலம் | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறை யில் பாகுபடுத்தப்பட்டுள் ளது. |
| 6. | 3242 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 147 சில ஏடுகள் சிதிலம் | 11ஆம் தொகுதியில் ஒவ் வொரு பெயருடனும் பல பொருள் ஒரு சொல் என் பதும் சேர்த்துத் தலைப் பாகத் தரப்பட்டுள்ளது. |
| 7. | 3246 | திவாகரர் திவாகரம் பூர்த்தி 172 ஏடுகள் நல்ல நிலை | 11-ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறை யில் பாகுபடுத்தப்பட்டுள் ளது. |
| 8. | 3251 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 143 நல்ல நிலை | 11-ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறை |

| வ. எண். | ACC No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | | யில் பாகுபடுத்தப்பட்டுள்ளது. |
| 9. | 3263 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 170 நல்ல நிலைமை | அருகன் பெயரில் தொடங்குகிறது. 11ஆம் தொகுதி **முழுவதும் அகர வரிசை** யில் அமைந்துள்ளது. |
| 10. | 3002 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 120 சிதிலம் | அட்சய ஷு அற்பசி மீ 15வ குருவாரம் இந்த சுபதினத்தில் கனகசபை வாத்தியார் பேரன் எழுதி நிறைவேறினது. |
| | 3002A | சூடாமணி நிகண்டு முழுதும் உள்ளது ஏடுகள் 177 சிதிலம் | புதுவையில் வானூர் வேளாளத் தெருவில் வாத்தியார் கனகசபை பேரன் சபாபதி படிக்க எழுதிவைத்தது. பிரபவ ஷு புரட்டாசி மீ 3வ குருவாரம் பிரதமை, அசுவதி இந்த தினத்தில் எழுதி நிறைவேறினது. |
| 11. | 3019 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 115 நல்ல நிலை | |
| | 3019A | அகராதி முதற்றெகுதி ஏடுகள் 1-19 நல்லநிலை | அகரவரிசை தொடங்கி 'உய்த்தல் எனும் பெயர் உண்டாக்குதலாம்' என்பதுவரை உள்ளது. |
| | 3019B | வெண்பாப் பாட்டியல் அபூர்த்தி மூன்று ஏடுகள் நல்ல நிலை. | |
| | 3019C | திருவாசகக் கட்டளை பூர்த்தி 11 ஏடுகள்; நல்லநிலை | |
| | 3019D | சிவப்பிரகாசக் கட்டளை பூர்த்தி; ஏழு ஏடுகள் நல்ல நிலை. | |
| 12. | 3260 | திவாகரர் திவாகரம் பூர்த்தி ஏடுகள் 1-62 நல்லநிலை | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறையில் பாகுபடுத்தப்பட்டுள்ளது. |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | 3260A | சூடாமணி நிகண்டு 11ஆம் தொ. மட்டும் ஏடுகள் 1-12 நல்லநிலை | |
| | 3260B | காங்கேயன் உரிச் சொல் 10ஆம் தொகுதி மட்டும். ஏடுகள் 1-7 நல்ல நிலை. | |
| 13. | 3259 | திவாகரர் திவாகரம் பூர்த்தி. 58ஆம் ஏட்டிற்குப் பின்னர் சிதிலம். | அருகன் பெயரில் தொடங்குகிறது. 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறையில் பாகுபடுத்தப் பட்டுள்ளது. சீவைகுந்தம் கள்ளபிரான் கவிராசன் குமாரன் தெய்வசிகாமணிக் கவிராசர் அவர்களிடத்தில் திவாகரம் பன்னிரண்டு தொகுதியும் வேண்டிப் பறக்கையில் சித்திர புத்திரன் குமரப் பெருமாள் தனது வகைக்கு எழுதி முகித்த ஏடு. |
| 14. | 3250 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி ஏடுகள் மிக மிகச் சிதிலம் (கி.பி. 1799) | அருகன் பெயரில் தொடக்கம். 11ஆம் தொகுதி இல்லை<br>974 ஞு புரட்டாசி மீ 23உ மந்த வாரமும் மகநட்சத்திரமும் கூடின சுப தினத்தில் எழுதி முகிந்தது முற்றும். சீவைகுண்டம் கள்ளபிரான் கவிராசர் புத்திரன் தெய்வசிகாமணிக் கவிராசன் திவாகரம். |
| | 3250A | அழகர் அந்தாதி ஏடுகள் 1-7 65ஆம் பாடல் வரை ஏடுகள் சிதிலம். | இச்சுவடியில் சேர்ந்துள்ளது. |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 15. | 3253 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் நல்ல நிலை | அருகன் பெயரில் தொடங்குகிறது. முதல் மூன்று தொகுதிகள் மட்டும். திருவேங்கடம் கவிராசர் குமாரன் தாயபலந்தீர்த்தான் கவிராசரவர்கள். 1023 ௵ தை மீ 16 ௳ (1848) |
| | 3253 A | முதல் தொகுதி (திவாகரம்) மட்டும் உண்டு. ஏடுகள் நல்ல நிலை | 1023 ௵ தை மீ 16௳ தாயபலந்தீர்த்தான் கவிராசர் திவாகரம் முதலாவது எழுதி வாசித்து முகிந்தது முற்றும். |
| 16. | 3254 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் நல்லநிலை | முதல் ஐந்து தொகுதிகள் பூர்த்தி. ஆறும் தொகுதியில்உபகரணத்தின் பெயர் வரையிலும் உள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் தனி வரிசை எண். தலையேட்டில் மருதப்பன் சுவடி எனக் குறிக்கப்பட்டுள்ளது. |
| 17. | 3264 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் 48 சிதிலம் | 7ஆவது செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் பச்சைநிறத்தின் பெயர் வரை உள்ளது. |
| 18. | 3262 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் 2—108 நல்லநிலை | 11-ஆம் தொகுதியில் 'பல்வகையுணவும் பயிரும் பொன்னும்' எனத்தொடங்கும் நூற்பா வரையிலும் உள்ளது. நூற்பாக்களுக்கு வரிசை எண் தரப்பட்டுள்ளது. |
| 19. | 3245 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | வரிசையாக இல்லை. சிதிலம் | பொருள் முறையில் பாகு படுத் தப் பெற்றுள்ளது. அந்தத்துப் பொருள் குறை. 12ஆம் தொகுதி முழுமை யும் உண்டு. |
| 20. | 3286 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் 1—64. சுவடியின் சரிபாதி முறிந்துள்ளது | 969 ஞ கார்த்திகை மீ 22 உ (1794) சோமவாரம் கூடிய சுபதினத்தில் எழுதி முகிந் தது. |
| 21. | 3252 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் சிதி லம் | அருகன் பெயரில் தொடங்கு கிறது. 1 முதல் 3 ஆம் தொ குதி வரை. |
| | 3252A | திவாகரம் ஏடுகள் சிதிலம் | முதல் இரண்டு தொகுதிகள் மட்டும். அருகன் பெயரில் தொடங்குகிறது. |
| 22. | 3257 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. 11-12 ஏடு கள் 44-49 1-23 சுமார் | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்று பாகு படுத்தப்பட்டுள்ளது. |
| 23. | 3256 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. 1 முதல் 5 பூர்த்தி. ஏடு 1-24 | 11ஆம் தொகுதி ஏடு எண் 25இல் தொடக்கம். ஆதி யிற் பொருள் மறைவரை விளக்கம் உள்ளது. |
| 24. | 3265 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் நிலை நல்லநிலை | 1 முதல் 11 தொகுதிகள் |
| 25. | 3266 | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் 1—150. நல்லநிலை | 11 ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறை யில் பாகுபடுத்தப்பட்டுள் ளது. 12 ஆம் தொகுதியில் |

| வ. எண். | ACC No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | | நவதாரணைப் பெயர் வரை உள்ளது. |
| 26. | Un num-bered | திவாகரர் திவாகரம் அபூர்த்தி. ஏடுகள் சிதிலம். வரிசையாக இல்லை. | சீதாள ஓலையில் அமைந்தது ஒவ்வொரு ஏட்டிலும் ஏழு பத்தியாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. |
| 27. | 3017 | திவாகரர் திவாகரம் பூர்த்தி. ஏடுகள் 127. மிகவும் சிதிலம். | 11ஆம் தொகுதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் பாகுபாட்டில் அமைந்துள்ளது. |
| 28. | 3243 | பிங்கலர் பிங்கலம் பூர்த்தி. ஏடுகள் 73 நல்லநிலை. | தலையேட்டில் 'பிங்கலம் ஆதி முதல் அந்தம் வரைக்கும் இருக்குது. பிழையற்றபாடமாதலால் முட்டு (?) பொத்தகம் பிழையாயிருப்பது பார்த்துத் திருத்த வேண்டியது' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'தேனரு மகிழ்த் தொடையாலும்' என்றும் 'தூங்காத் திருப்புளிக்கீழ்' என்றும் தொடங்கும் இரு சடகோபர் துதிப்பாடல்கள் உள. பின்னர்த் 'தவளத் தாமரை' தொடங்குகிறது. இறுதியில் 'வான்வகை முதலாக ஒரு சொல் பல் பொருள் ஈருகத் திவாகரர் பயந்த பிங்கல முனிவனுல் செய்யப்பட்ட பிங்கலம் முற்றும்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. |
| 28. | 2992 | கம்பன் இராமாயணம் ஏடுகள் 317-416 சிதிலம். | யுத்த காண்டம் அபூர்த்தி. நாகபாசப்படலம் குறை. |

| வ. எண். | ACC No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 29. | 3139 | கம்பன் இராமாயணம் ஏடுகள் 190-363 சிதிலம். | யுத்த காண்டம் அபூர்த்தி. |
| 30. | 3035 | கம்பன் இராமாயணம் அபூர்த்தி. ஏடுகள் நல்ல நிலை. | யுத்த காண்டம் 1-183 ஏடுகள் உத்தர காண்டம் 184-290 (வைகுண்டப் படலம் வரை) 837 ௵ சித்திரை ௴ 23 ௳ குமாரசுவாமி எழுதியது. |
| 31. | 3146 | கம்பன் இராமாயணம் ஏடுகள் சிதிலம். | உத்தரகாண்டம் அபூர்த்தி. |
| 32. | 3066 | கம்பன் இராமாயணம் ஏடுகள் நல்ல நிலை. | உத்தர காண்டம் அபூர்த்தி. |
| 33. | 3274 | கம்பன் இராமாயணம் ஏடுகள் 290 நல்ல நிலை. | தெரிவு கவிகள். தலையேட்டில் அவசர ராமாயணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 34. | unnum bered | கம்பன் இராமாயணம் பால காண்டம் | ஏடு சிதிலம். |
| 35.* | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம் பூர்த்தி. | ஏடு 53-நல்ல நிலை. |
| 36. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம் பூர்த்தி. | ஏடு 76-நல்ல நிலை. |
| 37. | | கம்பன் இராமாயணம் ஆரணிய காண்டம் பூர்த்தி. | ஏடு நல்ல நிலை. |
| 38. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் அபூர்த்தி | ஏடு 84-126, சில சிதிலம் |

* எண் 35 முதல் 77 வரை கம்பராமாயணப் பிரதிக் குறிப்புகளைத் தொகுத்தவர் கல்கத்தா தேசிய உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் ஜெக. சீனிவாசன் அவர்களாவர். அவர்களுடைய முயற்சியால் இக்குறிப்புகள் கிடைத்தன. நன்றி.

| வ. எண். | ACC No. | நூல் விவரம் ஆசிரியர் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 39. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம் பூர்த்தி. | ஏடு 63-123; முதல் சில ஏடுகள் சிதிலம். |
| 40. | | கம்பன் இராமாயணம் பால காண்டம்–அபூர்த்தி. | ஏடு-சிதிலம். |
| 41. | | கம்பன் இராமாயணம் பால காண்டம்-பூர்த்தி. | ஏடுகள் 89, நல்ல நிலை. |
| 42. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம்-பூர்த்தி. | ஏடுகள் 1-80, நல்ல நிலை. |
| 43. | | கம்பன் இராமாயணம் உத்தர காண்டம்-அபூர்த்தி. | ஏடுகள் சிதிலம். |
| 44. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம்-பூர்த்தி. | ஏடுகள் சிதிலம். (நாஞ்சில் நாடு) |
| 45. | | இராமாயண வசனம் அபூர்த்தி. | ஏடுகள் 10-183, நல்லநிலை. |
| 46. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம் முற்றும் | ஏடு 53, நல்ல நிலை. சவுந்திர பாண்டியன் எழுதியது. |
| 47. | | கம்பன் இராமாயணம் ஆரணிய காண்டம் பூர்த்தி. | ஏடுகள் நல்ல நிலை. |
| 48. | | கம்பன் இராமாயணம் ஆரணிய காண்டம் பூர்த்தி. | ஏடுகள் நல்ல நிலை. |
| 49. | | இராமாயண வசனம் பால காண்டம் அபூர்த்தி | ஏடுகள் 58; ஓரளவு நல்ல நிலை. விக்கிரமசிங்கபுரத்தில் எழுதப்பட்டது. |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 50. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா முதல் சுந்தரகாண்டம் வரை | ஏடுகள். 77–307 நல்ல நிலை. ஆனந்த குமாரசாமி தொகுப்பு. |
| 51. | | கம்பன் இராமாயணம் பால காண்டம் முதல் சுந்தர காண்டம் வரை | ஏடுகள் சிதிலம்-கிட்கிந்தாப் படலம் வரை; நல்ல நிலை. |
| 52. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம்-பூர்த்தி. | ஏடுகள் 139 நல்ல நிலை. |
| 53. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் | ஏடுகள் 94, நல்ல நிலை. |
| 54. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா முதல் இலங்கை எரியூட்டு வரை. | ஏடுகள் 86-341 நல்ல நிலை. |
| 55. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டமும் பால காண்டமும் | ஏடுகள் 444 நல்ல நிலை. |
| 56. | | கம்பன் இராமாயணம் சுந்தர காண்டம் கடல் தாவு திருமுடி சூட்டு படலம். | ஏடுகள் 66 and 33 நல்ல நிலை பி. ஸ்ரீ. ஆச்சாரியர் தொகுப்பு |
| 57. | | கம்பன் இராமாயணம் பால காண்டம். | ஏடுகள் சிதிலம். |
| 58. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா (அபூர்த்தி) முதல் யுத்தகாண்டம் வரை உத்தரகாண்டம் (அபூர்த்தி). | ஏடுகள் 53-503 நல்ல நிலை. |
| 59. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம்-பால காண்டத்தில் ஆரம் | ஏடுகள் 411 |

| வ. எண். | ACC No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | பம் இல்லை; சிதைவு. ஆரணிய காண்டம் முழுமையும். | |
| 60. | | கம்பன் இராமாயணம் சுந்தர காண்டம் முழுவதும். | சீவைகுண்டம் சங்கீதராயர் மகன் தெய்வச்சிலைப் பெருமாள் தாதர் திரு நீலகண்டர் எழுதியது. ஏடுகள் 241-333 நல்ல நிலை. |
| 61. | | கம்பன் இராமாயணம் பால காண்டம் பூர்த்தி. | ஏடுகள் 104 நல்ல நிலை. |
| 62. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் 143 நல்ல நிலை. சங்கரலிங்க கவிராயர் எழுதியது. |
| 63. | | கம்பன் இராமாயணம் பால காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் சிதைவு-தென் திருப்பேர் ஆவுடைநயினார் திருமேனி அழகியார் எழுதியது. |
| 64. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம் பூர்த்தி. | ஏடுகள் 95-260; ஓரளவு நல்ல நிலை; திருமேனி அழகியார் எழுதியது. |
| 65. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் பூர்த்தி, | ஏடுகள் 209-363 ஓரளவு நல்ல நிலை. இராமாயணப் பட்டர் எழுதியது. |
| 66. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் பூர்த்தி | ஏடுகள் 212 நல்ல நிலை. நம்பிகுடி வள்ளி நாயக முதலியார் குமாரன் பிழை பொறுக்கும் பெருமாள் எழுதியது. |
| 67. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம், பூர்த்தி. | ஏடுகள் 78–145 நல்ல நிலை. |
| 68. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் கடல் | ஏடுகள் 235-451 நல்ல நிலை. நல்ல பெருமாள் |

| வ. எண். | ACC. No. | ஆசிரியர் நூல் விவரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| | | காண்படலம் முற்றும். | செட்டியார் எழுதியது. |
| 69. | | கம்பன் இராமாயணம் இராமாயணச்சுருக்கம் முழுமையும். | ஏடுகள் 336 நல்ல நிலை. |
| 70. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் சிதிலம். |
| 71. | | கம்பன் இராமாயணம் நாகபாசப் படலம் அபூர்த்தி. | ஏடுகள் சிதிலம். |
| 72. | | கம்பன் இராமாயணம் அயோத்தியா காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் 54–99 நல்ல நிலை. |
| 73. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் 189 நல்ல நிலை. |
| 74. | | கம்பன் இராமாயணம் யுத்த காண்டம் அபூர்த்தி, | ஏடுகள் சிதிலம். |
| 75. | | கம்பன் இராமாயணம் பாலகாண்டம் முதல்; ஆரணிய காண்டம் அபூர்த்தி. | ஏடுகள் 157 நல்ல நிலை. |
| 76. | | கம்பன் இராமாயணம் ஆரணிய காண்டம் விராதன் வதைப்படலம் முதல் கிட்கிந்தா காண்டம் வரை. | ஏடுகள் 124-240 நல்ல நிலை. |
| 77. | | கம்பன் இராமாயணம் பால காண்டம் அயோத்தியா காண்டம் முழுமையும். | ஏடுகள் சிதிலம்; கொட்டராயன் எழுதியது. |

# கல்கத்தா
# தமிழ் ஓலைச் சுவடிகள்
# அடைவுகள் விவரம்

1. நூலாசிரியர் அடைவு
2. நூலடைவு
3. பொருட் குறிப்பு அடைவு
4. அருஞ் சொல் அகரநிரல்

[*குறிப்பு:* அடைவில் தரப்படும் எண்கள் சுவடியின் வரிசை எண்கள்; க - கம்பராமாயணச் சுவடிகளைக் குறிக்கும்.]

## 1. நூலாசிரியர் அடைவு


அதிவீரராமபாண்டியர் 183
அபிராமபட்டர் 195
அமிதசாகரர் 91, 92
அருணகிரிநாதர் 158, 159 202 240
அருணசலக்கவிராயர் 161
ஆண்டிப்புலவர் 59A
இரேவணசித்தர் 56, 57
இளங்கோவடிகள் 140-142; 167-169
கம்பன் க 1 - க 77
கண்ணுடை. வள்ளல் 217
கணிமேதாவியார் 133
காங்கேயன் 34-41
காரியாசான் 132-135
குணவீரபண்டிதர் 83
குமரகுருபரர் 234
கூடலூர் கிழார் 132
சடகோபர் 149, 187
சாமிகவிராயர் 62
சிவசுப்பிரமணியக்கவிராயர் 61
சுப்பிரமணிய கவிராயர் 106
சுப்பிரமணிய சுவாமிகள் 217
செயங்கொண்டார் 205, 217, 219, 221
செவ்வைச் சூடுவார் 182
சேக்கிழார் 173
சொக்கப்பநாவலர் 199
திரிகூடராசப்பகவிராயர் 237
திருத்தக்க தேவர் 143-145, 171
திருமாளிகைத் தேவர் 156, 157
திருமேனி இரத்தினகவிராயர் 122
திருவள்ளுவர் 115-121, 125
திவாகரர் 1-27
தெள்ளிய சிங்கப்பிள்ளை 212
தொல்காப்பியர் 73-82, 165
தோலாமொழித் தேவர் 146
நக்கீரர் 110, 111
நம்பியாண்டார் நம்பி 134
நவநீத நடனூர் 107, 108
நாற்கவிராச நம்பி 95, 96
பரஞ்சோதி முனிவர் 176-181
பரமசிவன் முதலியார் 124
பவணந்தி முனிவர் 85-90
பிங்கலர் 28-33
பிள்ளைப் பெருமாளையங்கார் 196
புகழேந்தி 184-185
புத்தமித்திரனூர் 84
பெருவாயின் முள்ளியார் 134
மண்டல புருடர் 42-55
மாணிக்கவாசகர் 152-155
மீனுட்சிநாதபிள்ளை 207
முத்துத்தாண்டவர் 162
முன்றுறையரையனூர் 131
மெய்கண்டார் 188
விசாகப்பெருமாளையர் 109
வில்லிபுத்தூராழ்வார் 174
விளம்பிநாகனூர் 132
வீரகவிராயர் 215
வீரப்பபிள்ளை 139
வீரமாமுனிவர் 69, 70
வைத்தியநாததேசிகர் 97-105, 106


## 2. நூலடைவு


அகநானூறு–களிற்றியானைநிரை 113
அகப்பொருள் 86, 95, 96
அகராதி 67, 68, 71, 72
அகராதி நிகண்டு 56, 57, 60
அகராதி முதற்றெருகுதி 11
அகராதி மோனைக்ககராதி யெதுகை 58
அட்டநாக விதி 175
அண்ட கோளவிலாசம் 220
அணியிலக்கண வினு விடை 109
அபிதானப் பொருத்தப் பாட்டியல் 86

அபிராமியந்தாதி 195
அரங்கரந்தாதி 34
அரிச்சந்திரன் கதை 215
அருணகிரி அந்தாதி 172
அருணாசலக் கவிராயர் இராம நாடகம் அயோத்தியா காண்டம் வரை 161
அழகர் அந்தாதி 14
அனவரததானர் பேரில் வெண்பா 231
அஷ்ட பதாட்சர சாரம் 256
ஆசாரக்கோவை 134, 135
ஆசிரிய நிகண்டு 44, 59, 59A
ஆதிபுரி பொன்னியம்மை வருக்கப்பதிகம் 204
இரணியவதைப்பரணி 219
இரத்தினச் சுருக்கம் 86
இராசகோபாலமாலை 233
இராம செயத் திருப்புகழ் 243
இராமாயணச் சுருக்கம் க 69
இராமாயணப்பதம் 245
இராமாயண வசனம் க 45
இருசமய விளக்கம் 191, 192
இருசொல்லலங்காரம் 66
இருபா இருபஃது 188
இலக்கண விளக்கம் 97-105, 166
இன்னாநாற்பது 134, 135
இனியது நாற்பது 135
உண்மைநெறி விளக்கம் 188
உத்தரகோசமங்கைப் புராணம் 107
உரிச்சொல் நிகண்டு 13, 34-41, 43
உலகநீதி 233
உவமான சங்கிரகம் 175, 201
உவமையலங்காரம் 62
உள்ளமுடையான் 249, 250
எவ்வுளூர் வீரராகவர் கொச்சகம் 204
ஏலாதி 133
கச்சிவரதர் மாலை 222
கணக்கதிகாரம் 252, 253
கபாலீசுவரர் பஞ்சரத்தினம் 203
கம்ப இராமாயணம் க1-க77
அயோத்தியா க13, க15, க17, க39, க42, க54, க55, க66, க64, க67, க72, க77
அயோத்தியா—உத்தர க 58
அயோத்தியா—சுந்தர க17, க50
ஆரண்ய க13, க15, க18, க37, க47, க48, க59
ஆரண்ய—கிட்கிந்தா க76
உத்தர க 30-க32, க43
உயுத்தகாண்டம் க23, க25-க30, க38, க53, க65, க66, க68, க70, க73, க74,
கிட்கிந்தா க13, க18, க19
கிட்கிந்தா—சுந்தர க20
சுந்தர க21, க22, க24
பாலகாண்டம் க2-க14, க35, க36, க40, க41, க44, க46, க49, க52 க55, க57, க59, க61, க63,க77
பால—ஆரண்ய க75
பால—சுந்தர க14, க51, க56 க60
கலிங்கத்துப்பரணி 205, 217, 219, 221
கலித்துறை, பதம் முதலியன 197
களவழி நாற்பது 135
காரிகை மூலம் 86
கிரந்த எழுத்தில் அமைந்த நூல் 85
குமர குருபரர் பிரபந்தத் திரட்டு 234
குமரேச சதகம் 226
குமார சுவாமியம் 248
குற்றாலக் கலித்துறை 198
குற்றாலக் குறவஞ்சி 237
கூர்மபுராணம் 70
கூளப்பன் விறலிவிடுதூது 235
கைலாச நிகண்டு 60
கொச்சகம் 245
கொடிப்பாடல் 188
கொண்டல் விடுதூது 228
கொலைமறுத்தல் 86
கோவலன்கதை அம்மானை 170
சகுனநூல் 164
சங்கற்பநிராகரணம் 188
சதுரகராதி 67
சந்த விருத்தம் 210
சம்பந்தப் பொருத்தப் பாட்டியல் 86
சம்பந்தர் பிள்ளைத்தமிழ் 221
சாதக சந்திரிகை 249
சிதம்பரப் பாட்டியல் 8
சிந்தாமணித்திரட்டு 172

சிலப்பதிகாரம் 140-142, 167-169
சிவகவசம் 211
சிவ சிவ வெண்பா 134
சிவஞான சித்தியார் 188
சிவஞான போதம் 188
சிவதருமோத்திரம் 190
சிவப்பிரகாசக் கட்டளை 11
சிவப்பிரகாசம் 188
சிற்றம்பலக் கோவை 245
சிற்றம்பல நாடிகள் கலித்துறை 175
சிற்றின்பப்பதங்கள் முதலியன 245
சிறுபஞ்சமூலம் 93, 132, 134, 134
சிறுபாணாற்றுப்படை 112
சினேந்திரமாலை 251
சீவகசிந்தாமணி 143-145, 171
கனகமாலையாரிலம்பகம் 145
நாமகள்—கேமசரியார் 144
முத்தியிலம்பகம் 143
சுந்தரர் வேடுபறி 221
சுப்பிரமணியரகவல் 160
சுவாமி அனவரததானநாதர் பேரில் விருத்தம் 209
சூடாமணி நிகண்டு 10, 12, 42-55
முழுவதும் 10
11 ஆம் தொ. மட்டும் 12
சூளாமணி 146
சேத்திரக் கோவை 160
சைவசமய நெறி 96
சௌந்தரி அந்தாதி 172
ஞான வாசிட்டம் 194
டிஸ்கவுண்டுமாலை 209
தக்கயாகப்பரணி 221
தஞ்சைவாணன் கோவை 199
தண்டியலங்காரம் 92-94
தனிவிரிப்பு விவரம் 175
தியாகேசர் பஞ்சரத்தினம் 203
திருக்கச்சிமாலை 217
திருக்கலைசைச் சிலேடை வெண்பா 217
திருக்களிற்றுப்படியார் 188
திருக்குடந்தை அந்தாதி 236, 239
திருக்குறள் 38, 115-122, 124, 125
திருக்குறள் எளிய கருத்துரை 121
திருக்குறள் திருவிருத்தம் 124
திருக்குறள் நுண்பொருள் மாலையுரை 122
திருக்குறள் பரிமேலழகர் உரை 116-118
திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கவுரை 122
திருக்குறள் பரிமேலழகர் உரையை ஒட்டிச்செல்லும் எளியவுரை 119
திருச்செந்தூர் உலா 225
திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் 221
திருத்தொண்டத்தொகை 173
திருநெல்வேலி வண்ணம் 210
திருப்பள்ளியெழுச்சி 201
திருப்புகழ் 202, 242
திருமலைநாதர் சரப புராணம் 213
திருமுருகாற்றுப் படை 110, 111
திருவகுப்பு 158, 159, 240
திருவந்தாதி 173
திருவருட்பயன் 188
திருவருட்பயன் முதலிய சித்தாந்த சாத்திரங்கள் 89
திருவல்லிக்கேணி பார்த்தசாரதி அந்தாதி 241
திருவள்ளுவமாலை 121, 125, 126
திருவள்ளுவமாலைஉரை 121
திருவாசகக் கட்டளை 11
திருவாசகப் பொழிப்பு 154
திருவாசகம் 152-155
திருவாதவூரர் புராணம் 242
திருவாய் மொழி 149, 187
திருவிசைப்பா 156, 157
திருவிளையாடல் 175,177
திருவிளையாடற் புராணம் 176-181
திருவுந்தியார் 188
திருவெம்பாவைப் பாடல்கள் 177
திருவேங்கடத்தந்தாதி 196
திருவேங்கடமாலை 232, 233
திருவேங்கடவெண்பா 123
திருவைகுந்தை கள்வரந்தாதி 236
திவாகரம் 1-27
துகில் விடுதூது 238
தேவாரத் தெரிவு 160
தேவாரம் 147-148
தொகை அகராதி 67, 70,
தொல்காப்பியம் 73-82, 165
எழுத்து 74, 75, 76
களவியல் 80
செய்யுளியல் மரபியல் 82
சொல் 76
புறத்திணையியல் 79
பொருள் அகத்திணையியல் முதல் பொருளியல் வரை 78
பொருள் செய்யுளியல் 81
பொருள் மரபியல் முடிய 77
நந்திக் கலம்பகம் 227, 232
நந்தீசுவரர் வாக்கு 160
நம்பியகப் பொருள் விளக்கம் 85
95, 96

நம்பியாண்டார் நம்பி
திருவந்தாதி 134
நவநீதப்பாட்டியல் 107, 108
நளவெண்பா 184, 185
நன்னகர வெண்பா 230
நன்னூல் 85–90
சங்கரநமச்சிவாயர் உரை 88
மயிலைநாதர் உரை 87
நாமதீப நிகண்டு 61
நாலடியார் 125-130, 164
நாலாயிரத்திவ்விய
பிரபந்தம் 150
நான்மணிக் கடிகை 132
நாஞ சீவவாதக்கட்டளை 193
நீதிவெண்பா 123, 232
நெஞ்சுவிடு தூது 188
நெல்லை வருக்கக்கோவை 224
நேமிநாதம் 83
நைடதம் 183
பகவற் கீதை வசனம் 255
பண்டாரசாத்திரம் 188
பத்துப்பாட்டு 112
பதிற்றுப்பத்து 114
பரதசாஸ்திரம் 254
பரதம் 246, 247
பல்பொருட் சூளாமணி 63
பலகோவை 210
பலகோவைக் கொத்து 218
பழமொழி 131
பன்னிருபாட்டியல் 86, 175
பாகவதம் 182
பார்த்த சாரதி விருத்தம் 204
பார்த்த சாரதி வெண்பா
அந்தாதி 212
பிங்கலம் 28-33
பிரமோத்திர காண்டம் 194
பிரயோக விவேகம் 106
புறத்திரட்டு 136, 137
புறத்திரட்டுச் சுருக்கம் 138
பூதரவிலாசம் 214
பூவைக் கோவை 223
பூவைத்தல புராணம் 200
பூஜா விதிமுறை 232
பெயரகராதி 69
பெரிய புராணம் 173
பெரும்பாணாற்றுப்படை 112
பொதிகை நிகண்டு 62
பொருநராற்றுப்படை 112
பொன்னூசல் 210
போற்றிக் கலிவெண்பா 175, 177
போற்றிப ஃறொடை 188
மகாபாரதம்
வில்லிபுத்தூரர் 174
மணவாள நாராயண சதகம் 226
மதுரைக்கலிவெண்பா 160
மயிலைப்புராணம் 186
மாதர்நீதி 139
மீனாட்சிநாதபிள்ளை
விசித்திரமடல் 207
முக்கூடற்பள்ளு 229
முச்சொல்லலங்காரம் 66
முத்துசாமி மகிபர்
பிள்ளைத்தமிழ் 206
முத்துத் தாண்டவர்
கீர்த்தனை 162
முதுமொழிக்காஞ்சி 132, 133, 135
முல்லைப்பாட்டு 112
மூதுரை 233
யாப்பருங்கலக்காரிகை 91–92
யாப்பருங்கலம் 85
வண்ணப்பாடல்கள் 244
வண்ணம் 208
வருஷப் பிறப்பு 86
விக்கினேசுவரர் அகவல் 201
விகடப்பிரசங்க பழமொழி
அகராதி 66
விசுவநாதசுவாமி
திருப்பவனி உலா 216
விநாயகரகவல் 160
விரிபொருள் நிகண்டு 64, 65
வினவெண்பா 188
வீரசோழியம் 84
வெண்பாப்பாட்டியல் 11, 175
வைகுண்ட அம்மானை 163
ஜீவ ஸம்போதனை 257, 258

## 3. பொருட்குறிப்பு அடைவு

அகத்திணையியல் 78, 103
அச்சடி பிழை 125
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது 125
அசுர குலம் 66
அணியியல் 97, 98, 100, 104
அம்பலவாணகவிராயர் 125, 136
அம்மானை 170
அய்யம் பெருமாள் 116
அய்யன் பெருமாள்செட்டி 140
அருகன் 9, 13, 14, 15, 21
அருணசலம்பிள்ளை 46

அலங்காரஞ் சூத்திரவுதாரணத் திரட்டு 90
அழகப்ப குருக்கள் அழகப்ப பண்டாரசன்னதி 35
அழகிய நம்பியாபிள்ளை 1, 76
ஆதிநாதபிள்ளை 67, 68
ஆதியிற்பொருள் 2
ஆதியிற்பொருள் அந்தத்துப் பொருள் என்னும் முறையில் திவாகரம் 11ஆம். தொ. அமைதல் 1, 3, 5, 7, 8, 12, 13, 19, 22, 25, 27
ஆதியுமந்தமு மில்லாத கர்த்தன் 42
ஆவுடை நயினார் க 63
ஆழ்வார் குறிச்சி இராமலிங்கம் ஏடு 139
ஆழ்வார் திருநகரி 67
ஆறுமுக மங்கலம் 136
இடையியல் 99
இரத்தின கவிராயர் 44
இராகம் தாளம் பற்றிய குறிப்புகள் 187
இராமலிங்கம் 139
இராமஜெயம் கவிராசர் 67
இராமாயணதாதர் 3
இராஜசேகரன் 132
இலட்சுமண முதலியார் 139
இளம்பூரணம் 68, 74, 75, 76
உபகரணத்தின் பெயர் 16
உமாபதி முதலியார் 209
உயர்வுநவிற்சி 109
உரையாசிரியர் 110
உவமை அகரவரிசை 109
உறையூர் வீரமுத்து உபாத்தியாயர் 139
கரதலலிபி 116
கல்விக்களஞ்சிய அச்சுக் கூடம் 209
கவிராசர் குமாரன் சுப்பிர மணியன் சுவடி 52
கள்ளபிரான் கவிராசன் 13,14
களவியல் 80
கனகசபை வாத்தியார் 10
காந்திமதி நாதன் 213
குட்டந்தீர்த்ததுறை 132
குமாரசுவாமி 136, க30, க50
கேசவ முதலியார் 70
கோட்டாறு 46
சங்கரநமச்சிவாயர் உரை 88
சங்கரமூர்த்தியா பிள்ளை 76, 213
சங்கரலிங்க கவிராயர் க62
சங்கீதராயர் க60
சடகோபன் கவிராயர் 1, 29
சண்முக கவிராசர் 70
சதுர்வேத சித்தாந்த சபை 208
சதுரகராதி 67
சபாபதி 10
சவுந்திரபாண்டியன் க46
சித்திரகுத்த மூப்பனார் 46
சித்திரபுத்திரன் குமரப் பெருமாள் 13
சிதம்பரநாதன் க5
சிந்தாதிரிப்பேட்டை 70
சிவப்பிரகாசத் தம்பிரான் 157
சிவபுரத்தரசு 3
சீதாளஓலை 26
சீபாத தாமரைகளே சரணம் 34
சீர்காழி வடுகநாத பண்டாரம் 125
சீவைகுண்டம் 3, 29, க2, க4, க60
சீவைகுண்டம் இராமாயண தாதர் பாடம் 3
சீவைகுந்தம் 13, 14
சீவைகுந்தம் கள்ளபிரான் கவிராசன் குமாரன் தெய்வ சிகாமணிக்கவிராசர் 13, 14
சுசீந்திரத்து நல்லூர் 46
சுப்பிரமணியன் கவிராசன் 90
சுவர்க்கபுரம் 157
செய்யுளியல் 78, 81, 100
செயற்கை வடிவப்பெயர்த் தொகுதி 17
செல்லமருதூர் 124
சென்னைப்பட்டணம் 125
சேந்தமங்கலம் 46
சைதாபுரம் 209
ஞானவாசிட்டம் 194
தஞ்சை 139
தரங்காபுரம் 70
தாண்டவராயன் எழுத்து 173
தாணுமாலயப் பெருமாள் செட்டியார் 46
தாமோதரப் பெருமாள் முதலியார் 124
தாயபலந்தீர்த்தான் 15
திருக்கோளூர் 52, க7
திருக்கோளூர் இராமசெய கவிராசர் 90
திருநீலகண்டர் க 60
திருநெல்வேலி 125, 213
திருமந்திரத்தின் அதிகார அகராதி 121
திருமேனி அழகியார் க63, க 64
திருமேனி கவிராயர் 44
திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த திருக்குறளின்

பொழிப்புரையினுடைய
வெளிப்படை சேர்தல் 120
திருவள்ளுவமாலை 126
திருவள்ளுவர் சரித்திரம் 121
திருவாவடுதுறை ஆதீனம்
சுப்பிரமணிய சுவாமிகள் 217
திருவாவடுதுறை ஆதீன
வித்துவான் 125
திருவேங்கடத்தான் ஏடு 51
திருவேங்கடம் கவிராசர்
குமாரன் தாயபலந்தீர்த்தான் 15
திருவேங்கடமுடையான் 76
தில்லையாளி 42
திவாகரம் 11ஆம் தொகுதி அகர
வரிசையில் அமைந்தது 9
துத்தென்துரை 36
தூத்துக்குடி 140
தெய்வச்சிலைப்பெருமாள்
தாதர் க 60
தெய்வசிகாமணி 13, 14
தென்காசி 198
தேரூர் 46
தேவர்பிரான் கவிராயர் 125
தொகைஅகராதி 67
தொண்டைமண்டலம் 125
நச்சினர்க்கினியர் 78, 80, 112
நடராஜபிள்ளை 42
நம்பிகுடி வள்ளி நாயக
முதலியார் க66
நம்பிகுரிச்சி தாமோதரப்
பெருமாள் முதலியார் 124
நமசிவாயம் பிள்ளை 46, 213
நரசிங்கமூர்த்தி பிள்ளை 46
நல்லபெருமாள் செட்டியார் க68
நாஞ்சில்நாடு க44
நாராயண பிள்ளை 182
நெல்லுமண்டி வெங்கட்ராம
முதலியார் 70
நெல்லைநாயகம் 43, 83
பண்குறிப்பு 156
பண்பற்றிய விவரங்கள் 157
பண்முறை 147
பரமசிவன் முதலியார் 124
பரிமேலழகர் உரைக்கு
விளக்கவுரை 122
பரியேறும்பெருமாள் க7
பலபொருள் ஒருசொல் 6
பலவேசன் செட்டியார் 198
பழமொழித் தொகுப்பு 66
பழவேற்காடு 116
பறக்கை 13
பாடபேதஆராய்ச்சி ஏடு 125
பாடவேறுபாடுகள் 46
பாலியல் அதிகார அகராதி 121
பிரம்பூர் சிரஞ்சீவி ஆனந்தரங்க
திருவேங்கிடம் பிள்ளை வாசிக்
கின்ற பிங்கலந்தை 32
பிள்ளைக்கண் பிள்ளை 68
பிழையற்ற பாடம் 28
பி.ஸ்ரீ. ஆச்சாரியர் தொகுப்பு க56
புதுவை 10, 36
புதுவைமாநகரம் குவேற்னமா
அச்சுக்கூடம் 36
புலியூர்ப்பண்டாரம் 4
புறத்திணையியல் 78, 100
புறத்திரட்டு முதனினைப்பு 136
புறத்திரட்டின் சுருக்கம் 138
பெத்துநாயக்கன்பேட்டை
உபாத்தியாயர்
இரத்தினவையர் 79, 81
பெரியதிருவடிப் பிள்ளை 68
பெருமாள்பிள்ளை 182
பேராசிரியர் 81, 82
பொருளதிகாரம் 105
பொருளியல் 78
மயிலைநாதர் 87
மயிலேறும்பெருமாள் க22
மருதப்பன்சுவடி 16
மலையப்ப பிள்ளை 125
மாசமதினச் சரிதையின்
அச்சுக்கூடம் 125
முத்தய்யன் எழுதி ராமஜெயம்
கவிராசர் அவர்களுக்கு
எழுதிக் கொடுத்தது 67
முத்துக்குமார பிள்ளை 194
முத்துவேலுப் பிள்ளை 136
மெய்ப்பாட்டியல் 78
மொழியியல் 107
வண்ணங்கள் 203
வயித்தியலிங்கன் 97
வயித்தியலிங்கன் பிள்ளை 68
விக்கிரமசிங்கபுரம் க49
வியாக்யானம் 149, 150
விறுத்தாசலம் 42
வீரநாராயணச்சேரி 46
வீரப்ப உபாத்தியார் 35
வீரமாமுனிவர் 70
வைகுந்தநாதன் ஏடு 29
ஸ்ரீ வயிரமுத்து சுவடி 123
ஸ்ரீ வைகுண்ட சடகோபன்
கவிராசர் குமாரன் வைகுந்த
நாதன் 29

# 4. அருஞ்சொல், தொடர் அகரநிரல்


அகராதி வயித்தியலிங்கன் பிள்ளை ஏடுபார்த்து எழுதினது 68
அச்சடிபிழை 125
அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மானமானது 125
அருணசலம் பிள்ளை சுதன் 42
அலங்காரம் எழுதின நன்மைக்கு வயித்தியலிங்கத்தின் கையெழுத்து 97
அறிவேன் சாமிகவிராசர் 61
அன்புள்ள பக்தாள் 42
ஆசார்யனே தெய்வம் 34
ஆதித்தவாரத்தன்று முகிழ்ந்தது 139
ஆதிநாதபிள்ளை தலத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது 125
ஆவணிமீ 4உ ஆரம்பஞ் செய்தது புரட்டாதிமீ 13உ முகிந்தது 158
ஆழ்வார் திருவடிகளே சரணம் 68
ஆழ்வார் திருநகரியில் சோதித்தது 125
இந்தப்படிக்கு அறிவேன் விருத்தாசலம் பிள்ளை 61
இராதாபுரம் வாத்தியார் சுவடி பார்த்துச் சிதம்பரநாதன் எழுதியது க5
இராமாயணப்பட்டர் எழுதியது க65
இன்னும் பிழை தீரவேண்டியது உண்டு 68
உயிர் எழுத்து உயிர்மெய் எழுத்து ஒற்றெழுத்து இது களில் மொழிக்கு முதல் எழுத்துகளும் நூதனம் எழுதி . . . முகிழ்ந்தது 68
ஊற்றங்கால் பாவாடை வாத்தி யார் செம்மல் நாமநற்கீரனே 59A
எழுத்ததிகாரத்து இளம்பூரணர் விருத்திக் காண்டிகை முடிந்தது 75
எழுதி நிறைந்தது 81, 215
எழுதி நிறைவேறியது 111
எழுதி நிறைவேறினது 10, 79, 143
எழுதி முகித்த ஏடு 13
எழுதி முகித்தது 123
எழுதி முகிந்தது 20, 32, 44
எழுதி முகிந்தது முற்றும் 14
எழுதி முகித்தேன் 52, 83
எழுதி முடித்தது 29
எழுதி முடிந்தது 112
எழுதி முடிந்தது முற்றும் 45, 146
எழுதி முற்றியது 56
எழுதி முற்றினது 28
எழுதி வாசித்து முகிந்தது முற்றும் 15
எழுதி வைத்தது 10
ஏடு எழுதி முடிந்தது 132
கடல் சூழ்ந்த பூலோகத்து நாயகன் 42
கவிராய சுவாமிகிட்ட படித்தது 45
கனிட்டன் 42
கிட்கிந்தைப்படலம் வாசிக்கிற போது முகிந்தது 46
குமாரசுவாமி எழுதியது க30
கெற்ப சுதாகரன் 182
கொட்டராயன் எழுதியது க77
சகல சீவ சந்துக்களுக்குத் தாய் 42
சங்கத் தமிழை அனுசரிக்கும் மகாவித்வ சனங்களுக்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம் 83
சடகோபன் கவிராயருக்குத் திவாகரம் எழுதி முகிந்தது 1
சாமி கவிராசனையும்தான் வணங்கிப் பேருரைப்பேன் 61
சிவபுரத்தரசு எழுத்து 3
சிவனடியார்க்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து 43
சுபயோக சுபதினத்தில் இந்தப் பாகவதம் எழுதினேன் 182
சுவர்க்கபுரம் சிவப்பிரகாசத் தம்பிரான் ஏடு 157
சுவாமி கண்ணபிரான் சன்னதி யில் எழுதப்பட்டது க4
செக்காலை குடியிலிருக்கும் அடுத் தாரை ரட்சிக்கும் பெருமாள் பிள்ளை 172
சைதாபுரம் 209
திங்கட்கிழமையும் புனர்பூச நட்சத்திரமும் திரிதிகையும் அன்று முகிழ்ந்தது 89
திருக்கோளூர் பரியேறும் பெருமாள் எழுத்து க

திருநெல்வேலி தேரோடும் வடக்குத் தெருவாகிய கற்பக விநாயகன் பெருந்தெரு வட சிறகு வடக்காணம் சேதுராய கோத்திரம் நமசிவாயம் பிள்ளை பௌத்திரனும் சங்கர மூர்த்தியா பிள்ளையவர்கள் குமாரனுமாகிய காந்திமதி நாதன் கையெழுத்து 213
திருநெல்வேலி ம-ா-ா ஸ்ரீஅம்பல வாண கவிராயரவர்கள் பாடம் பார்த்து ஆறுமுக மங்கலம் முத்து வேலுப் பிள்ளையவர்கள் குமாரன் குமார சுவாமி எழுத ஆரம்பித்தது 136
திருநெல்வேலியிலே முத்துக் குமாரசுவாமி ஓதுவார் கிட்ட படித்தது 45
திருமேனி கவிராயரவர் பிரசாத குமாரர் ரத்தின கவிராயர் பாத தாமரையே தஞ்சம் 44
திருவழுதி வளநாட்டுத் திருநகரி அழகிய நம்பியா பிள்ளை 1, 76
திருவேங்கடத்தான் நிகண்டு புனர்பூச நட்சத்திரத்தில் முகிந் தது 51
தூத்துக்குடி அய்யன் பெருமாள் செட்டி சிலப்பதிகாரச் சுவடி 140
தென்காசி பலவேசன் செட்டியார் சுவடி 198
தென் திருப்பேர் ஆவுடை நயினர் திருமேனி அழகியார் எழுதியது க 63
தேவர் பிரான் எழுதத் தொடங்கினது 122
தேவர்பிரான் எழுதி முடிப்பித்தது 122
தேவர்பிரான் படித்து முற்றியது 34
தொல்காப்பியம் இளம்பூரண உரையாசிரியர் உரை எழுத்தும் சொல்லும் எழுதினன் திருவழுதி வளநாட்டுத் திருநகரி அழகிய நம்பியா பிள்ளை திருவேங்கடமுடையான் 76
நம்முடைய ஏடு சுத்தமாய்த் திருத்தியிருக்கிறது 125
நமசிவாயம் பிள்ளையும் நெல்லை நாயகமும் எழுதினது 43
நன்னூல் பொஸ்தகம் நீடூழி காலம் வாழ்ந்திருக்க 90
நன்னூல் முகிழ்ந்தது முற்றும் 89
நூதனம் 68
நெல்லை நாயகம் எழுத்து 43
பழவேற்காட்டு வாத்தியார் பிரதிபார்த்துத் தண்டையார்ப் பட்டு அய்யம் பெருமாள் கரதல லிபியாக எழுதி நிறைந்தது முற்றும் 116
பாடப்படி எழுதினது 3
பாததாமரையே தஞ்சம் 44
பிரசாத குமாரர் 44
பிரம்மாவினுடைய வேதத்துக்கு முதற் கொழுந்து 42
பிழை பார்த்து மைக்காப்பு சாத்தவும் 44
பிழை பொறுக்கும் பெருமாள் எழுதியது க66
பெரிய திருவடி திருமேனி கவிராய குரு புத்திரரான ரத்தின கவிராய குரு சீபாத தாமரைகளே சரணம் 34
பெரியபுராணம் எழுதி முகிந்தது 173
பெரிய ரத்தின கவிராயர் எடுத்துச் சேர்த்திருந்த நுண்பொருள் மாலை முற்றும் 122
பொத்தகம் பிழையாயிருப்பது பார்த்துத் திருத்த வேண்டியது 28
மண்டலவன் நிகண்டு எழுதி நிறைவேறியது 42
மதுரைக் கூடலூர் கிழார் செய்த முதுமொழிக் காஞ்சி முற்றும் 133
மயிலேறும் பெருமாள் எழுதியது க22
முகித்தேன் 3
முகிந்தது 1, 4
மைக்காப்பு 44
வயிரவநாதன் எழுதினது 217
வயிர முத்துப்பிள்ளை எழுதினது 172
வரகவியாகச் சொல்லியது 124
வழக்குநடை 139
வாத்தியார் கனகசபை பேரன் சபாபதி படிக்க எழுதி வைத்தது 10

# மதிப்புரை மாலை

| நூல் | மதிப்புரையாளர் |
|---|---|
| 1. தேவாரத் திருமுறை அமைப்பு | டாக்டர் இ. சுந்தரமூர்த்தி |
| 2. இரட்சணிய மனோகரம் | டாக்டர் பொன். கோதண்டராமன் |
| 3. புதிய ஆத்தி சூடிகள் | டாக்டர் இ. சுந்தரமூர்த்தி |
| 4. ஆராய்ச்சி முறையியல் ஓர் அறிமுகம் | தென்னை மு. கருணாநிதி |
| 5. அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள் | அரங்க. இராமலிங்கன் |
| 6. ஞானதீபன் | டாக்டர் வ. ஜெயதேவன் |
| 7. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்-ஒரு திறனாய்வு | டாக்டர் இ. சுந்தரமூர்த்தி |

1. *தேவாரத் திருமுறை அமைப்பு :* தொகுப்பாசிரியர்: தி. கி. நாராயணசாமி, 2, சீதாராம நகர், கடலூர், 607001, விலை ரூ. 7.50: பக். 128, 1979.

இசைக்கலை ஒரு நாட்டினுடைய நாகரிக வாழ்வினைப் புலப் படுத்தும் பண்பாட்டுக் கூறு ஆகும். பழந்தமிழகம் தொன்றுதொட்டு இவ் இசைக்கலையில் மேம்பாடுற்று விளங்கியதைத் தமிழ் இலக் கியங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. மொழியையும் இசையையும் இறைவன் புகழ் பாடவே பயன்படுத்தியவர் முன்னையோர். திரு முறைகளின் பண்ணமைப்பு முறை இதனைத் தெளிவுறுத்தும். பழந் தமிழ்ப் பண்களின் நுட்பமும் சிறப்பும் சங்க நூல்களிலும் முத்தமிழ்க் காப்பியத்திலும் சிறப்பித்துப் பேசப்படுகின்றதாயினும் பிற்காலத்தே புறச்சமய, பண்பாட்டுத் தாக்குதல்களால் நம்மவர் இசைக்கலையின் நுட்பத்தைப் போற்ற மறந்தனர். அதன் விளைவாக இன்று நாம் பழந்தமிழ்ப் பண்களின் நிலையையும், இயல்புகளையும் ஆராய்ந்து அறிய வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழிசைச் சங்கம் முதலிய கலைக்கூடங்கள் இத்துறையில் செய்துள்ள அரும்பணி என்றும் போற்றத்தக்கதாம். பழந்தமிழிசையின் அடிப்படைக் கூறுகள், அதன் சிறப்புகள் பற்றி இன்னும் விரிவாக ஆராய்ந்து உலகத் திற்கு வழங்க வேண்டிய இன்றியமையாக் கடமை தமிழறிஞர் களுக்கும், தமிழிசைக் கலைஞர்களுக்கும் உண்டு. அவ் வகையில் பழந்தமிழர் பண்பாட்டுச் செல்வங்களையும், சைவ வைணவத் திருமுறைகளையும் உலகிற்கு அளித்து வரும் தமிழ்த் தொண்டர் தமிழறிஞர் பெருந்தகை திரு தி.கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தொகுத்து வழங்கும் 'தேவாரத் திருமுறை அமைப்பு' என் னும் இந்நூல் இசை பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளை உள்ளடக்கியதாய் விளங்குகிறது. இந்நூற்பொருள்களைத் தொகுத்துப் பார்த்ததில் பின்வரும் செய்திகள் அறியக் கிடக் கின்றன. அவையும் அவை அமைந்துள்ள பக்கங்களும் வருமாறு:


| வ.எண் | விவரம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவார, இசைத்திரட்டு (பண், கட்டளை வகைக்கு ஏற்றது) | 1 — 47 |
| 2. | பண்கள், அதைப்பாடிய ஆசிரியர்கள் | 48 |
| 3. | தேவாரத் திருமுறைகள் ஏழின் அமைப்பு (பதிக முதலும் தலமும்) | 49 — 74 |
| 4. | 103 பண்களின் பெயர் அகராதி | 75 — 78 |
| 5. | திருமுறைகண்ட புராணம்; கட்டளைகள் அடைவு | 79 — 80 |
| 6. | விபுலாநந்த அடிகள் இயற்றிய யாழ் நூல்: பொருள் அடைவு | 81 — 83 |
| 7. | யாழ்நூலின் சிறப்பு | 84 — 89 |

| | | |
|---|---|---|
| 8. | இத்தேவார இசைத்திரட்டு (பண் வரிசையில்) | 90 — 93 |
| 9. | மதுரையை ஆண்ட நாயக்கர்கள் அரச பரம்பரைப் பட்டியல் | 94 |
| 10. | கீர்த்தனை ஆசிரியர்கள் | 95 |
| 11. | தஞ்சை மராட்டிய வம்சம் | 96 |
| 12. | பதிகங்களின் யாப்பு, பண்களின் அட்டவணை | 97 — 101 |
| 13. | காலத்திற்கு உரிய அதிதெய்வமும் பண்ணும் | 102 |
| 14. | சந்தி பிரிப்பு | 103 |
| 15. | வகைமுதல் அடுத்த அலங்காரம் | 104 |
| 16. | வடமொழியில் உள்ள சங்கீத நூல்கள் (ஆசிரியர்களின் கால முறையில்) | 105 |
| 17. | தென்-இந்திய அரசர்களின் காலம் | 106 — 108 |
| 18. | செம்பாலையினின்றும் குரல் திரிபு | 109 |
| 18. | 12 பாலைகள் | 110 |
| 20. | தற்கிழமை திரிந்த அரும்பாலையினின்றும் இடமுறைக் குரல் திரிபு—7 | 111 |
| 21. | நவசந்தி | 112 |
| 22. | சிலப்பதிகார நூல் அமைப்பு | 113 — 116 |
| 23. | சங்கீத ரத்னகரம் | 116 |
| 24. | ஆனய நாயனர் வாசித்த இசை அமைதி | 117 |
| 25. | திரு. வி.க. ஆராய்ச்சிக் குறிப்புரை | 118 — 119 |
| 26. | முதல் 7 இசைநிரல் (7 பெரும்பாலை முதலில் தோன்றிய பண்கள் 5) | |
| 27. | சில கர்னடக சங்கீதக் குறியீடுகளின் விளக்கம் | 120 — 123 |
| 28. | இசைத்துறைச் சொல் அகரவரிசை | 124 |
| 29. | 'சங்கீத ரத்னகர' நூலில் சொல்லப்பட்ட 229 ராகங்கள் | 126 |

இந்நூலில் பொருளடக்கம் தரப்படவில்லையாதலால் இப்பகுப்பு, நூலினைப் பயில்வார்க்குப் பெரிதும் உதவும்.

மொத்தத்தில் பன்னட்கள், பல மணிநேரங்கள் உழைத்துப் பெற வேண்டிய அரிய செய்திகளை இந்நூல் தருவதால் அறிஞர்க்கு இத்தொகுப்புநூல் கருத்துக் களஞ்சியமாய் விளங்குகிறது. தொகுப்பாசிரியரின் உழைப்பையும் முயற்சியையும் தமிழகம் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அறிவுக் கொடையை மட்டுமே யன்றித் தேவார ஓதுவார்களுக்கு இந்நூலை இலவசமாகவும் வழங்க ஏற்பாடு செய்திருக்கும் இந்நூலாசிரியரின் அறக்கொடையையும் இசைகூறு நல்லுலகம் நன்கு பயன்படுத்தித் தமிழ் இசைக்கலையை

வளர்க்குமாக. தொகுப்பாசிரியரின் அரிய முயற்சி, இசைத் தமிழுக்குக் காலத்தால் செய்த தொண்டாகும்.

**இ. சுந்தரமூர்த்தி**

2. ***இரட்சணிய மனோகரம் :*** ஆசிரியர்: நற்செய்திக் கவியரசர் எ.ஆ. கிருஷ்ணபிள்ளை. பதிப்பாசிரியர்: டாக்டர் வி. ஞானசிகாமணி, வேதாகம மாணவர் பதிப்பகம், 66-7 அசோசியேசன் சாலை, மாதவரம், சென்னை 600060. ப-ம் 14 + 176. விலை. ரூ. 6 விரிவு படுத்தப் பெற்ற முதல் பதிப்பு 1978.

தமிழிலக்கிய உலகில் கடந்த நூற்றுண்டில் பல பெருங் கவிஞர்கள் அரும்பணி புரிந்து பெருவாழ்வு வாழ்கிருர்கள். அவர்களில் நற்செய்திக் கவியரசர் என்று போற்றப்படும் எ.ஆ. கிருஷ்ண பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தக்க ஒரு பெரும் புலவர். இவருடைய நூல்களை ஆராய்ச்சி செய்த அறிஞர் ஞானசிகாமணி அவர்கள் இரட்சணிய மனோகரம் என்ற நூலை இப்போது விரிவு படுத்திப் பதிப்பித்திருக்கிருர்.

நற்செய்திக் கவியரசரின் படைப்புகளில் இரட்சணிய யாத்திரிகம் பொதுவாகத் தமிழிலக்கிய அறிஞர்கட்கு நன்கு அறிமுகமான நூல். இரட்சணிய யாத்திரிகமும் இரட்சணிய மனோகரமும் முற்றிலும் வேறுவேருன நூல்கள் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி இந்நூலின் பதிப்பாசிரியர் மனோகரத்தின் பெரும்பகுதி இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து தொகுக்கப் பெற்றது என்ற செய்தியைப் பொருத்தமான முறையில் பதிப்பாசிரியர் ஆங்காங்கே குறிப்புகள் தந்து விளக்கியிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது.

பதிப்பாசிரியர் இப்பதிப்பில் பாடல்களுக்குத் தொடர் எண் இட்டு யாப்புக்குறிப்புகளை ஒவ்வொரு தலைப்பின்கீழும் சேர்த்துப் பாடல் முதற் குறிப்பகராதி அரும்பத அகராதி ஆகியவற்றையும் இணைத்துப் பதிப்புப் பணியைச் செம்மையாகச் செய்து நூலின் பயன்பாட்டை மிகுத்திருக்கிருர். மேலும் பதிப்பாசிரியர் டாக்டர் ஞானசிகாமணி அவர்கள் இந்நூலில் நான்கு பதிகங்களைப் புதிதாகச் சேர்த்திருக்கிருர்.

1899ஆம் ஆண்டுப் பதிப்பில் 34 தலைப்புகளில் 566 பாடல்களைக் கொண்டு விளங்கிய இரட்சணிய மனோகரம் இப்போது 38 தலைப்புகளில் 750 பாடல்களைக் கொண்டதாக விரிவு செய்யப்பெற்று வெளி வந்துள்ளது. கவியரசரின் வாழ்க்கைக் குறிப்பும் இந்நூலின் முற் பகுதியிலேயே இடம் பெற்றிருக்கிறது.

இந்நூலின் அட்டைப்படத்தைப் பார்ப்பவர்கள் தவருமல் அட்டைப்பட விளக்கத்தைப் படிக்க வேண்டும். நம் நெஞ்சை

உருக்கித் தன் வயமாக்க வல்ல ஒரு நிகழ்ச்சியை இந்நூலுக்கு அட்டைப் படமாக்கி நூலின் சிறப்பை மிகுத்திருக்கும் உத்தி மிகவும் பாராட்டத்தக்க ஒன்று. பதிப்பாசிரியரின் பணி மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது.

**பொன். கோதண்டராமன்**

3. *புதிய ஆத்திசூடிகள்*, ச. மெய்யப்பன் (ப.ஆ.)., மணிவாசகர் நூலகம், சென்னை, 1979, பக். 37+8.

தமிழ் இலக்கிய வகைகளுள் நீதிநூல்கள் தனித்த இடம் பெறுபவை. முதன் முதலில் தமிழில் நீதி இலக்கிய வகையை உலகப் புகழ்பெற்ற வள்ளுவப் பெருந்தகை தொடங்கி வைத்தார். பாடு பொருளிலும், பாடிய வடிவத்திலும் குறள் இணையிலாப் புகழ்பெற்று விளங்குகிறது. உயர்ந்த அறங்களை எளிமையாகப் படிப்போர் உள்ளத்தில் பதியும்வண்ணம் திட்பம், நுட்பம், எளிமை துலங்கப் பாடிய அவர்தம் இலக்கிய உத்தியைப் போற்றுத அறிஞரில்லை. அவ் வகையில் உயர்ந்த அறங்களை இன்னும் எளிமைப்படுத்தித் தந்தார் ஔவையார். அவர் யாத்த ஆத்திசூடி அறக்கல்வியின் தோற்றுவாயாக இன்றும் விளங்குகிறது. ‘ஆத்திசூடி’ என்னும் இலக்கிய வகையைத் தோற்றுவித்த பெருமையும் அவருக்குண்டு. ஔவையார், பாரதியார், டாக்டர் வ. சுப. மாணிக்கம், வாணிதாசன், டாக்டர் ந. சஞ்சீவி, நாரா. நாச்சியப்பன், ச. மெய்யப்பன், சோம. இளவரசு, ஆகியோர் இவ் இலக்கிய வகைக்குக் கொடையாக வழங்கியவற்றைப் ‘புதிய ஆத்திசூடிகள்’ என்னும் தலைப்பில் பதிப்பாசிரியர் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் தொகுத்தளித்துள்ளார்.

இப் பதிப்பு ‘ஆத்திசூடிகள்’ பற்றிய ஓர் ஒப்பாய்வுப் பார்வைக்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் ‘சூடி’க்கு இட்ட பெயரும் பாடிய பாடல்களும் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| ஔவை | — | ஆத்திசூடி | — | 109 |
| பாரதி | — | புதிய ஆத்திசூடி | — | 110 |
| வ.சுப. மாணிக்கம் | — | தமிழ் சூடி | — | 118 |
| வாணிதாசன் | — | புதிய ஆத்திசூடி | — | 95 |
| சஞ்சீவி | — | பொதுவுடைமை ஞான அறிவுசூடி. ஆத்திசூடி | — | 107 |
| நாச்சியப்பன் | — | நெறிசூடி | — | 104 |
| மெய்யப்பன் | — | அறிவியல்சூடி | — | 108 |
| இளவரசு | — | நீதிசூடி | — | 108 |

‘தமிழ்’, ‘பொதுவுடைமை ஞான அறிவு’, ‘நெறி’, ‘அறிவியல்’, ‘நீதி’ எனச் ‘சூடிக்கு’ அடைமொழிகள் தந்து ஆசிரியர்கள் இயற்றி

யுள்ளமை எண்ணத்தக்கது. எண்ணிக்கையிலும் எழுத்துவரிசை முறையிலும் வேறுபாடுகள் உள்ளமை தனிநிலை ஆய்வுக்குரியது. அவ்வாறே சில சூடிகளின் முன்னர்ப் 'பரம்பொருள் வாழ்த்தும்', தமிழன்னை வாழ்த்தும்' உள்ளன. டாக்டர் ந. சஞ்சீவி, ச. மெய்யப்பன் ஆகியோர் இயற்றிய சூடிகளில் இத் தகைய வாழ்த்துக்கள் இன்றிப் புதுமை மிளிர அமைத்திருப்பதும் உளங்கொளத்தக்கது. ஒவ்வொருவரின் சொல் ஆட்சியிலும் ஆசிரியர்களின் உளப்பார்வையும் நுட்பமும் நன்கு புலனு கின்றன. ஆசிரியர்களின் சமயப் பொதுமை, சமுதாயச் சிந்தனை, பகுத்தறிவுப் பார்வை, தேசியப் பார்வை, அறிவியல், அறவியல் நோக்குகள் முதலாயின இச்சூடிகளால் வெளிப்படுத்தப் படு கின்றன. இச்சூடிகளைத் தொகுத்துத் தந்திருக்கும் இப்பதிப்பால் இவ் விலக்கிய வகை மேலும் வளரும் என உறுதியாக நம்பலாம். இப் பதிப்பைத் தொகுத்தும், தாமே 'ஆத்திசூடி' படைத்தும் தொண்டாற்றி யிருக்கும் பதிப்பாசிரியர் திரு. ச. மெய்யப்பன் பெரிதும் பாராட்டுக்கு உரியவர். தமிழுலகம் இம்முயற்சியை வரவேற்று ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

*இ. சுந்தரமூர்த்தி*

4. *ஆராய்ச்சி முறையியல் ஓர் அறிமுகம்*, மு. பொன்னுசாமி எம்.ஏ., எம்.பில்., பக்கம் 154. கலாபதிப்பகம், கோயமுத்தூர், சூன் 1979.

அனுபவம் அறிவை வளர்க்கிறது. அறிவு அறியாமையை அகற்றுகிறது. அறியாமை, அகல்வதால் தெளிவு பிறக்கிறது. இந்த உண்மையை 'ஆராய்ச்சி முறையியல் ஓர் அறிமுகம்' என்ற நூலின் ஆசிரியர் நன்றாகத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

தொடக்கப் பள்ளி மாணவர்களின் மனவளர்ச்சிக்கு ஏற்ப பாடத் திட்டங்களை முறைப்படுத்தி, எளிமையாக வெளியிடுதலைப் போன்று, ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி வளர்முறையை அனு சரித்து நூல் வகைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது.

'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க'! என வாழ்த்துவதை யொத்து ஆராய்ச்சி முறையியலின் உள்ளடக்கம்வரை பதினாறு தலைப்புகளில் அமைந்திருப்பது தனிச்சிறப்புடையதாகும்.

நூலுள் கையாளப்பட்டுள்ள கலைச் சொற்களுள் இன்றியமை யாதவைகட்கும், மொழி பெயர்ப்பால் பொருள் மயக்கம் தரக்கூடிய சொற்களுக்கும் ஆங்கிலச் சொற்களைத் தந்து நூலாசிரியர் தெளிவை ஏற்படுத்தியுள்ளார்.

இந்திய நாட்டை முன்பின் அறியாத வெளிநாட்டுக்காரருக்கு வரைபடமும், வழிகாட்டிகளும் பயன்படுவதைப் போன்று

ஆராய்ச்சித் துறைக்கு முற்றிலும் புதியவர்கள்கூடப்புரிந்து கொண்டு பயன்படக்கூடிய வகையில் நூல் ஆக்கப்பட்டுள்ளது.

கள ஆய்வும் மூல உண்மைக் கூறுகள் சேகரித்தலும் எப்படி என்பதை விளக்குமிடத்து, (பக். 33) நகைச்சுவை ததும்ப எழுதியுள்ளார் ஆசிரியர்.

தங்கள் நடிப்புப் பிடிக்காதபோது ரசிகர்கள் என்ன செய்வார்கள்? உங்களுக்கு என்ன கதி ஏற்படும்? என்று தெருக் கூத்துக் கலைஞனிடம் ஆய்வாளர் கேள்வி கேட்கக் கூடாது. தங்கள் நடிப்புப் பிடிக்காதபோது ரசிகர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதுபோல் வினவைக் கேட்க வேண்டும் என்கிறார். செய்தி முன்னோர் மொழிந்ததாயினும் எடுத்துரைப்பதில் நயமிருக்கிறது; பயனு மிருக்கிறது.

ஆய்வேட்டைத் தயாரிக்கும் முறைகளை ஆதிமுதல் அந்தம்வரை அழகாக எடுத்துரைப்பது பாராட்டிற்குரியது. எனினும் ஆய்வேட்டின் நடை, ஆய்வுரை எழுதுதல் ஆகிய இரண்டு தலைப்புகளையும் உடற்பகுதியைக் குறிப்பிடும் முன் வைத்து வரிசைப் படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

துப்பாக்கியைக் கையிலேந்தி இலக்கை நோக்கிச் சுட ஆரம்பிக்கும் வீரனொருவன், பசுமையான காட்சிகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று (N. C. C.) செயல் முறையாளர் தெரிவிப்பார். அதைப்போல ஆய்வாளர்கள் ஆராய்ச்சி முறையியலைக் கண்டு களித்தல் நலம் பயக்கும். ஆசிரியரின் உழைப்பும், ஊக்கமும் பாராட்டுதற்குரியன.

***தென்னை மு. கருணாநிதி***

5, ***அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள்,*** சோமலெ, சோமுநூலகம், சாஸ்திரிநகர் அஞ்சல் நிலையக் கட்டிடம், சென்னை-600 020, முதற்பதிப்பு — மார்ச்சு 1979, பக். 136, விலை. 10-00.

'அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள் என்னும் இந்நூலில் கடல்கடந்து வாழும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செய்த திருப்பணிகள் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. நகரத்தார் என்ற சொல்லால் சுட்டப்பெறும் நாட்டுக்கோட்டை நகரத்தார் தென்கிழக்கு ஆசியாமுதல் அமெரிக்காவரை பல நாடுகளில் செய்திருக்கும் ஆலயப்பணிகளை எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். தாம் நேரில் கண்டவற்றையும் கிடைத்த குறிப்புகளையும் வைத்துக்கொண்டு பதினான்கு தலைப்புகளில் அழகாக விளக்கிச் செல்கிறார்.

நகரத்தார்கள் எங்குசென்று எம்மொழி பேசி வாழ்ந்தாலும் தங்கள் சமயப்பற்றை விடாமல் தண்டாயுதபாணிக் கடவுளுக்குக் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்வதைக் குறிப்பிடுகிறார். தாம் ஈட்டிய பெரும்பொருளை ஆலயத் திருப்பணிகளுக்கே செலவிடும் நகரத்தார் களின் பெருமை நூல் முழுவதும் பேசப்படுகிறது.

இலங்கை, பங்களாதேஷ், பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தாய் லாந்து, தெற்குவியட்நாம், இந்தோனேசியா, மொரிசியஸ், இங்கி லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆலயங்கள் எழுப்ப நகரத் தார்கள் எடுத்துக்கொண்ட முயற்சியையும், ஆலயங்கள் கட்டி முடிக்கப்பெற்ற பிறகு அவை நகரத்தார்களால் நிருவகிக்கப்படும் சிறப்பையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

ஒவ்வொரு கோயிலுக்கும் உள்ள சொத்தின் மதிப்பையும், அக் கோயிலில் நடைபெறும் விழாக்கள், சிறப்பு நிகழ்ச்சி முதலிய வற்றையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். பல கோயில் களின் நிழற்படங்களை (வண்ணத்தில்) நூலில் இணைத்திருப்பது அருமை. நகரத்தார்களின் திருப்பணியை, பெரும்பணியை மூதறிஞர் இராசாசி, திரு. சுப்பிரமணியம் போன்ற பெருமக்கள் பாராட்டியதை யும், கவியரசு கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு போன்ற கவி ஞர்கள் சிறப்பித்துப் பாடிய கவிதையையும் ஆசிரியர் நூலில் சேர்த் திருப்பது சிறப்பு.

நகரத்தார்கள் தம் பெருமுயற்சியால் அலைகடலுக்கு அப்பால், தமிழ்க்கடவுள் முருகனுக்குக் கோயில் எடுத்து விழாக்கள் நடத்தி, நாளும் 'முருகன் காட்சி'யினைக் கண்டு வாழ்வது மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டிற்குரியதுமாகும். ஆசிரியர் சோமலெ அவர்களின் உழைப்பை நூல் முழுவதும் காண முடிகிறது. அலைகடலுக்கு அப்பால் வாழும் நம்மவரின் சமயநிலை குறித்துத் தெரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் துணை செய்யும்.

*அரங்க. இராமலிங்கன்*

6. *ஞானதீபன்*, ஆசிரியர் கவிஞர் நீலம்மதுமயன், ஆதிவிநாயகர் அறநிலையம், சித்தன் குடியிருப்பு, தென்தாமரைக்குளம் அஞ்சல், குமரி மாவட்டம், 629 708, ரூ. 1.50. பக். 46.

கவிஞர் நீலம்மதுமயனின் 'ஞானதீபன்' என்னும் சிறுநூல் திருமுருக கிருபானந்த வாரியாரின் வாழ்த்து வெண்பாவுடன் தொடங்குகிறது. இந்நூலின் 'வெளியீட்டுரை'யில் பால் பாண்டியன் 'ஆயிரக்கணக்கான பணம் செலவழித்து ஆடம்பரமாக விழாக்களை நடத்துவதால் யாருக்கு என்ன பயன்? . எனவே என்றும் நிலைநிற்கக் கூடிய, எல்லோர்க்கும் பயன்படக்கூடிய வகையில் புத்தகம் அச்சிட் டால் என்ன என்று தோன்றியது. அதன் பயன்தான் இச்சிறுநூல். ...இந்நூலுக்கு நீங்கள் ஆதரவளிப்பது முக்கியமில்லை. இதுபோல்

பல நூற்களை நீங்களும் ஆக்குவதுதான் முக்கியம்' என்று குறிப்பது தமிழகம் கருத்தில் நிறுத்த வேண்டிய நல்ல கருத்தாகும். ஆசிரியர், நூல் 'முன்னுரை'யில் 'துன்பக்கடலில் துயருறுவோர்க்குத் தெய்வீக நூற்கள் கலங்கரை விளக்கங்களாகும். இது கலங்கரை விளக்கல்ல கைவிளக்கு. இந்த—கைவிளக்கை எடுத்துக்கொண்டு நான் கதிரவனைக் காட்ட முற்பட்டு விட்டேன். இது முயற்சியே ஒழிய முற்றல்ல' என்று கூறுவது அவரது அடக்கத்தையும் நூலின் மையப் பொருளையும் நன்கு தெரிவிக்கிறது.

கடவுளார் வந்த கதை, கணபதியார் வந்த கதை, ஞால முதல்வன், ஞானதீபன் என்னும் நான்கு இயல்களைக் கொண்ட இந்நூல் நான்காவது இயலின் தலைப்பால் பெயர்பெற்றுள்ளது. முதல் இயலில் விலங்கு மனிதனது, கடவுள் உருவமானது, உருவம் உணர்வானது; மனிதன் தெய்வமானது என்னும் நான்கு உட்பிரிவுகளும், இரண்டாவது இயலில் கணபதிநாதன், பிள்ளையார் பிறந்த கதைகள், ஆதிசேடனும் ஆதி விநாயகனும், மதமெனப்படுபவை மார்க்கங்களே, அறிந்த பிழையை அறிந்துபிழை என்னும் ஐந்து உட்பிரிவுகளும், மூன்றாவது இயலில் உருவக் கற்பனை, உரிய விளக்கங்கள், உண்மைநிலை என்னும் மூன்று உட்பிரிவுகளும், இறுதி இயலில் வேதத்தின் பொருள் எங்கே?' அறிவும் ஞானமும், இடங்கொடுத்தால் ..,ஞானம் மறந்தால் ...,இறப்பித்துக் கொள்ளாதே என்னும் ஐந்து உட்பிரிவுகளும் உள்ளன. மொத்தம் 17 உட்பிரிவுகளையும் பொருள் இயைபு சிறிதும் பிறழாவண்ணம் 4 இயல்களில் நிரல்பட அமைத்து நூலை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

''கருணை என்ற ஒன்றைக் காணாத காலம். அன்பு என்றால் என்ன என்று அறியாத வேளை. அப்போது மனிதன் விலங்காகத்தான் மலர்ந்து மலர்ந்து மடிந்தான். அவனுக்கு அன்றைய தேவை உணவு தான்'' (பக். 7) என்று விலங்கு நிலையிலிருந்த ஆதிமனிதனை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். மனிதன் 'அவனுக்கும் அப்பால்' ஏதோ ஒரு சக்தி அவனை இயக்குவதாக உணர்ந்தான். அந்த அறிவுதான் விலங்கிலிருந்து மனிதனை முற்றிலும் வேறுபடுத்தியது' (பக். 8) என்று ஆசிரியர் மனித வளர்ச்சியினைக் காட்டுகிறார். இவ்வளர்ச்சியின் அடுத்த நிலையினை ஆசிரியர், 'கண்ணுக்குத் தோன்றாத சக்திக்குத் தோற்றங் கொடுக்க முனைந்தான். அன்று அந்த மனிதன் - காணாத பொருளுக்குக் கண்டெடுத்த உருவங்கள் தான் இன்று நாம் பார்ப்பவை எல்லாம்' (பக். 8) என்று விளக்குகிறார். அகத்துறையில் இடம்பெறும் 'உருவெளித் தோற்றம்' மனிதனது கடவுள் எண்ணத்திற்கும் பொருந்துவதாக அமைந்த நிலையினை ஆசிரியர் நன்கு புலப்படுத்துகிறார். கல்லில் கண்ட கடவுளைக் கண்ட இடங்களிலெல்லாம் காணத் தலைப்பட்ட மனிதன் பகுத்தறிவின் பயனாய் வினாக்களை எழுப்பி விடை காணத் தொடங்கினான். இதன் விளைவாக இறைவன் மனிதனுள்ளேயே இருப்பதை உணர்ந்தான். 'இதைக் கண்டுபிடித்த மனிதனுக்கு ஆலயம் தேவை யில்லாமல் போனது. ''காயமே கோயிலாக

கடிமனம் அடிமையாக" வழிபட்டான். மனம்தான் மனிதனுக்கு நண்பனும் பகைவனும் என்பதை உணர்ந்தான்..." "மனமென்னும் மாடடங்கினல் தான்" மனத்துள்ளே இறைவன் குடிகொள்வான் என்ற உண்மைநிலை வெட்ட வெளிச்சமாகி விட்டது' (பக். 9). இவ்வாறு ஆசிரியர் படிப்படியாக நூலை வளர்த்துச் செல்கிறுர். இந்தப் படிநிலைகளின் முடிநிலையாக ஆசிரியர், ஞானதீபனுகிய விஞயகனை 'மனத்தெண்ணி மயக்கமறுத்து மாளாத வாழ்க்கையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.... அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்தவன் உள்ளத்தே அவன் அனைத்துமாகின்ருன்.... மனத்தால் அவனை அடைவதே நம் பாரதத்து ஞானியர்கள் சொல்லிய மார்க்கம், மனம் மாய்ந்த இடம்தான் முக்தி, அது அடங்கிய இடம்தான் அவனது சன்னிதானம்... மனத்தகத்தே இறைவனின் சன்னிதானத்தை ஆக்கி வைத்தவன் இறப்பதே இல்லை' (பக். 45-46) என்று குறிப்பிடுகிருர்.

எளிய இனிய நற்றமிழ் நன்னடையில் இயலும் இந் நன்னூலில் நாற்பதிற்கும் மேற்பட்ட மேற்கோள்கள் இடம் பெற்றுள்ளன. இம்மேற்கோள்கள் மூலநூலில் பயின்று வரும் இடங்களை ஆசிரியர் குறிக்காதது ஆராய்ச்சி உணர்வுடையார்க்குப் பெருத்த ஏமாற்றத்தையே அளிப்பதாகும். மொத்தத்தில் ஞானதீபன் சிறிய நூலாயினும் சீரிய நூல்.

**டாக்டர். வ. ஜெயதேவன்**

•

*7. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் - ஒரு திறனுய்வு பா. உதயகுமார், கலைச்செல்வி பதிப்பகம், சென்னை-29, விலை ரூ. 8-00, பக். 192, 1978.*

இருபதின் கவிதையுலகில் முற்போக்குச் சிந்தனைகளைப் பாடு பொருளாக அமைத்துப் பாடிய கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆவர். பொதுவுடைமை அணியில் மலர்ந்த இப்புதுமைக் கவிஞரின் திரைப்படப் பாடல்களை எம். பில்., ஆய்வுப் பட்டத்திற்காக நுணுகி ஆராய்ந்துள்ளார் இந்நூலாசிரியர் திரு. பா. உதயகுமார்.

'சமூக வாழ்க்கையை நிறுத்துப் பார்த்த அளவுகோல் பாடல்களான' இக் கவிஞரின் திரைப்படப் பாடல்களைக் கவிதையின் தாக்குரவுகள், சமுதாயப்பார்வை, இலக்கியக் கூறுகள், இலக்கிய உத்திகள் என நால்வகை நிலையில் நூலாசிரியர் ஆராய்கின்ருர். கவிஞன் வாழ்ந்த காலச் சூழல்களே அவருடைய பாடல்களின் கருப்பொருளுக்கு அடிப்படையாய் அமைந்தன. இல்லாமையும், போதாமையும் கவிஞரின் பாடல்களுக்கு உணர்வும் உயிரும் ஊட்டி நின்றன என்பர் (பக். 227). வாழ்க்கைப் போராட்ட நிகழ்ச்சிகள் எங்ஙனம் அவருடைய பொது உடைமைச் சிந்தனைகளுக்கு வழி

கோலின என்பதையும் நூலில் எடுத்துரைக்கின்றார் ஆசிரியர். சமுதாய இயக்கம், அரசியல் இயக்கம், வரலாற்று நிகழ்ச்சிகள், உருசியப் புரட்சி, அறிவியல் புதுமைகள், இயற்கை, சங்க இலக்கியங்கள், சிலம்பு, மணிமேகலை, பாரதம், குற்றாலக் குறவஞ்சி, பாரதியார் பாடல்கள் முதலாயினவற்றின் தாக்குரவுகள், இவர் தம் பாடலில் திகழ்வதை ஆராய்ந்துரைப்பார் (பக். 24-47).

கவிஞரின் சமுதாயப்பார்வை, முன்னையோரின் கொள்கை களைத் தழுவி மனிதகுல வாழ்விற்கான புத்துலகச் சிந்தனைகளை உள்ளடக்கி விளங்குவதைப் பல பாடல்களின் மூலம் எடுத்துக் காட்டுவார்.

'இலக்கியக் கூறுகள்' பகுதியில் கவிஞர் எடுத்தாண்ட உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றைப் பாகுபடுத்தி அவற்றால் புலனாகும் கருத்து விளக்கங்களையும் நன்கு உரைப்பர் (பக்.106-142). நாட்டுப்புற இலக்கிய மரபுகள், தாலாட்டு, தெம்மாங்கு, கதைப் பாடல்கள் முதலாயின அவர்தம் இலக்கிய உத்திகளாக விளங்கு வதையும் அடுத்த இயலில் ஆராய்கின்றார் (பக். 143-165).

நூலின் இறுதியில் (1) கவிஞர் கல்யாண சுந்தரத்தின் வாழ்க்கைக் குறிப்பு (2) கவிஞரின் பாடல்கள் இடம் பெற்ற திரைப் படங்கள், வெளிவந்த ஆண்டு விவரங்கள் (3) அச்சேறாப் பாடல்கள் (4) கவிஞருக்குப் பாராட்டு மடல் (5) கவிஞர் மறைந்தபோது பிறர் பாடிய கையறுநிலைப்பாடல்கள் ஆகியவற்றைப் பின்னிணைப் பாகத் தந்துள்ளார். ஆய்வுக்குத் துணை நின்ற நூற்பட்டியல், சிறப்புப் பெயர் அகராதி முதலியன ஆராய்ச்சியாளர்க்குத் துணை புரியும்.

மொத்தத்தில் திரைப்படப் பாடல்களை முதன்முதலாக ஆய்வு நெறி நின்று துருவி ஆராய்ந்த நூலாசிரியரின் முயற்சியும், உழைப்பும் பெரிதும் பாராட்டத் தக்கன. மார்க்ஸ், ரூஸோ, கிஸ்பர்ட் பாஸ்கல், ரஸ்ஸல், திரு. வி. க., பெரியார், அண்ணா, ஜீவா ஆகியோரின் சிந்தனைகளைக் கவிஞரின் சிந்தனைகளோடு ஒப்பிட்டு ஆராய்வது ஆசிரியரின் முறையான ஒப்பீட்டு ஆராய்ச்சி அணுகு முறையைத் தெளிவுறுத்தும்.

**இ. சுந்தரமூர்த்தி**

# தமிழ்த்துறைச் செய்திகள்

1. ஆசிரியர் மாணவர் கருத்தரங்கு

2. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

3. சிறப்புச் சொற்பொழிவுகள்

## 1. ஆசிரியர் மாணவர் கருத்தரங்கு

| நாள் | கட்டுரையாளர் | பொருள் |
|---|---|---|
| 31— 8—1979 | மு. சண்முகம்பிள்ளை | ஏடும் எழுத்தும் |
| | பா. வீரப்பன் | பொருநராற்றுப் படையில் ஒலிக்கோலம். |
| | மு. பொன்னுசாமி | மெய்ப்பாடு — ஒரு விளக்கம். |
| | மா. இலக்குவன் | தமிழில் காந்திய இலக்கியங்கள். |
| 29— 9—1979 | கு. மோகனராசு | அசையும் பொருளும் |
| | ப. ஆறுமுகம் | கலிங்கராணி-ஒரு நடை ஆய்வு. |
| | மி.கு. சீனிவாசன் | கண்ணன் பாட்டு |
| | பா. உதயகுமார் | அறிஞர் அண்ணாவின் 'குமஸ்தாவின் பெண்' ஓர் ஆய்வு. |
| 27—10—1979 | மி.கு. சீனிவாசன் | கண்ணன் பாட்டு II |
| | பா. வீரப்பன் | பொருநராற்றுப் படையில் சொற் கூறுகள். |
| | ப. பத்மநாபன் | தாலாட்டுப் பாடல்கள் —ஓர் ஆய்வு. |
| 24—11—1979 | கு. மோகனராசு | தொல்காப்பிய உவமவியல் காட்டும் உவம உருபுகள்—சில ஐயங்கள். |
| | மி.கு. சீனிவாசன் | குயில் பாட்டு |
| | சு. தில்லைவனம் | வாணிதாசன்—ஒரு புதுமைக் கவிஞர். |
| | சே. இராசேந்திரன் | பார்ப்பனரல்லாதார் இயக்கக் கொள்கைகளும் கோட்பாடுகளும் |

| | | |
|---|---|---|
| ~~22—12~~—1979 | நா. ஆறுமுகம் | கலித்தொகையின் முறை வைப்பு. |
| | மி.கு. சீனிவாசன் | பாரதியார் காலமும் கருத்தும். |

## 2. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

| அறக்கட்டளை—நாள் | சொற்பொழிவாளர் | தலைப்பு |
|---|---|---|
| தஞ்சை ரா. கிருட்டிணமூர்த்தி நினைவு அறக்கட்டளை (11, 12, 13 அக்டோபர் 1979) | அழ. வள்ளியப்பா | குழந்தை இலக்கியம் |
| பம்மல் சம்பந்த முதலியார் நினைவு அறக்கட்டளை (21, 22 டிசம்பர் 1979) | டி. என். சிவதாணு | நாடகம் அன்றும் இன்றும் |

## 3. சிறப்புச் சொற்பொழிவுகள்

### 1. பேராசிரியர் கெ. என். சிவராஜபிள்ளை நூற்றாண்டுவிழா

(19—9—1979)

தலைவர் : மலர் வெளியீடு } பேராசிரியர் பைந்தமிழ்ப்பாவலர் அ.கி. பரந்தாமனார்

சொற்பொழிவாளர் : புலவர் மணி மு. சண்முகம்பிள்ளை
பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு

### 2. பேராசிரியர் டாக்டர் நாவலர் கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார் நூற்றாண்டுவிழா

(20—9—1979)

தலைவர் : பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்

சொற்பொழிவாளர் : பேராசிரியர் மா. நன்னன்
திரு. ந.ரா. முருகவேள்

---

# சென்னைப் பல்கலைக் கழகம்

## தமிழ்த்துறை வெளியீடுகள்

1. திருவாய்மொழி (பகுதி 1 முதல் 10 வரை)
   —ஆசிரியர் : திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
2. ஆசார்ய ஹிருதய மூலம்
   —ஆசிரியர் : திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
3. பத்துப்பாட்டு ஆராய்ச்சி
   —டாக்டர் மா. இராசமாணிக்கனர்
4. திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
5. திருக்குறள் நீதி இலக்கியம்
   —திரு. க. த. திருநாவுக்கரசு
6. திருக்குறள் அணிநலம்
   —திரு. இ. சுந்தரமூர்த்தி
7. திருக்குறள் அமைப்பும் முறையும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
8. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
   —டாக்டர் ந. சஞ்சீவி
9. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்
   —திரு. க. த. திருநாவுக்கரசு
10. பல்கலைப் பழந்தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
11. நாக குமார காவியம்
    —(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை
12. இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
13. திருவிசைப்பா—திருப்பல்லாண்டு
    திரு. மு. அருணசலம்

14—17. தமிழாய்வு (நான்கு தொகுதிகள்—1, 2, 3, 4)
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

18. அப்பாண்டைநாதர் உலா
    —(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை
19. தெய்வத் தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
20. பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
21. தமிழாய்வு (5, 6, 7, 8, 9 தொகுதிகள்)
    —(ப. ஆ.) டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
22. தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) — தொகுதி I
23. அகப்பொருள் மரபும் திருக்குறளும்
    —திரு. மு. சண்முகம் பிள்ளை
24. A Study of the Literature of the Cēra country
    —Dr. C. Balasubramanian